# மன்னெழில் III



வெளியீடு

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை

மாவட்டச் செயலகம்

மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெழில்

# III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில்முகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 'மன்னெழில் – III' |
| மலராசிரியர் | : | தேசியக்கலைஞர் எஸ்.ஏ. உதயன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மன்னார் மாவட்டத்தின் கலை பண்பாடு |
| ஆண்டு | : | 2025 ஆவணி 28 |
| அச்சு எழுத்து | : | 12 |
| பக்கங்கள் | : | 120 |
| வெளியீடு | : | மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை,<br>மாவட்டச் செயலகம்,<br>மன்னார். |
| வடிவமைப்பு | : | செல்வி. ச. மிதினா |
| அட்டைப்படம் | : | சிற்பி திரு. ஜெரோமி மார்க் (விரிவுரையாளர்) |
| வரைகலை | : | பதிப்புக்கலைச்செல்வன் திரு. எஸ். ஷதீஸ். |
| அச்சகம் | : | 'சைபர் சிற்றி' அச்சுக்கலையகம்,<br>மன்னார். 023 2251668,<br>0715 797 597 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னெழில்-III

**2025**

**நூலுருவாக்கத்திற்கு பிரதான**

**அனுசரணை வழங்கிய**

**வட மாகாண கல்வி அமைச்சின்**

**பண்பாட்டலுவல்கள் அலகிற்கு**

**எமது மனமார்ந்த**

**நன்றிகள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

வழிகாட்டலும் அனுமதியும்
**திரு க. கனகேஸ்வரன்**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
தலைவர் - மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை
மன்னார்.

ஆலோசகர்
**திரு. ம. பிரதீப்**
மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்),
மன்னார்.

மலராசிரியர்
**தேசியகலைஞர், சாகித்தியா எஸ். ஏ. உதயன்** (மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை)

துணை மலராசிரியர்
**பதிப்புக்கலைச்செல்வர் திரு. எஸ். சதீஸ்** (மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை)

உறுப்பினர்கள்
**சைவப்புலவர் திரு. இ. நித்தியானந்தன்** (சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர்)
**சிம்மக்குரலோன் திரு. எஸ்.ஏ.ராதாபெர்னாண்டோ** (மாவட்டகலை பண்பாட்டுப் பேரவை)
**கலைமதி திரு. உருத்திரமூர்த்தி** (மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை)
**விக்கிரமகீர்த்தி திருமதி சிசில் பெனோ** (மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை)
**திருமதி டெனிஸ்ரீன் சுபாஸ் சந்திரன்** (மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை)
**இளங்கலைமதி திரு. டெலிஸ்ரன் நிசாந்தன்** (மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருடன் 'மன்னெழில்' - III மலர்க்குழு உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 01. | முகப்பு | i |
| 02. | எழில்முகம் | ii |
| 03. | அனுசரணையாளர் பக்கம் | iii |
| 04. | மலர்க்குழு | iv |
| 05. | உள்ளே... | v |
| 06. | நுழைவாயிலில்... | vi |
| | **ஆசியியல்** | |
| 07. | மன்னார் மறைமாவட்ட ஆயரிடமிருந்து | viii |
| 08. | மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவைத் தலைவரிடமிருந்து | ix |
| 09. | மன்னார் மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாசபை தலைவரிடமிருந்து | x |
| 10. | மாதோட்டம் ரஜமஹா விகாரை பீடாதிபதியிடமிருந்து | xi |
| | **வாழ்த்தியல்** | |
| 11. | வடக்கு மாகாண கௌரவ ஆளுனரின் செய்தி | xii |
| 12 | வடக்கு மாகாண பிரதம செயலாளரின் செய்தி | xiii |
| 13. | மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் செய்தி | xiv |
| 14. | வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் செய்தி | xv |
| 15. | வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப்பணிப்பாளரின் செய்தி | xvi |
| | **ஆய்வியல், ஆக்கவியல்** | |
| 16. | மன்னார் ஒரு வரலாற்றுத்தேடல்- | 01 |
| 17. | மன்னாருக்கே உரித்தான வாசாப்புகளும் அவற்றின் சிறப்புகளும் | 14 |
| 18. | மன்னார் கத்தோலிக்க கூத்து நாடகங்கள் - ஒரு ஆய்வு நோக்கு | 19 |
| 19. | மன்னாரின் சமகால இலக்கியப படைப்புக்களும் படைப்பாளர்களும் | 39 |
| 20. | மன்னார்மாவட்ட மறைசாட்சிய வரலாற்றுப்பின்னணியும் கலைவளர்ச்சியும் | 48 |
| 21. | ஆவணம்... ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து | 58 |
| 22. | விடத்தல்தீவு - பன்னாட்டு மாநாடு - ஒரு நிகழ்வுப்பதிவு | 61 |
| 23. | மன்னாரில் ஊடகமும் நானும் (நேர்காணல் தொகுப்பு) | 63 |
| 24. | நாட்டுப்புற இலக்கியங்களில் ஒப்பாரி | 68 |
| 25. | மன்னார் தென்மோடி வடமோடி நாட்டுக்கூத்துகளின் ஒற்றுமை வேற்றுமை | 72 |
| 26. | இலக்கியவெளி குறுந்தகவல்களுக்காக காத்திருக்கின்றதா | 80 |
| 27. | கௌரவம் பெறும் கலைஞர்கள் விபரம் | 86 |
| 28. | அனைவருக்கும் நன்றிகள் | 103 |
| 29. | விளம்பர அனுசரணையாளர் பக்கம் | 105 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

வணக்கம்..!

இலங்கைத் தீவின் புகழுறு மன்னார் மாவட்டத்தின் பால் ஆண்டுதோறும் மலருகின்ற "மன்னெழில்" மலருக்கு இம்முறை மலராசிரியராக பணியாற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இது மன்னார் மாவட்ட செயலகமும், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியிடும் மூன்றாவது மலராகும்.

மன்னாரின் கலை பண்பாட்டு பாரம்பரியங்கள் அதன் நீட்சி மற்றும் இன்றைய நிலைகள், அதன்பால் சமுக கடமைகளும் பொறுப்புகளும் உள்ளடங்கலாக மன்னாரின் இயற்கை வளங்கள், புவியியல் அமைப்பின் முக்கிய இடங்கள், வழிபாட்டு தலங்களும் அதன் பாரம்பரியங்களும் போன்ற விடங்களை பேசுபொருளாக தாங்கி தொடர்ச்சியாக வெளிவரும் இம்மலர், மன்னாரின் எழிலை அடையாளப்படுத்தி ஆவணப்படுத்துவதாலும், மன்னாரின் கலைபண்டாட்டு பாரம்பரியங்களை எழுச்சிப்போக்குடன் பயணிக்க இம்மலர் துணைபுரிவதை நோக்காக கொண்டதாலும் 'மன்னெழில்' என்ற பெயர் இம்மலருக்குச் சூட்டப்பட்டு இன்று அதன் மூன்றாவது இதழ் வெளிவருவது சிறப்பு.

இதற்கு பொருத்தமான உள்ளடக்கம் தேவையெனப் பட்டபோது சிறப்புற மலரை அலங்கரிக்க மலர்க்குழுவால் அனுமதிக்கப்பட்ட கட்டுரைகளோடு இது வெளிவருகிறது. மன்னாரில் தேய்ந்து மறையும் நிலையில் காணப்படும் மரபு நாடகங்கள், கூத்துக்கள் மீண்டும் ஓங்கி எழுந்து பிரகாசிக்க வேண்டிய தேவையுணர்ந்து அவை பற்றிய சிறப்பு கட்டுரைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென கோரப்பட்டிருந்தது.

அத்தோடு கட்டுரைகளை வரைவதற்குரிய வாண்மை மிக்க கட்டுரையாளர்களுக்கு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். அவர்களும் இல்லையெனாது தகுதியான கட்டுரைகளை தந்து உதவியுள்ளார்கள்.

அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மலரை செழுமைப்படுத்தவென தேவையும் அவசியமுமான சில கட்டுரைகளும் இம்மலரில் சேர்க்கப்பட்டுள்ளன. இம்முறை மன்னார் மாவட்ட கலைஞர்களுக்கான ஒரு அறிமுக அடையாளமாகவும் எம்மால் சில பக்கங்கள் இம்மலரில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திரமான மலரை வெளிக்கொண்டு வருவதற்கு இக்காலத்தில் காணப்படும் உடல், உள, பொருளாதார நெருக்கீடுகளை துச்சமெனவாக்கி 'மன்னெழில் III' எழிலாக மலர எம்மோடு கைகோர்த்துழைத்த மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

வழமை போன்று அதிக சிரத்தையோடு அட்டைப்படம் வரைந்து தந்த மன்னாரின் கலைப் பொக்கிஷம் சிற்பி ஜெரோமி அவர்களுக்கு பாராட்டுக்களும் நன்றிகளும். மலருக்கென ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்திகளை எமக்கு உரிய காலத்தில் வழங்கித் தந்த பெருந்தகைகளுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

அழகுற அச்சிடுவது மட்டுமல்லாமல் மலரின் உருவாக்கம் குறித்து அதிக அக்கறையுடன் செயல்பட்ட சைபர் சிற்றி அச்சுக்கலையகத்தினருக்கும், உள்ளும் புறமுமாக இரவுபகல் பாராது முழு நேரப்பங்களிப்புடன் சிறப்பாக செயற்பட்ட மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திரு. இ. நித்தியானந்தன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

நிறைவாக.. எமது எல்லா கலை கலாசார நிகழ்வுகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்ற வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகிற்கும் இம்முறை எம்முடன் கரம்கோர்த்து மன்னார் மாவட்ட வர்த்தக நல்லுள்ளங்களுக்கும் நன்றிகூறி இம்மலரைப் பொது வெளிக்கு கையளிக்கிறேன்.

நன்றி.

மலராசிரியர்
தேசியக்கலைஞர்
சாஹித்தியா எஸ். ஏ. உதயன்
16.08.2025

*பொறுப்புக்குரியவர் உரைத்தவரே..!*

**இந்த மலரில் இடம்பெற்றுள்ள**
**அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும்**
**தார்மீகப் பொறுப்புடையவர்கள் ஆக்கியவர்களே..!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழாவில் வெளியிடப்படும் மன்னெழில் மலரின் மூன்றாவது இதழுக்கு எனது ஆசியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

மன்னார் மாவட்டம் வரலாற்றுப் பெருமையும், பண்பாட்டுச் செழுமையும் நிறைந்த ஒரு மாவட்டமாகும். மக்களின் வாழ்வியலோடும், சமய நம்பிக்கைகளோடும் கலை இலக்கியங்கள் இரண்டறக் கலந்துள்ளன. இந்த வகையில் மன்னார் மாவட்டத்தின் வரலாறு, கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டுச் செழுமையை வெளிப்படுத்தும் வகையில் வெளிவரும் இந்த மலரின் ஆக்கங்கள் எதிர்காலச் சந்ததிக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு அம்சங்களை மையப்படுத்தியதாக எழுதப்படும் ஆய்வுக் கட்டுரைகளை, ஆக்க இலக்கியங்களை வெளிக்கொண்டுவரும் ஊடகமாக மன்னெழில் - III வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல இளம் ஆய்வாளர்கள் உருவாகி, இந்த மண்ணின் மரபுகளை, வரலாறுகளை ஆய்வுசெய்து ஆவணப்படுத்த முன்வர வேண்டும். இதன் மூலம் எமது தொன்மங்கள், பாரம்பரியங்களை ஏனைய மக்கள் அறிந்துகொள்கின்ற ஏதுநிலை ஏற்படுத்தப்படும். இந்த நூலாக்க முயற்சியில் ஈடுபடும் அனைவரையும் நான் வாழ்த்துகின்றேன்.

இந்த அரிய முயற்சி வெற்றிபெற இறைவனுடைய ஆசியை வேண்டி நிற்கின்றேன்!

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்...

**மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை,**
**மன்னார் மறைமாவட்ட ஆயர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவை தலைவரின் ஆசிச்செய்தி

மன்னார் மாவட்டத்தின் கலை இலக்கியப் பண்பாட்டுச் செழுமையை வெளிப்படுத்தும் வகையில் வெளியிடப்படும் மன்னெழில் - III மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெரும் மனநிறைவு அடைகின்றேன்.

இதுவரை வெளியான மன்னெழில் - I, மன்னெழில் - II ஆகிய மலர்களின் மலராசிரியராக பணியாற்றியவன் என்ற வகையில் அதன் வெளியீட்டுச் சிறப்பு, அதன் உள்ளடக்கம் அது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி நான் நன்கு அறிவேன். வளம் நிறைந்த மன்னாரின் கலை இலக்கியச் செழுமையை அறிந்து கொள்ள விளைவோருக்கு மன்னெழில் மலர் ஓர் வழிகாட்டி என்று கூறின் அது மிகை யாகாது.

பண்டைத்தமிழரின் பண்பாட்டுப்பூமி மன்னார். தனக்கென உரித்தான தனித்துவப் பண்பினாலும், நாடி வந்தோரை வரவேற்று அரவணைத்து வாழ்விடமும். அனைத்துச் சிறப்பும் வழங்கி வாழ்விற்கும் அதன் சிறப்பிற்கும் இணை எதுவும் இல்லை. இவை எனது அனுபவத்தில் பெற்றவை. கடல்தொழிலையும், விவசாயம் உள்ளிட்ட வாழ்வனோபாய தொழில்களையும் நம்பிவாழும் மன்னார் மக்கள் தங்களுக்கே உரித்தான கலைகளையும், இலக்கியம் சார் கட்டமைப்புக்களையும் கட்டிக்காக்கத் தவறவில்லை. இதேவேளை, வாழ்வின் அடிநாதமாக விளங்கும் சமய வாழ்விலும் அவற்றுக்கு இடையிலான ஒற்றுமை மற்றும் இணக்கம் பேணும் தன்மையிலும் மன்னார் மக்கள் காட்டிவரும் முன்னுதாரணம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட மன்னெழில் போன்ற மாவட்ட மலர்கள் வழிசமைக்க வேண்டும் என இறைவனை வேண்டி இதன் தொடர்ச்சியான வரவிற்காய் உழைத்து நிற்கும் அனைவருக்கும் இறைஆசி தெரிவித்து கொள்கிறேன்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

**சிவஸ்ரீ மஹா. தர்மகுமாரக்குருக்கள்,**
**தலைவர்,**
**இந்துமத பீடம்,**
**மன்னார் மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜம்மியத்துல் உலமாசபை மன்னார் மாவட்ட தலைவரின் ஆசிச்செய்தி

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்.

மன்னார் மாவட்டம் இலங்கைத் திருநாட்டின் இந்திய துணைக் கண்டத்திற்கு அண்மையில் உள்ள பாரம்பரிய மாவட்டம் ஆகும். இந்த மாவட்ட மக்கள் கடல், வயல், காடு சார் தொழிலை மையமாகக் கொண்ட சமூகம் ஆகும்.

இம்மாவட்டத்தில் வாழும் மூவின மக்களும் கல்வி கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் அன்று தொட்டு இன்று வரை ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றமை ஒரு விஷேட அம்சமாகும்.

இவ்விஷேட அம்சங்களை தாங்கிய ஒரு வரலாற்று ரீதியான பல சிறப்பம்சங்களை உள்ளடக்கிய ஒரு பிரசித்தமான மாவட்டமாகும்.

இம்மாவட்டத்தின் மாவட்ட செயலக வெளியீடான 'மன்னெழில் - III' சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் வழங்குவதில் அகமகிழ்வு அடைகின்றேன்.

நன்றி

**மௌலவி. அஷ் ஷெஸ்க் MACMM அஸ்லம் (இஸ்லாஹி)**
**தலைவர்**
**ஜம்இய்யதுல் உலமா - மன்னார் மாவட்டம்**
**றகூல் புதுவெளி,**
**நானாட்டான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாதோட்டம் ரஜமகா விகாராதிபதியின் ஆசிச்செய்தி

'மன்னெழில் - III' மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மன்னாரில் அனைத்து மதங்களையும் பின்பற்றுவோர் இன நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இதற்கு இங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மதத்தலங்களே சிறந்த உதாரணம். அனைத்து இனமக்களும் மதவேறுபாடு இன்றி சகல வழிபாட்டுத் தலங்களுக்கும் சென்று வழிபடுகின்றனர்.

இவ்வாறு, இனநல்லிணக்கத்துடனும், மத நல்லிணக்கத்துடனும் வாழ்ந்துவரும் மன்னார் மாவட்ட மக்களுக்கு மன்னார் மாவட்ட செயலகம் ஆற்றிவரும் பணிகள் மனங் கொள்ளத்தக்கவை. ஆரம்பகாலத்தில் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக நிறுவப்பட்ட அரச அலுவலகங்கள் மக்களின் கலை, இலக்கிய வளர்ச்சிக்கும் தங்களால் இயன்ற பணிகளை ஆற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மன்னார் மாவட்டத்தில் கலை, இலக்கியத்துறையில் ஆர்வமும், ஈடுபாடும் காட்டிவரும் மூத்த கலைஞர்கள், இலக்கியவாதிகள், வளர்ந்துவரும் இளைய தலைமுறையினரை அரவணைத்துச் செல்லும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான கலைக்குழுவினரை மனதார வாழ்த்துவதுடன், மன்னெழில் மலர் தொடர்ந்தும் வெளிவர எனது ஆசிகளையும் தெரிவித்து நிற்கின்றேன்.

வண. அம்பகஸ்வெவ சங்கரத்த தேரர்
விகாராதிபதி
மாதோட்ட விகாரை
திருக்கேதீஸ்வரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்டத்தின் வரலாறு, கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டுச் செழுமையை வெளிப்படுத்தும் வகையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும், மாவட்டக் கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடாத்தும் 2025ம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழாவின் போது வெளியீடு செய்யப்படும்" மன்னெழில்" மலரின் 3 ஆவது இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

மன்னார் மாவட்டமானது, இலங்கையின் வடமேற்குத் திசையில் அமைந்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வரம் சிவன் கோவிலையும், மன்னார் மடுத் திருத்தலத்தில் அமைந்துள்ள 400 வருடங்கள் பழமை வாய்ந்ததும், தமிழ், சிங்கள கத்தோலிக்க மக்களின் வழிபாட்டுத் தலமாகவும் விளங்கும் மருதமடு அன்னையின் ஆலயத்தையும், முஸ்லிம் மக்களின் பள்ளிவாசல்களையும் மற்றும் மன்னார் மாதோட்ட ரஜமஹா விகாரையையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளின் கடல்வழி வாணிபத்திற்கான பயன்பாட்டிலிருக்கும் பழமைமிகு கப்பல் துறைமுகத்தையும், கோட்டைகள், பாலங்கள், சரணாலயங்கள் மற்றும் தலைமன்னார் கலங்கரை விளக்கம், குஞ்சுக்குளம் தொங்குபாலம், 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த பெருக்கமரம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் ஒரு பிரதேசமாக விளங்குகின்றது.

பல பெரியோர்களையும் அறிஞர்களையும் சிறந்த ஆற்றல் மிகு கலைஞர்களையும் தன்னகத்தே கொண்ட மன்னார் மாவட்டத்தில், நெற்பயிர்ச்செய்கை, மீன்பிடி, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆகியன முக்கிய வாழ்வாதார மற்றும் பொருளாதார மூலங்களாகக் காணப்படுகின்றன. இங்கு தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் என மூவினத்தவர்களும் ஒன்றாக வேறுபாடுகளின்றி வாழ்ந்து வருவது இன நல்லிணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

அத்தகைய மாவட்டத்தின் மண்ணின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் இடம் பெறும் பண்பாட்டுப் பெரு விழாவானது சிறப்பாக இடம்பெறவும் "மன்னெழில் - III" இதழ் இன்று வெளிவருவது போல் எதிர்காலத்திலும் மக்களுக்குப் பயன் தரும் வகையில் ஆக்க பூர்வமான விடயங்களைத் தாங்கி வெளிவர வேண்டும் எனவும் வேண்டி எனது உளம்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாகலிங்கம் வேதநாயகன்
ஆளுநர்
வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண பிரதம செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி

பல பாரம்பரிய கலைகளையும் கலாசார விழுமியங்களையும் மரபுவழி காத்து அவற்றின் தொன்மை மாறாதபடி வளர்ந்து வரும் நாகரீகத்திற்கேற்ப புதிய பொலிவோடு அவற்றினை பேணி வருவதில் மன்னார் மாவட்டமானது மிகவும் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகின்றது.

இத்தகைய பாரம்பரியக் கலைகளுள், மன்னார் மாவட்டத்தின் தனித்துவத்தை காட்டும் பல படைப்புகள் அழிந்து போயுள்ள நிலையிலும், பல நூற்றாண்டுகளாக மாவட்டத்தின் பல கிராமங்களிலும் பல்வகையான கலை பண்பாட்டு கோலங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு கிராமமும் வாழ்வியலுடன் ஒன்றிணைந்த பல பாரம்பரிய கலைப் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டுள்ளது என்பது வரலாற்று ரீதியான உண்மையாகும். கால மாற்றங்களினாலும் உள்நாட்டில் ஏற்பட்ட முரண்பட்ட சூழ்நிலைகளாலும் சிதைவுற்றும் மருவியும் போய்க் கொண்டிருக்கின்ற இக் கலைப்பண்பாட்டு மரபுகளின் பண்பாட்டுக் கூறுகளின் தொன்மை மாறாது பேணிக் காத்து மேம்படுத்துவதும், எதிர்கால சமூகத்திற்கு அவற்றின் தனித்துவத்தை எடுத்து கூறுவதும் எமது பாரிய கடமையாகும்.

அந்த வகையில், மன்னார் மாவட்ட செயலகமானது வருடந்தோறும் கலாசார விழாவினை நடாத்தி, மன்னார் வாழ் கலைஞர்களின் பல்வேறு கலை ஆக்கங்களையும், படைப்புகளையும் 'மன்னெழில்' எனும் மலரிதழினூடாக வெளிக்கொணர்ந்து அவற்றின் பெருமைகளை மக்கள் மத்தியில் அரங்கேற்றி பாதுகாத்து வருவது மிகவும் பாராட்டுதற்குரியது.

மன்னார் மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்படவுள்ள கலாசார விழாவில், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டுள்ள **மன்னெழில் - III** பலதரப்பட்ட கலைஞர்களின் கனதியான கலை ஆக்கங்கள், இலைமறைகாயாக மறைந்திருந்த இளம் படைப்பாளிகளின் முத்தமிழ் படைப்புகளை உள்ளடக்கிய ஒரு அழகிய மலராக வெளிவருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் வெளியீடானது கலையார்வம்மிக்க கிராம மக்களுக்கும் கலைஞர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியினை கொடுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இம் மலர் உருவாக்கத்தில் கலையார்வத்தோடும் அர்ப்பணிப்போடும் இணைந்து செயலாற்றிய மன்னார் மாவட்ட செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பணிப்பாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் யாவரையும் மனதார வாழ்த்துவதோடு மன்னார் மாவட்டத்தின் அழியாத கலை பண்பாட்டு கோலங்களை வெளிக்கொணருகின்ற நறுமலராக தொடர்ந்தும் வெளிவர எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தனுஜா முருகேசன்**
**பிரதம செயலாளர்**
**வடக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுப்பேரவை மற்றும் மன்னார் மாவட்ட செயலகம் ஆகியவற்றின் இணைந்த வெளியீடாக மலரும் "மன்னெழில்-III" சிறப்பு மலரின் ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இயற்கை அன்னையின் அருங்கொடையால் அழகும் வளமும் இணைந்தே பொருந்தி அமைந்த புண்ணிய பூமி மன்னார். அத்தகைய சிறப்புமிக்க பூமியின் பெருமையை எடுத்தியம்பும் மலராக மன்னெழில் வெளியிடப்பட்டுவருவது தாங்கள் அனைவரும் அறிந்ததே.

இதுவரை வெளிவந்த மன்னெழில் - I மன்னெழில் - II ஆகிய மலர்கள் எவ்வாறெல்லாம் மன்னார் மண்ணின் பெருமைகளை எடுத்தியம்பினவோ அதே போன்றே மன்னெழில் - III மலரும் மணம் வீசவேண்டும் என்பது எனது வேணவா. ஓரிரு வருடங்கள் தடைப்பட்டிருந்த இதன்வரவு மீண்டும் துளிர்விடவேண்டும் என்ற மாவட்ட கலை, பண்பாட்டுப் பேரவையின் வேணவா எனது பணிக்காலத்தில் நிறை வேறுவதையிட்டு பெரும் மனநிறைவு அடைகின்றேன்.

மன்னார் மக்கள் கடலையும் கடவுளையும் நம்பிவாழ்பவர்கள். அருள்நிறை மருதமடு அன்னையும், வரலாற்று தொன்மைசேர் மாதோட்டத்து காவலன் திருக்கேதீஸ்வரத்தானும், எல்லையற்ற பேருளாளனாம் நபிகள் நாயகம் அருளியவரத்தினாலும் மன்னாரில் தமிழ், முஸ்லிம் சிங்கள மக்கள் நிறைந்த வாழ்வை வாழ்ந்துவருகின்றனர். எழில் கொஞ்சும் வயல் நிலங்களும் என்றும் பச்சைப்பசேல் என காட்சி கொடுக்கும் தோட்ட நிலங்களும் இவற்றுக்கெல்லாம் உரம் சேர்க்கும் நீர்நிலைகளும் ஈடிணையற்றவை. அத்துடன், தத்தமது தொழில் முறைக்கு அப்பால் கலையால் பொழுதை அவப்பொழுது ஆக்காமல் தவப்பொழுதாக மாற்றுவர்களும் மன்னார் மக்களே. குறிப்பாக, இரண்டு, மூன்று நாள்களாக இரவும், பகலுமாக கூத்துக்காகவே உழைத்து நிற்பவர்களும் இவர்களே.

இத்தகைய பெருமையும், சிறப்பும் பொருந்திய மன்னார் மாவட்டத்தினதும் அதன் கலை, இலக்கியச் செழுமையையும் எடுத்தியம்பும் வகையில் வெளிவரும் மன்னெழில் - III மலரின் வருகைக்கு உதவிநின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.கனகேஸ்வரன்
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர் மன்னார்.
தலைவர் - மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப்பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
செயலாளர் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மன்னாரின் வரலாற்றாவணமாய் திகழும் மன்னெழில் சிறப்பாக வெளிவர மனமார்ந்த வாழ்த்துக்கள். வரலாற்றில் மாதோட்டம் என்று சிறப்பித்துக் குறிப்பிடப்பட்ட மன்னார் மாவட்டம் கடலும், கடல் சார்ந்த வளம் கொண்டதால் நெய்தல் நிலம் என்ற சிறப்புப் பெற்றுள்ளது. வரலாற்றுத் தொன்மைமிகு தொல்லியல் அடையாளங்களான அல்லிராணிக்கோட்டை, கட்டுக்கரைக்குளம், பெருக்குமரம் என பிரசித்தி பெற்ற இடங்களை தன்னகத்தே கொண்டமைந்து சுற்றுலா மேம்பாட்டிற்கு பங்களித்து வருகின்றது.

ஆன்மிகத்தில் மக்களை ஆற்றுப்படுத்தி வழிப்படுத்தும் மடுமாதா அன்னையின் அருளாட்சி பெறும் மன்னார் புனித பூமியின் வரலாற்றை ஆவணப்படுத்தி வெளிவருகின்ற மன்னெழில் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். மாகாணத்தின் பண்பாட்டிருப்பிற்காக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகானது மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைந்து பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பண்பாடு அறுபடா தொடர்ச்சிக்கும், நீட்சிக்குமாக செயற்படுத்தப்படுகின்ற இத்திட்டத்தினூடாக பிரதேசம், மாவட்டம் என நிதி ஏற்பாடுகளை வழங்கி கலைஞர்களையும், கலைச்செயற்பாடுகளையும் ஊக்குவித்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. மன்னார் மாவட்டத்தின் கலாசாரப் பேரவை பணபாட்டு மேம்மாட்டில் முனைப்புடன் செயற்படுகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும். அவர்களின் முனைப்பான செயற்பாடுகளில் ஒன்றாக மாவட்டத்தின் தொன்மைசார் விடயங்களையும், பண்பாட்டு மரபுகளையும் ஆவணப்படுத்தி மன்னெழில் என்ற ஆவண நூல் வருடந்தோறும் வெளிவருகின்றமை வரலாற்றில் தடம் பதித்த ஒன்றாகும்.

இத்தகைய அரும்பெரும் முயற்சிகளில் தங்கள் வேலைப்பழுவின் மத்தியிலும் தகுந்த ஆலோசனைகளையும் வழிநடத்தல்களையம் வழங்கி மலர் சிறப்பாக அமைய வழிகாட்டிய மன்னார் மாவட்ட செயலாளர், சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் மற்றும் மலர்க்குழுவினர் ஆகியோரை பாராட்டி மகிழ்வதோடு, ஒன்றிணைந்த இம்முயற்சியானது வரலாற்றில் தடம் பதித்து எமது அடுத்த சந்ததியினர் வரலாறுகளை சரியான முறையில் கற்றுக்கொள்வதற்கு பெரும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. தொடர்ந்தும் மன்னெழில் 03 மலரானது வருடாந்தம் வெளிவந்து மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வியலில் அறிவியல் ரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும் பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

**ம.பற்றிக் டிறஞ்சன்,**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின்
பிரதிப்பணிப்பாளர் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மாவட்டத்தின் வரலாறு பேசும் மன்னெழில் -III சிறப்புற வாழ்த்துகின்றேன்.

வடக்கு மாகாணத்தின் பண்பாட்டம்சங்களையும், வரலாற்றுத் தொன்மையினையும் பாதுகாத்து தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்கும் வகையிலான செயற்பாடுகளையும், திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்ற பண்பாட்டலுவல்கள் அலகு பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் கலாசார திட்டங்களை முன்னெடுத்து மாகாணப் பண்பாட்டு மேம்பாட்டின் மூலவுருவாய்த் திகழ்கின்றது. இவ்வாறானதொரு நிகழ்ச்சித்திட்டத்தின் வழியாக மன்னார் மாவட்ட கலைபண்பாட்டுப் பேரவை மன்னெழில் என்னும் பண்பாட்டாய்வு மலரை வருடந்தோறும் வெளியிட்டு வருகின்றதன் தொடர்ச்சியாக 2025ஆம் ஆண்டு வெளிவரும் மன்னெழில்- III மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்கக்கிடைத்த சந்தர்ப்பம் மகிழ்ச்சிக்குரியது.

மன்னார் மாவட்டத்தின் வரலாறு என்பது நீண்ட நெடிய பாதையைக்கொண்டது. மூவின மக்களினது வாழ்வினால் கட்டியெழுப்பப்பட்ட வரலாறு கொண்ட பிரதேசமாகும். நாயன்மாரால் தேவாரப்பாடல் பெற்ற வரலாற்றுப்புகழ் கொண்ட திருக்கேதீஸ்வரம் மற்றும் மடுமாதாவின் அருளால் பொலிவுற்றிருக்கும் மடு தேவாலயம் போன்ற ஆன்மிக சிறப்புமிக்க தலங்களை தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. இத்துணை சிறப்புடை மாவட்டத்தின் தொன்மையும் வரலாறும் நூலாக்க வடிவில் தொகுக்கப்படுவது காலத்தின் கட்டாயக்கடமை. இதனை நன்கு உணர்ந்து செயலாக்கமுனைந்த மன்னார் மாவட்டப் பண்பாட்டுப் பேரவை குழுமம் பாராட்டப்படவேண்டியவர்கள். அந்தவகையில் மன்னெழில்-3 வரலாறு, கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டுச்செழுமையை வெளிப்படுத்தும் ஆவண நூலாக அமைந்திருப்பது சிறப்பிற்குரியது.

இம்மலர் சிறப்புற வெளிவருவதற்கு மனதார வாழ்த்துவதுடன் நூல் வெளியீட்டிற்கு ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட செயலாளரையும், சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர், மலர்க்குழுவினர் மற்றும் மலருக்கான ஆக்கங்களை வழங்கியவர்கள் என அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் 'மன்னெழில்-III' மன்னார் மாவட்டத்தின் அடையாளமாகத்திகழ என் மனம் நிறைந்த வாழ்த்தினையும் தெரிவித்து கொள்கின்றேன்.

லா. நிருபராஷ்,
பிரதிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் அலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்-ஆறு = மன்னார்
# (Mann-aaru = Mannar)
## ஒரு வரலாற்றுத் தேடல்



**அருணா செல்லத்துரை**
முல்லைத்தீவு

இலங்கையின் தமிழ் பிரதேசங்கள் பற்றிய ஆய்வுகள் முறையாக இடம்பெறாத காரணத்தினால் தமிழர் வாழ்புலப் பிரதேசங்கள் பற்றிய தெளிவான விளக்கங்களைக் கூற முடியாமல் இருக்கின்றது. சில பிரதேசங்கள் பற்றி அதிகமான ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் மன்னார் பிரதேசம் பற்றிய விபரங்கள் முறையாக தெளிவாக்கப்பட வில்லை. சைவசமயம் மற்றும் கிறிஸ்தவ சமயத்துடன் சம்பந்தப்பட்டவையாக, மன்னார் பற்றிய வரலாறுகள் இருக்கின்றன. சமய வளர்ச்சிபற்றி அநேக குறிப்புகள் அந்நிய நாட்டவர்களால் எழுதப்பட்டுள்ளன.

துரதிஷ்டவசமாக அனைத்து குறிப்புகளும் மன்னார் தீவகத்தோடு சம்பந்தப்பட்டவை யாகவும் மன்னார் என்ற பெயரைக் கொண்டவையாகவுமே அமைந்துள்ளன. மன்னார் தீவகத்திற்கு அடுத்திருந்த பெருநிலப்பரப்பு பற்றிய விபரங்கள் பெருமளவில் தனியாக குறிக்கப் படவில்லை.

தற்போது உள்ள அனைத்து வரலாறுகளிலும் 15ம் நூற்றாண்டுகளுக்கு பிற்பட்டவையே எழுதப்பட்டு இருந்தாலும், அவற்றில் மன்னார்தீவகப் பிரதேசம் பற்றிய புராதன குறிப்புகள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ சமயம் இலங்கையில் பரவுவதற்கு முன்பிருந்த மன்னார் தீவகத்தைப் பற்றியும் அதற் கடுத்திருக்கும் பிரதான நிலப்பரப்பு பற்றியும் அவற்றின் பெயர்கள் பற்றியும் தொகுக்க வேண்டிய தேவையுள்ளது.

மன்னார் பற்றிய வரலாறுகளை தொகுப் பதற்கு தமிழ், சிங்களம், அந்நிய மொழிகளான சமஸ்கிருதம், பாளி, டச்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் உள்ள வரலாறுகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் முக்கிய மானது தமிழ் மொழியில் வழக்கத்திலுள்ள **மன்னார்** என்ற பெயராகும். மன்னார் என்பது காரணப்பெயராக இருந்தாலும் அதன் மூலப்பெயர் எவ்வாறு அமைந் திருந்தது என்பதைப் பற்றி ஆய்வு செய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆய்வுக் களத்தின் புவிஅமைப்பும் பெயர்களும் :

பெருநிலப்பரப்பில் அமைந்திருக்கும் பெயர்கள், பிரதேசத்தின் ஊடாகப் பாயும் ஆறுகள் மற்றும் குளங்கள் ஆகியவற்றின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களின் சிறப்புக்களை கூறும் காரணப் பெயர்களாகவும் அமைந்துள்ளன.

இந்த பிரதேசத்தில், மண், மணல், ஆறு போன்ற சொற்களைக் கொண்டு அழைக்கப்படும் இடங்கள் பல உள்ளன. தற்காலம்வரை மண்-முனை, மண்கிண்டி, மண்மலைக்குளம், மண்ணாகண்டல், மணல்ஆறு, மணல்பிட்டி, மணல்குளம் (இந்தப் பெயரில் மூன்று குளங்கள் உள்ளன) போன்ற பல சொற்கள் பாவனையில் உள்ளன.

இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களின் பாதிப்புக் காரணமாக, மன்னார் தீவகத்திலும் அடுத்திருக்கும் மாதோட்டம், மாந்தைப் பிரிவுகளில் காவியங்களோடு சம்பந்தப்பட்டதாக பல பெயர்கள் புதிதாக வைக்கப்பட்டு இருப்பதைக் காணலாம். இந்தக் காவியங்களின் நிகழ்வுகளோடு பிரதேசம் சம்பந்தப்பட்டிருப்பதே இதற்கான முக்கிய காரணமாகும். .

பெருநிலப்பரப்பை ஒட்டியிருக்கும் ஒரு தீவின் தற்போதைய பெயர் ஏனைய பெயர்களோடு ஒத்திசைவில்லாமல் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் மூலப்பெயர்; தமிழ் மொழியில் இருந்து ஆங்கில மொழிக்கு இசைவாக மாற்றப்பட்டுள்ளமை காரணமாக இருக்கலாம். அந்நியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவம், புரட்டஸ்தாந்து, உறோமன் கத்தோலிக்கம் போன்ற சமயங்கள் பரவிய காலத்தில் அவற்றிற்கு ஏற்றாற்போல் பெயர்கள் மாற்றடைந்திருப்பதையும் காணலாம்.

மன்னார் என்ற பெயர் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டது என்ற ஆய்வுக்காக புவிஅமைப்பு, கடல் கொந்தளிப்புகள், மருவிய பெயர்கள் எனப் பிரிக்கப்பட்டு கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. பின்வரும் பெயர்கள் தற்போது பாவனையில் உள்ளவற்றோடு பொருத்தமானவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மண்-ஆறு = மண்ணார்
= மன்னார் = Mannar
மன்னார் தீவகம் = தலை மன்னார்
= Talai Mannar
பெருநிலப்பரப்பு = மா-தோட்டம்
= Ma-Thoddam
மா-ந்தை = Ma-ntai

**முதலாவது கடல் கொந்தளிப்பு :**

இலங்கை வரலாற்றில் பல கடல் கொந்தளிப்புகள் குறிப்பிடப்பட்டாலும், இரண்டு கடல் கொந்தளிப்புகள் பற்றி முக்கிய குறிப்புகள் உள்ளன. முதலாவது கடல்கொந்தளிப்பு தமிழ் காலக்கணிப்புகளின்படி கி.மு.3084ம் ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. கடல் கொந்தளிப்பு இடம்பெற்றபோது தென்னிந்திய முனைக்கருகில் ஓடிய நீரோட்டம் பற்றி எழுதப்பட்டபோது, ஆறு பெருக்கெடுத்து தென்னிந்திய முனையைப் பிரித்தது என்று கூறப்படுகிறது.

ஆனால் இது தாமிரபரணி என்ற பெயரிலும் அழைக்கப்பட்டு, லங்காவின் பெயராகவும் அழைக்கப்பட்டுள்ளது என்ற கருத்துக்களும் உள்ளன. கடல் கொந்தளிப்புகளினால் பிரிக்கப்படும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பகுதிகள், பிரித்த ஆறுகளின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுவது பிரதேச வழக்கம். அதனால் பிரிக்கப்பட்ட தென்முனை பெருநிலப்பகுதி **தாமிரபரணி** என்ற ஆற்றின் பெயரால் அழைக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

**(1) வரைபடம் : தாமிரபரணி – லங்கா**

கி.பி.முதலாம் நூற்றாண்டிற்கான இலங்கை வரைபடம் தொலமி அவர்களால் கி.பி.05ம். நூற்றாண்டுகளில் வரையப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வரை படத்துடன் பின்னர் வரையப்பட்ட வரைபடங்களும் சேர்க்கப்பட்டு, தற்போது பாவனையில் உள்ள வரைபடம், கி.பி.1858களில் சேர்.ஜேம்ஸ் எமர்சன் ரெனற் என்பவரால் மாற்றியமைக்கப்பட்டது. இதில் கடல் கொந்தளிப்பு இடம்பெற்ற பின்னர் இராமர் படையெடுப்பு பற்றி சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட பெயர்களும், பௌத்த வரலாறு கூறும் பாளி மொழிப் பெயர்களும் சேர்க்கப் பட்டுள்ளன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மண்-ஆறு = மண்ணார்**
**: (Mann-aaru = Mannar)**

முதலாவது கடல் கொந்தளிப்பு இடம்பெற்ற காலத்தில் பெருநிலப்பரப்பில் மாதோட்டம் பிரதேசத்தின் ஊடாகப் பாய்ந்த நாயாறு, பேராறு மற்றும் நொச்சிமோட்டை ஆறு (பறங்கி ஆறு) போன்றவை மேற்குக் கடலில் சங்கமித்தாலும், பருவ காலத்தில் இதன் நீரோட்டம் தெற்கு நோக்கி அமைந்திருந்தது. அதேபோல நாணாட்டான் பகுதியின் அருகே கடலில் சங்கமிக்கும் மல்வத்த ஓயா (அருவி ஆறு) மேற்குக் கடலில் சங்கமித்தாலும் அதன் நீரோட்டம் வடக்கு நோக்கி அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடல் பெருக்கின்போது ஒன்றோடொன்று கலந்து, பரவைக் கடல்பகுதியின் கீழாகப் பாய்ந்த நீரோட்டங்கள் ஆறுபோல காட்சியளித்தன. இதனால் பெருநிலப் பரப்பின் மேற்கு முனையில் இருந்த நிலப்பரப்பு ஆழம் குறைந்த கடலினால் அல்லது மண்மேடுகள் நிறைந்திருந்த ஆற்றினால் பிரிக்கப் பட்டுள்ளது எனவும் கூறப்பட்டன. நீரோட்டங்கள் பாய்ந்த பள்ளப் பகுதியில் ஆங்காங்கே மண்மேடுகள் நிரம்பியிருந்த காரணத்தினால், பிரதேச பாரம்பரியத்தின் படி பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு **மண்-ஆறு** எனவும் பெயர் பெற்றது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது..

**முதலாவது கடல் கொந்தளிப்பு** தமிழ் ஆண்டுக் கணிப்புகளின்படி கி.மு.3084ம் ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது. அப்போது இலங்கை (லங்கா) தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இலங்கை பிரிக்கப் பட்ட விடயம், சுமார் **கி.மு.500ம் ஆண்டுகளில்** பாடப்பட்ட போகர் சித்தர் பாடல்களிலும், அதற்குப் பின்னர் **கி.பி.1000மாம் ஆண்டுகளில்** வட இந்திய மொழியிலிருந்த தமிழில் மொழிபெயர்க்கப் பட்ட இராமாயண காவிய குறிப்புகளிலும் உள்ளன.

இதனால் இலக்கிய நிகழ்வுகளுக்கு முன்னர் இந்தப் பிரதேசத்தின் புராதன பெயர்கள் என்ன? என்பது ஆய்வுக்குரிய தாகும். இதனை வெளிப்படுத்தும் வகையில் பிற்காலத்தில் வரைபடங்களும் வரையப்பட்டுள்ளன.

**தாமிரபரணி - லங்கா (Lanka) :**
**'தாமிரபரணி' என்ற பெயர்,** கடல் தொழிலில் ஈடுபடுவர்களால் வைக்கப் பட்டது என்பது தொலமியின் குறிப்புகளில் மூலம் தெளிவாகிறது. கடல் கொந்தளிப் பினால் பிரதான நிலத்திலிருந்து மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்பகுதி பிரிந்த பின்னர், தென்னிந்தியாவில் தேக்கன் பிரிவில் வாழ்ந்த இயக்கர் குலத்தவர்கள், அங்கு வந்து குடியேறியிருந்தமை, ஒட்டக்கூத்தர் எழுதிய இராம காதையில் குறிப்பிடப்படும் புராணக் கதைகளின் மூலம் தெரிய வருகிறது. தலைமை வகித்த இயக்க குலத்தவர்களிடமிருந்து புலஸ்திய முனிவரின் பேரனான குவேரன் நிர்வாகத்தை பொறுப்பேற்றதாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

அக்காலத்தில், தேக்கன் பிரிவில் தவத்தில் ஈடுபட்டிருந்த இராவணனார் நாட்டுக்கு திரும்பியபோது வழிபாடுகளில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளினால் பார்ப்பனர் களின் தாக்குதல்கள் உக்கிரமடைந் திருந்தன. உயிரிழப்புகளை விரும்பாத இராவணனார் அங்கிருந்து வெளியேறி, தனது முன்னோர்கள் வாழும் மாதோட்டம் பிரிவிற்கு வந்து சேர்ந்தார்.

மேற்குக்கரையில் ஆட்சி நடத்தியவரான குவேரன் தனது ஆள்புலத்தை வழங்கியதோடு, ஆகாய ஊர்தி ஒன்றையும் வழங்கியிருந்தார் என்று இராவணனார் பற்றிய வரலாறு, ஒட்டக்கூத்தரால் கி.பி.10ம் நூற்றாண்டுகளில் மொழிபெயர்க்கப்பட்ட இராமகாதையில் கூறப்பட்டுள்ளது. கி.மு.3084களில் இராவண மகாராசாவின் ஆட்சிக்காலம் இலங்கையில் ஆரம்பித் துள்ளது. அதற்குப் பின்னர் **லங்கா** என்ற சமஸ்கிருதப் பெயர் பிரபலத்திற்கு வந்துள்ளது. இராவணனாரும் சமஸ்கிருத மொழியில் ஒரு விற்பன்னராகவும் இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வட இந்திய அயோத்தி இளவரசர் இராமர், இலங்கை மீது படையெடுத்து வந்தார். தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் தீவுக்கூட்டத்தின் தொடர்ச்சி யாக தலைமன்னார் வரை அணை கட்டப்பட்டது. இது இராமர் அணை எனவும் அழைக்கப்படுகிறது என்பதற்கு ஆய்வுகள் சான்று பகருகின்றன.

**துவாபரயுகத்தில் லங்காவில்** ஆட்சியில் இருந்தவர் இராவண மகாராசாவாகும். இவர் அதீத சக்தி படைத்த **மானிட** குலத்தைச் சேர்ந்தவர். வடஇந்தியாவில் இருந்து வந்த மனித குலத்தைச் சேர்ந்த இராமர், இலட்சுமணன், மற்றும் வானரப் படைகள் ஆகியவற்றுடன் யுத்தம் புரிய விரும்பாமலும், யுக மாற்றத்தை உணர்ந்து கொண்டதாலும், ஆயுதங்களை கீழே போட்டு கடற்கரையில் இருந்த கோட்டையைத் தெரிவு செய்து, தனது உறவினர்களுடன் சமாதியிருந்துள்ளார் என்ற தகவல் இராமகாதை தமிழில் எழுதப்படுவதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.மு.05ம் நூற்றாண்டுகளில் காலாங்கிச் சித்தரால் கூறப்பட்டுள்ளது.

காலாங்கிச் சித்தர் தனது சீன விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்புவதற்கு முன்னர் இராவண மகாராசாவின் சமாதியைத் தரிசிப்பதற்காக லங்காவிற்கு வந்திருந்தார். காலாங்கிச் சித்தர் கூறிய விடயங்களைப்பற்றி, **போகர் - 7000** என்ற பாடல் தொகுதியில் 16 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இந்தப் பாடல்களில் மற்றுமொரு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு இராவண மகாராசா சமாதியிருந்த கோட்டையை கடல் காவு கொள்ளும் என்ற விடயமும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. காலாங்கிச் சித்தர் அவர்களின் பிரதம சீடர் போகர் சித்தராகும்.

இராவண மகாராசாவின் அதீத சக்திகள் மற்றும் அவரது சிறப்புக்கள் பற்றி முதலில் கூறியவர் காலாங்கிச் சித்தரே ஆகும். அவர் கூறிய விடயங்களை பாடல்களாக போகர் சித்தர் பாடியுள்ளார். இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களில் இராமர் சீதை பற்றிய விபரங்கள் அதிகம் கூறப்படவில்லை. இராவண மகாராசாவின் ஆட்சி இடம்பெற்று சுமார் 2584 வருடங்களின் பின்னர் கி.மு. 05ம் நூற்றாண்டுகளில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன என்பது இணையத்தள குறிப்புகளில் இருந்து தெளிவாகிறது. **கி.மு.5ம் நூற்றாண்டுகளில்** தென்னிந் தியாவில் இருந்து சீனா சென்றிருந்த காலாங்கிச் சித்தர் நாடு திரும்பிய போது லங்கா கடற்கரையில் இருந்த இராவண மகாராசாவின் சமாதியை தரிசிக்க விரும்பி, லங்கா வந்து சென்றுள்ளமை போகர் சித்தர் பாடல் மூலம் தெளிவாகிறது.

**போகர் சித்தர் பாடல்** : நேரடி யுத்தத்திற்கு அழைத்த இராவண மகாராசா இராமருடன் போர் செய்ய புறப்பட்டுச் சென்றார். மனித குலத்தைச் சேர்ந்த இராமர் மரவுரி தரித்து அம்பு வில்லுடன் யுத்தத்திற்கு தயாராக இருந்தார். யுத்த களத்தில் இதனைக்கண்ட இராவண மகாராசா இது யுகமாற்றத்தின் விளைவு என்பதையும் தனது துவாபரயுக வாழ்வு முடிவுற்றதையும் உணர்ந்து கொண்டு, ஆயுதங்களை நிலத்தில் போட்டு விட்டு, யுத்தம் புரியாமல், லங்கா பெரு நிலப்பரப்பிற்கு திரும்பி வந்து தனது கடற்கரைக் கோட்டையில் உறவினர் களுடன் சாமாதியிருந்தார் என்ற விடயமும் கூறப்பட்டுள்ளது.

காலாங்கிச் சித்தர் யோகக் கலைகளில் தலைசிறந்தவர். அவருக்கு முன்னர் யோகக் கலைகளில் தலைசிறந்தவரும், மகாயோகி என அழைக்கப்பட்டவருமான இராவண மகாராசாவின் சமாதியை தரிசிக்க விரும்பியதில் ஆச்சரிய மெதுவுமில்லை. அதிலிருந்து இராவண மகாராசா யுத்தத்தில் இறக்கவில்லை என்பதும் தானாகவே சமாதியிருந்தார் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளலாம். தமது ஆயுள் காலம் முடிவடைந்ததை உணர்ந்து கொள்ளும் மகாயோகிகள் தாமாகவே சென்று சாமாதியிருந்து இறைவனடி சேர்வது வழக்கம். காலாங்கிச் சித்தர், இராவண மகாராசாவின் சமாதியை தரிசிக்கச் சென்றபோது சமாதியருகில் இருந்த சித்தர் ஒருவர் கூறியதாக அமைந்துள்ள ஒரு பாடல் உதாரணத் திற்கு தரப்படுகின்றது.

2413.
*கேட்கையிலே துவாபர யுகத்திலப்பா*
*கெடியான என்பாட்டன் ராவணற்கு*
*சூட்சமுடன் ரிஷிசாபம் நேர்ந்ததென்று*
*சூட்சமுடன் எந்தனுக்கு*
*சித்துசொன்னார் வேட்கமுடன்*
*ரிஷியினிட சாபத்தாலே*
*வேகமுடன் கோட்டையது*
*அழியவென்றும்*
*நீட்கமல சூர்ப்பனகி பங்கமாகி*
*நீடாகி கோட்டையது இடியென்றாரே.*

**தெளிவுரை:** துவாபரயுகத்தில் மிகவும் பலம்பொருந்திய என் பாட்டன் ராவணற்கு, மிகவும் சூட்சுமமான முறையில் ரிஷி ஒருவர் சாபமிட்டுவிட்டார் என்று சமாதி அருகிலிருந்த சித்தர் கூறினார். ரிஷியின் கடுமையான சாபத்தால் கோட்டையது அழியுமென்றும், அதற்கு சூர்ப்பனகியால் ஏற்பட்ட பங்கமே காரணமாக அமைந்து விட்டது என்றும் கூறினார்.

**வரலாற்றுத் தெளிவு** : துவாபரயுகத்திலே எனது பாட்டனார் இராவணர் மிகவும் பலமுள்ளவராக இருந்தார். அவருக்கு மிகவும் சூட்சுமமான முறையில் ரிஷி ஒருவர் சாபமிட்டிருந்தார் என்று காலாங்கி நாதர்க்கு, இராவண மகாராசாவின் சமாதியருகிருந்த சித்தர் சொல்லியிருந்தார். ரிஷியினுடைய சாபத்தாலே மிகவும் விரைவில் கோட்டை அழியுமென்றும், அதற்கு சூர்ப்பனகியின் செய்கையே காரணமாக அமைந்திருக்கிறது எனவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் கோட்டையது கண நேரத்தில் இடிந்து போகும் என்றும் கூறியுள்ளார். அதாவது இராவண மகாராசா யுத்தம் செய்ய விரும்பாமல் நாடு திரும்பி, சமாதியிருப்பதற்கு பொருத்தமாக கடற்கரையில் இருந்த கோட்டையைத் தெரிவு செய்து அங்கு சமாதியிருந்தார் என்பதையே பாடல் மறைமுகமாகக் கூறியிருக்கிறது.

(02). இராவணனார் கோட்டை



அவர் சமாதியிருக்கப் போகும் கோட்டை உட்பட இலங்கை நாட்டின் மேற்குப் பகுதியை, நொடிக்குள்ளே கடல் பொங்கி வந்து காவு கொள்ளும் என்பதை தனது ஞான சக்தியால் உணர்ந்து கொண்ட காரணத்தால், மகாராசாவும் அவரைச் சார்ந்தவர்களும் கோட்டையினுள் சமாதி இருக்க தீர்மானித்திருந்தார்கள் என்றும் கருதவும் இடமுண்டு.

காலாங்கிச் சித்தர் மற்றும் போகர் சித்தர் வாழ்ந்த காலம்வரை, இராவண மகாராசா சமாதியிருந்த கோட்டை அழியாமல் இருந்துள்ளமை தெளிவாகிறது. இந்தக் கோட்டையை கடல் காவு கொள்ளும் என்று இராவணனார் சமாதியின் அருகி லிருந்த சித்தர் ஒருவர், காலாங்கி நாத சித்தரிடம் எதிர்வு கூறியிருந்தார் என்றும் போகர் தனது பாடலில் கூறியுள்ளார்.

இராவண மகாராசா சமாதியிருந்த கோட்டையை கடல் காவு கொண்டு சுமார் 1300 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒட்டக்கூத்தரால் மொழி பெயர்க்கப்பட்ட இராம காதையில் யுத்தம் பற்றி எதுவும் பெரிதாகக் குறிப்பிடப்படவில்லை.

**இலக்கியத்தில் மண் ஆறு :**

மன்னார் தீவகத்திற்கும், லங்கா பெருநிலப்பரப்பிற்கும் இடையே இருந்த நீர்ப்பரப்பை ஆரம்ப காலத்தில் மக்கள் கால்நடையாக நடந்தும், அதற்குப் பின்னர் படகுகளில் கடந்தும் சென்றுள்ளனர். இராமாயணத்தில் சீதைக்கு தூது சென்ற ஹனுமார் கடலைத் தாண்டிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. மணமேடுகள் நிறைந்த மண்ஆற்றுப் பகுதியை தாவித் தாவி சென்றதையே இந்த நிகழ்வு குறிப்பிடுகிறது என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது.

இலக்கிய கர்த்தாக்கள், இராமாயண காவியத்தின் நிகழ்வு ஒன்றை ஆதாரம் காட்டி, இராம தூதனான ஹனுமான் தள்ளாடிய இடம் தள்ளாடி எனவும், ஆற்றுப்பள்ளம், தள்ளாடிப் பள்ளம் என்றும் கூறியுள்ளனர். பின்னர் அதனை குறுக்கறுத்து சிறிய பாலம் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

அப்படியானால் இலக்கியத்தில் குறிக்கப்படும் நிகழ்வுகளுக்கு முன்னர், மன்னார் தீவகத்திற்கும், லங்கா பெருநிலப்பரப்பிற்கும் தனியான வரலாறுகள் மற்றும் பெயர்கள் இருக்கவில்லையா? என்பது கேள்வியாக உள்ளது.

தற்போது பரவைக் கடல் பகுதியை கடந்து செல்வதற்கு பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பள்ளத்தின் ஊடாகப் பாயும் நீரோட்டம், வடக்கு தெற்கு என இரண்டு திசைகளுக்கும் பாய்வதை பாலத்தில் நின்று பார்த்தால் அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03). தள்ளாடிப் பாலம்



வரலாற்றுச் சிறப்பு மிக்க கி.மு. 05ம் நூற்றாண்டு : இலங்கையில் கி.மு.5ம் நூற்றாண்டுகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. கி.மு.543களில் இலங்கையின் கிழக்குக் கரையோரமாக இறங்கிய விஜயன் அனுராதபுரம் வரை வந்துள்ளார். தனது ஆட்சியைத் தொடர்வதற்கு விஜயன் தனது உறவினர்களை அழைத்திருந்தார். ஒரு வருட காலத்திற்கான (கி.மு. 505-504) இடைக்கால அரசை, பிராமண குலத்தைச் சேர்ந்த ஒருவர் நடத்தியுள்ளார். அவர் இருந்த இடம் பிராமணாலங்குளம் என அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதற்குப் பின்னர் 504 களில் விஜயனின் அண்ணன் மகன் பண்டுவசுதேவ லங்காவிற்கு வந்து ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று பௌத்த வரலாறுகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் தென்னிந்தியாவிலிருந்து சேர சோழ பாண்டிய மன்னர் குலத்தைச் சேர்ந்த பலர் லங்காவின் மேற்குக் கரையோரமாக வந்து, மா-தொட்ட (பெரிய இறங்குதுறை) துறைமுகத்தின் ஊடாக கடல் வாணிபத்தை நடத்தியுள்ளமை தமிழ் இலக்கியங்களிலும் பாடப்பட்டுள்ளன. இதுபோல பல மாற்றங்கள் ஏற்பட்ட காலமாக கி.மு.5ம் நூற்றாண்டு வரலாறு களில் குறிக்கப்படுகிறது. இவற்றிலிருந்து இராமர் படையெடுப்பிற்கு முன்னரே லங்கா பெருநிலப் பரப்பிலிருந்து மன்னார் தீவகம் பிரிந்திருந்தது என்பதும், பிரித்த கடல் பகுதி ஊடாக, கால் நடையாக கடந்து செல்லக்கூடியதாக இருந்தது என்பதும் தெளிவாகிறது.

மன்னார் தீவகத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களின் பாதிப்பு காரணமாக பல பெயர்கள் இருக்கின்றன. இந்தக் காவியங்களின் நிகழ்வுகளோடும் பிரதேசம் சம்பந்தப் பட்டிருப்பதையும் காணலாம்.

இரண்டாவது கடல் கொந்தளிப்பு : கி.மு.3ம் நூற்றாண்டுகளில் மன்னார் தொடக்கம் தூத்துக்குடி வரை கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு நிலப்பரப்புகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது வரலாறு கூறும் விடயமாகும். காலக்கணிப்புகளின் அடையாளமாகவும் இரண்டாவது கடல் கொந்தளிப்பு குறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கடல் கொந்தளிப்பு கி.மு.253 ம் ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது. இதுபற்றிய விபரங்கள் ராஜாவழி என்ற பௌத்த வரலாற்றிலும், ஆங்கில வரலாறுகளிலும் குறிக்கப் பட்டுள்ளன.

மா-தொட்ட : இரண்டாவது கடல் கொந்தளிப்பின்போது, கேதீச்சரம் ஆலயத்திற்கு மேற்கேயிருந்த மா-தொட்ட (Ma-totta) என்ற பெரிய இறங்கு துறையில் கடல் அரிப்பு ஏற்பட்ட காரணத்தினால், கப்பல்கள் கரைக்கு அருகே வந்து நங்கூரமிட முடியாமல் போனது. தென்னிந்தியாவிலிருந்து சிறிய படகுகளில் வருபவர்கள் மட்டும் இறங்கக் கூடியதாக இருந்தது.

(04) மா-தொட்ட(பெரியஇறங்கு துறை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படத்தில் கடல் கொந்தளிப்பு காரணமாக கேதீச்சரம் ஆலயத்தில் இருந்து சுமார் 150 யார் தூரத்தில் கடல் காவு கொண்ட நிலப்பகுதி தெரிகிறது. இந்தக் கடல் பகுதி மா-தொட்ட என்றழைக்கப்பட்ட பெரிய இறங்குதுறை அமைந்திருந்த நிலப்பரப்பாகும். தற்போது கடலரிப்பு ஏற்பட்ட நிலப்பகுதியில் மரங்கள் வளர்ந்துள்ளன. இந்த மரங்கள் மழை இல்லாத காலத்தில் வெளியே தெரியும். கடல் பெருக்கெடுக்கும் காலத்தில் மரங்கள் வெளியே தெரியாத காரணத்தினால் வள்ளங்களையோ அல்லது கப்பல் களையோ கரைக்கு அருகில் கொண்டு வருவது முடியாத காரியமாகும். இதனால் பெரிய இறங்குதுறைக்கு வாணிபக் கப்பல்கள் வருவது நிறுத்தப்பட்டு விட்டது.

**மாந்-தொட்ட (மண்-தொட்ட) :** லங்காவின் மேற்குக் கரையில் மா-தோட்டம் பகுதியில் இயக்கர்களும், அதற்கு தெற்கேயிருந்த நாகதாழ்வு என்று பெரும்பகுதியில் நாகர்களும் வாழ்ந்துள்ளனர். நாகர்கள் வாழ்ந்த நாகதாழ்வுப் பிரதேசத்தின் கடற்கரையோரத்தில் இருந்த மா-ந்தைப் பகுதியில் **மண்-தொட்ட** (Man-totta) என்ற இறங்கு துறை இருந்துள்ளது.

**(05) வரைபடம் நாகதாழ்வு**



இரண்டாவது கடல் கொந்தளிப்பின் பின்னர் நாகதாழ்வுப் பிரதேசக் கடற்கரையில் இருந்த இறங்குறை நாகர்களால் மேலும் திருத்தப்பட்டது. ஆனால் பாரமேற்றிய பெரிய கப்பல்கள் நேரடியாக போக்குவரத்து செய்ய முடியாமல் போனதிற்கு காரணம் கடலின் ஆழம் போதாமல் இருந்தமையாகும். இதனால் பாரத்துடன் வரும் கப்பல்களை ஆழம் கூடிய கடல் பகுதியில் நிறுத்தி, கப்பலிலுள்ள பாரத்தை இறக்கி, படகுகள் மூலம் எடுத்துச் சென்று ஆழக்கடலுக்கு அருகில் இருக்கும் மண் திட்டுக்களில் இறக்கி வைத்து விடுவது வழக்கம்.

மண்-தொட்ட (Man-totta) இறங்கு துறையின் வளர்ச்சி காரணமாக தென்கிழக்காசிய நாடுகளில் இருக்கும் அநேகரின் கவனம் அதன் மீது திரும்பியது. கி.பி.முதலாம் நூற்றாண்டுக்கான வரைபடத்தை, கி.பி 05ம் நூற்றாண்டுகளில் தொலமி அவர்கள் வரைந்தபோது மா-ந்தையின் பெயர் **மர்கானா** என கிரேக்க மொழியில் அழைக்கப்பட்டிருந்தது என்பதற்கு, வரைபடம் சான்றாகின்றது.

**(06).மர்கானா**




**கப்பல் போக்குவரத்து :** கப்பல் போக்குவரத்து எவ்வாறு இடம்பெற்றது என்பதை கி.பி.1859 களில் சேர் எமர்சன் ரெனற் அவர்கள் தனது சிலோன் என்ற நூலில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புராதன காலத்தில் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இருந்து இடம்பெற்ற கடல் வாணிபத்தின் பெரும்பகுதி, மன்னார் தீவகத்தையும் இலங்கை பிரதான நிலப்பரப்பையும் பிரிக்கும் ஆழம் குறைந்த கடல் பகுதியின் ஊடாக இடம்பெற்றுள்ளது. இதற்கென

'**மண்-தொட்ட**' இறங்கு துறையிருந்த பிரதான நிலப்பரப்பில் மட்டுமல்ல, ஆழக்கடலுக்கு அருகிருந்த சிறிய தீவுகளிலும் பல தொழில் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கப்பல்களின் சுமையை குறைப்பதற்காக, பொதிகளை இறக்கி, சிறிய தீவுகளுக்கு கொண்டு செல்வதற்கு படகுகள் பயன்படுத்தப் பட்டிருந்தன.

'சுமை குறைக்கப்பட்ட கப்பல்கள், சிறிய படகுகள் மூலம் ஆழக்கடலுக்கு இழுத்துச் செல்லப்படும். நீரினால் மூடப்பட்டிருக்கும் மண் திட்டுக்களில் கப்பல் சிக்காமல் தவிர்த்து, படகுகள் மூலம் ஆழக்கடலுக்கு இழுத்துக் கொண்டு செல்ல முடியும். திடல்களில் இறக்கி வைக்கப்பட்ட பொதிகளை, திரும்பவும் படகுகளில் ஏற்றி கப்பலுக்குக் கொண்டு சென்று ஏற்றும் பணிகள் இடம்பெற்றுள்ளன.

*('CEYLON' by Sir James Emerson Tennent-1859. Vol.1 .p.556)*

*During the early ages, considerable portion of the trade between the east and the west of India was carried through the narrow channel which separates Mannar from Ceylon, and active establishments were formed not only at **Man-totte** on the mainland, but the little island itself, to be used for **unlading** and reloading such craft as it was necessary to lighten, in order to assist them over the **shoals**. ('CEYLON' by Sir James Emerson Tennent-1859. Vol.1.p.556)*

*(Unlading = சுமையைக் குறைப்பதற்காக பறித்து, திரும்ப ஏற்றுதல்,*
*Shoals = நீரினால் மூடப்பட்டிருக்கும் மண்திட்டுக்கள்.)*

மா-சந்தைப் பிரதேச கடற்கரையோரத்தில் இருந்த 'இறங்குதுறை' '**மண்-தொட்ட**' என்று சமஸ்கிருத மொழியில் அழைக்கப்பட்டுள்ளது.

**இலக்கியத்தில் மாந்தை** : மன்னார் தீவகத்தின் தென்முனைக்கு எதிரேயிருந்த இலங்கையின் நாகதாழ்வு நிலப் பிரதேசத்தின் கடற்கரையில் இருந்த மாந்தைப் பட்டினம், இராஜதானியாகவும் இருந்தது. இராசநாயகம் முதலியார் 1926 களில் எழுதிய ஆங்கிலநூலில், மா-ந்தை என்ற இடத்துக்கான விளக்கத்தைக் கூறும் குறுந்தொகைப் பாடல் ஒன்றை இதற்கு ஆதாரம் காட்டியுள்ளார். குறுந்தொகையில் 5-34 வதாக வரும் பாடலில், மா-ந்தைப் பட்டினம் அமைந்திருந்த நாகதாழ்வுப் பிரதேசமும், பெருந்-தோட்டமும் (மா-தோட்டம்) தனித்தனியான பிரதேசங் களாகும் என்பதை இரண்டு இடங்களில் தெளிவாகக் கூறியுள்ளார்.

'முனாஅதியானையின் குருகின்
கானலம் **பெருந்தோட்ட** மள்ளரார்
பிசைவருங் குட்டுவன்
**மாந்தை** யன்ன....'

'குட்டுவனுக்குச் (சேரன்) சொந்தமான **மாந்தை** நகரின் கடற்கரையோரத்தில் நிற்கும் யானைகள் இலைகுழைகளை சாப்பிடும் பொழுது, **பெருந்-தோட்டத்தில; ((Ma-tota)** விவசாயிகள் எழுப்பும் ஒலி அவைகளைப் பயமுறுத்தின' என்று முதலியார் இராசநாயகம் அவர்கள் குறுந்தொகைப் பாடலுக்கான பொழிப் புரையில் தெரிவித்துள்ளார்.

*( 'Like unto the city of **Mantai** belonging to Kuttuvan, where the elephants feeding*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*in the groves on the* ***sea-coast*** *are frightened by the noise made by the cultivators of* ***Perun-totam (Ma-tota).*** *(Ancient Jaffna by C.Rasanayagam Mudaliyar 1926. p.21)*
மற்றுமொரு இடத்தில் இராசநாகயம் முதலியார் மேற்கூறிய கருத்தை மேலும் உறுதிசெய்துள்ளார்.

'பெருந்தோட்டத்தில் விவசாயிகள் எழுப்பும் ஒலி, மா-ந்தைக் கடற்கரையோரத்தில் இருக்கும் யானைகளைப் பயமுறுத்தின என்ற குறுந்தொகைப் பாடல்வரிகள் மா-ந்தை என்ற பிரிவை தனியாகவும் தெளிவாகவும் அடையாளப்படுத்துவதற்கு ஆதாரமாகின்றது. **(பெருந்தோட்டம் =** இதன் மற்றுமொரு ஒத்த சொல் **மா-தோட்டம்** என்பதாகும்.)

கடற்கரையோரத்தில் (Sea-coast) மாந்தைப் பட்டினம் அமைந்திருந்தது, நிலப்பரப்பிற் குள் இருந்த பெருந்தோட்டம் மற்றும் ஒரு பகுதி என்று கூறியதன் மூலம் இரண்டு பிரிவுகளும் வேறுவேறு பிரதேசங்கள் என்பதையும் அவற்றிற்கான புவியியல் அமைப்பையும் கூறி அடையாளப் படுத்தியுள்ளார்.
*() 'The fact the noise made by the cultivators of* ***Peruntotam (which appears to be the translation of Matota)*** *frightened the elephants on the sea coast of Mantai, as stated in the Kuruntogai vers referred to in notes, clearly proved the identity of Mantai'. ('Ancient Jaffna' by* ***C.Rasanayagam Mudaliyar 1926. p.23)***
**மாந்தையின் கடற்கரையோரம்** என்று குறிப்பிடப்படுவது, அங்கிருந்த இறங்குதுறையைக் குறிக்கிறது. அதன் சமஸ்கிருத பெயர் **மண்-தொட்ட** என்பதாகும். 'மண்-தொட்ட' என்ற சமஸ்கிருதச் சொல், 'மண்-தோட்டை' எனவும் மாந்-தோட்டை என்றும் தமிழ் வரலாறுகளில் எழுதப்பட்டுள்ளன.
**பெருந்தோட்டம்** பிரிவிலுள்ள பெரிய இறங்குதுறை என்ற தமிழ் சொல்லின் சமஸ்கிருத பதம் **'மா-தொட்ட'** என்பதாகும். மா என்பது பெரியது என்பதையும் **'தொட்ட'** என்பது இறங்கு துறையையும் சுட்டுகின்றது.
**பெருந்தோட்டம் என்ற தமிழ்ப் பதத்தின்** ஆங்கில மொழிபெயர்ப்பு மா-தொட்ட என்று ஆசிரியர் குறித்திருப்பது தவறானதாகும். **பெருந்தோட்டம்** என்பது **மா-தோட்டம்** என அழைக்கப்பட்டுள்ளது.

பல நாட்டவர்களின் கவனம் மண்-தொட்ட இறங்குதுறைமீது திரும்பிய காரணத்தினால் நாகர்களின் வளர்ச்சி குன்றியது. இரும்பினால் கட்டப்பட்ட வெளிச்ச வீடும் இங்கிருந்து அகற்றப்பட்டது. இதன் காரணமாக நாகர்கள் கடற்கொள்ளைகளில் ஈடுபடத் தொடங்கினர். இதனால் அவர்களின் வளர்ச்சியை இந்தியா உட்பட பல நாடுகள் ஒன்று சேர்ந்து நசுக்கி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன.

**இலக்கிய வரலாறு :** கிறிஸ்துவிற்கு முன்னர் இராவண மகாராசாவின் ஆட்சி இடம்பெற்று 4084 ஆண்டுகளின் பின்னர், அதாவது **கி.பி.10ம் நூற்றாண்டுகளில்,** வான்மீகி முனிவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இராமருடைடைய வரலாறு தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. ஒட்டக்கூத்தர் மற்றும் கம்பர் ஆகிய புலவர்கள் இதனை மொழிபெயர்த் துள்ளனர். ஒட்டக்கூத்தர் மொழிபெயர்த்த இராமகாதையில் இராவண மகாராசாவின் வரலாறும் புகழும் மேலோங்கி நிற்கிறது. ஆனால் கம்பர் கற்பனை கலந்த ஒரு காவியமாக படைத்ததினால், இலக்கிய ரசிகர்கள் மத்தியில் பிரபலமடைந் திருந்தது. அதில் காவியத்தின் சிறப்புக்கருதி இராமருடைய புகழுக்கு முன்னிடம் வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தி இளவரசர் லங்கா மீது படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றி விபீஷணனிடம் கையளித்து விட்டு நாடு திரும்பியபோது, ஆழம் குறைந்த பரவைக்கடலை கால்நடையாக கடந்து சென்றார். இந்தத் தகவல் காவியத்தில் கூறப்பட்ட விடயமாகும். இந்த நீர்ப்பரப்பைக் கடந்தபோது அவருடன் கூட வந்த பெண் பக்தர்கள் தமது ஆடைகள் நனைந்து விடாமல் தூக்கிபிடித்துச் சென்றதை, மன்னுக்கிறது என்று பாடிய காரணத்தினால் **மன்னார்** என்ற பெயர் வந்ததாக இலக்கிய கர்த்தாக்கள் விளக்கங்களும் கூறியுள்ளனர்.

சேர சோழ பாண்டிய மன்னர்கள் மாந்தைத் துறையில் இறங்கி அதனைக் கைப்பற்றி தமது கடல் வாணிபத்தை நடத்தியுள்ளனர். இதனால் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டன. நாகர்களில் ஒரு பகுதியினர் தமது வாழ்புலத்திலிருந்து விலகி கடலில் கடற்கொள்ளைகளில் ஈடுபட்டனர். இவர்கள் பௌத்த சமயத்திற்கு மதம் மாற்றப்பட்டும் இருந்தனர். கடற்கொள்ளைகளில் ஈடுபட்ட நாகர்கள் ஏற்கனவே மதம் மாறியிருந்த காலத்தில், அசோகச் சக்கரவர்த்திக்கு நிறைய கௌரவம் வழங்கியுள்ளதை வரலாற்றில காணமுடிகிறது. இந்த விடயம் இலக்கியங்களிலும் குறிப்பிடப்படுகிறது.

இக்காலத்தில் மாந்தையில் இருந்த விஷ்ணு ஆலயம் சிதைக்கப்பட்டிருந்தது. சிதைந்த நிலையில் விஷ்ணு ஆலயம் ஒன்று மாந்தையில் இருந்ததாக ஆய்வாளர் பார்க்கர் குறிப்பிட்டுள்ளமை ஆய்வுக்கான ஒரு முக்கிய குறிப்பாகும்.

மேற்காட்டப்பட்ட விளக்கங்களில் இருந்து நாகர்கள் இயக்கர்களோடு கலந்து, பெருநிலப்பரப்பின் மத்திய பகுதியில் குடியேறியமையும், பௌத்த சமயத்திற்கு மாற்றப்பட்டு அனுராதபுரத்திற்கு அதாவது தென்பகுதிக்கு இடம்பெயர்ந்தமையும் தெளிவாகிறது. கடற்கொள்ளைகளில் ஈடுபட்ட காரணத்தினால் அவர்களுடைய வாழ்புலங்களை இழந்தும், தமக்கென ஒரு வாழ்புலமும், ஆள்புலமும் சமயமும் இல்லாமல் தமது அடையாளத்தையும் இழந்தனர் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகி விட்டது.

**அந்நியர் ஆட்சியில் மண்-ணாறு :** கி.பி.16ம் நூற்றாண்டுகளில் 1544 இல் மண்ணாறு என்றழைக்கப்பட்ட தீவுப்பகுதி யாழ்ப்பாண இராஜதானியின் கீழ் இருந்துள்ளது. அக்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதற்கு, எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு, தென்னிந்திய தூத்துக்குடியில் இருந்து வந்திருந்தவர்கள் சம்பந்தப்பட்டிருந்தமை தெளிவாகிறது. அவர்கள் தாம் பிடிக்கும் மீன்களை வெயிலில் கருவாடாக்கும் தேவைக்கு இந்த நிலப்பகுதியை பயன்படுத்தி வந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலத்துள் இலங்கை வந்த போர்த்துக்கேயர், தென்னிந்தியாவிலிருந்து கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டிருந்த மண்ணாறு தீவகப் பகுதியை, முதலில் நாடியுள்ளனர். 1544 இல் மண்ணாறு தீவகத்தில் சமய மாற்றங்கள் இடம் பெறுவதைக் கேள்வியுற்ற யாழ்ப்பாணத்து அரசன் தனது எதிர்ப்பைத் தெரிவித்தான். மத மாற்ற நடைமுறையை நிறுத்துவதற்கு சமயம் மாறிய பலரை கொலை செய்தான். அவர்கள் உயிரிழந்த இடமான ஒலைத்தொடுவாய் என்ற இடத்தில் வேத சாட்சிகள் ஆலயம் என்ற பெயரில் தேவாலயம் கட்டப்பட்டு வழிபாடு இடம்பெற்றுள்ளது.

அந்நியருடைய ஆட்சி மன்னார் தீவுப்பகுதியில் நிலைத்து விட்டது. மன்னாரின் தென் முனையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டினர். இங்கிருந்து படையெடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றச் சென்றுள்ள னர். இதற்கு மன்னார்த் தீவகத்தின் குறுக்கேயுள்ள மண்ணாறு கடல் பகுதியைக் கடந்து, அடுத்திருந்த மாதோட்டம் நிலப்பகுதியின் ஊடாக படையெடுப்புகள் இடம் பெற்றுள்ளன.

**கி.பி.1810 ஆண்டு** ஆங்கிலேயருடைய காலத்தில் மண்ணாறு தீவகத்தில் இருந்த சில அலுவலகங்கள் விடத்தல் தீவிற்கு மாற்றப்பட்டுள்ளன. முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங் களுக்கான நிர்வாகம் விடத்தல் தீவிலிருந்தே இடம்பெற்றுள்ளன. இந்த மாவட்டங்களில் விளையும் நெல் மற்றும் ஏனைய விளைபொருட்களின் களஞ்சியசாலைகளும் விடத்தல் தீவிலிருந்துள்ளன.

ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில், மன்னார் தீவக நிர்வாகப் பிரிவுடன் சேர்த்து, நிலப்பரப்பும் அந்நியருடைய நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அக்காலத்தைய பதிவுகளில் ஆங்கிலத்தில் மண்ணாறு (Mannaru) என்பது, Mannar மண்ணார் என ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. பின்னர் தமிழ்மொழியில் வரலாறுகள் எழுதப்பட்ட போது மண்ணார் என்பது மன்னார் என மருவிவிட்டது. இவ்வாறு ஆங்கிலேய ருடைய வரலாற்றுக் குறிப்புகளில், பெயர்கள் சுருக்கப்பட்டு, உச்சரிப்பு வசதிக்காக மாற்றப் பட்டுள்ளதைக் காணலாம்.

சிறிது காலத்தின் பின்னர் மன்னார் தீவகப் பகுதியில் இருந்த நிர்வாக அலகுகள் முழுமையாக விடத்தல் தீவுப் பகுதிக்கு மாற்றப்பட்டன. அதற்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் மக்கள் நிலப்பரப்பில் இருந்த வன்னியனார்களுடைய நிர்வாகத்தின் கீழ் இருப்பதற்கு மறுப்பும் தெரிவித்துள்ளனர். இதனால் மன்னார் தீவகத்தினருக்கும் மாதோட்ட நிலப்பரப்பில் இருந்தவர் களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டும் இருந்தன.

சமகாலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த பலர் விடத்தல்தீவுப் பிரதேசத்தில் நிர்வாகிகளாக பதவிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இதற்கென அவர்கள் சமயம் மாறியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. விடத்தல் தீவு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகள் பனங்காம (பாணன் கமம்) இராஜதானியுடன், சேர்க்கப்பட்டு வன்னியனார் பதவிகள் வழங்கப்பட்டு, நிர்வாகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டிருந்தனர். இதற்கும் மன்னார்தீவகப் பிரிவில் பதவி வகித்தவர்களும், மன்னார் தீவக வாசிகளும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

மன்னார் தீவகம், விடத்தல் தீவு, மற்றும் மாந்தை பகுதிகளில் ஓமில்தார், அதிகாரம், கணக்குப்பிள்ளை, ஆராச்சி, கங்காணி போன்ற பதவிகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இலங்கை மாதோட்டம், மாந்தை போன்ற பெருநிலப்பரப்பின் அநேக பகுதிகள், மன்னார்தீவக மாவட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதினால் மன்னார்தீவகம் இலங்கையின் ஒரு பிரதான நிர்வாகப் பகுதியாக நிறுவப்பட்டிருந்தது. ஆனால் மன்னார்தீவகம், இலங்கையின் வன்னி நிர்வாக மாவட்டத்திற்குள் சேர்ந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மண் ஆறு குறுக்கறுத்துப் பாய்ந்து இலங்கை பெருநிலப்பரப்பையும் மண்ணாறு தீவகத்தையும் பிரித்திருந்த காரணத்தினால், பிரிக்கப்பட்ட பகுதி ஆற்றின் பெயரைப் பெற்றுக் கொண்டது. போர்த்துக்கேயர் காலத்தில் தீவகத்தின் பெயர் பல பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்தில் என்ன பெயரில் அழைக்கப்பட்டது என்பது தெளிவில்லை. ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் மண்ணாறு என்ற பெயர் **மண்ணார்** என்று எழுதப்பட்டுள்ளது. இந்தப் பெயர் மருவி தமிழில் **மன்னார்** என்று வாய்வழியாக அழைக்கப்பட்டு வரலாறுகளிலும் எழுதப்பட்டுள்ளது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. (மண்-ணாறு = மண்ணார் = மன்னார்.)

இந்த விடயத்திற்கு மாற்றுக் கருத்துள்ள அறிஞர்களும் இருப்பாகள். அவர்களின் விளக்கங்கள் யாவும் வரலாற்றாதாரங் களுடன் நிரூபிக்கப்பட்டால், மன்னார் தமிழ் பிரதேச புராதன வரலாற்றிற்கு மேலும் வலுச்சேர்க்க உதவும் என்பதை கூறி வைக்க விரும்புகிறேன்.

கி.பி.1858 களில் ஆங்கிலேயர் காலத்தில், இலங்கையின் வடமேற்குக் கடலில் முத்துக் குளிப்பு சிறப்பாக இடம்பெற்றது என்பதையும், மண்ணாற்று கரையில், மாந்தைப் பகுதியில் முத்துக்கள் சேகரிக்கப்பட்டு வாணிபம் எவ்வாறு நடைபெற்றது என்பதையும் ஓவியர் ஒருவர் மாதிரிக் காட்சியாக வரைந்துள்ளார். புராதன காலத்தில் இந்தப் பிரதேசம் எவ்வளவு சிறப்புற்றிருந்தது என்பதை இந்த ஓவியம் மனக்கண் முன் நிறுத்தி, சிந்திக்க வைக்கின்றது.

**(07) படம் : முத்துக் குளிப்பும் சந்தையும்**



***உசாத்துணையானவை*** :


*Account of the Vanni - by Thomas Nagel - 1793*
*Christianity in Ceylon I,II Sir James Emerson Tennant - 1850*
*CEYLON an Account of the Island by Sir James Emerson Tennant - 1859*
*Yalpana Vaippava malai (English) by C.Brito - 1879*
*Manual of Vanni Districts by J.P.Lewis - 1895*
*Manual of North Central Province by R.E.Ivers - 1899*
*Nineteen years Captivity by Robert Knox - 1902*
*திருக்கேதீச்சரம், 'சுயம்பு மகாலிங்க விசேஷம்'. புலவர். வ.சின்னத்தம்பி - 1908*
*Ancient Ceylon by H.Parker - 1909*
*யாழ்ப்பாணச் சரித்திரம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை - 1915*
*Ceylon and the Portuguese 1505-1658 by P. E.Pieris - 1920*
*Ceylon and the Hollanders 1658 -1796 by P. E.Pieris - 1920*
*The Dutch in Ceylon by R.G.Anthoniz - 1923*
*Notes on Jaffna by John H.Martyn - 1923*
*Ancient Jaffna by C.Rasanayagam Mudaliyar - 1926*
*RAVANA The Great KING OF LANKA by M.S.PURNALINGAM PILLAI*
*Tinnaveli District -English ) - 1928*
*A Short History of Ceylon by H.W.Codrington - 1929*
*யாழ்ப்பாணச் சரித்திரம் செ. இராசநாயகம் முதலியார் - 1933*
*Nalla Mappana Vanniyan by FR.Gnanappirakasar.RAS.(Article) - 1936*
*Account of the Vanni - by Liet.Thomas Nagel (1793)*
*Translation RAS Journal - 1948*
*யாழ்ப்பாண வைபவமாலை (தமிழ்) குல.சபாநாதன் முதலியார் - 1953*
*Vanni and the Vanniyars by C.S. Navaratnam - 1960*
*வையா பாடல் - வையாபுரி ஐயர்.*
*கலாநிதி. செ. நடராசா - 1970*
*திருக்கேதீச்சர கும்பாபிஷேக மலர்கள் (2) - 1976*
*அடங்காப்பற்று வன்னி வரலாறு - 02 'பண்டாரவன்னியன்' அருணா- செல்லத்துரை - 2002*
*வன்னியர் - பேராசிரியர்.சி.பத்மநாதன் - 2003*
*அடங்காப்பற்று-வன்னி வரலாறு 01- 05 வரை - அருணா செல்லத்துரை - 2004 -2010*
*"அடங்காப்பற்று வன்னி நாகர் காலத்து புராதன தொல்பொருட்சின்னங்கள்" - 2016*
*அடங்காப்பற்று வன்னியில் 'இயக்கர் வாழ்புலங்கள்' வரலாறு - 02 - 2019*
*பண்டாரம் வன்னியனார் வரலாறு - 2020*
*நன்னீர் நந்திக்கடல் வரலாற்றுப் பார்வை - 2021*
*இராவணனார்- லங்கா பாங்கு வரலாறு - அருணா செல்லத்துரை - 2024.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாருக்கே உரித்தான வாசாப்புகளும் அவற்றின் சிறப்புகளும்

மு. சுந்தரம் பாண்டியன்
முத்துபுரம், நறுவிலிக்குளம்.

### வாசகப்பாக்கள் தோன்றிய பின்புலம்

போர்த்துக்கேயர்களின் காலத்தில் கிறித்தவக் கூத்துக்கள் தோற்றம் பெறத் தொடங்கின. போர்த்துக்கேயர்கள் இங்கு வந்த போது தங்கள் மதம் பரப்பும் சாதனமாக கூத்துவடிவத்தைக் கையாண்டார்கள். மன்னாரில் பணியாற்றிய கிறித்தவத் துறவியான கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் (Henrique Henrique's ) போத்துக்கல் நாட்டிலுள்ள வில்யோவிகாசோ என்ற ஊரில் கி.பி. 1520இல் பிறந்தார். 1546இல் குருப் பட்டம் பெற்றுக்கொண்டு அதே ஆண்டில் ஏப்ரல் 26ஆம் திகதி இந்தியாவின் கோவாவிற்கு வந்துசேர்ந்தார் பிரான்சீஸ் சேவியர். இவரை புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பாறு, வேம்பாறு போன்ற இடங்களில் பணிசெய்யப் பணித்தார். 1600ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் நாள் புன்னைக்காயலில் காலமானார்) மூன்று வருடங்கள் இங்கு பணிபுரிந்திருக்கின்றார். இவர் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் முக்கியமான வராகக் கருதப்படுகின்றார்.

முதல் ஐரோப்பிய தமிழ் அறிஞர் என்கின்ற சிறப்பும் இவருக்கு உண்டு, தமிழில் நூல்களை இவர் அச்சு வடிவில் கொண்டுவந்தார் "தம்பிரான் வணக்கம்" (1578இல் 16 பக்கங்களைக்கொண்ட நூலை, கொல்லத்தில் அச்சடித்து வெளியிட்டார். இதுதான் முதல்தமிழ் நூல் என்று பதிவுசெய்யப்படுகின்றது. 1579இல் "கிரீசித்தியானி வணக்கம்" என்ற இரண்டாவது நூலை கொச்சியில் வெளியிட்டார். மார்க்கோஸ் ஜார்ஜ் என்பவர் போர்த்துக்கேய மொழியில் எழுதிய Docrina Cristam என்ற நூலின் தமிழாக்கமே இந்நூலாகும் இந்நூல் வினாவிடை வடிவில் அமைந்துள்ளது. 1586இல் "அடியார் வரலாறு" என்ற நூலையும் வெளியிடுகின்றார். இது ஸ்பானிய மொழியில் கத்தோலிக்கப் புனிதர்களின் வரலாற்றைக் கூறும் Flos Sanctorum என்ற நூலின் மொழிபெயர்ப் பாகும் இந்நூல் 600 பக்கங்களைக் கொண்ட பெரிய நூலாகும். 49 புனிதர் களின் வரலாறு இந்நூலில் கூறப் பட்டுள்ளது. இந்நூல் முத்துக் குளித்துறையில் வாழும் மலபார் கிறித்தவ மக்களுக்காக முதன் முதலில் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டது. இந்நாவில் மலபார் கிறித்தவ மக்களுக்காக மலபார் எழுத்துக்களால் உருவாக்கப் பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அடியார் வரலாறு (Flos Sanctorum) நூலுக்கும் கத்தோலிக்க வாசகப்பா நாடகங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இந்த நூல் கிறித்தவ புனிதர்களைப் பற்றிக் கூறுகின்ற நூலாகும். புளசன்ரோரம் என்பதன் அர்த்தம் "வாடாத மாலைகள்" என்பதாகும். இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர்களின் வரலாறுகளைக் கொடுத்து இங்குள்ள புலவர்களிடத்தில் அவற்றுக்கான வாசகப்பா நாடகங்களை எழுதும்படி கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் பணித்தார். கிறித்தவத் தொண்டாற்றிய குருமுதல்வர்களும் வாசகப்பாக்களை உருவாக்குவதற்கு பல குருமுதல்வர்களும் ஊக்கப்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறுதான் கிறித்தவ வாசகப்பாக்கள் உருவாகின இலங்கையின் மன்னார்ப் பிரதேச வாசகப்பா எல்லாவற்றிலுமே 'புலசந்தோர்' வரவு இடம்பெறும். இரண்டுபேர் புலசந்தோர் பாத்திரங்களாக ஆடுவார்கள். இவர்கள்தான் நாடகத்தின் கதைசொல்லிகளாக (கட்டியக்காரன்) வருபவர்கள், நாடகக் கதை எவ்வாறு அமையும் என்பதை பாடலில் சொல்லிவிட்டுச் செல்வார்கள், இம்மரபை கத்தோலிக்கக் கூத்தில்தான் பார்க்க முடியும். அடியார் வரலாறு என்று சொல்லப்படுகின்ற புலசந்தோரம் என்கின்ற நூலின் அடியாகவே இப்பாத்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைப் பலரும் எழுதியுள்ளனர்.

அதே போல் ஒல்லாந்தர் காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளைப் பார்க்க முடியும் ஒல்லாந்தர் காலத்தில் முக்கியம் பெறுபவர் யாக்கோமே கொன்சாஸ்வேஸ் அடிகளார். இவர் யோசப் வாஸ் அடிகளாரின் காலத்தில் கோவாவில் இருந்து வருகைதந்தவர். அவர் 'சுவிசேஷ விரித்துரை' என்ற நூலை அறிமுகப்படுத்துகின்றார். இந்நூலில் பல புனிதர்களின் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. அவரும் இங்குள்ள புலவர்களிடம் கொடுத்து நாடகமாக்கும்படி ஊக்கப்படுத்தினார். இவ்வாறாகவே பல தமிழ் வாசகப்பா நாடகங்கள் இலங்கையில் உருவாகின.

வாசகப்பா நாடக வடிவத்தை கிறித்தவத் துறவிகள் மறைக்கல்வியாகவே பார்த்தார்கள். அக்காலத்தில் கிறித்தவ வழிபாடுகள் அனைத்துமே இலத்தின் மொழியில் நிகழ்த்தப்பட்டன. அந்த மொழி மக்களுக்குப் புரியாத மொழியாகவே இருந்தது. மக்களுக்குப் புரிகின்ற ஒரே விடயம் இந்தக் கூத்துவடிவ நாடகங்கள் தான். இக்கதைகள் அனைத்துமே கத்தோலிக்கத்திற்கு விசுவாசத்தைப் போதிக்கின்றனவாகவே இருந்தன. புனிதர்களில் பலர் கத்தோலிக்க மதம் பரப்பும் காலங்களில் கிறித்தவத்திற்காக உயிர் துறந்தவர்களாகவே இருக்கின்றனர். இதைப் பார்க்கின்ற மக்களிடத்தில் எழுச்சியும், பக்தியும் உருவாகும். தாங்களும் தங்கள் சமய நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும் என்ற பலமான எண்ணத்தை அவர்கள் மனத்தில் விதைப்பதாகவே இருந்தது. அதே நேரம் பல அறநெறிக் கருத்துக்களைப் போதிப்பதாகவும் இந் நாடகங்கள் இருந்தன. விவிலியத்தில் உள்ள கருத்துக்களையும் இக் கூத்துக்களில் இணைத்திருக்கின்றார்கள் இக்கூத்துக்களின் நோக்கம் சமயப் பரப்புரை என்றாலும், சமய நம்பிக்கைகளை தத்துவங்களை கிறித்தவக் கோட்பாடுகளை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு சிறந்த ஓர் ஊடகமாக இவ்வாசகப்பாக்கள் காணப்பட்டன. போத்துக்கேயர்கள் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் அதன் பின்னரான ஆங்கிலேயர்கள் காலத்திலும் கிறித்தவத்தை எடுத்துச்செல்வதற்கு இவ்வாசகப்பாக்கள் பெரும் பங்காற்றி இருக்கின்றன.

அக்காலங்களைப் போன்று இன்று மதம் பரப்பும் தேவைப்பாடு இல்லாமல் இருந்தாலும்கூட கூத்து அல்லது வாசகப்பா தங்கள் அடையாளம் என்ற உணர்வு தமிழ் கத்தோலிக்கக் கிறித்தவர்களிடத்தில் பதிந்திருக்கின்றது. தங்கள் அடையாளத்தை, தங்கள் மரபை அடுத்த சந்ததிக்கும் எடுத்துச்செல்லவேண்டும் என்ற உணர்வு இன்றுள்ள சமூகத்திடம் காணப்படுகின்றது. இருந்தாலும் இன்றைய சமூக மாற்றங்களால் இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்புக்கள் சிதைவுற்றுப்போவதையும் பார்க்கமுடிகின்றது.

கத்தோலிக்க வாசகப்பாக்களின் நோக்கம் நம்பிக்கை சார்ந்தது. கடவுளின் ஆசி கிடைக்கும் என்ற நம்பிக்கை இங்கு முக்கியம் பெறுகின்றது. வாசகப்பாவின் ஆரம்பத்தில் படிக்கப்படுகின்ற கவி இறை வேண்டல்களாக அமையும். நல்ல மழை பொழிய வேண்டும். பஞ்சம் நீங்க வேண்டும், போர்கள் ஏற்படக் கூடாது, நோய்கள் நீங்க வேண்டும், திருமணம் நடைபெறவேண்டும், குழந்தைப் பாக்கியம் கிடைக்கவேண்டும், தொழில் வாய்ப்புக்கள் பெருக வேண்டும் என்று பல வேண்டுதல்கள் முன்வைக்கப் பட்டு ஆடப்படுகின்றது.

அதே போல் இறுதியில் மங்களம் பாடும் போதும் இந்த வேண்டுதல்களை முன்வைப்பதாகவே காணப்படுகின்றது. ஆண்டவரின் அருள்கிடைக்க வேண்டும் என்கின்ற மங்களம் பாடுவது என்பது வேண்டலை முன்வைத்து நிகழ்த்துகையை நிகழ்த்துகின்றனர். இங்கு மங்களம் பாடுவது என்பது முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.! வாசகப்பா, பயிற்சி தொடங்கி ஆறு மாதங்கள் வரை தொடர்ச்சியான செயற்பாடுகளை பார்க்க முடியும். ஒவ்வொரு செயற்பாட்டிற்குள்ளும் சடங்குகளும் நம்பிக்கைகளும் மரபுகளும் பின்பற்றப்படுகின்றன. இவை எல்லாவற்றிற் குள்ளும் ஒரு சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற ஒருமித்த கருத்து முதன்மைப்படுத்தப்படுவதை காண முடிகின்றது. சமுதாய அரங்கச் செயற்பாட்டு வடிவத்தின் முக்கிய அம்சம் இதுவே.

பெரும்பாலான மக்கள் விவசாயத்தையும் மீன்பிடியையும் தொழிலாகக் கொண்ட வர்கள். இவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சமாக இவ்வாசகப்பா இருந்திருப் பதையும் பார்க்க முடிகின்றது. தங்களின் தொழிற்காலங்கள் முடிந்ததும் மீதிக்காலத்தைப் பொழுதுபோக்காகவும் பயனுள்ளதாகவும் ஆக்கிக்கொள்ள இக்கூத்தை நிகழ்த்தியுள்ளனர். இப்போது இருக்கின்ற வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளங்கள் அற்ற காலத்தில் இவர்களுக்கு வாசகப்பா நாடகங்கள் முக்கியமான பொழுதுபோக்கு வடிவமாகவும் விளங்கியுள்ளது.

கலை சார்ந்த ஆற்றலுடையவர்கள் தங்களுக்கான களமாகவும் பயன்படுத்தி யுள்ளனர். இதைப் புலவர்கள் தங்கள் எழுத்தாற்றலை, புலமைத்துவத்தைக் காட்டுவதற்கும் நெறிப்படுத்தக்கூடிய அண்ணாவிமார்கள், ஆடக்கூடிய கூத்தர்கள், பாடகர்கள், இசைவாத்தியக் கலைஞர்கள், ஒப்பனையாளர்கள், காட்சி விதானிப்பாளர்கள் என்று பல்வேறு கலைஞர்களின் இணைவு இங்கு இருக்கின்றது. இவர்களுக்குத் தீனி போடுகின்ற களமாக இக்கூத்து அமைவதையும் பார்க்க முடிகின்றது.

மன்னாரில் இருக்கின்ற பல சமூகங்கள் தங்களுக்கான, தங்கள் சமூகத்திற்கான வாசகப்பா, நாடகங்கள் தங்கள் சமூகத்திற்கான தனித்துவம்கொண்டது என்ற உணர்வுநிலைப் பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தளவில் மன்னார் மாவட்டத்தில் வருடத்திற்கு மூன்று நான்கு வாசகப்பா நாடகங்கள் ஆடப்பட்டு வருவதைப் பார்க்க முடிகின்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு. புத்தளம் முதலிய இடங்களில் இவ்வாறான ஒரு தொடர்ச்சியைப் பார்க்க முடிவதில்லை.

வாசாப்பு படிப்பு... ஒரு முன்னோட்டம் எஸ்.ஏ.உதயன் எழுதிய கட்டுரையில் இருந்து..."ஒரு இரவு படிக்கும் கூத்தை வாசாப்பு என்று சொல்லலாமா? பொதுவாக பெரிய கத்தோலிக்க நாடகங்கள் எனும் போது அவை ஈரிரவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவிரவு என ஆடப்பட்டு வருவதையும் நாம் காண்கிறோம் அல்லவா? எனவே ஓரிரவு படிக்கும் அரங்க அளிக்கையை வாசாப்பு என்று காண்கிறோம் எனச் சிலர் வாதங்களை முன்வைக்கின்றனர். ஆனால் அது அப்படியல்ல. வங்காலை மக்கள் அளிக்கை செய்யும் மரியசித்தாள் வாசாப்பு இரண்டு இரவுக் கதையல்லவா? அதனையும் வாசாப்பு என்றுதானே சொல்கின்றார்கள் என்று கேள்வி எழுப்புவோரும் உள்ளனர். எனினும் புனிதர் கதைகள் ஆடப்படுகின்ற போது அவை செப விண்ணப்பங்களை அதிகம் கொண்டுள்ளதால் அவற்றை வாசகப்பா என்கின்றார்கள். புனித பாத்திரம் தவிர்ந்த ஏனைய பாத்திரங்கள் மாதோட்டக் கூத்துக்களுக்கு இயல்பான துரித ஆட்டங்களை ஆடுவார்கள் என்பதால் அதனை வாசகப்பா நாடகம் என்றும் சொல்கின்றவர்களும் உண்டு.

இவையெல்லாம் இவ்வாறிருக்க இந்தப் பேசாலை மக்களின் மூவிராசா அளிக்கையை வாசாப்புத்தான் என்று அறுதியிடும்படி இதனை இயற்றிய புலவரே இவ் இயல் இசை நாடகப் பிரதியிலே இதனை வாசகப்பா என்றும் குறித்துரைப்பதை நாம் நோக்க முடிகின்றது. அதாவது காப்பு வெண்பாவில் "நாப்புகழும் தேசமெய்க்கும் ஞான திருஷ்டிகராம் மூவரசர் வாசகப்பா சொல்ல என் முன் வா" எனப்படும் புலவர். அளிக்கைக்கு முன் பாடும் தோடையத்திலும் மூவரசர் வாசாப்பு புகழ் நீடவே என்று எழுதுகிறார்.

மன்னார் மாதோட்ட வாசகப்பா மெட்டுக்கள் (பாகம் 01) தொகுப்பு: அருள் தந்தை செ.அன்புராசா, அருள்தந்தை தமிழ்சேநன், வெளியீடு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வட மாகாணம், டிசம்பர், 2019, பக் 19,20.3

அதேபோல் வாசகப்பா என்பது புனிதர்களது கதைகளை மட்டுமே பேசுவன என்கின்ற வாதமும் பலகாலமாக இருந்து வருகின்றது. இவ்வாதமும் ஏற்புடையது அல்ல. இயேசுவைப்பற்றிய கதைகளும் பாஸ்காக் கதைகளும் வாசகப்பா வடிவில் இருந்திருக்கின்றன. உதாரணமாக வியாகுல வாசகப்பா, கல்லறை வாசல்காப்பு, கல்லறை வாசாப்பு போன்ற இயேசுவைப்பற்றிப் பேசுகின்ற வாசாப்புக்களைப் பார்க்க முடிகின்றது. புனிதர்கள் அல்லாத கதைகளும் இருக்கின்றன. பறப்பாங்கண்டலில் குருகுல மக்களால் ஆடப்படுகின்ற சந்திரகாசன் வாசகப்பா நாடகம் இதற்குச் சிறந்த உதாரணம். இது இயேசுவைப்பற்றியோ, புனிதர்களைப் பற்றியோ பேசுவது அன்று. ஒரு குருகுல மன்னனின் கதையைப் பேசுகின்றது. இக்கதையும் ஒரு புனைவுக்கதையே வரலாறு அன்று. இந்துப் புராண இதிகாசக் கதைகளும் வாசகப்பா வடிவில் உண்டு. இரணியன் வாசகப்பா இதற்கு நல்ல உதாரணமாகக் கூறமுடியும். இவ்வாறு வாசகப்பா என்கின்ற வடிவம்பற்றி இதுவரை கொண்டிருந்த வரையறை களையும் வாதங்களையும் மாற்றிப் பார்க்க முடிகின்றது. இலங்கை வாசகப்பாக்கள் மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் எனும் நூலில் செபமாலை அன்புராசா(அ.ம.தி) அடிகளார் மிக நீண்ட வாசகப்பா பட்டியலைத் தொகுத்து வழங்கியுள்ளார். (செபமாலை அன்புராசா, மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் ஓர் ஆய்வு, யாழ்ப்பாணம், 1.263-265, 2007.)

இந்நூலில் நாடகங்கள் என்று அழைக்கப் படுகின்ற வாசகப்பாக்களின் பெயர் களையும் வாசகப்பாவின் பெயரால் அழைக்கப்படுகின்ற நாடகங்களையும் கலந்து பார்க்க முடிகின்றது.

மூவிராசாக்கள் வாசகப்பா, சூசையப்பர் வாசகப்பா, நற்கருணை வாசகப்பா, அடைக்கலமாதா வாசகப்பா, செபஸ்தியார் வாசகப்பா, குமணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகப்பா, சவேரியார் வாசகப்பா, ஆரோக்கியநாதர் வாசகப்பா, செபமாலை மாதா வாசகப்பா, சந்தியோகுமையோர் வாசகப்பா, தூய ஆவியானவர் வாசகப்பா, லோறஞ்சியார் வாசகப்பா, சவேரியார் வாசகப்பா, அந்தோனியார் வாசகப்பா, சில்வேஸ்திரியார் வாசகப்பா, யோசவாஸ் வாசகப்பா போன்றவையும், கோதுகப் பித்தான் நாடகம், சந்தொம் மையார் நாடகம், சந்தியோகுமையோர் நாடகம், அருளப்பர் நாடகம், எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம், திருச்செலவர் நாடகம், மரியஸ்தால் நாடகம், அந்தோனி முனிந்திரன் நாடகம், எருமை நாடகம், நொண்டி நாடகம், இலேனா கன்னி நாடகம், இன்னேச கன்னி நாடகம், சின்ன வர்த்தகன் நாடகம், சந்தொம்மை அப்போஸ்தலர் நாடகம், சூசையப்பர் நாடகம், மன்மத வர்த்தகன் நாடகம், கப்புராசா நாடகம், சகுனகன்னி நாடகம், ஞானசவுந்தரி நாடகம், அல்லியரசாணி நாடகம் என்பவையும் முக்கியம்பெறும்.

இவ்வாறான 90ற்கும் மேற்பட்ட வாசகப்பா நாடகங்களின் பெயர்ப் பட்டியலையும் அவற்றை எழுதிய புலவர்களின் பெயர்களையும் செபமாலை அன்புராசா அவர்கள் வெளியிட்டுள்ளார். பட்டியலில் கிறித்தவக் கதைகள் அடிப்படை யாகக்கொண்ட இவ்வாசகப்பாக்களின் வாசகப்பாக்களும் கிறித்தவக் கதைகள் அல்லாத வாசகப்பாக்களும் உள்ளடங்கி யுள்ளது

மன்னாரின் வாசகப்பாக்களில் மூன்று வாசகப்பாக்கள் முக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றது. அறியப்பட்ட ஆரம்பகால வாசகப்பாக்களாக இவற்றை நோக்கமுடிகிறது. சற்பிரசாத வாசகப்பா, சந்தொமையார் வாசகப்பா என்பன தென்மோடி மரபைச் சார்ந்தவை. தென்மோடி வாசகப்பாக்களின் ஆரம்பகால வாசகப்பாவாக இதைப் பார்க்க முடியும். மன்னாரின் கிராமங்களில் இது ஆடப்படுகின்றது. இந்த சந்தொமையார் வாசகப்பா எல்லா சமுகங்களாலும் ஆடப்படக்கூடியது. பெரும்பாலும் மன்னாரில் உள்ளவர்கள் தங்களது வாசகப்பாக்களை உருவாக்கி சமூகத்திற்கான தங்கள் சொத்தாக வைத்திருக் கின்றார்கள். அந்தந்த சமூகங்கள் சமூகத்திற்கான வாசகப்பாவை மட்டுமே ஆடும். ஆனால் சந்தொம்மையார் வாசகப்பாவை மட்டுமே எல்லாச் சமூகமும் ஆடும். குப்பைப் புலவர் என்று அறியப்பட்ட மனுவல் மொறாயஸ் என்பவர் இதை எழுதியதாகக் கூறப்படுகின்றது.

அடுத்த மிக முக்கியமான வாசகப்பா, எண்டிறிக் எம்பரதோர் நாடகம். இது வடமோடி வாசகப்பா ஆகும். இதைக் கீத்தாம்பிள்ளைப் புலவர் எழுதியுள்ளார். கீதாம்பிள்ளைப் புலவரின் தாயின் தகப்பனார் லோரன்சுப்பிள்ளை புலவர். மன்னார் மாந்தையில் புலவர் பரம்பரையை உருவாக்க திண்ணைப்பள்ளியை உருவாக்கியவர் என்று அறியப்படுகின்றது. அவருக்கு மகன் இல்லாத காரணத்தால் தன் பெண்பிள்ளையை புலவராக்கிய தாகவும் கூறப்படுகின்றது. இவரின் மகன்தான் கீத்தாம்பிள்ளைப் புலவர் என்று அறியப்படுபவர். எருமை நாடகம் மற்றும் நொண்டி நாடகத்தையும் இவர் எழுதியுள்ளார்.

குப்பையப்புலவர் எழுதிய சந்தொம்மையார் வாசகப்பாவும் கீதாம்பிள்ளைப் புலவர் எழுதியு எண்டிறிக் எம்பரதோர் வடிமோடி வாசகப்பாவும் மன்னாரின் தாய் நாடகங்களாக, ஆதி நாடகமாகக் கொள்கின்ற மரபும் உண்டு. இக்கதைகளை அடியொற்றியேதான் பின்வந்த புலவர்கள் வாசகப்பாக்களை உருவாக்கியுள்ளனர் என்று நம்பப் படுகின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கத்தோலிக்க கூத்து நாடகங்கள்
## (தோற்றுவாய், வகைகள், அமைப்புமுறை, பயன்பாடு)

- ஓர் ஆய்வு நோக்கு -



அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்
(பாவிலு கிறிஸ்து நேசரெட்னம்)
B.Ph., B.Th. (Rome), M.A., M.Phil. (Jaffna)
குருமுதல்வர், மன்னார் மறைமாவட்டம்

### முன்னுரை

மன்னார் மக்களுடைய வாழ்வு மரபுக் கலைகளுடன் பின்னிப் பிணைந்த ஒரு வாழ்வு. பல நூற்றாண்டுகளாக எண்ணற்ற புலவர்கள், கவிஞர்கள் ஆக்க இலக்கியக் கர்த்தாக்கள் பலர் இம்மண்ணில் தோன்றியுள்ளனர். மன்னார் பிரதேசத்தை மையப்படுத்திய நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

ஈழத்து நாட்டார் வழக்காற்றியலில் மன்னார் பிரதேசக் கத்தோலிக்க கூத்துக்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. செழுமையான ஒரு கூத்து மரபு மன்னார் பிரதேசத்தில் நிலைபெற்றிருந்தமையை 'மன்னார் மாதோட்ட தமிழ் புலவர்கள் சரித்திரம்' என்னும் நூல் வழியாக அறியமுடிகிறது. இங்கு மன்னார் பிரதேசம் என்று குறிப்பிடப்படுவது மன்னார் மாவட்டம் ஆகும். இன்றைய மன்னார் மாவட்டம் முன்னர் 'மன்னார் தீவு' மற்றும் 'மன்னார் மாதோட்டம்' ஆகிய இரண்டு பெரும் பகுதிகளாக இருந்தன. 'மன்னார் மாதோட்டம்' என்று அழைக்கப்படுவது இன்றைய மன்னார் மாவட்டத்தின் 'மன்னார் தீவு' தவிர்ந்த பெருநிலப்பரப்புப் பகுதி ஆகும்.

"நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக நாட்டுக்கூத்துக்கள் மன்னாரில் மேடையேற்றப்பட்டு வருகின்றன" என்று மன்னார் நாட்டுக்கூத்து ஆய்வாளரான பெஞ்சமின் செல்வம் கூறுகின்றார். இது மன்னார் நாட்டுக்கூத்துக்களின் நீண்ட நெடிய பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய நீண்டகாலக் கலைமரபு இன்றுவரை வாழ்ந்துகொண்டும், வளர்ந்துகொண்டும் நிகழ்கலையாக உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றமை இதன் அடுத்த சிறப்பம்சமாகும். 20ஆம் நூற்றாண்டில் (1900 – 1999 வரை) மன்னார் மாதோட்டத்தில் மட்டும் 78 கிராமங்களில் கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப் பட்டுள்ளன.[1] மன்னார் பிரதேசத்தில் இந்நாடக மரபு எந்தளவுக்கு மக்கள் மயப்படுத்தப்பட்டதாக மன்னார் பிரதேசமெங்கும் பெருமளவில் வியாபித்திருந்தது என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது.

"செந்நெற் களஞ்சிய மகாதோட்டமாம் மன்னார், கலையின் களஞ்சியமாகவும் காட்சியளிக்கின்றது. கிராம மக்கள் வளர்த்த அழகுக் கலையாகிய நாட்டுக்கூத்து இன்னும் இங்கு ஆடப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. பொதுமக்கள் இக்கலையை தமது நல்வாழ்விற்கு உதவும் கருவிகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். இதனை தமது சமய வாழ்க்கையோடு பின்னிப்பிணைத்து வளர்த்து நிறைமனம் பெற்று வாழுகின்றனர்.''

என்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கூற்று இந்நாடகங்களுக்கும் மன்னார் மக்களுக்கும் இடையில் இருந்த நெருக்கமான உறவையும் தொடர்பையும் எடுத்துக் காட்டுகின்றது.

### ஈழத்துக் கத்தோலிக்க நாடகங்களின் தோற்றுவாய்

சமயம் பரப்பும் நோக்கத்தோடு 16ஆம் 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு வந்த கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் (மிஷனரிமார்) நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்தனர்.

ஐரோப்பாவில் ஆடப்பெற்ற மத நாடகங்களை மறைபொருள் நாடகங்கள் (Mystery Plays) என்றும் அற்புத நாடகங்கள் (Mircle Plays) என்றும் அறநெறி நாடகங்கள் (Morality Plays) என்றும் குறிப்பிட்டனர். இவை தேவாலயப் பலிப்பீடங்களின் முன்பும், தேவாலய முற்றங்களிலும் நடிக்கப்பட்டன. பெரும்பாலும் இயேசுவின் வரலாறு சம்மந்தப்பட்டனவாகவே இந்நாடகங்கள் அமைந்தன. இவற்றில் நடித்தவர்கள் அனைவரும் மதகுருமார்களேயாவர்.[2]

மறைபொருள் நாடகங்கள் எனப்பட்டவை திருவிவிலியத்தினை அடிப்படையாகக்கொண்ட நாடகங்களாக இருந்தன. இவை விவிலிய நாடகங்கள் எனவும் அறியப்படும். அவற்றின் கதைப்பொருளானது பழைய ஏற்பாட்டின் உலகப்படைப்பு முதல் திருவெளிப்பாட்டில் கூறப்படும் உலக முடிவு வரையான விடயங்கள்வரை அமைந்திருக்கும். உதாரணமாக ஆதாம் ஏவாள், உலகப்படைப்பு, காயீன் ஆபேல் கொலை .... என அமையலாம்.[3] இப்பிரிவில் உவமைகள், புதுமைகள், விவிலியத்தில் இடம்பெறும் ஏனைய விடயங்களும் அடங்கும். அற்புத நாடகங்கள் என்பவை புனிதர்களின் வரலாறு கூறும் நாடகங்கள். புனிதர்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட நாடகங்கள் இதில் அடங்கும். அறநெறி நாடகங்கள் என்பவவை இறையரசின் மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு ஆக்கப்பட்ட சமூக நாடகங்கள் என்னும் வகைக்குள் இவை அடங்கும்.

போர்த்துக்கலில் சமயக் குருமாருக்குப் பயிற்சியளிக்கும்போது நாடகப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. குறிப்பாக பொது வணக்க அரங்கம் (Litergical Theatre) பற்றி அறிவூட்டப்பட்டது. கத்தோலிக்க மறைபரப்பாளர்கள் (மிசனரிமார்) நாடகம் மூலம் சமயக் கருத்துக்களை இலகுவாகப் பரப்பலாமெனக் கண்டனர். எனவே இயேசு சபையினரும், பிரான்சிஸ்கன் சபையினரும் இம்முறையைப் பின்பற்றியே மதமாற்றஞ் செய்யலாயினர். இச்சபையினர் கத்தோலிக்க குருமாருக்கு போர்த்துக்கல் நாட்டில் உள்ள கொயிம்பிரா (Coimbra), லிஸ்பன் (Lisbon), பிறகா (Braga), இவோறா (Evora) ஆகிய இடங்களில்[4] மதப்பயிற்சியும் அரங்கப் பயிற்சியும் அளித்துச் சமயப்பணியில் ஈடுபட வைத்தனர்.[5]

ஸ்ரீகக்னோ பிச்சியோ[6] (Stegagno Picchio) (1920 – 2008) என்பவரே போர்த்துக்கேயப் பழைய நாடகங்களைப் பற்றி நன்கு ஆராய்ந்தவர் ஆவார். இவர் போர்த்துக்கேயரது கத்தோலிக்க மதநாடகங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பும் சாதனங்களாகவும், அறநெறியூட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களாகவும் விளங்கின என்றும், மேலும் புதிதாகக் கத்தோலிக்க மதத்தை ஏற்றவர்களுடைய உள்ளங்களை ஈர்த்துச் சமயத்தின்பால் ஈடுபாடு கொள்ளவும், பக்தி செலுத்தவும் செய்தனவென்றும் கூறுகின்றார்.[7]

பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் லிஸ்பனில் மேடையேற்றப் பட்ட இத்தகைய நாடகங்கள் கீழைத் தேசங்களுக்கு எடுத்துவரப்பட்டன. போர்த்துக்கேய அரங்கம் கிழக்கில் பரவிய முறைபற்றி வண. மரியோ மாட்டின், வண. பெனோலோபஸ், குளோடி ஹென்றி பிறெச் ஆகியோரும் ஆராய்ந்துள்ளனர். அவர்களுடைய கருத்துப்படி இயேசு பெருமானின் வாழ்க்கை வரலாறு, அவர் சிலுவையில் பட்ட பாடுகள், புனிதர் களுடைய வரலாறுகள் என்பன கீழைத் தேசங்களில் பாடி நடிக்கப்பட்டன. இந்நாடகங்கள் போர்த்துக்கலிலிலுருந்து பிறேசிலுக்கும், கோவாவுக்கும், இலங்கைக்கும் எடுத்துவரப்பட்டன.[8] இதே கருத்தையே குணதிலகாவும் கொண்டுள்ளார்.[9]

இயேசுசபையினர் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே (1601) கீழைத்தேசங்களில் நாடகங்களைப் பயன்படுத்தி மதக்கருத்துக்களைப் பரப்பலாயினர். மலபாரில் மட்டும் பல தேவாலயங்களில் இத்தகைய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. கத்தோலிக்கர்களால் மேடையேற்றப்பட்ட பாஸ்கு நாடகங்கள் இந்தியக் கூத்து மரபைப் பின்பற்றியே எழுதி ஆடப்பட்டனவென ஜே. ஹூபேட் (J. Houpert) குறிப்பிடுகின்றார்.[10]

ஜே. ஹூபேட் அவர்கள் 1953இற்கும் 1635இற்கும் இடைப்பட்ட தென்னிந்திய கிறிஸ்தவ அரங்கம்பற்றி பின்வருமாறு கூறுகின்றார்:

"இடைக்காட்டூர்[11] (Idaikattur) போன்ற பல இடங்களில், பாஸ்கு நாடகங்கள் கிறிஸ்தவ புனித நாட்களில் ஆடப்பட்டன. மத்தியகால ஐரோப்பியர்களது அற்புத நாடகங்கள் இவ்வாறு (பாஸ்கு நாடகங்களாக) இந்தியர்கள் மத்தியில் வாழ்ந்துவந்தன. எவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியர்களை அற்புத நாடகங்கள் மகிழ்வித்தனவோ, அவ்வாறே பாஸ்கு நாடகங்களும் இந்தியர்களை மகிழ்வித்தன".[12]

எனவே கத்தோலிக்க நாடகங்கள் சமய நாடகங்களாக மட்டுமன்றி மக்களை மகிழ்விக்கும் நாடகங்களாகவும் அமைந்தனவென அறியமுடிகிறது.

ஓட்டோஸ் (Autos) என்னும் பெயரில் குறுநாடகங்கள் இலத்தீன் மொழியிலும், போர்த்துக்கல் மொழியிலும் எழுதப்பட்டன. இவையே கத்தோலிக்க மத முன்னோடி நாடகங்களாகும். இவை 1541ஆம் ஆண்டு இந்தியாவின் கோவாவிலும், 1573ஆம் ஆண்டு கொச்சினிலும் மேடையேற்றப்பட்டன. 1556ஆம் ஆண்டு ஜேறோனிமோஸ் றோட்டிகியூஸ் என்பவர் இத்தகைய ஓட்டோஸ் நாடகங்கள் பலவற்றை இலத்தீன் மொழியிலும் போர்த்துக்கேய மொழியிலும் எழுதினார். வண. அல்லாறிஸ் என்பவர் இந்நாடகங்களை 1653ஆம் ஆண்டு முண்டினியன் எனும் நாயக்கனைக்கொண்டு தமிழில் மொழிபெயர்த்துத் தென்னகத்தில் மேடையேற்றினார்.[13]

முண்டினியன் மொழிபெயர்த்த நாடகங்களுள் புனித பாலாம், (St. Barlaam), புனித யோசேப்பு (St. Joseph) என்பன முக்கியமானவை. கண்டலூர் என்னும் இடத்தில் குருத்தோலைப் பெருநாளில் (குருத்தோலை ஞாயிறன்று) இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் மலையாளத்திலும் பின்னர் தமிழிலும் இவை மொழிபெயர்க்கப் பட்டதாக அறியமுடிகிறது.[14]

இதுவரை கூறப்பட்ட நாடகங்கள் அனைத்தும் கோவாவிலிருந்து தென்னகத்திற்கும், தென்னகத்தில் இருந்து இலங்கைக்கும் உடனுக்குடன் எடுத்துவரப்பட்டன. 16ஆம் 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாறுதான் நாடகங்கள் கோவாவிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கைக்கு வந்தன என்று அறியமுடிகிறது.[15]

**ஈழத்தில் கத்தோலிக்க நாடகங்கள்**

கத்தோலிக்க திருச்சபையில் குருக்களுக்கான பல துறவற சபைகள் உள்ளன. போர்த்துக்கேயர் ஆட்சியின்போது கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பல துறவற சபையினர் ஈழத்திற்கு அடிக்கடி வந்து பௌத்தர்களையும், இந்துக்களையும் மதமாற்றம் செய்யலாயினர். மதமாற்றம் செய்வதற்குக் கல்வியையும், நாடகத் தையும் முக்கியமான ஊடகங்களாகக் கொண்டனர். எனவே ஆங்காங்கே பாடசாலைகள் அமைத்துக் கல்வி போதிப்பதுடன், சமய போதனைகளையும் செய்துவந்தனர். பாடசாலைகள் தேவாலயங்களுடனேயே இணைந்திருந்தன. சில இடங்களிலே தேவாலயங்களே பாடசாலைகளாகவும் இயங்கிவந்தன.[16]

பிரான்சிஸ்கன் துறவற சபையினர் 1643ஆம் ஆண்டு முதன் முதலில் இலங்கைக்கு வந்தனர். இவர்கள் 56 பாடசாலைகளைக் கோட்டையிலும் 25 பாடசாலைகளை யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அமைத்துக் கல்விப் பணியாற்றினர். பாடசாலைகள் தவிர மூன்று கல்லூரிகளையும் நிறுவினார்கள். அவற்றில் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது.[17] பிரான்சிஸ்கன் துறவற சபையைத் தொடர்ந்து டொமினிக்கன் துறவற சபை, அகஸ்தீனியன் துறவற சபை ஆகியனவும் இலங்கைக்கு வந்து பாடசாலைகள் அமைத்துக் கல்விப் பணியாற்ற ஆரம்பித்தன.

இயேசுசபைத் துறைவற சபையினர் 1602ஆம் ஆண்டு இலங்கையில் சமயப்பணி புரிந்தனர். இவர்களும் பல பாடசாலைகளை இங்கே ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்தில் 12 பாடசாலைகளும் ஓர் உயர் கல்லூரியும், மன்னாரில் நான்கு பாடசாலைகளும் இவர்களால் நிறுவப்பட்டன. 1616ஆம் ஆண்டு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இயேசுசபையினர் கீழைத்தேச மொழி, கலை என்பனவற்றைப் போதிப்பதற்காக ஒரு சர்வ கலாசாலையை (Oriental University) மன்னாரில் நிறுவ விரும்பினர். முக்கியமாகத் தமிழ் சமஸ்கிருதம் என்பனவற்றையே இங்கே போதிக்க எண்ணினர். ஆனால் இது சாத்தியப்படவில்லை. எனினும் இத்தகைய ஒரு சர்வகலாசாலையைத் தென்னிந்தி யாவில் இச்சபையினர் நிறுவினர்.[18] சமயம் பரப்புவதற்காகவே இவர்கள் இத்தகைய தொண்டுகளைச் செய்யலாயினர்.

போர்த்துக்கேய மிசனரிமார் தமிழ் மொழியிலேயே போதனைகளைச் செய்தனர். இப்போதனைகளுக்கு பொது வணக்க அரங்கத்தையே (Liturgical Theatre) பெரிதும் பயன்படுத்தினர். ஏற்கனவே தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட போர்த்துக்கேய நாடகங்கள் இவர்களுக்கு ஆரம்பத்தில் நன்கு உதவின. கோவாவிலிருந்து வந்த சமயக் குருமார் நன்கு சீரமைக்கப்பட்ட ஒரு நாடக மரபை இலங்கையில் அறிமுகம் செய்தனர்.[19]

கோவாவில் இருந்து வந்த மிசனறிமார் கத்தோலிக்க நாடக மரபுக்கு வித்திட்டிருக்கலாம். ஆனால் தென்னிந்தி யாவில் இருந்து வந்த குருமார்களாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள் நன்கு வளர்ச்சி பெற்றனவென்பது உண்மை. இதனை ஹூபேட் கூறும் பாஸ்கு நாடகங்கள் பற்றிய கருத்துக்களில் இருந்தும் உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.[20]

ஓட்டோஸ் எனப்படும் நாடகங் களைக் கத்தோலிக்க குருமார் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் ஆரம்பத்தில் அரங்கேற்றியுள்ளனர். இயேசுசபையினரின் சிறிய இல்லங்களிலும் இத்தகைய நாடகங்கள் மேடையேற்றப் பட்டுள்ளன.

மிசனரிமார் 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் எழுதிய ஒருசில கடிதங்களை வண. எஸ். ஜி. பெரேரா போர்த்துக்கேய மொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இக்கடிதங்களில் இருந்து 1602ஆம் ஆண்டு தொடக்கம் மேடையேற்றப்பட்ட நாடகங்கள், மேடையேறிய இடங்கள் என்பன தெரியவந்துள்ளன. இதிலிருந்து 1668ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் ஒரு நாடகம் (Scriptural Drama) மேடை யேறியதாகத் தெரிகிறது. ஆகவே 1660ஆம் ஆண்டுக்கு முன்பே இலங்கையில் கத்தோலிக்க நாடகங்கள் மேடையேறத் தொடங்கிவிட்டன என்பது உறுதியாகிறது.

1603ஆம் ஆண்டு டியோகோ டாகுண்கா (Diogo Dacunha) எழுதிய கடிதத்தில் இருந்து கத்தோலிக்கமதப் புனிதர்களுடைய பெருநாட்களின்போது பகலில் சுற்றுப்பிரகாரமும், இரவில் சமய நாடகங்களும் இடம்பெற்றுள்ளன எனத் தெரிகிறது. கன்னிமேரி (Vergin Mary), புனித யோண் (St. John), வெற்றி மாதா (Our Lady of Victories) போன்றோருடைய திருநாட்களின்போது சில தேவாலயங்களில் நாடகங்கள் நடைபெறுவதுண்டு. இந்நாடகங்களை ஏராளமான மக்கள் கண்டுகளித்தனர்.[21]

இலங்கையின் கரையோர மாகாணங்களை ஒல்லாந்தர் கைப்பற்றி 1658ஆம் ஆண்டு தொடக்கம் 1796ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்தனர். இவர்கள் புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பினர். இந்துமதம், பௌத்த மதம் என்பனவற்றை மட்டுமன்றிக் கத்தோலிக்க மதத்தையும் தடைசெய்தனர். அதனால் கத்தோலிக்க நாடக வளர்ச்சியில் சிறிது தளர்ச்சி ஏற்படலாயிற்று. இக்கட்டத்திலேதான் வண யோசேப்வாஸ், வண. ஜாக்கோமே கொண்சால்வஸ் ஆகிய கத்தோலிக்க குருமார் சமயப்பணிபுரிய இலங்கைக்கு வந்தனர்.

வண. யோசவ்வாஸ் முனிவர் 1687ஆம் ஆண்டிலும் வண. ஜாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் 1705ஆம் ஆண்டிலும் இலங்கைக்கு வந்தனர். இவர்கள் இருவரும் கொங்கணிப் பிராமண குலத்தவர்கள். இவர்கள் பேசிய மொழி சமஸ்கிருதம் கலந்த தமிழ்மொழியாகும். இருவருமே தென்னகத்தில் கத்தோலிக் கருக்குப் பணிபுரிந்த பின்னர் ஈழத்துக்கு வந்தனர். அங்கே சமய நாடகங்கள் பலவற்றை அரங்கேற்றி நிறைய அனுபவம் பெற்றிருந்தனர்.

மன்னாரில் வந்திறங்கிய வண. யோசேவ்வாஸ் அடிகளார் மன்னாரிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் சமயப்பணி களை ஆற்றினார். இவருடன் வேறு கத்தோலிக்க குருமாரும் இந்தியாவில் இருந்து வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் தளர்ச்சியடைந்திருந்த போது வணக்க அரங்கை (Litergical Theatre) மீண்டும் உயிர்பெற வைத்தனர். ஓட்டோஸ் நாடகங்களை மீண்டும் மேடையேற்றினர்.[22]

வண. ஜாக்கோமே கொன்சால்வஸ் அடிகளாரின் வருகை இலங்கையில் கத்தோலிக்க நாடக வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைந்தது. இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க கூத்து மரபுக்கு பசளையிட்டு வளர்த்தவர் வண. ஜாக்கோமே கொன்சால்வஸ் அடிகளாவார். இம்மரபு மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்கும் பரவியது.[23] இதனைச் சிங்கள ஆய்வாளர் எம். எச். குணதிலகாவும் உறுதிப்படுத்துகின்றார்.[24]

எனவே மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பின்வரும் முடிவுக்கு வரமுடிகிறது. அதாவது இலங்கையில் கத்தோலிக்க மதக்கூத்துக்கள் போர்த்துக்கலில் இருந்தும், கோவாவில் இருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் அறிமுகமாயின. எனினும் தென்னிந்திய நாடக மரபினைப் பின்பற்றியே இவை வளர்ச்சிபெற்று, இன்றைய வடிவம் பெற்றன எனலாம்.

**கூத்து நாடகங்களின் வகைகள்**

ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் ஆடப்பட்டுவரும் கூத்து நாடகங்கள் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல்வேறு வகைப்பட்ட மூலங்களில் இருந்து தோன்றியுள்ளன. வட இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேங்களில் ஆடப்பட்டுவந்துள்ள இக்கூத்துக்கள் பல வகைப்பட்டவை. ஆட்டத்தின் தன்மை, வகை, இசை போன்றவற்றிற்கு ஏற்ப இக்கூத்துக்கள் பின்வருமாறு வகைப் படுத்தப்படுகின்றன:

அ. வடமோடிக் கூத்துக்கள்
ஆ. தென்மோடிக் கூத்துக்கள்
இ. மாதோட்டப் பாங்கு அல்லது மன்னார்ப் பாங்குக் கூத்துக்கள். இவற்றை தென்பாங்கு என்றும் தென்மெட்டு என்றும் கூறுவர்.
ஈ. யாழ்ப்பாணப் பாங்கு அல்லது வடபாங்குக் கூத்துக்கள். இக்கூத்துக் களை வடமெட்டு என்றும் அழைப்பர்.
உ. வாசகப்பா (வாசாப்பு)
ஊ. கதைவழிக் கூத்துக்கள் (காத்தவராயன் மெட்டிலமைந்த கூத்துக்கள்)
எ. நொண்டி நாடகங்கள்
ஏ. பள்ளு நாடகங்கள்
ஐ. விலாசங்கள்

இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ள கூத்துவகைகளுள் ஈழத்தில் இன்றுவரை ஆடப்பட்டுவருவன வடமோடி, தென்மோடிக் கூத்துக்களும், வடபாங்கு தென்பாங்குக் கூத்துக்களும், வாசாப்புகளும் கதைவழிக் (காத்தவராயன்) கூத்துக்களுமாகும். நொண்டி நாடகங்கள் ஆடப்படுவது மிகமிக அருகிவிட்டது. பள்ளு நாடகங்கள் இப்போது ஈழத்தில் ஆடப்படுவதில்லை. இவற்றுட் சில வடமோடிக் கூத்துக்களாக ஆடப்பட்டனவெனத் தெரிகிறது.[25]

வழக்கொழிந்துபோன, வழக் கொழிந்துகொண்டிருக்கும் நாடக வகைளைத் தவிர்த்து இன்று பயில் நிலையில் இருக்கக்கூடிய, கத்தோலிக்க சூழமைவில் ஆடப்படுகின்ற வடமோடிக் கூத்துக்கள், தென்மோடிக் கூத்துக்கள், யாழ்ப்பாணப் பாங்கு அல்லது வடபாங்குக் கூத்துக்கள், பற்றி இங்கு சுருக்கமாக ஆராயப்படுகின்றது. தொடர்ந்து மாதோட்டப் பாங்கு அல்லது மன்னார் பாங்குக் கூத்துக்கள்பற்றியும், வாசகப்பா அல்லது வாசாப்புக்கள் பற்றியும் சிறப்பாக ஆராயப்படுகின்றது.

**வடமோடிக் கூத்துக்களும் தென்மோடிக் கூத்துக்களும்**

ஈழத்தில் ஆடப்படும் கூத்துக்களில் வடமோடி மரபும், தென்மோடி மரபும் பிரபலமானவை. குறிப்பாக வடக்கில் ஆடப்படும் கூத்துக்களை இவ்வாறு பிரித்து ஆராய்வது வழக்கில் இருந்து வருகிறது. பேராசிரியர் சு. வித்தியானந்தன், வீ. சீ. கந்தையா, பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோர் இந்தத் துறையில் ஈடுபட்டு அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபுலத்து வடமோடி தென் மோடிக் கூத்துக்களை ஆராய முற்படும்பொழுது மட்டக்களப்பில் ஆடப்படும் மேற்படி கூத்துக்களைப்பற்றியும் அறிந்துகொள்வது அவசியமாகும். ஏனெனில் யாழ்ப்பாணத்துக் கூத்தர்கள் தாம் ஆடுவது வடமோடி அல்லது தென்மோடியென்று கூறுகின்றார் களேயொழிய அதுபற்றிய பூரண விளக்கத்தை அவர்கள் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.[26]

மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் குறித்துச் சொல்லவந்த வித்தியானந்தன் பின்வருமாறு கூறுவார்:

"தென்மோடிக்கும் வடமோடிக்கும் கதைப்போக்கு, இசை, ஆடல், உடை, முதலியவற்றில் வேறுபாடுண்டு. வடநாட்டு புராண இதிகாசங்களைக் கொண்டவை வடமோடி நாடகங்கள். இராம நாடகம், தர்மபுத்திர நாடகம், பப்பிரவாகன் நாடகம், பதினெட்டாம் போர், குருக்சேத்திரன் போர், சூரசம்ஹாரம், செல்வநாடகம், பாண்டவர் வனவாசம், கர்ணன்போர் போன்றவை இன்று ஈழத்தில் ஆடப்படும் வடமோடி நாடகங்கள் ஆகும். இவை போர் செய்து வெற்றிபெறுவதைக் கூறுவன. ஈழத்தில் நடிக்கப்படும் தென்மோடி நாடகங்களுள் பவளவல்லி நாடகம், நொண்டி நாடகம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை பெரும்பாலும் தமிழ்நாட்டுக் கதைகளைக் குறிப்பனவாய்; காதல் சுவை நயந்து, காதல் கைகூடுவதோடு முடிகின்றன. இவற்றில் நகை, வியப்புப் போன்ற சுவைகளே பெரும்பாலும் வரும். மேலும் தென்மோடியில் பழைய முறைப்படி இசை அமைந்திருக்கும்"[27]

ஆய்வாளர் திரு. வீ. சீ. கந்தையா அவர்களும் இதே கருத்தைத்தான் கொண்டுள்ளார். பண்டைத் தமிழகத்தில் வழங்கிய ஆரியக் கூத்து வகையைச் சார்ந்தது வடமோடி என்றும், தமிழுக்கே சொந்தமாகத் தென்னாட்டில் நிலவிய கூத்துவகையைச் சேர்ந்தது தென்மோடி என்றும் கூறுகின்றார்.[28]

ஆடல் பாடல் என்பவற்றிற்கூட இரு மோடிகளுக்கும் வேறுபாடுண்டு. வடமோடி ஆட்டங்களைவிட தென்மோடி ஆட்டங்கள் மிகவும் நுணுக்கமானவை. தென்மோடியில் வரவுப் பாட்டை அண்ணாவியார் பாட, வடமோடியில் நடிகரே பாடுவதற்குக் காரணம் தென்மோடியிற் காணப்படும் கடினமாக நுணுக்கமான ஆட்டங் களேயாகும். தென்மோடியினர் பாடல்களை இழுத்துப்பாட, வடமோடியினர் அதனைச் சாதாரணமாகப் பாடுவர். தருப்பாடும் வழக்கம் தென்மோடியில் மட்டுமே காணப்படுகிறது.[29]

தென்மோடியினர் அணியும் உடை பாரங்குறைந்தது. வடமோடியினருடைய உடை பாரமானது. அதனை வில்லுடுப்பென்பர். உடையைப் போன்றே தென்மோடியினர் அணியும் முடியும் பாரமில்லாதது. ஆனால் வடமோடியினர் அணியும் முடியோ பாரமானது. பலாமரம், நச்சுமரம் என்பனவற்றைக்கொண்டு செய்யப்படுவது. வடமோடியினர் வில், அம்பு, கதாயுதம் என்பவற்றை ஆயுதங் களாகக்கொள்வர்.[30]

வடமோடி தென்மோடி பற்றி ஆராய்ச்சி செய்த பேராசிரியர் மௌனகுரு தென்மோடியே தமிழர்களுடைய கூத்து என்பதை ஏற்றுக்கொள்கிறார். வடமோடி தென்மோடியில் இருந்து இரவல்பெற்று தன்னை வளர்த்துக்கொண்டது என்ற கருத்தையம் தெரிவிக்கின்றார். ஆனால் கதையமைப்பைப் பொறுத்தவரையில் வித்தியானந்தன், கந்தையா போன்றோருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறுகின்றார்.[31]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து வடமோடி தென்மோடிக் கூத்துக்களுடன் ஒப்பிடும் போது மௌனகுருவினுடைய கருத்து ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்ட கூத்துக்களே மட்டக்களப்புக்கு எடுத்துச்செல்லப்பட்டன என்ற கருத்தை மௌனகுரு தமது ஆய்வில் முன்வைத்துள்ளார்.[32] மட்டக்களப்பில் ஆடப்படும் பெரும்பாலான கூத்துக்கள் யாழ்ப்பாணத்திலும் ஆடப்பட்டன. ஆகவே மட்டக்களப்பில் காணப்படும் வடமோடி தென்மோடி மரபுக்கும் யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் வடமோடி தென்மோடி மரபுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை மறுக்கவியலாது.

**யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் கத்தோலிக்க கூத்துக்கள்**

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலங்களிற் பெரும்பாலும் ஆடப்பட்டுவந்த நாட்டுக்கூத்துக்கள் கத்தோலிக்க சமயம் சார்ந்தனவாகும். கத்தோலிக்க மதத்தைப் பரப்ப வந்த யேசுசபையினர், பிரான்சிஸ்கன் சபையினர், டொமினிக்கன் சபையினர் ஆகியோர் நாடகத்தை மதப்பிரசாரத்திற்கேற்ற கருவியாகக் கொண்டனரென்று முன்னரே கூறப்பட்டது. அவர்கள் விதைத்த கத்தோலிக்க மதக்கூத்துக்கள் வளர்ச்சிபெற்று யாழ்ப்பாணக் கரையோரக் கிராமங்களிலும் கத்தோலிக்க மக்கள் வாழும் ஏனைய கிராமங்களிலும் ஆடப்பட்டுவருகின்றன.[33]

வடமோடி தென்மோடி மரபுகளிலிருந்து இவை வேறுபட்டவையாக ஆரம்பத்தில் இருக்கவில்லை. இக்கூத்துக்கள் வடமோடி முறையிலும், தென்மோடி முறையிலும் ஆடப்பட்டன. பெரும்பாலானவை தென்மோடியிலேயே ஆடப்பட்டன.[34]

**மன்னார் கத்தோலிக்க கூத்து நாடகங்கள்**

இலங்கையின் வடபுலத்தில் ஆடப்படும் கூத்துக்களில் மன்னாரில் ஆடப்படுபவை தனித்துவம்மிக்கவை. இக்கூத்துக்கள் இன்றும் உயிர்த்துடிப்போடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன.[35]

மன்னார்க் கூத்துக்கள் மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு என இரு பிரிவுக்குள் அடங்கக்கூடியவை. மாதோட்டப் பாங்கை தென்பாங்கு எனவும், தென்மெட்டு எனவும், யாழ்ப்பாணப் பாங்கை வடபாங்கு எனவும் வடமெட்டு எனவும் வழங்குவதுண்டு என பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார்.[36]

வடபாங்கு மற்றும் தென்பாங்கு ஆகிய இரண்டு பாங்குகளுக்கும் இடையிலான வேறுபாட்டை சு. வித்தியானந்தன் இவ்வாறு விளக்குகிறார்:

"வடபாங்கில் கடவுள் வாழ்த்து விருத்தப்பாவில் அமைய, தென்பாங்கில் வெண்பாவில் அமையும். தென்பாங்கில் பாத்திரங்களுக்கு சபைத்தரு (ஆடற்தரு) கிடையாது. மேலும் தெய்வ வணக்கமும், செயப்படுபொருளும், கதைச்சுருக்கமும் கூறும் தோடயம் என்னும் பாவகை வடபாங்கிலே உண்டு; தென்பாங்கிலே இல்லை. தென்பாங்கில் நாடகக்கதை கவி, இன்னிசை மற்றும் பாவகைகளாற் கூறப்படும். தென்பாங்கிற் பாக்கள் பெரும்பாலும் வல்லோசை உடையன வாகவும், வடபாங்கிற் பெரும்பாலும் மெல்லோசை உடையனவாகவும் அமையும். தென்பாங்கிற் பாத்திரங்கள் தத்தம் நிகழ்ச்சி முடியப் போய்வரும். ஒரு பாத்திரம் எத்தனைமுறையும் போய்வரலாம். ஒவ்வொரு வரவுக்கும் செலவுக்கும் தனித்தனி தருக்களும், சிந்துகளும் அவற்றிற்குரிய ஆடல் முறைகளும் உண்டு. உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசவுந்தரி நாடகத்தில் தருமர் ஏழு தடவையும், பிலேந்திரன் பதினொரு தடவையும் தோன்றுவர். அங்கு ஒவ்வொருமுறை தோன்றும்போதும் தரு, சிந்து, ஆடல் முறைகள் உண்டு. வடபாங்கில் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒரு வரவேற்புண்டு. பாத்திர நிகழ்ச்சி மீண்டும் இருந்தால் வரவில்லாமலும் ஆடல்தரு இல்லமலும் கலந்து கொள்ளும்."[37]

மேற்கூறப்பட்ட மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு என்பவற்றை பெஞ்சமின் செல்வம் அவர்கள் கீழ்க்கண்டவாறு வேறுபடுத்திக் காட்டுகின்றார். இவருடைய இந்த விளக்கமானது இசையமைப்பை அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றது:

"சரிதையிற் (இந்நூலில்) கூறப்பட்டுள்ள நாடகங்களில் இருவகை இசைகள் காணப்படுகின்றன. ஒன்று மாதோட்ட இசை, மற்றையது யாழ்ப்பாண இசை. இவற்றை இராகம், பாங்கு, மெட்டு என்னும் பெயர்களினாலும் அழைப்பர். முதன் முதல் மாதோட்டத்தில் லோறஞ்சுப்பிள்ளை ஆசிரியரால் 16ஆம் நூற்றாண்டில் உற்பத்தியாக்கப்பட்ட நாடகம் மூவிராசாக்கள் வாசகப்பாவாகும். இதன் இசை தென்பாங்கென்னும் மாதோட்ட இசை. இதைப்பின்பற்றி ஆக்கியோனின் மாணவர்களும் மற்றையோரும் மாதோட்டப்பாங்கினிலே தத்தம் நாடகங்களை ஆக்கிவர கீத்தாம்பிள்ளைப் புலவர் தம் நாடகங்களான எருமை, நொண்டி, என்டிறீக்கெம்பரதோர் ஆகிய நாடகங்களை புனரமைப்பு முறையில் வடபாங்கென்னும் யாழ்ப்பாண இசையிற் பாடியுள்ளார். அன்னாரைப் பின்பற்றி அவர் பின்வந்தோரும் தம் பாடல்களை வடபாங்கிலேயே ஆக்கிவந்துள்ளனர்.

இவ்விரு இசையின் வேறுபாடாவன: தென்பாங்கு வல்லினச் சொற்களினாலாய உரத்த ஓசையுடையது. வடபாங்கு மெல்லினப் பதங்களுடைய தாழ்ந்த மெல்லிய இனிய ஓசையுடையது. இவற்றை நாடகங்களில் பிரித்தறியச் செய்வது கவி, இன்னிசை யென்னும் சிற்றுறுப்பு வகைகளே.

இவையன்றி இசையைப் பொறுத்தவரை இன்னுஞ்சில வேறுபாடுகளுமுண்டு. மாதோட்டப் பாங்கில் தரு, சிந்து, வண்ணம் முதலிய பேருறுப்புகள் தெய்வ வணக்கமும் செயப்படுபொருளுமாய் (கூத்தில் சொல்லப்படும் கதை) நின்று செயற்பட, அதன் சிற்றுறுப்புகளாகிய கவி, இன்னிசை, கொச்சகம், தாழிசை உலா போன்றவையே சரிதையை வழிநடத்தும். யாழ்ப்பாணப் பாங்கில் பேருறுப்புகள் சரிதையை வழிநடத்தச் சிற்றுறுப்புக்கள் தெய்வ வணக்கமும் செயற்படு பொருளாகவும் நின்று சரிதையை வழிநடத்தும்.

இதுவன்றி இன்னுமோர் வகை தென்பாங்கில் நாடகப் பாத்திரங்கள் ஒவ்வொரு காட்சிக்கும் தனித்தனி வரவு செலவுகளுண்டு. ஒரு பாத்திரம் எத்தனை முறையும் வந்து போகலாம். வடபாங்கில் ஒரு பாத்திரம் ஒரு முறையன்றி மறுமுறை வருவதில்லை. சந்தற்பவேளை வரவில்லாமலே செயலிற் கலந்து கொள்ளும்."[38]

இனி மாதோட்டப் பாங்கு எனும் தென்பாங்குக் கூத்துக்கள் தொடர்பாகவும் யாழ்ப்பாணப் பாங்கு எனும் வடபாங்குக் கூத்துக்கள் தொடர்பாகவும் சற்று விரிவாக நோக்கலாம்.

**தென்பாங்குக் கூத்துக்கள்**

மன்னார் பிரதேசத்தில் தென்பாங்குக் கூத்துக்களை மாதோட்டப் பாங்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கள் என அழைப்பர். இந்தத் தென்பாங்குக் கூத்துக்கள் மன்னாருக்கே உரிய தனித்துவமான கூத்து வகையாகக் கருதப்படுகின்றது.

தென்பாங்குக் கூத்துக்களில் காப்புச்செய்யுள் வெண்பாவினாலேயே அமைந்திருக்கும். உதாரணமாக குப்பையப் புலவர் என்று அறியப்பட்ட புலவர் மரிசால் மிரால் (1833 – 1878) அவர்கள் இயற்றிய தென்பாங்குக் கூத்தாகிய சந்தொம்மையார் வாசாப்பில் வரும் காப்பு வெண்பாவில் உள்ளதை அவதானிக்கலாம்:

*பூமேவு ஞான புனிதன்சந்*
*தொம்மையப்பர்*
*பாமேவு வாசாப்புப் பாடவே – மாமேவு*
*சுத்தகன்னி மாமரிதன் சுதன்காயம்*
*தொட்டதிருக்*
*கத்தன் முனிவிரலே காப்பு*[39]

குருகுல நாட்டுத்தேவர் (1728 – 1808) தென்பாங்கில் இயற்றிய எம்பரதோர் நாடகத்தின் காப்பு வெண்பாவாக உள்ளது:

*சீர்மேவும் ஞானந் திருச்சுருதி யுண்மை*
*தங்கும்*
*ஏர்மேவும் றோமைநகர் எம்பரதோர் -*
*நேர்மேவும்*
*காதலியாம் ராக்கினிதன் காதை*
*தன்னைப் பாடுதற்கு*
*சோதிபரன் பொற்றாள் துணை*[40]

ஆனுப்பிள்ளைப் புலவர் என்று அழைக்கப்பட்ட புலவர் சூசைப்பிள்ளை மரிசாற்பிள்ளை 1838 – 1901) அவர்கள் தென்பாங்கில் இயற்றிய ஞானசவுந்தரி நாடகத்தில் வரும் காப்பும் வெண்பாகவே அமைந்துள்ளது :

*சீர்மேவு வாசந் திகழ்ந்துவரி*
*வண்டொலிபூந்*
*தார்மேவு ஞான சவுந்தரிமின் -*
*னார்காதை*
*செந்தமிழால் நாடகப்பாச்*
*செப்பவன்னை மாமரியாள்*
*கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு*[41]

தென்பாங்கில் தத்தம் கடவுளர்மேல் பாடப்படும் பாடலும் அவையடக்கப்பாடலும் **தார்க்கவி** என்று அழைக்கப்படும். பெரும்பாலும் இப்பாடல் கலிப்பாவால் அமைந்திருக்கும். சில விருத்தத்தாலும் அமைவதுண்டு.

சந்தொம்மையார் வாசாப்பில் வரும் தார்க்கவி பின்வருமாறு அமைந்துள்ளது:

*காப்பி லங்கிய கன்னிமரி தரும்*
*கத்தன் பேசுவை நித்தமும் போற்றியே*
*பாப்பி லங்கிய தொம்மையப்*
*போஸ்தலின்*
*பழமைதண் டமிழ்பா விசை பாடவே*
*ஊர்க்கி லங்கிய இந்நக ரானதில்*
*உற்றகோ யில்உ யரால யத்திரு*
*தார்க்கி லங்கிய தொம்மையப்*
*போஸ்தலுன்*
*அருட்செய் வாயுன்அ லர்பாதம்தஞ்சமே*

**வடபாங்குக் கூத்துக்கள்**

யாழ்ப்பாணத்தில் ஆடப்பட்டுவந்த வடபாங்குக் கூத்து வடிவங்கள் மன்னார் பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்க வேண்டும். அதனாலேதான் இது யாழ்ப்பாணப்பாங்கு என்ற பெயரையும் பெற்றுள்ளது.[42] யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் ஆடப்படும் கூத்துக்கள் தென்மோடிச் சாயலுடையவை. இவைதாம் மன்னார்ப் பகுதியில் யாழ்ப்பாணப்பாங்கு என்ற பெயருடன் சென்றனவாய் இருக்க வேண்டும்.

வடபாங்குக்கூத்தை முதன் முதலில் மன்னாருக்கு அறிமுகப்படுத்தியவராக கீத்தாம்பிள்ளைப் புலவர் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னாசிரியர் லோறஞ்சுப்பிள்ளையும், அவரைப் பின்பற்றிய அவர் மாணவர்களும் பாடிய நாடகங்கள் அனைத்தும் தென்பாங்கென்னும் மாதோட்ட இராகத்தில் பாடியிருக்க, முதன் முதல் வடபாங்கென்னும் யாழ்ப்பாண மெட்டைத் தம் எருமை, நொண்டி, எம்பரதோர் நாடகங்கள் மூலமாக மன்னார்ப் பகுதிக்கு அறிமுகம் செய்துவைத்த காரணகர்த்தாவென்னும் பெருமைக்கு இவரே உரித்தாளியாகின்றாரெனச் சொல்லாதே போதரும்."[43]

வடபாங்குக் கூத்துக்களில் காப்பு விருத்தமாகவே அமையும்.

எடுத்துக்காட்டாகச் சில காப்பு விருத்தங் களை இங்கு நோக்கலாம்.

வடமோடிக் கூத்தாகிய சந்தியோகு மையோர் நாடகத்தில் வரும் காப்பு விருத்தம் :

*"சீரோங்கு கலிலேய தேசமீதில்*
*திருவோங்கும் செபதேயின்*
*திகழ்தவத்தால்*
*நேரோங்க வந்துதித்த யக்கோ*
*வென்னும்*
*நீத அப்போஸ்தலுசரிதை நெறியதாகப்*
*பாரோங்கு மானிடர்கள் அறிவதற்குப்*
*பாடவே நாடகப் பாவாக நானும்*
*காரோங்கு வெல்லை வெற்பில்*
*உதித்தயேசு*
*கத்தனிரு நற்சரணங் காப்புத்தானே"*[44]

இன்னுமொரு வடமோடிக் கூத்தாகிய இம்மானுவேல் நாடகத்தில் வரும் காப்பு *விருத்தம்*

*பூமேவும் பொற் திகிரி கரத்திலேந்திப்*
*புகழ் பெருகு மித்தால்ய*
*புரத்தையாளும்*
*மாமேவும் மகிபதிமல் கிறீத்து வென்னும்*
*மன்னவனாம் தன்மகனிம் மனுவேல்*
*காதை*
*பாமேவும் செந்தமிழ் நாடகப் பாவாக*
*பண்புயரு மரங்கிதனிற் பரிந்து பாட*
*காமேவுங் கற்கிரியிலுதித்த ஆதி*
*கத்தனிரு பொற்சரணங் காப்பதாமே"*[45]

தோடயம் என்னும் பாவகை வடபாங்கில் மட்டுமே காணப்படுகின்றது. தோடயத்தில் மூன்று அம்சங்கள் காணப்படும். 1. தெய்வ வணக்கம், 2. செயப்படுபொருள், 3. கதைச்சுருக்கம்

இவற்றை புனித சந்தியோகுமையோர் நாடகம் என்னும் வடபாங்கு நாடகத்தில் இருந்து அறிந்துகொள்ளலாம்:

*"திகழ்புவி அண்டம் பாதாளம்*
*திரைவரை மனுடர் இரவிமதி*
*சகல சராசரம் படைத்தாதி*
*சருவேசன்தாள் துணையே*

*செபதே யெனுந்தருமச் சுகுணன்*
*செகமதி லீண்டிடு புதல்வன் யக்கோ*
*தகைமைசேர் சரிதையை நாடகப் பாதா*
*னெனவே பாட*
*இகமுள பவவினை தீர்க்கவெல்லை*
*யகமதில் மனுவடிவாக வந்த*
*இறையவனாகிய இயேசு நசரே*
*னுபதந்துணையே*

*அன்றுத போ ரெனு மரிய பெருங்*
*குன்றி லேரட்ச கர்விசுவ*
*ரூபங்கண்டு பணிந்திடு முனி சரிதை*
*காசி னியிலே பாட*
*துன்று நலந்திகழ் மெஞ்ஞான*
*வென்றியுறும் பயபக்தி*
*திடமென்று தரும்இஸ் பிரீத்து*
*சாந்தேகன் பதந் துணையே"*[46]

என இத்தோடயம் தொடர்கின்றது. தோடயம் என்பது நாடகங்களில் முதலில் வரும் பாட்டைக் குறிக்குமென்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபாங்கின் சிறப்பு அம்சங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: வடபாங்கு நாடகங்கள் மெல்லினப் பதங்களுடன்கூடிய மென்மையான இனிய ஓசை உடையனவாகும். வடபாங்கில் தரு, சிந்து, வண்ணம், ஆகிய பேருருப்புகள் நாடகக்கதையை நடத்திச்செல்ல, சிற்றுருப்புக்களாகிய கவி, இன்னிசை, கொச்சகம், தாழிசை, உலா போன்றவை தெய்வ வணக்கமும் செயற்படு பொருளாகவும் நின்று செயற்படும். மேலும் கருநாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவையும் இப்பாங்கில் கலந்திருக்கக் காணலாம். பல நாட்கள் நடக்கும் கூத்தாக இருந்தாலும் புலசந்தோர் (பாயிரமுரைப் போர்) முழுக் கதையையும் முதல்நாளே சொல்வர். வட பாங்கில் ஒரு பாத்திரம் ஒரு முறையே வரவுகவி பாடப்பட, ஆடல்தருவுடன் வரும். அப்பாத்திரம் தன்னுடைய நிகழ்ச்சி முடிந்ததும் களரியைவிட்டுச் சென்றால் மீண்டும் திரும்பிவரும்போது வரவுகவி பாடும் வழக்கமில்லை. எனவே வடபாங்கில் ஒவ்வொரு கூத்தருக்கும் ஒரு வரவு கவியும் ஒரு செலவுச் சிந்தும் மட்டுமே பாடப்படுவது வழக்கம். சொல்லாடல் வசனமாகவும், கொச்சகமாகவும், விருத்தமாகவுமே பெரும்பாலும் அமைந்திருக்கும்.

### வடபாங்கு தென்பாங்குக் கூத்துக்களுக்கு இடையிலான வேறுபாடுகள்

மேலே விபரித்த விடயங்களை அடிப்படையாகக்கொண்டு மன்னாரில் வழக்கிலிருக்கும் மன்னார் பாங்கு (தென்பாங்கு) மற்றும் யாழ்ப்பாணப் பாங்கு (வடபாங்கு) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

காப்புச்செய்யுள் வடபாங்கிலே விருத்தத் திலும், தென்பாங்கிலே வெண்பாவிலும் அமையும். வடபாங்கிலே தோடயமும், தென்பாங்கிலே தார்க்கவியும் சிறப்பம்சங்களாகும். ஒன்றுக்கு மேற்பட்ட கூத்தாக இருப்பினும் வடபாங்கில் புலசந்தோர் முதல்நாளே கதைச் சுருக்கத்தைக் கூறுவர். தென்பாங்கில் அன்றன்று நடக்கவிருக்கும் கதையையே புலசந்தோர் கூறுவர். வடபாங்கில் ஆடல்தரு உண்டு. தென்பாங்கில் ஆடல்தரு இல்லை. இசையானது வடபாங்கில் மெல்லோசை யாகவும், தென்பாங்கில் வல்லோசை யாகவும் வரும். வடபாங்கில் பாத்திரம் ஒவ்வொன்றும் ஒரேயொரு வரவுகவியும், செலவுகவியும் கொண்டிருக்கும். தென்பாங்கில் ஒரு பாத்திரம் எத்தனை தடவை வந்தாலும் அத்தனை வரவுகவிகள் உண்டு. அதற்கேற்ப செலவுச் சிந்தும் உண்டு, வடபாங்கில் சொல்லாடல் வசனமாகவும், கொச்சகமாகவும் இருக்கும். தென்பாங்கில் பெரும்பாலும் இன்னிசை யிலேயே அமைந்திருக்கும். தென்பாங்கில் நிகழ்ச்சிகள் மங்களகரமாகவே நிறைவுறுவது வழக்கம். இதனை வெண்பா மூலம் கூறுவர். ஆனால் வடபாங்கில் இத்தகைய சந்தர்ப்பங்களில் விருத்தப்பா மூலமே கூறுவர்.

### வாசாப்பு (வாசகப்பா)

மன்னாரில் ஆடப்பட்டுவரும் கத்தோலிக்க கூத்துக்கள் 'நாடகங்கள்' என்றும் 'வாசாப்புக்கள்' என்றும் வழங்கப் படுகின்றன. மன்னாரில் ஓர் இரவு ஆடப்படும் கூத்துக்களும் ஒன்றுக்கு மேற்பட்ட இரவுகளில் ஆடப்படும் கூத்துக்களும் உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட இரவுகளில் ஆடப்படும் கூத்துக்கள் 'இரண்டிரவு நாடகம்', 'மூன்றிரவு நாடகம்' என அழைக்கப்படுகின்றன.

நாடகங்களுக்கும் கூத்துக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை முதன் முதலில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களே முன்வைத்துள்ளார் எனக் கொள்ள முடியும். 1964ஆம் ஆண்டு அவர் பதிப்பித்த எண்றிக்கு எம்பரதோர் நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலுக்கான தோற்றுவாயில் அவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"நாடகங்களின் சுருக்கங்களாக அமைவன வாசகப்பாக்கள். வாசகப்பா என்ற சொல் வசனம் கலந்த பாட்டு எனப் பொருள்படும். ஒரே கதையை நாடகமாகவும், வாசகப்பாவாகவும் பாடுதல் உண்டு. உதாரணமாக அந்தோனியார் நாடகம் - அந்தோனியார் வாசகப்பா, சந்தொம்மையார் நாடகம் - சந்தொம்மையார் வாசகப்பா, மூவிராசாக்கள் நாடகம் - மூவிராசாக்கள் வாசகப்பா என நாடக நூல்கள் இருப்பதைக் காணலாம்."[47]

இதே கருத்தையே மன்னார் மாதோட்ட நாட்டுக்கூத்து ஆய்வாளர் திரு. ம. பெஞ்சமின் செல்வம் அவர்களும் முன்வைக்கின்றார்.

"வாசகப்பா வென்பதற்கு வசனம் கலந்த பாட்டு என்ற அருத்த விற்பத்தியிருந்தாலும் பெரும்பாலும் நாடக வழக்கைத் தழுவியேதான் ஆக்கியுள்ளனர். நாடகம் சரித்திரத்தின் முழுப்பாகம். வாசகப்பா அதன் சுருக்கம். அந்தோனியார் நாடகம் - அந்தோனியார் வாசகப்பா, சந்தொம்மையார் நாடகம், சந்தொம்மையார் வாசகப்பா, மூன்றிராசாக்கள் நாடகம், மூன்றிராசாக்கள் வாசகப்பாவென ஒரு சரிதையின் நிறைவும் சுருக்கமுமாக நாடகங்களும் வாசகப்பாக்களும் பாடப்பட்டபோது, ஒரே சரிதையை பலரும் தங்கள் தங்கள் யுத்திக்கும் சக்திக்கும் தக்கவாறு நாடகங்களாகவும், வாசகப்பாக்களாகவும் பாடியுள்ளனர்."[48]

நாடகங்களின் சுருக்கங்களாக அமைவனவே வாசகப்பாக்கள். உரையிடையிட்ட பாக்களையே அதாவது வசனம் கலந்த பாக்களையே இவ்வாறு குறிப்பிடுவர். வாசகப்பா கதை கூறும் உத்தியே. இதனைத் தொடர்நிலைச் செய்யுள் பற்றிய ஓர் உத்தியாகவே கொள்ளவேண்டும் என பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகின்றார்.[49]

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் சுருங்கிய கூத்து வடிவங்களே வாசாப்புக்களாகும் எனக் குறிப்பிடுகின்றார்:

"மன்னாரில் ஒரே கூத்து ஒன்றுக்கு மேற்பட்ட இரவுகளிலும் ஆடப்படுவது வழக்கம். அதனால் புலவர்கள் கூத்துக்களை எழுதும்போது இரண்டு, மூன்று அல்லது நான்கு இரவுகள் தொடர்ந்து ஆடக்கூடியனவாகப் பிரித்து எழுதுவதுண்டு. இவ்வாறு எழுதப்படும் கூத்துக்கள் இரண்டிரவுக் கூத்துக்கள், மூன்றிரவுக் கூத்துக்கள், நாலிரவுக் கூத்துக்கள் என்று கூறப்படுகின்றன. சில கூத்துக்கள் ஓரிரவில் மட்டும் ஆடக்கூடியனவாகச் சுருக்கியெழுதப்படும். இப்படி எழுதப்பட்ட சுருங்கிய கூத்து வடிவங்களே வாசாப்புக்களாகும். இவற்றை வாசகப்பா என்னும் பெயரிலுங்குறிப்பர். அதாவது ஓரிரவுக் கூத்துக்களே வாசாப்புகளாகும்."[50]

வாசாப்பு, வாசகப்பாவின் மருவு ஆகும். கூத்துக்களின் சுருக்கமாக அமைவன வாசகப்பா. வாசகப்பா என்பது வசனம் கலந்த பாட்டு எனப் பொருள் கொள்ளப்படும். என பேராசிரியர் சி. மௌனகுரு குறிப்பிடுகின்றார்.[51]

மேலே காட்டப்பட்ட ஆய்வாளர்களின் கருத்துப்படி ஒன்றுக்கு மேற்பட்ட இரவுகளில் பாடி ஆடும் கூத்துக்களை 'நாடகங்கள்' என்றும், ஒரு இரவில் பாடி ஆடும் கூத்துக்களை 'வாசகப்பா' அல்லது 'வாசாப்பு' என்றும் அழைக்கப்படுகின்றது. ஒரே கதையை ஒருவரே நாடகமாகவும் வாசாப்பாகவும் எழுதியதாகத் தெரியவில்லை. ஒரு கதையை ஒருவர் நாடகமாக எழுத இன்னொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசாப்பாகப் பாடியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

மன்னார் மாதோட்டப் புலவர்கள் ஒரே கதையை ஏன் ஓரிரவுக் கூத்தாகவும் (வாசாப்பாகவும்), ஒன்றுக்கு மேற்பட்ட இரவுக்கூத்தாகவும் (நாடகமாகவும்) எழுதினர் என்பது இங்கு ஆய்வுக்குரிய விடயமாகும். அதாவது கூத்து நாடகம் என்பது அருள்நிறைந்த ஒரு மொழி என்பது மன்னார் மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இந்த அருள்நிறைந்த மொழியைக் கேட்பதன்மூலம் சகல சௌபாக்கியங்களும் மக்களுக்கும் ஊருக்கும் உண்டாகும். ஆகவே கூத்து ஆடுதல் இன்றியமையாத ஒரு கடமையாக இம்மக்களால் கொள்ளப்படுகின்றது.[52]

ஒரு கூத்து நாடகத்தை மேடையேற்றுவ தென்பது இலகுவான தொரு செயற்பாடு அல்ல. பணபலம், ஆட்பலம், காலநேரம் என பல விடயங்கள் இதனோடு தொடர்பு பட்டுள்ளன. எல்லா விடயங்களும் ஒருங்கே சாதகமாக அமைந்து விடுவதில்லை.

கூத்து அரங்கேற்றம் என்பது ஒரு கூத்தை மேடையேற்றுவதுடன் முற்றுப்பெறும் ஒரு விடயமல்ல. ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் நடைபெறும் கூத்து நாடகத்தைக் கண்டுகளிப்பதற்காக அயற்கிராமங் களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வருகைதருவார்கள். இவர்களை உபசரிப்பதும் கூத்து அரங்கேற்றத்துடன் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். ஒரு கிராமத்தில் இரண்டு மூன்று நாட்கள் கூத்து அரங்கேற்றப்படுமாயின் அது பாரிய பணச்செலவை ஏற்படுத்தும் என்பதை யாரும் இலகுவில் புரிந்துகொள்ளலாம். எனவேதான் கூத்துக்களைச் சுருக்கி ஆடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாகவும் வாசாப்புகள் உருவாகி இருக்கலாம்.

இரண்டு இரவு அல்லது மூன்று இரவு நாடகங்களோடு ஒப்பிடும்போது வாசாப்பு களில் நடிக்கும் நடிகர்களின் எண்ணிக்கை குறைவாகும். இக்கூத்துக்களைப் பழக்குவதற்கு அல்லது ஒத்திகை பார்ப்பதற்குரிய நேரமும் குறைவாகும். சுருங்கக்கூறின் மேடையேற்றத்தில் உள்ள சிரமங்களும் பாதிக்குமேல் குறைந்துவிடும். பணச்செலவும் குறைவாகவே இருக்கும். கூத்தைப் பார்க்கவரும் ஏனைய கிராம மக்களை உபசரிப்பதும் எளிதாகும். இக்காரணங்களினால்தான் மன்னாரில் பல வாசாப்புக்கள் எழுந்தன எனலாம்.

**மன்னார் கூத்து நாடகங்களுக்கும் சிங்கள நாடகங்களுக்குமான தொடர்பு**

மன்னார் கூத்து நாடகங்களுக்கும் சிங்கள நாடகங்களுக்குமான தொடர்புகுறித்து பேராசியர் சு. வித்தியானந்தன் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"மன்னார் மாவட்டத்தில் வழங்கும் நாடகங்கள் சிங்கள மொழியிலும் காணப்படுகின்றன. அம்மொழியில் வழங்கும் 'நாடகம்' எனும் நாடகமுறை இந்நாடகங் களின் அமைப்பினைப் பின்பற்றியதே. தென்பாங்கு வடபாங்கு என்ற பாகுபாடு அங்கு காணப்படாதபோதும் நாடக அமைப்பும் பா வகைகளும் மன்னார்ப் பகுதி கூத்தக்கள் போன்றவையே. விருத்தம், இன்னிசை கலிப்பா, கவி, கொச்சகம், வெண்பா, தோடையம் போன்ற பாக்களும், பாவினங்களும் சிங்கள நாடகங்களிலும் அதே பெயர்களுடன் வழங்குகின்றன. தமிழிலே உள்ள ஸ்தாக்கியார் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசவுந்தரி நாடகம் முதலியன ஸ்தாக்கியார், ராஜதுங்கட்டுவ, ஞானசவுந்தரி என்ற பெயர்களில் தமிழ் நாடகங்களின் மொழி பெயர்ப்புக்களாக அமைந்துள்ள."[53]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிங்களத்தில் உள்ள மூவிராசாக்கள் நாடகத்தை (ராஜதுங் கட்டுவ) முதன்முதல் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே கேபிரியல் பெர்னாண்டோ என்ற பெரியவர் பாடினார் என்பர். இந் நூலினைத் திருத்தி 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜுவான் பின்ரோ என்பவர் பாடினார். இந்த ஜுவான் பின்ரோ அவர்களே சிங்களத்தில் ஞானசவுந்தரி நாடகத்தையும் பாடினார்.[54]

**கத்தோலிக்க கூத்துக்களின் அமைப்புமுறை**

நாடக அமைப்புப்பற்றிக் கூறியவர்களுள் காலத்தால் முந்தியவர் எனக் கருதப்படுபவர் கிரேக்க அறிஞரான அரிஸ்ட்டோட்டல் ஆவார். நாடகம் முதல், இடை, முடிபு, என முத்திறம் கொண்டது என அவர் கூறுகின்றார்.[55] 'முதல்' என்பது நாடகக் கதையின் ஆரம்பத்தையும், 'இடை' என்பது நாடகக் கதையின் வளர்ச்சி, சிக்கல், உச்சக்கட்டம் என்பனவற்றையும், 'முடிபு' என்பது நாடகக் கதையின் நிறைவையும் குறிக்கின்றன எனலாம்.

கிரேக்க அறிஞரான அரிஸ் டோட்டலின் இக்கருத்து உலக நாடுகள் அனைத்திலுமுள்ள நாடகங்கள் அனைத்திற்கும் பொருந்தும் என்பது பொதுவான கருத்தாகும். ஒஸ்கார் ஜீ புறோக்கெற் (Oscar G. Brockett) என்பவர் அரிஸ்ரோற்றலின் இக்கருத்தினை ஏற்று விளக்கம் அளித்துள்ளார்.[56] அவருடைய விளக்கம் வருமாறு:

**ஆரம்பம் என்பது** கதை நிகழ்வுக்குரிய இடம், சூழல், பாத்திரங்களின் மனநிலை என்பனவற்றை அறிமுகம் செய்தல், முரண்பாடு ஆரம்பித்தல்.

**இடை என்பது** : "முரண்பாடு படிப்படியாக வளர்தல், சிக்கல் உருவாகுதல், சிக்கலை விடுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படல். கதை பல பக்கங்களிலும் வளர்ந்து செல்லுதல், சிக்கலைத் தீர்த்துவைப்பதற்கு ஏதுவாக புதிய வழிவகைகளைக் காணவேண்டும் என்ற எண்ணத்தை பார்வையாளர்களுக்கு ஏற்படுத்துதல், தீர்வுக்குரிய வழியைக் கண்டுபிடித்தல். இதுவே நாடகத்தின் உச்சக் கட்டம்" ஆகும்.

**முடிபு என்பது** : கண்டுபிடித்த புதிய வழிவகையைக்கொண்டு சிக்கலை விடுவித்தல் அல்லது சிக்கலுக்கு விடை காணல் ஆகும்.

அரிஸ்ரோட்டலின் சிந்தனையின் வழிநின்று கால் ஈ. பேயின் நாடக அமைப்பை பின்வருமாறு ஐந்தாக விபரிக்கின்றார். 1. வெளிப்படுத்தல் (Exposition) 2. மேலெழும் செயல் (Rising Action) 3. உச்சம் அல்லது திருப்புமுனை (Climax or Turning Point) 4. விழும் செயல் (Falling Action) 5. முடிவு (Conclusion) மேலே காட்டப்பட்ட நாடக மரபின் அமைப்பு முறைகளும் இலக்கணங்களும் மேலைத்தேசத்தில் எழுந்தவையே. இவை எவ்வாறு இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளின் பல்வேறு பரிணாமங்களைக்கொண்டு விளங்கும் நாடக வடிவங்களோடு ஒத்தோ, ஒப்பிட்டோ பார்க்கமுடியும் என்பது கேள்வியாகிறது.[57]

மேலைத்தேச நாடக அமைப்பு இலக்கணத்திற்கும் அதாவது அடிப்படையில் அரிஸ்ரோற்றலின் நாடக விதிமுறைகளை ஏற்றுக்கொண்ட மேலைநாட்டு நாடக அமைப்பிற்கும், நாட்டிய சாஸ்திரம் கூறும் நாடக அமைப்பு இலக்கணத்திற்கும் அதாவது கீழைத்தேச இலக்கணமாகக் கணிக்கப்படக்கூடிய நாடக மரபிற்கும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.[58]

எனவே "ஒரு நாடகத்திற்கு ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஒரு படிமுறை வளர்ச்சிப்போக்கு பண்டைய நாடகங்களுக்குரிய பொதுவிதி என்பது புலனாகிறது.[59] இந்த அடிப்படையில் ஈழத்துக் கத்தோலிக்க கூத்து நாடகங்களையும் நாடகப் பொதுவிதிக்குள் புகுத்தி பொருத்தி ஒப்புநோக்கிப் பார்ப்பது அவசியமாகும்.

மன்னார் மாதோட்ட நாடகங்களை ஆய்வுசெய்த அருட்திரு. செ. அன்புராசா அடிகளார் பொதுவான நாடக அமைப்புக்குள் எவ்வாறு கத்தோலிக்க கூத்து நாடகங்கள் பொருந்தி வருகின்றன என்பதை விளக்கியுள்ளார். உதாரணத் திற்கு சந்தொம்மையார் வாசாப்பு, என்றிக்கு எம்பரதோர் நாடகம், ஞானசவுந்தரி நாடகம், சந்திரகாசன் நாடகம் ஆகியவற்றை எடுத்து ஆய்வுக்குட்படுத்தியுள்ளார்.[60]

**கத்தோலிக்க நாடகங்களின் பயன்பாடு**

கத்தோலிக்க நாடகங்களின் பயன்பாடு குறித்து நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் எவ். ஜே. ஸ்ரனிஸ்லோஸ் என்ற அறிஞரின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி, “ஆயிரம் பிரசங்கங்களையும் ஞான ஒடுக்கங்களையும்விட இயேசுநாதர் பற்றிய ஒரு நாடகம் மிகுந்த பக்தி நிலையைக் கொண்டுவரக்கூடியதாகும்.”[61] எனக் கூறியுள்ளார்.

கத்தோலிக்க நாடகங்கள் மக்களுக்கு மறையறிவை ஊட்டும் ஊடகங்களாக விளங்கின. பெரும்பாலான மக்கள் கல்வியறிவு குறைந்தவர்களாக இருந்த நிலையில் கூத்து நாடகங்கள் மிகச்சிறப்பான மறையறிவு ஊடகமாக விளங்கின. இதனை பேராசிரியர் சு. வித்தியானந்தன் இவ்வாறு குறிப்பிடுகின்றனார்:

“மன்னார் கூத்துக்கள் கத்தோலிக்க மதம் சார்ந்த கதைக்கருத்துக்களைக் கொண்டிருப்பது இதன் இன்னொரு தனித்துவமாகும். .... மதம் பரப்ப இங்கு வந்த கிறிஸ்தவர்கள் மக்களோடு தொடர்புடைய கூத்தையே தமது பிரதான ஊடகமாக அன்று கொண்டனர். இம்முயற்சி மன்னாரில் செல்வாக்குப் பெற்றதனாலேயே மன்னார்க் கூத்துமரபில் கிறிஸ்தவம் சார்ந்த கதைகள் பிரதான இடம்பெற்றன.”[62]

கிறிஸ்தவம் சார்ந்த கதைகள் என்பது இங்கே அன்னை மரியா மற்றும் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற்ற நெகிழ்ச்சியான சம்பவங்கள், புதுமைகள் போன்றவற்றைக் குறிக்கின்றன. நாடகங்கள் வழியாக புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை மக்கள் அறிந்துகொண்டனர். இப்புனிதர்களிடம் விளங்கிய மேலான நற்பண்புகளை, புண்ணியங்களை தமது வாழ்க்கைப் பாடமாக மக்கள் பெற்றுக்கொண்டனர். குறிப்பாக புனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் இயேசுவுக்காக துன்பங்களை, பாடுகளை அனுபவித்ததைப் போல தாமும் துன்பங்களை, பாடுகளை ஏற்றுக்கொண்டு வாழவேண்டும் என்ற படிப்பினையை மக்கள் அனேகமான நாடகங்களில் இருந்து பெற்றுக்கொண்டனர்.

இந்நாடகங்கள் கல்வி அறிவு குறைந்த மக்களுக்கு இலகுவாகக் கற்பிக்கும் முறையாக விளங்கியது. சாஸ்திர அல்லது இலக்கண முறையில் அமைந்த கலைகளை கல்வியறிவுள்ள சிறு தொகையினரே நன்கு உணர்ந்து அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நாட்டார் கலைகளில் சாதாரண மக்கள் சுலபமாகப் பங்கெடுக்கக் கூடியதாகவும், பயன்படுத்தக்கூடியதாகவும், எளிதில் அனுபவிக்கக்கூடியதாகவும் இருப்பதற்கு அதிக பயிற்சியும் இலக்கண அறிவும் வேண்டியதில்லை.[63]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கருத்தை அருட்திரு. விக்ரர் பிலேந்திரன் அடிகளார் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"நாட்டார் வழக்கியலில் பாடலும், பாடலின் தன்மைக்கு ஏற்ப ஆடலும் பல நாட்டுப்புற மக்களையும் ஏனையோரையும் கவர்கின்ற முக்கிய கூறுகளாகும். ஆடல் அல்லது அரங்கியல் அல்லது புலக்காட்சி வழியிலான கற்பித்தல் முறை மக்களைக் கவருகின்ற முறை என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டியது. இக்கற்பித்தல்முறை நாட்டுப்புற மக்களை அதிகம் கவரும் முறையாக விளங்கிற்று."[64]

கத்தோலிக்க நாடகங்கள் மக்களின் இறைநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பக்தி நிகழ்வாக நிகழ்த்தப் படுகின்றது. ஒரு கிராமத்தில் ஒரு நாடகம் மேடையேற்றப்படும்போது இயல்பாகவே பல வேண்டுதல்கள் இறைவனை நோக்கி அங்கே முன்னிறுத்தப்படுகின்றன. நல்ல மழை பெய்ய, நாடு செழிக்க, குழந்தைச் செல்வம் பெருக, நோய்நொடி நீங்க, சுகவாழ்வு நிலைக்க, ஒற்றுமை ஓங்க என இந்த வேண்டுதல்கள் அமையும். ஒருவகையில் இந்த நாடகங்கள் ஒரு நேர்த்திச் செயற்பாடாகவே கருதப் படுகின்றது.

கத்தோலிக்க நாடகங்கள் சமூக ஒற்றுமையை உருவாக்குவதில் முக்கிய பாங்காற்றி வருகின்றன. நாடகம் ஆடுதல் ஒரு கூட்டு முயற்சி ஆகும். சமூகத்தில் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை உருவாக்கி, வளர்த்து சமூகத்தைப் பலப்படுத்துவதில் நாடகங்கள் சிறப்பாகப் பங்களிக்கின்றன.

"…. மக்கள் நிலையில் கத்தோலிக்க நிலையைப் பேணவும், வளர்க்கவும், சமூக ஒருமைப்பாட்டை வளர்க்கவும் நாடகங்கள் பெரிதும் பயன்பட்டன"[65] என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி. வெவ்வேறு கிராமங்களைச் சேர்ந்த ஒரே சாதியைச் சேர்ந்த மக்கள் ஒன்றுசேர்ந்து கூத்து நாடகங்களை மேடையேற்றுகின்ற நிலையை மன்னாரில் காணலாம். உதாரணமாக 'சந்திரகாசன்' என்ற மூன்று இரவுக் கூத்து நாடகம் 26 கிராமங்களைச் சேர்ந்த 'கரையார்' என்ற சாதிச் சமூகத்தினரால் மேடையேற்றப்படுகின்றது. அதேபோன்று முருங்கனில் 'சந்தியோகுமை யோர் நாடகம்' மூன்று ஊர்களைச் சேர்ந்த 'வண்ணார்' என்ற சாதிச் சமூகத்தினராலும், 'என்றிக்கு எம்பரதோர்' நாடகம் ஆறு ஊர்களைச் சேர்ந்த 'வெள்ளாளர்' என்ற சாதிச் சமூகத்தினராலும் மேடையேற்றப் படுகின்றன. இதைப்போல வலையர், கொல்லர், கடையர், மறவர் போன்ற சாதிச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் மன்னார் மாதோட்டத்தில் சமூக அடிப்படையில் கிராமங்களாகச் சேர்ந்து நாடகங்களை அரங்கேற்றுகின்றார்கள். இது சமூக உணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துகின்றது.

கத்தோலிக்க நாடகங்கள் பொழுதுபோக்கு ஊடகமாகவும் விளங்கிவந்துள்ளன. அதாவது இன்று நாம் காணும் பல்வேறுபட்ட பொழுதுபோக்குச் சாதனங்கள் அன்று இருக்கவில்லை. எனவே இரண்டு இரவோ, மூன்று இரவோ இந்நாடகங்களை மேடையேற்றும்போது மக்கள் இரவுமுழுவதும் கண்விழித்து இருந்து இந்நாடகங்களைப் பார்த்து மகிழ்ந்தனர். ஒரு கிராமத்தில் நாடகம் அரங்கேற்றப்பட்டால் மக்கள் அயல் கிராமங்களில் இருந்தும் வந்து பார்த்தனர். அதுமட்டுமன்றி இந்நாடகங்களை பயிற்சிசெய்யும்போதும் ஒத்திகை பார்க்கும்போதும் மாலை வேளைகளில் ஊர் மக்கள் திரளாக வந்திருந்து பார்த்து மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தமது ஆற்றல்களை, கலைத்திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு களமாக இந்த நாடக ஆற்றுகைகள் விளங்கின. ஆடல், பாடல், இசைக் கருவிகளை மீட்டல், கைவினைத்திறன், எழுதுதல், அலங்கரித்தல் போன்ற ஆற்றல்களை மக்கள் வெளிக்காட்டுவதற்கு இங்கு வாய்ப்பு உருவாக்கப்படுகின்றது.

## நிறைவுரை

ஈழத்தமிழருக்கு என ஒரு நாடக வடிவம் இருக்கவேண்டுமெனில் அது நாட்டுக்கூத்து மரபுதான் என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமிழர்களின் தேசியக் கலைவடிவத்தின் தேடலில் கண்டுணர்ந்தார்.[66]

ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் கிறிஸ்தவ மறையைப் பரப்புவதற்காக பல யுக்திகளைக் கையாண்டனர். அவற்றுள் ஒன்று தமிழ் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த நாட்டுக்கூத்து கலைவடிவத்தின் ஊடாக சமயத் தத்துவங்களை மக்கள் மனதில் பதியவைப்பதாகும்.

"கரையோரப் பிரதேசங்களிலே வாழ்ந்த தமிழர்களிடையே பேணப்பட்டுவந்த கூத்து மரபு கத்தோலிக்க மிஷனரிமாரின் கவனத்தை ஈர்த்தது. மக்கள் இரவிரவாக ஆவலுடனும் மகிழ்வுடனும் கண்டுகளிக்கும் இக்கலையூடாக மக்களுக்கு நற்செய்தியைக் கூறுவது இலகுவாயிருக்குமென அவர்கள் கண்டுகொண்டனர்"[67] என பேராசிரியர் சண்முகதாஸ் குறிப்பிடுகின்றார்.

"நாட்டுக்கூத்துக்கள் வெறும் பொழுது போக்கிற்கன்றி கத்தோலிக்க சமயப் போதனைகளை படித்தவர்களுக்கும், படியாதவர்களுக்கும் கட்புலன், செவிப்புலன் மூலம் ஊட்டும் ஞான உபதேசமாயும் கணிக்கப்படக்கூடிய சமயப் படைப்புகளாகவும் விளங்குகின்றன

## அடிக்குறிப்புகள்

**(Endnotes)**

[2] John Allen., **A History of the Theatre in Europe,** London, 1983, p.76 - 77

[3] மரியசேவியர், நீ., **மறைபொருள் நாடகங்கள் - தொகுதி 1,** திருமறைக்கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், 2019, பக். XII, XIII

[4] கொயிம்பிரா (Coimbra), லிஸ்பன் (Lisbon). பிறகா (Braga) இவோறா (Evora) என்பவை போர்த்துக்கல் நாட்டின் நகரங்கள் ஆகும். இவை வரலாறு மற்றும் பண்பாட்டுச் சிறப்புக்களைக் கொண்ட இடங்களாகும்.

[5] Goonatileka, M.H., **Nadagama,** Sri Satguru Publications, Delhi, 1984, p.26

[6] ஸ்ரீகக்னோ பிச்சியோ (Stegagno Picchio) (1920 – 2008) என்பவர் ஓர் இத்தாலிய வரலாற்று ஆய்வாளர் ஆவார். இவர் இத்தாலியில் உள்ள ஓர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவர்.

[7] Picchio, S., **History of Portuguse Theatre,** (Translation), Lispen, 1964,p.160

[8] Picchio, S.,160 [9] Goonatilleka, M.H., p.27

[10] Houpert, J., A **South Indian Mission,** Trichinopoly, 1937, p.315

[11] இடைக்காட்டூர் என்பது தமிழ்நாட்டில் உள்ள ஓர் பழமையான ஊர். இன்றைய சிவகங்கை மாவட்டத்தில் இது உள்ளது.

[12] Houpert, J., p.316

[13] சுந்தரம்பிள்ளை, காரை செ., **வட இலங்கை நாட்டார் அரங்கு,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு – 6, (மீள் அச்சு) 2015, பக்.138



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[14] Goonatilleka, M.H., p.28

[15] மேலது., [16] Perera, Rev. S.G., **A History of Ceylon for Schools,** Vol. The Portuguese Period and the Dutch Period, 6th ed., Lake House, Colombo, 1951, p. 138

[17] Ruberu Ranjit, T., **Eduction in Colonial Ceylon,** The Kandy Printed Ltd., Kandy, 1962, p.20

[18] Perera Rev. S.G, **A History of Ceylon for Schools,** p. 138

[19] Goonatilleka, M.H., p.31

[20] Houpert, J., p.316

[21] As quoted by Goonatilleka from Ceylon Antiquary 11 (11) 80.

[22] தகவல் : வண. பாவிலுப்பிள்ளை. காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களால் வட இலங்கை நாட்டார் அரங்கு என்ற நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளபடி. காண்க : சுந்தரம்பிள்ளை, காரை செ., பக்.142

[23] தகவல் : ஆயர் தியோகுப்பிள்ளை, யாழ்ப்பாணம். சுந்தரம்பிள்ளை அவர்களால் வட இலங்கை நாட்டார் அரங்கு என்ற நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளபடி. காண்க : சுந்தரம்பிள்ளை, காரை செ., பக்.142

[24] Goonatilleka, M.H., p.35

[25] குமாரசுவாமி, சு., பதிப்புரை, கதிரைமலைப் பள்ளு, சென்னை, 1935, பக்.11

[26] சுந்தரம்பிள்ளை, காரை செ., பக்.153

[27] வித்தியானந்தன், சு., **தமிழியற் சிந்தனைகள்,** யாழ்ப்பாணம், 1979, பக்.34, 35

[28] கந்தையா, வீ, சீ., **மட்டக்களப்புத் தமிழகம்,** ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், 1964, பக்.

[29] சுந்தரம்பிள்ளை, காரை செ., பக்.153

[30] வித்தியானந்தன், சு., **தமிழியற் சிந்தனைகள்,** யாழ்ப்பாணம், 1979, பக்.35, 36 மேலும் காண்க : கந்தையா, வீ, சீ., பக். 60, 61

[31] மௌனகுரு, சி., **மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்,** கலாநிதிப்பட்டத்திற்குரிய ஆய்வேடு, (தட்டச்சுப் பிரதி), யாழ் பல்கலைக்கழகம், 1983, பக். 280

[32] மௌனகுரு, சி., **மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்,** பக். 611

[33] சுந்தரம்பிள்ளை, காரை செ., பக்.183

[34] மேலது.,

[35] சுந்தரம்பிள்ளை, காரை செ., **வட இலங்கை நாட்டார் அரங்கு,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு – 6, 2015 (மீள் அச்சு), பக்.172

[36] வித்தியானந்தன், சு., **தமிழியற் சிந்தனை,** முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1979, பக்.38

[37] வித்தியானந்தன், சு., **தமிழியற் சிந்தனை,** பக்.38,39

[38] பெஞ்சமின் செல்வம்., **மன்னார் மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம்,** பக்.III, IV

[39] மரிசால் மிரால் (குப்பையப் புலவர்), **சந்தொம்மையார் வாசாப்பு,** பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம், 2021, பக்.1

[40] பெஞ்சமின் செல்வம்., **மன்னார் மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம்,** பக். 09

[41] சூசைப்பிள்ளை மரிசாற்பிள்ளை (ஆனுப்பிள்ளை), புலவர்., **ஞானசவுந்தரி நாடகம்,** பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம், 2021, பக்.1

[42] சுந்தரம்பிள்ளை, காரை செ., **வட இலங்கை நாட்டார் அரங்கு,** பக்.172

[43] பெஞ்சமின் செல்வம்., **மன்னார் மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம்,** பக்.14

[44] மரியாம்பிள்ளைப் புலவர், மரியான் சந்தான் புலவர்., புனித சந்தியோகுமையோர் நாடகம், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம், 2016, பக்.1

[45] சமியேல் பிரகாசம் புலவர், **இம்மானுவேல் நாடகம்,** பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம், 2016, பக்.1

[46] மரியாம்பிள்ளைப் புலவர், மரியான் சந்தான் புலவர்., **புனித சந்தியோகுமையோர் நாடகம்,** பக். 4 - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[47] வித்தியானந்தன், சு., (பதிப்.), தோற்றுவாய், **எண்றிக்கு எம்பரதோர் நாடகம்,** மன்னார் மாவட்ட உள்ளுராட்சி மன்றங்களின் வெளியீடு, யாழ்ப்பாணம், 1964, பக். VIII

[48] பெஞ்சமின் செல்வம், மா., மாதோட்ட நாடக வரலாறு, **தினகரன் நாடக மலர்,** 1969, பக். 67

[49] சிவத்தம்பி, கா., ஈழத்துத் தமிழ் நாடகங்கள் - வகைகளும் வளர்ச்சியும், **ஈழத்தில் தமிழ் இலக்கியம்,** தமிழ் புத்தகாலையம், சென்னை, 1978, பக்.142

[50] சுந்தரம்பிள்ளை, காரை செ., **வட இலங்கை நாட்டார் அரங்கு,**பக்.179

[51] மௌனகுரு, சி., **பழையதும் புதியதும்,** விபுலம் வெளியீடு – 01, மட்டக்களப்பு, 1992, பக். 57

[52] தகவல் : செபஸ்ரியான் குருஸ். Quoted as : சுந்தரம்பிள்ளை, காரை செ., **வட இலங்கை நாட்டார் அரங்கு,**பக்.180

[53] வித்தியானந்தன், சு., தோற்றுவாய், **ஞானசவுந்தரி நாடகம்,** பக். V

[54] மேலது.,[55] மணவாளன், அ., **அரிஸ்டாட்டலின் கவிதையியல்** (மொழிபெயர்ப்பு), தமிழ் புத்தகாலயம், சென்னை, 1976, ப.45

[56] Brockett Oscar, G., **The Theatre an Introduction,** New York, 1964, p.24 - 29

[57] மௌனகுரு, சி., **மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்,** ப.284

[58] மௌனகுரு, ப.285

[59] மேலது,. மேலும் காண்க : காரை சுந்தரம்பிள்ளை, அணிந்துரை, **வீரத்தளபதி நாட்டுக்கூத்து,** திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம், 2000, பக்.vii - viii

[60] அன்புராசா, செபமாலை, அமதி., **மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்,** அ.ம.த. வெளியீடு, யாழ்ப்பாணம், 2007, பக். 105 - 117

[61] "One passion show makes more devotional impact than a thousand sermons and retreats" Stanislaus, F.J., G
**nana Prakasar and the Missionary ad Paganos Vire Oblate Life,** Ottawa, 1980, p.263 இவ்வார்த்தைகள் பின்வரும் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது: அந்தனிஜான் அழகரசன், கலாநிதி, சுவாமி ஞானப்பிரகாசரின் சிரிய சமயப்பணி, ஞானப்பிரகாசர் சுவாமி **ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்,** நினைவு விழா அமைப்புக்குழு, யாழ்ப்பாணம், 1981, ப.25

[62] வித்தியானந்தன், சு., **வித்தியானந்தம்,** சாயிபா, அட்வர்ரைய்சிங் அசோசியேட்ஸ், யாழ்ப்பாணம், 1984, பக். 06

[63] வித்தியானந்தன், சு., தொடக்கவுரை, **இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், கரத்தரங்கக் கட்டுரைகள்,** தமிழ்த்துறை வெளியீடு, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1980, பக். XII

[64] பிலேந்திரன், ஞானமுத்து., **கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள்,** 2001, பக்.48

[65] சிவத்தம்பி, கார்த்திகேசு., "ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்,"**சிந்தனை,** தொகுதி II, இதழ் I, யாழ் பல்கலைக்கழகம், கலைப்பீடம், யாழ்ப்பாணம், 1984, பக். 41

[66] ராஜ்குமார், யோ, யோ., யாழ்ப்பாண கத்தோலிக்க நாட்டுக்கூத்து மரபு, ஆற்றுகை, ஏப்ரல் - செப்ரம்பர், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம், 1997, ப.29

[67] சண்முகதாஸ், பேராசிரியர், அ., அணிந்துரை, **மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் - ஓர் ஆய்வு,** அமதி வெளியீடு, யாழ்ப்பாணம், 2007, ப.viii.

[68] மரிய சேவியர், நீ., "சைவப் புலவரின் கிறிஸ்தவக் கூத்து", **தமிழ் கலைவிழா சிறப்பு மலர்,** இந்து சமய கலாசார திணைக்களம், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, கொழும்பு, 1994,ப.35.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் சமகால இலக்கியப் படைப்புக்களும் படைப்பாளர்களும்



**சந்திரலிக்கம் றமேஸ் (J.P)**
B.A, NDT, PBDE, PGDEM, M.A(Hons), M.ED, SITas
ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்வி அலுவலகம், மன்னார்

ஈழமணித் திருநாட்டின் வட மாநிலமானது தனக்கெனத் தனியுரிமை பூண்டு கலை, பண்பாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை கலைச் செழிப்புடன் நிமிர்ந்து வீறு நடை போட்டுக்கொண்டிருக்கின்றது. அந்த வகையில் மன்னாரின் சமகால இலக்கியப்படைப்புகளும், படைப்பாளர் களும் என்ற தலைப்பை நோக்கும் முன்னர் மன்னாரின் கலை, இலக்கிய மரபுகளையும் நோக்கவேண்டியது இன்றியமையாத காலத்தின் தேவையாகவுள்ளது. அந்தவகையில் மன்னாரின் ஆதிக்குடிகள் ஈழத்தின் கோத்திர இனத்தவரான ஆதிச் சைவ நாகர்களே ஆவார்கள். இவர்கள் மாதோட்டத்தில் வாழ்ந்தமைக்கு இன்று நாகர்தாழ்வு (நாகதாழ்வு) சிறுநாகர்குளம் (சிறுநாவற்குளம்), பெருநாகர்குளம் (பெருநாவற்குளம்) என்னும் இடங்கள் காணப்படுகின்றன. அத்தோடு திருக் கேதீச்சரப்பெருமானை நாகர்கள் வழிபட்டதனால் அவரை "நாகநாதர்" எனவும் அழைக்கப்பட்டதினை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இத்தகைய நாகர்கள் கலைகளில் அதீத நாட்டம் மிக்கவர்களாகக் காணப்பட்டதனாலேயே அப்புராதன காலத்திலிருந்து இன்றுவரை கூத்துக்களும், நாடகங்களும், பாட்டுக்களும், சிறப்புற்ற புலவர்கள், கலைஞர்கள் எனப்பெரும் சமூக அமைப்பொன்று இங்கு இருந்து வந்துள்ளது.

குறிப்பாக மாதோட்டத்தில் பல புலவர்களும், கலைஞர்களும் தோன்றி வாழ்ந்து கூத்துக்களையும், நாடகங் களையும் பல கலைகளையும் நிகழ்த்தி வந்துள்ளமையினை ஈழத்து இலக்கிய வரலாற்றின் மூலம் அறிய முடிகின்றது. குறிப்பாக 1959களில் சைமன் காசிச்செட்டி ஆங்கிலத்தில் எழுதிய "த தமிழ் புரக்" (The Tamil Plutarch) 1886 இல் ஆர்னால்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய "பாவலர் சரித்திர தீபகம்", 1916 இல் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் எழுதிய "தமிழ்புலவர் சரித்திரம்", கல்லடி வேலுப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வைபவகௌமுகி, வித்துவ சிரோன்மணி சி. கணேசயர் எழுதிய "ஈழநாட்டு தமிழ்புலவர் சரித்திரம்" என்பன போன்றன ஈழத்தின் பல்வேறு பாகங்களில் தமிழ் புலர்வகளது வரலாற்றைக் கூறுவனவாக காணப்பட்டது.

எனினும் குறிப்பாக ஈழத்து இலக்கிய வரலாறானது ஈழத்துப் பூதத்தேவனார் மூலமாகவே ஆரம்ப மாகின்றமை நூற்குறிப்பில் இருந்து அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மன்னாரைச் சேர்ந்த துவரங்கேணி என்னும் இடத்தைச் சேர்ந்தவர் என்றும், அக்காலத்தே மாதோட்டத் துறைமுகமூடாக இந்தியா சென்று வந்தார் என்றும் அங்கு சங்க காலத்தே தமிழ் சங்கத்தில் இணைந்து நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, முதலான இலங்கியங்களில் இவரது பாடல்கள் நான்கு வெவ்வேறு பெயர்களில் காணப்பட்டுள்ளதுடன் "ஈழம்" என்ற அடைமொழியால் இவர் ஈழத்தவர் என அழைக்கப்பட்டதாகவும் இலக்கிய ஆதாரங்கள் கூறுகின்றன.

"சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்துப் புலவராக கருதுவர்... பக் 5 ஈழத்து தமிழ் இலக்கியச் செல்நெறி பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

மேலும் சங்காலப் புலவர்களில் ஒருவரான முறைஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் மன்னாரைச் சேர்ந்த முசலி என்னும் இடத்தை சேர்ந்தவர் எனவும், இவரும் அக்காலத்தில் மாதோட்ட துறைமுகமூடாக இந்தியா சென்றுவந்தார் என்னும் குறிப்பும் காணப்படுகின்றது.

"சங்ககாலப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவரும் ஈழநாட்டைச் சேரந்தவர் என்றும் இவர் மன்னார்ப் பகுதியைச் சேர்ந்த முசலி (முரஞ்சி) என்னும் பகுதியல் இருந்து தமிழ்நாடு சென்று வாழ்ந்தவர் என ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஊகிக்கின்றார்" பக் 6 ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி - பேராசியர் எஸ். சிவலிங்கராஜா

இவ்வாறு ஈழத்தில் வரலாற்றுக்கால முற்பகுதியில் இருந்து பல புலவர்கள் மன்னாரில் வாழ்ந்து பல கலைகளை வளர்த்துள்ளமையினை அறிய முடிகின்றது. இவற்றின் தொடர்ச்சியோ என்னவோ ஈழத்து இலக்கிய வரலாற்றில் மன்னார் மாதோட்டத்து லோறன்ஸ்சுப் புலவர் மிகவும் முதன்மையானவரென "மன்னார் மாதோட்டத்து கத்தோலிக்க கூத்து அரங்க மரபின் தந்தையாக அமரர் லோறன்ஸ்புலவர் கணிக்கப்படுகின்றார் பக் xxiii - மன்னார் மாதோட்டப் புலவர்கள் - கலைஞர்கள்.

குறிப்பிடப்படுவதினை நோக்க முடிகின்றது. குறிப்பாக "மன்னார் மாதோட்டத் தமிழ்ப்புலவர் சரித்திரம்" என்ற நூலை நானாட்டானைச் சேர்ந்த புலவர் ம. பெஞ்சமின் செல்வம் அவர்கள் 1978இல் எழுதி வெளியிட்டமையும், பின்னர் தற்போதைய மன்னார் குருமுதல்வர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளாரின் மன்னார் மாதோட்டப் புலவர்கள் - கலைஞர்கள் ஐம்பது ஆளுமைகள் என்னும் நூலில் இருந்து அறிய முடிகின்றது. இவ்வாறு ஒரு மிகப்பெரிய கலைப்பாரம்பரியத்தின் மற்றுமோர் வடிவமாகிய சிறுகதை, கவிதை, நாவல், நாடகங்கள் என்னும் ஆக்க இலக்கிய முயற்சிகளும் ஐரோப்பியரின் வருகையுடன் ஆரம்பிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் பல மாற்றங்களையும் உள்ளடக்கங்களையும் கொண்டு இன்றுவரை காணப்படுவதினை நோக்க முடிகின்றது.

"மேற்குறிப்பிட்ட இலக்கியங்களானவை குறிப்பாக 1980களின் பின் சாதி சமயம் என்ற வரன்முறைக்குள்ளும் வாழும் போதும் தம்முடைய காலப்பகுதியினுள் எதனால் பாதிக்கப்படுகின்றார்களோ அந்த ஈர்ப்புணர்வை வெளிப்பாடாகவும் காலத்துக்குக் காலம் மக்களது வாழ்வு தாழ்வுகளையும் பல்வேறு ஆதிக்கக் கூறுகளினால் கட்டுண்டு கிடப்பதினையும், இதில் குறிப்பாக இனத்துவ ஆதிக்க நிலை, பின்வர்க்க முரண்பாடுகள், மத மேலாதிக்கம், பெண்ணிலைவாதம், பிரதேச வேறுபாடுகள், மனிதப் பிரச்சினைகள், வறுமை, சீதனம் எனப் பலதரப்பட்டவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தின் அடி நிலையில் இருந்து வெளிக்கொணரும் கருப்பொருளாகக் கொண்டு இலக்கியங்கள் வெளி வருகின்றன” பக் 86 மன்னல் - பிரதேச இலக்கிய விழா மலர் 2014

என்பதில் நான் குறிப்பிட்டத்தினைப் போன்று மன்னார் மாவட்டத்தில் சமகாலத்தில் மேற்குறிப்பிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டும், இன்னுமாக போருக்குப் பின்னரான இலக்கியங்கள், வளவெளிப்பாடுகளும் பாதிப்புக்களும் எனப் பலதரப்பட்ட பொருள்நிலையில் சமகால எழுத்தாளர்களினால் இலக்கியங்கள் வெளியிடப்படுவதினை நோக்க முடிகின்றது. அந்தவகையில் மன்னாரின் சமகாலப் படைப்புக்களில் முதலில் சிறுகதையினை நோக்கும் போது நவீன இலக்கிய வடிவமான சிறுகதையானது தமிழ்மொழியானது ஏற்றுக் கொண்ட இன்னொரு புதிய இலக்கிய வடிவமாகும். அதாவது சிறுகதை ஐரோப்பாவில் தோற்றம் பெற்று வளர்ந்த அதே காலப்பகுதியில் தமிழ் மொழியிலும் கால்பதிக்கத் தொடங்கியது. குறிப்பாக 1930களில் இவற்றின் பரம்பல் தமிழில் ஏற்படத்தொடங்கியது. புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபால், மௌனி போன்றோர் தமிழ் நாட்டில் மணிக்கொடி எழுத்தாளர்களாக சிறந்து விளங்கினர். இலங்கையிலும் இலங்கையர்க் கோன், சி. வைத்திலிங்கம், க. தி. சம்பந்தன் போன்றோர் காத்திரமான இலக்கியச் அவை நிரம்பிய, மண்வாசனை செறிந்த கதைகளை எழுதினர்.

இதன் பின்னணியிலேயே மன்னாரிலும் ஆரம்ப காலங்களில் குறிப்பாக 1960 காலப்பகுதிகளில் கலைவாதி கலீல், கவிஞர் நாவண்ணன் ஆகியோரும், அங்காங்கே ஒரு சிலரும் சிறுகதைகளை எழுதியுள்ளனர். சமகாலத்தில் மன்னார் பிரதேசத்தில் சிறுகதை எழுதியவர்களுள் திரு. எஸ். டேவிட் (ஓய்வுநிலை கல்வி அதிகாரி) குறிப்பிடத்தக்கவர். இவர் அக்காலத்தில் எழுதிய “மனமாற்றம், ஒரு அடிமை உறங்குகிறான், ஒரு கிராமத்துச் சிறுவன் பரீட்சைக்குப் போகிறார், பாலுக்குப் பாலகன் ஏங்கி அழுதிட, சுமந்து சுமந்து சோர்ந்தவனுக்கு, நடுத்தெருவுக்கு, ஒரு ஆத்மா விருந்துக்கு அழைக்கப்படுகிறது, வறுமையின் நிறம் பச்சை, கேவலம், கழுதைகள் எனும் சிறுகதைகள் மண்வாசனை கமழ்பவையாகவும் பத்திரிகைகளில் வெளிவந்தன.

அடுத்து மன்னார் தமிழ் சங்க ஸ்தாபகரும், முதல் தலைவரும் தற்போதைய மன்னார் குருமுதல்வருமான அருட்தந்தை. தமிழ்நேசன் அடிகளாரின் சிறுகதை முயற்சி மிகவும் போற்றுதற்குரியது இவரால் 15 இற்கும் அதிகமான சிறுகதைகள் பாதுகாவலன் என்ற பத்திரிகையில் எழுதியுள்ளார். குறிப்பாக “எடுத்ததை எடுத்த இடத்தில், பெண்மையின் விலை என்ன?, மௌனத்தில் பிறந்த தத்துவம், உயிர்க்க மறுத்த உணர்வுகள், முடிவல்ல ஆரம்பம், மாதிரி போன்ற சில சிறுகதைகளை குறிப்பிடலாம்.

அடுத்து எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த எஸ். எச். நி. மத் அவர்களின் “எரிகொள்ளி” என்ற சிறுகதைத் தொகுப்பை குறிப்பிடலாம், அடுத்து மன்னாரை எழுத்துத் துறையால் அறியச் செய்த பல்துறை கலைஞர், தேசியக் கலைஞர், பேசாலையூர் எஸ். ஏ. உதயன் அவர்களின் குண்டுசேர், செருப்பு, வாவலும், தாவலும் என்னும் 70க்கு மேற்பட்ட சிறுகதையினை எஸ். ஏ. உதயன், சினேகா எசேயு என்னும் பெயர்களில் இவருடைய கதைகள் வெளிவந்துள்ளன.

திரு. அந்தோனிப்பிள்ளை நிசாந்தன் (ஆசிரியர்) அவர்களின் “பூபாளராகங்கள்” என்னும் சிறுகதை உலகலாவிய சிறுகதையினுள் இடம்பிடித்துக் கொண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2005). கவிஞர் நாவண்ணனின் சிரேஷ்ட புதல்வி நெலோமி அன்ரனி குரூஸ் அவர்களின் "தியாக பொம்மைகள்" என்ற சிறுகதை தொகுப்பும், துறையூரான் சிவானந்தனின் "குறையொன்றுமில்லை" என்னும் தொகுப்பு சிறுகதையானது கிராமிய மண்வாசனையுடன் 2014இல் வெளிவந்து வாசகர் மனதில் இடம்பிடித்துக் கொண்டது.

வைரமுத்து கஜேந்திரன் அவர்களின் "துடிக்கும் விழிகள், மறுபிறப்பு" முதலான சிறுகதைகள் தொகுப்பாக வாகை என்னும் சஞ்சிகையில் வெளிவந்துள்ளன.

எஸ். றமேஸ் அவர்களின் "அழியாத தடங்களாய்" என்ற சிறுகதைத் தொகுப்பானது வான்மதி, வெடியோடு ஒரு விளையாட்டு, அழியாத தடங்களாய், ஏழைப்பூக்கள், ஊனம், புலராத பொழுதுகள், நிறமாறிய பூக்கள் என்னும் சிறுகதைகளை உள்ளடக்கியவைகளாக வெளியிடப்பட்டது. ஆனந்தன் லியோன் அவர்களும் அண்மைக்காலமாக சிறுகதையினை முகநூலில் எழுதி வருவதினை அறிய முடிகின்றது.

மேலும் போருக்குப் பின்னரான இலக்கியத்தைப் படைத்ததில் எழுத்தாளர் வெற்றிச் செல்விக்கு தனியான இடம்முண்டு.

"ஈழத்து சிறுகதை உலகில் வாழ்தலை எழுதுதல் கடினமானது, அதிலும் போராட்ட வாழ்க்கை வாழ்தலை எழுதல் முற்றிலும் கடினம் அவற்றைத் தன் எண்ணங்களில் சுமந்து இதய வங்கியில் சேகரமாக்கி எதுவும் மறக்காமல், மறைக்காமல் தமிழ்தேசிய மை கலந்து, துணிச்சலென்னும் தூரிகை கொண்டு, சமூகத்தில் கிழிக்கப்பட்ட சிதையுண்ட, வஞ்சிக்கப்பட்ட வாழ்வியல் கோலங்களை அதன் காலங்களை, அம்மகளின் பாடுகளை சிறுகதையாக்கித் தந்துள்ளார்" இவரது சிறுகதைகள் குறிப்பாக "காணாமல் போனவனின் மனைவி, முடியாத ஏக்கங்கள், குங்குமக்கேள்வி, மனிதம் மரணிக்காது, சித்திரவதை, ஆறாத காயம், பெண் வாழ்வு, புதைகுழி மனிதர்கள், சிறை என முப்பது சிறுகதைகளைக் கொண்டு" வெற்றிச் செல்வியின் சிறுகதைகள் என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் மன்னார் மாவட்டத்திலே பத்திரிகைகள், பாடசாலை மலர்கள், ஏனைய சிறப்பு மலர்களிலும் சிறுகதைகள் மன்னாரின் பல்வேறு நிலமைகளை கருப்பொருளாகக் கொண்டு வெளிவருவதினை காணமுடிகின்றது.

மன்னார் மாவட்ட கலை இலக்கிய வளர்ச்சியில் மிகவும் கோடிட்டுக் கூறக் கூடியது ஆக்க இலக்கியங்களில் ஒன்றான கவிதை ஆகும். இங்கு மரபுவழிவந்த கவிதைகளோடு சில புதிய வரவுகளும் தமிழுக்குக் கிடைத்துள்ளன. குறிப்பாக குழந்தைக் கவிதைகள், கவிதை நாடகங்கள், புதுக்கவிதைகள், துளிப் பாக்கள் போன்றவை இக்காலத்திற் கேயுரியவையாகக் காணலாம்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம் பொதுமக்கள் விரும்பும் மெட்டு இவற்றினுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோர் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோராகிறார். ஓராண்டு படித்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக் கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும்" எனத் தம் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் கவிதை எவ்வாறு அமைதல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கண இலகியங்களை நன்கு பயின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி பெற்றவரே கவிதை எழுத முடியும் என்னும் நிலை இருந்து வந்தது.

*"உள்ளத்து உள்ளது கவிதை - இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை*

எனத் தேசிகவிநாயகம்பிள்ளை கூறுவது போல உணர்ச்சியின் வெளிப்பாட்டை எளிய, தெளிந்த முறையில் கூறுவதே கவிதை என்னும் நிலை இன்று மலர்ந்துள்ளது.

எனவே இருபத்தோராம் நூற்றாண்டில் புலவர்கள் கவிஞர்கள் மட்டுமன்றி, தமிழறிந்து உணர்ச்சிகளைத் தக்கபடி வெளிப்படுத்தக் கூடியவர்கள் பெருங்கவிஞர்களாய் விளங்கியள்ளனர் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்தவகையிலே மன்னாரிலே தோற்றம் பெற்ற கவிதை இலக்கியத்தை நோக்கும் போது அவை வடிவம், உள்ளடக்கம், பாடுபொருள், உத்திகள், சொற்கோர்வை, இலகுநடை, மொழிக்கையாட்சி போன்றவற்றின் மாற்றங்களை ஒவ்வொரு கவிதைகளிலும் கான முடிகின்றதினை பொதுவாக நோக்க முடிகின்றது. எனினும் ஒரு இலக்கியப் பாரம்பரியம் மிக்க மன்னாரில் மரபுவழியாக கூத்துக்கள், நாட்டார் பாடல்கள் இடம்பெற்றதினால் அவற்றின் மறு வடிவமாக சிறப்பான கவதை எழுந்தமை மறுக்க முடியாத ஒன்றாகும். அந்தவகையில் மன்னாரின் வரலாறு அறிந்த வகையில் மாதோட்டப் புலவர்களுள் முதன்மை வாய்ந்த லோறன்சுப்பிள்ளை தொடங்கி இன்றுவரை கவிதை முறையிலான ஆக்க இலங்கியமானது மன்னாரின் இலக்கியத்திற்கு செழுமை சேர்த்துள்ளன. "மன்னார் பிரதேச இலக்கியத்தின் ஆரம்பம் 16ம் நூற்றாண்டாகவுள்ளது. மன்னார் பிரதேச இலக்கியப் பாரம்பரியத்தின் முதன் முதல் அறியப்படுகின்ற பெயர் லோறன்சுப் புலவர் ஆவார். இவருக்கு முன்னரும் புலவர்கள் இருந்திருக்கலாம் ஆனால் அவை பற்றிய தகவல்கள் அறியமுடியாதுள்ளது. லோறன்சுப் புலவரிடம் திண்ணைப் பள்ளியில் கல்வி கற்ற புலவர் குழாமொன்று மன்னாரில் உருவாகின்ற சூழல் ஏற்பட்டுள்ளது. மன்னாரில் உள்ள வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த இந்தப் புலவர்களின் வழிமரபினர் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நாட்டுக்கூத்து நாடகங்களையும், கவிகளையும் புனைந்துள்ளனர்" - (கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள் - கருத்துரை - அருட்திரு. தமிழ் நேசன் அடிகள்)

அந்தவகையில் மன்னாரில் இடைப்பட்ட காலத்தில் காணப்பட்ட கவிஞர்களாக செ. மொத்தம் போல், வித்துவான் எம். ஏ. றகுமான், மரிசாற்பிள்ளை, றெ. முஹம்மது கௌது, நீ. ஆ. கனகசிங்கம், எம்.பீ.எம் முஹம்மது காசீம் ஆலிம், செல்வி. ச. பாலதேசி, திரு. பி. ச. லெம்பேட், எஸ். ராஜம் புஸ்பவனம், வே. அமிர்தநாயகம், செ. தம்பிராசா (குழந்தை), செ. அ. தெ. அப்துல் கபூர், ம. பெஞ்சமின் செல்வம், அ. லூயிஸ் குரூஸ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் செ. மொத்தம் போலின் கவிதைகள் சுந்தரம் பாண்டியன் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களால் "கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள், என்ற பெயரில் தொகுக்கப்பட்டு வெளிவந்தது, வித்துவான் எம். ஏ. றகுமானின் "குர் ஆன் குறள்" என்ற நூலும், முருங்கனைச் சேர்ந்த கலைஞர் குழந்தை அவர்கள் 1966இல் "இன்பத் தமிழன் இதய ஓலம்" "அறப்போர் அறை கூவல்" என்ற கவிதை நூலையும், விடத்தல் தீவைச் சேர்ந்த திரு. சுவாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை அவர்கள் 1980களில் வெளியிட்ட "காவிகளும் ஓட்டுணிகளும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நூலும், கலைவாதி கலீல் அவர்கள் 1985இல் வெளியிட்ட "கருவறையில் இருந்து கல்லறைக்கு" என்ற கவிதை நூலும், பெரிய மடுவைச் சேர்ந்த எஸ். எச். நிஜமத் 1992 இல் வெளியிட்ட "வா ஊருக்குப் போவோம்", 1994 இல் வெளியிட்ட "பொன்விளை பூமி" என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது. தொடர்ந்து முருங்கனைச் சேர்ந்த கவிஞர் குழந்தை அவர்களின் மாதோட்டம் (2000) ஆம் ஆண்டில் வெளிவந்தது. விடத்தல் தீவைச் சேர்ந்த ஆசிரியர் சு. சந்தியாப்பிள்ளை அவர்கள் 2003 இல் வெளியிட்ட "யோசேவ் வாஸ் காவியம்" கவிஞர் நாவண்ணன் 2005 இல் வெளிவந்த "சுனாமிச் சுவடுகள்", நானாட்டனைச் சேர்ந்த எஸ். ஜெகனின் "துளிகள்", நாவண்ணனின் மகள் கில்லரி பஸ்ரினாவின் "விழுதுகள் தாங்கும் விருட்சங்கள்", முருங்கன் செம்மண் தீவைச் சேர்ந்த செ. ஞானராசாவின் "எதிர்பார்பு", மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த சேர்ந்த விக்ரர் அவர்களின் "நிழல் ஒதுங்கிய நிஜங்கள்", வங்காலையைச் சேர்ந்த செல்வி மரிய கொறற்றி டயஸ் அவர்களின் "செதுக்கிய சிற்பம்", மற்றும் குழந்தைகளுக்கான இலக்கியத்தை கவிதை முறையில் பாட்டாக எழுதிய ஆசிரியர் திரு. அந்தோனிமுத்து ஆத்திக்குழியைச் சேர்ந்த திரு. பி.பி. அந்தோனிப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மன்னார் மாவட்டத்தின் சமகால கவிதை எழுத்தாளர்களான கவிஞர் நாவண்ணனின் சிரேஷ்ட புதல்வியான திருமதி. நெலோமி அன்ரனி குருஸ் அவர்களின் "ஆத்மாவின் இராகங்கள்" 2005 "தோரணங்கள் புனிதமாகின்றன, நினைவுத் தூறல்" என்ற கவிதை நூலும் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் அவர்களின் "நெருடல்கள்" என்ற கவிதைத் தொகுப்பாக 2009 இல் வெளிவந்து, சமகாலத்தில் மன்னார் அமுதனின் "விட்டுவிடுதலைகாண்", "அக்ரோணி", முதலான மூன்று கவிதை நூல்கள் மற்றும் பிற நூல்களையும் வெளியிட்டுள்ளார். பேசாலையைச் சேர்ந்த வசந்தன் அவர்களின் "இதயமொழி", நானாட்டானைச் சேர்ந்த எஸ். ஜெகனின் "சுனாமிச் சுவடுகள்", மன்னார் சாவற்கட்டைச் சேர்ந்த ஜே. ஆர். மயூரனின் "வருடிய இளமைக்காற்று", (2010) சமகாலத்தில் பேசாலையைச் சேர்ந்த ஜே. அமல்ராஜ் அவர்களின் "விழிதீண்டும் விரல்கள்", என். சுந்தா அவர்களின் "உன் ஓர விழிவீச்சிலிருந்து" என்னும் கவிதை நூலும், மன்னார் கீரியில் வசிக்கும் வினோறாஜ் அவர்களின் "தேடலில் ஒரு சுகம்" என்ற கவிதைத் தொகுப்பு நூலும் வெளிவந்தன. பின்னர் 2011ஆம் ஆண்டளவில் மன்னாரைச் சேர்ந்த பி. அமல்ராஜ் அவர்களின் "கிறுக்கல்கள் சித்திரமாகின்றன" என்ற கவிதை நூலும் ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை நிசாந்தன் அவர்களின் "சொல்லில் எழுதிய வாழ்வு" என்ற கவிதை நூலும். தற்போது அதிபராக பணிபுரியும் மன்னூரான் சிஹார் அவர்களின் "ஒரு யுகத்துச் சோகம்" என்ற கவிதை நூலும், மன்னார் ந. பிரதீபன் அவர்களின் " அகரச் சிதறல்" (2013) என்ற கவிதை நூலம், ர. ரஜிராஜ் அவர்களின் "நெஞ்சு விடும் தூது" (2014) என்ற கவிதை நூல் தொகுப்பும், அன்பரசி கஜேந்திரா அவர்களின் "அமுதப்பிரவாகம்" (2019)என்ற கவிதை நூலும், சேசு பெலிஸ்ரன் அவர்களின் "அலுமினிய மழை", ஒருகூடை மீன், சேராபின்கள் என்ற கவிதை நூலும், இன்னுமாக வளன் பர்ணாந்து, ஆனந்தன் லியோன் (ஆசிரியர்), திருமதி. கௌரி புஸ்பராசன், வலன்ரீனா, டிவைன்சி, முதலானவர்களும் எனது பார்வைக்குட்பட்ட மன்னாரின் சமகால கவிஞர்களாக பல பொருள் தாங்கிய கவிதையினை எழுதி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரின் ஆக்க இலக்கிய முயற்சியின் மற்றுமோர் வெளிப்பாடாக நாவலைக் குறிப்பிடலாம். ஐரோப்பியரது வருகையின் மற்றுமோர் இலக்கிய வடிவமே நாவலாகும். அந்த வகையில் ஈழநத்தில் 1856 இல் எழுதி வெளியிடப்பட்ட முதல் நாவலாக "காவலப்பன் கதை" என்ற நாவலை நோக்க முடிகின்றது.

மன்னாரில் இவ் இலக்கியத்திற்கான பங்களிப்பை நோக்கும்போது உண்மையிலேயே உலக தரத்திலான நாவல் முயற்சிகள் மன்னாரில் ஏற்பட்டமை மிகவும் எழுத்துத்துறைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கிகாரமாகும். அந்தவகையில் இம் முயற்சியில் ஈடுபட்டோரில் சிலரது சிந்தனையின் வடிவம் அறிய முடிகின்றது. இம் முயற்சி இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இம்முயற்சியில் இறங்கியமை போற்றுதற்குரிய விடயமாகும். அந்தவகையில் மன்னாரின் நாவல் இலக்கிய எழுத்தாளர்களை நோக்கும்போது, மன்னாரில் திரு. அரசரெத்தினம் என்பவர் வரலாற்று நாவல் ஒன்றினை எழுதி வெளியிட்டார், பின்னர் 1978இல் கலைவாதி கலீல் அவர்கள் எழுபதுகளில் தினகரன் பத்திரிகையில் "எங்கிருந்தோ ஒரு ஜீவன்" என்னும் நாவலை வெளியிட்டார். சூசைநாயகம் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் நாவண்ணன் அவர்களினால் "பயணங்கள் தொடர்கின்றன" என்ற நாவலை எழுதி வெளியிட்டார். தொடர்ந்து விடத்தல்தீவைச் சேர்ந்த கலையமுதன் எம். சி. எம். இக்பால் அவர்கள் "ஒரு கருவண்டு பறக்கிறது" என்ற நாவலை 1985இல் வெளியிட்டார்.

மேலும் கலைஞர் சீமான் பத்திநாதன் பர்னாந்து அவர்களும் மிகச் சிறந்த நாவலாசிரியராவார் இவரால் "கூத்துப் படிச்ச கதை - 2016" "தோற்றுப் போனவர்கள் - 2017", "64 டிசம்பர் 22-2018", "குஞ்சம் ஊர்ந்தோர் - 2019", "திசையறியாப் பயணங்கள் - 2020", "ஒருநாள் பாவம் - 2025" முதலான நாவல்களை எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் "தோற்றுப் போனவர்கள்" என்ற நாவலுக்கு தேசிய இலக்கிய விருதும் கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தலைமன்னாரைச் சேர்ந்த துறையூரான் என்ற பெயரில் திருவாளர் எம். சிவானந்தன் அவர்களால் "மௌனப்பார்வை" என்ற நாவல்லானது சமூக அவலங்களை அடிப்படையாக் கொண்டு எழுந்தமை குறிப்பிடத் தக்கதாகும், அத்தோடு பிரன்சிஸ் அமல்ராஜ் அவர்களால் கருகிய காலத்தின் நாட்குறிப்புகள் என்ற தமிழ்த்தந்தியில் 36 வாரங்கள் வெளியான இத்தொடரானது வாசகர்களால் பெரிதும் கவரப்பட்டதாகும்.

சிறப்பாக இந்நாவல் முயற்சியில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்து மன்னாரின் எழுத்து இலக்கியத்துக்கு மணிமகுடம் சூட்டியதனை பேசாலையைச் சேர்ந்த உலகறிந்த நாவலாசிரியர், தேசியக் கலைஞர் எஸ். ஏ. உதயன் என்றழைக்கப் படும் ஆரோக்கியநாகர் ஜோண் கெனடி உதயகுமார் துரம் அவர்களால் மன்னார் மண்ணின் கலைகள், மக்கள் வாழ்க்கைமுறை, பண்பாட்டுக்கோலங்கள், போர்க்கால போருக்குப் பின்னரான மனித அவலங்கள் இடப்பெயர்வுகள், சமூகப்பிறழ்வுகள், முற்போக்குச் சிந்தனைகள் என வாசகருக்கு வெளிப்படுத்தும் பாங்கு, மிகச்சிறப்புடைய தாகும் அந்தவகையில் இவரால் "லோமியா- 2008, தெம்மாடுகள் - 2010, வாசாப்பு - 2011, சொடுதா - 2011, சங்குமுள்ளு - 2014, உ.பி 83 - 2016, அலுவாக்கரை - 2018, கப்பித்தான் - 2020"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான நாவல்கள் இவரால் வெளியிடப்பட்டதோடு, இவருடைய நாவல்கள் அனைத்தும் மிகச் சிறந்த தமிழியல் விருதுகளைப் பெற்றுள்ளதோடு, சாகித்தியா விருது மற்றும் தேசியக் கலைஞர் விருது ஆகியன ஆசிரியருக்கு கிடைத்தமையானது தான்பிறந்த மன்னார் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மன்னாரின் எழுத்தாளர்களாக இருந்த பொதுவான இலக்கிய முயற்சிகளிலும், ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதிலும் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் தற்போதை குருமுதல்வரும் அருட்தந்தையுமாகிய மன்னார் தமிழ்சங்கத்தின் ஸ்தாபகத் தலைவரும், இறுதியாக நடைபெற்ற உலகத் தமிழாராட்சி மகாநாட்டுக்கு அமெரிக்காவின் சிக்காக்கோவுக்குச் சென்ற ஈழத்துத் தமிழ்ப் பெரியவர்களுள் மன்னாரின் பெயரை சர்வ தேசத்திற்கு வெளிப்படுத்திய இளைய தமிழ்த்தூது வணக்கத்துக்குரிய அருட்பணி. தமிழ் நேசன் அடிகளாரை சமகால எழுத்தாளர்களில் ஒருவராக இவ்விடத்தில் நினைவு கொள்வது சாலப் பொருத்தமானது. இவரால் "உறவின் உரசல்கள்" 2014 என்ற நூலும், "தமிழியல் தடங்கள் - 2017" என்ற ஆய்வு நூலும், மன்னார் மாதோட்டப் புலவர்கள் - கலைஞர்கள் ஐம்பது ஆளுமைகளின் வாழ்வும் வரலாறும் படைப்புகளும் - 2021, இது வடமாகாண பண்பாட்டாலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது. குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு மன்னாரின் பிரதேச, மாவட்டத்தில் இருந்து வெளிவரும் நூல்களுக்கு இவரது ஆக்கம் தனியொரு வலுவாக சிறப்புச் சேர்க்கும், எனவே சமகால எழுத்தாளர்களில் இவரொரு மணிமகுடம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மேலும் அருட்தந்தை டேவிட் வின்சன் பற்றிக் அமதி எம். ஏ. அவரால் "புதுமுனைப்பு - 2010" என்ற நூல் வெளிப்பட்டதும், நானாட்டான் எஸ். ஜெகன் ஊடாகவியலாளர் அவர்களால் "உலக ஆரம்பமும் மன்னார் மாவட்டமும் - 2012, மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும் - 2024" என்ற நூல்கள் வெளிவந்தமையும், ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் வங்காலை திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின் "மன்னார் பிரதேச வழக்குச் சொற்கள், வரலாற்றில் தடம்பதித்த வங்கக் கலைஞர்கள் மன்னார் நாட்டார் பாடல்கள் முதலான நூல்கள் வெளிவந்தமையும், குறிப்பிடத்தக்கது. இவை எனது தனிப்பட்ட பார்வையில் காணப்பட்வை இவை தவிர இன்னும் பல நூல்கள் கிராம மட்டங்களில் வெளிவந்து மன்னாரின் சமகால இலக்கிய வளர்ச்சிக்கு பெருமை சேர்க்கின்றமையும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

மேலும் மன்னாரின் சமகால எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமாக திருவாளர் சுந்தரம் பாண்டியன் ஓய்வுநிலை அதிபர் அவர்கள் உண்மையில் மன்னாரின் நடமாடும் வரலாற்றுப் புத்தகம் என்றே அவரைக் கூறவேண்டும். அந்த அளவுக்கு மன்னார் இலக்கியம் பற்றிய அனைத்து பார்வையும் கொண்ட ஒரு பொக்கிஷமாவார். இவரும் பல ஆய்வு கட்டுரைகளை எழுதி வருகின்றார். தற்போது மட்டக்களப்பில் வசித்து வருகிறார்.

மேலும் ஓய்வுநிலை கோட்டக்ல்வி அதிகாரி எஸ். டேவிட் அவர்களும் குறிப்பிடத்தக்க மன்னாரின் வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளின் ஜாம்பவானாக காணப் படுகின்றார்.

அத்தோடு மஹா. தர்மகுமாரக் குருக்கள் ச. அந்தோனி மிராண்டா பேசாலை ஜனாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஜே. மனாசீர், ஆய்வாளர் கின்சிளேயர் பீற்றர் - மன்னார், எஸ். பெனோ, பா. மேரி நிருபா, துறையூரான், எம். சிவானந்தன் பேசாலை, எஸ். அந்தோனிப்பிச்சை, கலாபூசணம் த. பறுனாந்து பீரிஸ், திருமதி. கே.எஸ். ஸ்ரீஜமேலாதேவி, திருமதி. மேரி திரேசிற்றா ஜோசப் ஸ்ராலின், அ. றொக்ஷன் சைலேந்திரா, செல்வி. கோதை பரதலோஜினி, அருட்திரு. அன்புராசா அடிகளார். வீ. எம். றெஜீஸ் பெர்னாண்டோ, அருட்பணி. ம. க. அருள்பிரகாசம், திரு. சந்திரலிங்கம் றமேஸ், எனப் பலரும் மன்னார் மண்ணின் சமகால ஆய்வுகள், கட்டுரைகள் சார்ந்த எழுத்தாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இதை விடவும் இன்னும் பலர் ஏனைய இடங்களில் ஏதோ ஒரு வகையில் தமது படைப்புகளை வெளிக்கொண்டு வந்தவர்களாக இருப்பார்கள். எனவே அவர்களையும் இங்கு நினைவு கூறுகின்றேன்.

நிறைவாக கலைப் பொக்கிஷத்தின் ஊற்றாக வடமாகாணத்திலே திகழும் மன்னார் மாவட்டத்தினது சமகால படைப்புக்களும், எமது மண்ணுக்கும், மக்களுக்கும் ஏன் எமது வருங்கால சந்தியினரும் எமது மன்னார் மண்ணின் கலை, பண்பாட்டுப் பாரம்பரியங்களை முழுமையாக தொடர்ச்சியாக அறிய வேண்டும் என்றால். எமது கொண்ட இலட்சியம் குன்றிடாது. ஓர் விதையைப் போன்று மறைவினால் உயர்வு காண்பதற்கு எழுத்து என்னும் ஆயுதத்தை மௌனிக்க விடாது தொடர்ந்து எழுதுவோம். பல படைப்புகளை உருவாக்குவோம். எழுத்தாலே மன்னாரின் புகழை உலகறியச் செய்வோம்.

*“விதைத்தவன் தூங்கினாலும் விதை தூங்காது”*

---

## தாய்மை எனும் தூய்மை

இருக்கும் காலத்தில்
நேசிக்க மறக்கிறோம் – அவள்
இறக்கும் நாளொன்றை
யோசிக்க மறக்கிறோம்,
எமக்காய் வாழ்ந்தவளை
போசிக்க மறக்கிறோம் – அவளை
இழந்த பிற்பாடே
இதயம் திறக்கிறோம்!

மழலைக் காலத்தை
மனதில் நினைக்கிறோம் – அவள்
மடியின் சுகம் தன்னை
மறந்து தொலைக்கிறோம்
நெருங்கி வாழாமல்
நேரம் கழிக்கிறோம் – அவள்
நீங்கிப் போனபின்
நீலி வடிக்கிறோம்.

அன்னை எனும் ஜீவன்
அரிய பெருஞ்செல்வம்,
உன்னை எனை ஈன்ற
உலகின் ஒளி தீபம்.
என்ன தவம் செய்தோம்
இவளில் பிறப்பெடுக்க!
சொன்னது வாஸ்தவமே
சுவனமவள் காலடியில்!

**- மன்னூரான் ஷிஹார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்ட மறைசாட்சிய வரலாற்றுப் பதிவுகள்

## - ஓர் ஆய்வு -



அருட்பணி. எஸ். நெவிஸ் யோகராஜ் பீரிஸ்
ஆய்வாளர், சிறிய குருமட அதிபர் - மன்னார்.

### 1. முன்னுரை

இயேசு கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கையினாலும் பற்றுறுதியானாலும் உயிரைத் தியாகம் செய்வது கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் மறைசாட்சியமாகக் கருதப்படுகிறது. கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்திலிருந்தே மறைசாட்சியம், கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒரு வெளிப்பாடாக நிலவியமையை வரலாறு தெளிவாகக் காட்டிநிற்கின்றது. கிறிஸ்தவத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் இடம்பெற்ற யூத, உரோமையக் கலாபனைகளின்போது பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாகத் தம் உயிரைத் தியாகம் செய்தனர். இம்மறைசாட்சிய நிகழ்வுகள் நாளடைவில் 'மறைசாட்சியவியல்' (Martyrology) என்ற இறையியலாக வளர்ச்சிபெற்றது. மறைசாட்சிய நிகழ்வுகள் தொடக்ககாலக் கிறிஸ்தவத்திற்கு உள்ளார்ந்த உத்வேகத்தைக் கொடுத்ததோடு கிறிஸ்தவமறை மத்தியகிழக்கிலும் ஐரோப்பாவிலும் நிலைகொள்ளவும், மிகவிரைவாகப் பரவவும் வழிவகுத்தன. கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கைக்காக எத்தகையத் துன்பத்தை ஏற்கவும், தமது உயிரை இழக்கவும் இயல்பாகவே முன்வந்தனர். இத்தகையத் தற்கொடைத் தெரிவு, கிறிஸ்தவத்தை அக்கால உலகின் புதியதோர் செல்நெறியாக அறிமுகம்செய்ய வழிவகுத்தது. இவ்வாறு கிறிஸ்தவத்தின் பலமானதோர் அடித்தளமாகவும் ஊக்கசக்தியாகவும் மறைசாட்சியம் அடையாளம்பெற்றது.

15ஆம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற நவீனத்துவத்துடன் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, கைத்தொழிற்புரட்சி மற்றும் நாடுகாண் பயணங்கள் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஐரோப்பியக் குடியேற்றங்களை உருவாக்கின. அத்துடன் நாடுகாண் பயணங்களின் முன்னோடிகளான ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் நாட்டுக் குடியேறிகளுடன் பயணித்த ஐரோப்பியக் கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் அக்குடியேற்ற நாடுகளில் கிறிஸ்தவத்தைப் பரப்பினர். குடியேற்ற நாடுகளில் கிறிஸ்தவத்தின் பரம்பல் இரண்டுவிதமான மறைசாட்சிய நிகழ்வுகளை உருவாக்கியது. முதலாவது; ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் சுதேசிகளால் கொல்லப்பட்ட நிகழ்வு. இரண்டாவது; கிறிஸ்தவர்களாக மாறிய உள்ளூர் மக்கள் தமது பாரம்பரிய சமயத்தைப் பின்பற்றிய சுதேசிகளால் கொல்லப்பட்ட நிகழ்வு. இந்தவகையில் 1544ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உட்பட்டிருந்த மன்னார்த்தீவில் புதிதாகக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டமைக்காக 600இற்கு மேற்பட்ட உள்ளூர் மக்கள் யாழ்ப்பாண அரசன் சங்கிலியனால் கொல்லப்பட்டமை ஒரு வரலாற்றுப் பதிவாகும். அது இன்றுவரை கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களைச் செறிவாகக்கொண்ட ஒரு மாவட்டமாக மன்னார் விளங்குவதற்கும் பிரதான காரணமாக அமைந்துள்ளமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் மறைசாட்சியக் கருத்தியலின் எல்லைகள் விரிவுபட்டுச் செல்கின்றன. அத்துடன் மானுடத்தின் பன்முகத்தேவைகள் மத்தியில் மனிதநேயம் வலியுறுத்தப்படும் சூழமைவில், மறை சாட்சியத்திலிருந்து மனிதநேய உயிர்ச் சாட்சியம் பற்றிய கருத்தியல் கிறிஸ்தவ இறையியலின் தற்காலத் தேவையாகவும் மேலெழுகின்றது. எவ்வாறு தொடக்க காலத்தில் மறைசாட்சியங்கள் கிறிஸ்தவத் தைப் பலப்படுத்தி பல்வேறு இடங்களுக்கும் பரவிச்செல்ல வழிவகுத்தது போல, சமகாலத்தில் மனிதநேய உயிர்சாட்சியங்கள் பல்லின, பல்சமய, சமூகக்கலாசாரப் பின்னணியில் மானுடத்தை மையப்படுத்திய பொதுவெளி இறையியலின் உள்ளீடுகளையும் நல்லிணக்க வாழ்வையும் உருவாக்கும் என்பதை இக்கட்டுரை அழுத்தமாக முன்வைக்கிறது.

## 1.1மறைசாட்சியம் என்பதன் சொற்பொருள் விளக்கம்

மறைசாட்சியம் என்பது 'martyrdom' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. இதன் மூலப்பதமானது,'martyr' (μάρτυρ)என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறக்கின்றது. இதற்கு 'சாட்சியம் அளித்தல்' அல்லது 'சான்றுபகர்தல்' என்று பொருள்படும். அரிஸ்டோட்டில், பிளேட்டோ இவர்களினால் உண்மைக்குச் சான்றுபகர்தல்(witnessing to the truth) என்ற பொருளிலேயே 'martyr' என்ற சொல்லானது பயன்படுத்தப்பட்டது. இது வாய்மொழியாகப் பேசப்படுகின்ற உண்மைக்கும், சமய நூல்களிலே கூறப்படுகின்ற உயர் விழுமியங்களுக்கும் சான்றுபகர்தல் ஆகும். அத்தோடு 'martyr' என்றகிரேக்க பதமானது, ஒருவர் அன்றாட வாழ்வில் தான் பெற்றுக்கொண்ட சொந்த அனுபவத்தினூடாகவோ, குறிப்பிட்ட நபரிடமிருந்து கற்றுக்கொண்ட பாடத்தினூடாகவோ அல்லது சுயமான அவதானிப்பினூடாகவோ பெற்றுக்கொண்ட அறிவுக்கும், உண்மைக்கும் சான்று பகர்தல் எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது (Henk A. Bakker, 2015, 391-394).

முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சிந்தனையின்படி இயேசுவே முதல் மறைசாட்சியாகச் சிலுவையில் அறையப்பட்டு கொலையுண்டவராவார். எனவே இயேசு கிறிஸ்துவே வேதசாட்சியத்தின் ஆரம்பமும் முன்மாதிரிகையுமாவார். இயேசுவைப் பின்பற்றிய சீடர்கள் இயேசுவின் உயிர்ப்புக்கும், அவர் வாழ்ந்துகாட்டிய வழிகளுக்கும், அவர் கற்பித்தவற்றுக்கும் தாம் சென்ற இடங்களிலெல்லாம் சான்றுபகர்ந்தனர். (தி.ப. 5: 29-32) தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் தம்மிடம் உள்ளதை ஏழைகளோடு பகிர்ந்து, துன்பங்களைப் பொறுமையோடு தாங்கி, கொலையாளியையும் எதிரியையும் மன்னிக்கின்ற பல்வேறு நற்பண்புகளைத் தம் வாழ்விலே கடைப்பிடித்ததன் மூலம் இயேசு கிறிஸ்துவின்மேல் கொண்ட தமது நம்பிக்கைக்கும் கிறிஸ்தவ அழைப்புக்கும் சான்று பகர்ந்தனர். இவ்வாறு சாட்சியம் பகர்தலின் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமது உயிரைத் தியாகம் செய்கின்ற மறைசாட்சியத்தை தலைசிறந்த சான்று பகர்தலாக தமது உள்ளத்தில் கருதினர் (CCC,1997, no 2473).

## 2. மன்னார் மறைசாட்சிய வரலாறு

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் பாதுகாவலனாகவும், சிறந்த போர்வீரனாகவும், அரசியல் ஞானமுள்ளவனாகவும் விளங்கிய சங்கிலியன் என்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாண இராட்சிய மன்னன் 7ஆம் செகராசசேகரன், மக்கள் மத்தியில் தலைசிறந்த ஒரு தலைவனாக விளங்கினான். யாழ்ப்பாணம், நல்லூரைத் தலைமைப்பீடமாகக் கொண்டு 1519 முதல் 1561ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்த சங்கிலியன் ஒரு சிறந்த முருகக் கடவுள் பக்தனாவான். தனது ஆளுகைக்கு உட்பட்ட மன்னார்த் தீவு மக்கள், அந்நியர்களான போர்த்துக்கேயரால் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டதை அறிந்து அவர்களை எச்சரிக்கை செய்ததுடன், கிறிஸ்தவ சமயத்தைக் கைவிட்டுவிடுமாறு அவர்களுக்குக் கட்டளை பிறப்பித்தான். ஆயினும் அரசனது கட்டளையை ஏற்கமறுத்த மன்னார்க் கிறிஸ்தவர்கள் தாம் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவதால் தமது உயிருக்கு ஆபத்து நிச்சயம் உண்டு என்பதை அறிந்திருந்தும் இயேசு கிறிஸ்துவின்மேல் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையினாலும், மெய்மறையாம் கிறிஸ்தவத்தின்மேல் கொண்ட பற்றினாலும் தமது உயிரையும் இழக்கத் துணிந்த வர்களாக கிறிஸ்தவ சமயத்தில் இறுதிவரை உறுதியாக நிலைத்திருந்தனர். இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மனம்மாற்றம்பெற்றுச் சென்றதை அறிந்த சங்கிலி அரசன் தனது ஆட்சி அதிகாரத்திற்கும் கட்டளைக்கும் கட்டுப்பட மறுத்த இவர்களை, 5000 படைவீரர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச்சென்று மனம்மாறிய கிறிஸ்தவர்களை வாளுக்கு இரையாக்கினான் (V. Perniola, 1989, vol. I, 54).

வேதகலாபனைக் காலங்களிலே ஏற்பட்ட மறைசாட்சியங்களால் கிறிஸ்த வமானது பல பாகங்களுக்கும் பரவிச்சென்று நம்பிக்கையில் இன்னும் அதிகமாக வேரூன்றியதைப்போல, ஆசியத் திரு அவையின் வரலாற்றிலே 1544ஆம் ஆண்டு மன்னார்த் தீவில் குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் என 600 இற்கும் அதிகமானோர் இயேசுக் கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கைக்காய் தமது உயிரைத் தியாகம்செய்த மறைசாட்சிய நிகழ்வானது, கிறிஸ்தவம் இலங்கையின் பல பாகங்களுக்கும் பரவிச்செல்லவும், இலங்கைத் தீவு முழுவதிலும் ஒரு நம்பிக்கை எழுச்சியையும் ஏற்படுத்தியது. இதனாலேயே இம்மறைசாட்சியம் இடம்பெற்ற மன்னார்த் தீவானது 'மறைசாட்சிகளின் தீவு' என்று இன்றுவரை வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது. தென்கிழக்காசியாவில் முதன்முறையாக இடம்பெற்ற மன்னார் மறைசாட்சிய நிகழ்வானது, இலங்கைத் திருஅவையில் குறிப்பாக மன்னார் மக்களின் நம்பிக்கைக்குச் சிறந்ததொரு சாட்சியமாகவும் எடுத்துக் காட்டாகவும் திகழ்கிறது (Samuel Hugh Moffett, 2005, 40).தொடக்ககாலத் திருஅவையில் இடம்பெற்ற பெருந் தொகையான மறைசாட்சிய நிகழ்வுகளின் பிற்பாடு, 1544ஆம் ஆண்டில் மன்னாரில் இடம்பெற்ற 600 இற்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்களின் மறைசாட்சிய மரணமே ஒரே தடவையில் இடம்பெற்ற அதிக எண்ணிக்கையிலான மறைசாட்சிய நிகழ்வாகக் கூறப்படுகின்றது. மறை அறிவிப்பு நாடுகளின் பாதுகாவலர்களுள் ஒருவராகிய புனித பிரான்சிஸ் சவேரியாரின் பங்களிப்பு இம்மறைசாட்சிய நிகழ்வில் காத்திரமான இடத்தைப்பெறுவதுடன், இந்நிகழ்வுக்குப்பின் ஆசிய நாடுகளில் இடம்பெற்ற பல மறைசாட்சிய நிகழ்வுகளுக்கும் மன்னார் மறைசாட்சியம் ஒரு முன்னோடியாகவும் அமைந்தது (S.V.B. Mangalarajah, 2015, 2).

### 2.1 மன்னார் மக்களின் நம்பிக்கை வெளிப்பாடு

இலங்கையின் மன்னார்த் தீவில் வாழ்ந்துவந்த மக்கள், யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டுவந்த சங்கிலி என்று பலராலும் அழைக்கப்பட்ட, 7ஆம் செகராச சேகரன் என்ற இந்துசமயத்தை பின்பற்றிவந்த அரசனின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தனர். அதேவேளையிலே இத்தீவு மக்கள் அவர்களின் தாய்மொழியாம் தமிழினாலும், அவர்களின் சமூகப்பின் புலமாகிய சாதியத்தினாலும் தென்னிந்தியக் கரையோரப்பகுதி மக்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர். மேலும் மன்னார்த் தீவில் வாழ்ந்த மக்கள் மீன்பிடித்தொழிலிலும் முத்துக்குளித்தலிலும் பெருமளவு ஈடுபட்டுவந்த நிலையில் தென் இந்தியக் கரையோர மக்களுக்கும் இவர் களுக்குமிடையில் கடல்வழிப் போக்கு வரத்துக்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்துவந்தன. இப்பின்னணியில், இந்தியக் கரையோரக் கிராமங்களில் கிறிஸ்தவ மறையைப் போதித்துவந்த பிரான்சிஸ்கன் துறவற சபையினர், மீனவசமூகத்தினர் பலருக்கும் திருமுழுக்கு அருட்சாதனத்தை வழங்கி அவர்களைக் கிறிஸ்தவத்தில் இணைத்துக் கொண்டனர். தமிழகத்தில் இடம்பெற்ற இச்சமயமாற்ற நிகழ்வானது மன்னார்த் தீவில் வாழ்ந்துவந்த மக்கள் மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பது யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய யதார்த்தமாகும்.

யாழ்ப்பாண இராச்சிய அரசன் சங்கிலியன் போர்த்துக்கேயரைத் தமது எதிரிகளாகக் கருதியமையால் அவர்கள் போதித்துவந்த கிறிஸ்தவ சமயத்திற்கும் எதிராகவே செயற்பட்டான். இதனால் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மறையைப் பகிரங்கமாக போதிக்கமுடியாமல் குருக்கள் மறைமுகமாகத் தமது மறைபரப்புப் பணிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுவந்தனர். குறிப்பாக, 1543இல் பிரான்சிஸ்கன் துறவறசபையைச் சேர்ந்த பியற்றோ (Pedro) எனும் குருவானவரும் அவருடன் இணைந்த இன்னுமொருவரும் யாழ்ப்பாண இராச்சியத்தில் வியாபாரிகள்போல் வேடமிட்டு, யாழ்ப்பாண மக்களுக்கு கிறிஸ்தவ மறையை இரகசியமாகப் போதித்துவந்தனர். இதனால் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு உட்பட்ட மக்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவையும் அவர்மேல் நம்பிக்கையையும் ஓரளவுபெற்றிருந்தனர் (S. Gnana Prakasar, 1924, 47).

இக்காலகட்டத்திலே இயேசுசபையின் ஆரம்ப அங்கத்தவர்களில் ஒருவரான பிரான்சிஸ் சவேரியார் தமிழகக் கடற்கரைக்கிராமங்களில் ஆற்றிய மறைபரப்புப்பணிகளாலும், அவரது புனிதம் நிறைந்த வாழ்க்கையினாலும் கவரப்பட்டு அப்பிரதேசத்தில் வாழ்ந்த பல்லாயிரக் கணக்கானோர் திருமறையில் சேர்ந்து கொண்டனர். கிறிஸ்தவ மறையைத் தழுவிக்கொண்டோரின் உறவினர்களும் நண்பர்களும் மன்னார்த் தீவில் வாழ்ந்துவந்தபடியினாலும், அவர்கள் மீன்பிடித்தொழிலுக்காய் மன்னார்த் தீவுக்கு அடிக்கடி வந்துசென்றபடியினாலும் இத்துறவியைப் பற்றிய செய்தி இவர்கள் ஊடாக மன்னார்த் தீவு மக்களின் காது களுக்கு எட்டியது. எனவே சவேரியாரின் பணிகளைக் கேள்விப்பட்ட மன்னார் மக்கள், தம்மத்தியிலும்வந்து அவர் பணியாற்றி, மறைக்கல்வி பாடம் புகட்டி, தமக்கும் திருமுழுக்குத் தரும்படியாக விண்ணப்பம் செய்து ஒரு தூதுக்குழுவை சவேரியாரிடம் அனுப்பினர் (W. L. A. Don Peter, 1992, 5-6).

சவேரியார் தமிழகக் கடற்கரைக் கிராமங்களில் பணிசெய்யும்போது சந்தித்த மக்களிடமிருந்து மன்னார்த் தீவைப்பற்றியும், அம்மக்களின் வாழ்க்கை முறைபற்றியும், அவர்களிடம் காணப்பட்ட இறைநம்பிக்கை பற்றியும் மேலும் அறிந்து கொண்டதோடு மன்னார் மக்களிடமிருந்து வந்த அழைப்பு அவரை மிகவும் கவர்ந்திருந்ததாகவும், இவ்வாறானதோர் அழைப்பு இறைவனின் திட்டம் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பணிபுரிந்துவந்த இயேசுசபையைச் சேர்ந்த டானியல் பார்டோலி (Daniel Bartoli) என்ற குருவானவர் மேற்கொண்ட 'ஆசியாவில் இயேசு சபையினரின் பணி' என்ற வரலாற்று ஆய்விலே," பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் மக்கள் தங்கள் மத்தியில் வந்து நற்செய்தியை அறிவிக்கும்படி சவேரியாரிடம் விண்ணப்பித்திருந்தபோதும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக மன்னாரிலிருந்து வந்திருந்த விண்ணப்பத்தைப்போன்று நினைவுகூரக்கூடியதும், பொறுமையையும் இறைநம்பிக்கையையும் வெளிப்படுத்தக் கூடியதுமான விதத்தில் ஏனைய விண்ணப்பங்கள் அமைந்திருக்கவில்லை~ இவ்வாறு கீழைத் தேசத்திலுள்ள கத்தோலிக்கத் திருஅவைக்கு மன்னார்க் கிறிஸ்தவர்களின் ஆழமான இறை நம்பிக்கையும், தியாக வாழ்வும் ஒரு சிறந்த முன்னுதாரணமாக உள்ளது" என்று குறிப்பிடுகின்றார் (A. J. B. Antoninus, 1944, 2). தமிழகத்தின் தென்கோடியில் அமைந்துள்ள முத்துக்குளித்துறையில் வாழ்ந்துவந்த கிறிஸ்தவர்கள் தமது வீரம்செறிந்த இறைநம்பிக்கையை துன்பகரமான வேளைகளில் வெளிப்படுத்திய போதும், ஆரம்பகாலகட்டத்தில் அவர்கள் இஸ்லாமியர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் நோக்கத் துடனேயே போர்த்துக்கேயர்களின் உதவியை நாடினர். அத்துடன் தமிழகத்தில் நிலவிய சாதிய ஏற்றத்தாழ்வுகளினால் ஏற்பட்ட பலதரப்பட்ட ஒடுக்குமுறைகளுக்குள் சிக்கித்தவித்த இவர்கள், தமது சுய உரிமைகளையும் தனித்துவத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் ஒரு வழிமுறையா கவும் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டனர் (D. Ferroli, 1939, vol. I, 117-119).

### 2.2 மன்னாரில் மறைசாட்சியத்தின் தாக்கங்கள்

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் வாழ்வில் 'கிறிஸ்துவின் உயிர்ப்பு அனுபவம்' அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கிக்கொள்ளவும், அவர்கள் பெற்றுக் கொண்ட நம்பிக்கைக்கு (விசுவாசம்) சான்றுபகரவும் வலிமையையும் உறுதிப் பாட்டையும் அளித்ததைப்போல, முதன் முதலாக இயேசு கிறிஸ்துவின் நற் செய்தியைப் பெற்றுக்கொண்ட மன்னார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களின் வாழ்விலே நம்பிக்கையும் புதுவாழ்வும் மலரத் தொடங்கியது." கிறிஸ்துவையும் அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவும் அவருடைய துன்பங்களில் பங்கேற்று, சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன்" (பிலி 3: 10), என்று திருத்தூதர் பவுல் கூறுவதைப்போல, தங்கள் உயிர்த்தியாகத்தால் கிறிஸ்துவுக்கு சான்றுபகர்ந்த இவர்களின் வாழ்வானது, நற்செய்தி பல்வேறு இடங்களுக்குப் பரவிச்செல்லவும், பலர் கிறிஸ்தவர்கள்மட்டில் நல்லெண்ணத்தைப்பெறவும் காரணமாக அமைந்தது.

இலங்கைத் திருஅவையின் வரலாற்றில் இடம்பெற்ற மன்னார் மறைசாட்சிய நிகழ்வானது யாழ்ப்பாண இராச்சியத்தின் கத்தோலிக்கப் பரம்பலிலும் வளர்ச்சியிலும் குறிப்பிடும்படியான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, மக்கள் மத்தியிலே வீரம் செறிந்த இறைநம்பிக்கையின் வெளிப்பாடுகளும், மேலும்பல மறைசாட்சிய நிகழ்வுகளும் இடம்பெறக்காரணமாக அமைந்தது. அக்காலகட்டத்தில் மன்னாரில் இடம்பெற்ற மறைசாட்சிய நிகழ்வானது திருஅவையின் தலைமைப் பீடமான உரோமையிலும், ஐரோப்பாவின் பல நகரங்களிலும் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதோடு, பெரும் எண்ணிக்கையில் உயிர்ப்பலியான இம்மறைசாட்சிய நிகழ்வைப்பற்றி கேள்விப்பட்ட பலரும் கத்தோலிக்கரான மன்னார் மக்களின் இறைநம்பிக்கையையும், அவர்களின் சாட்சிய வாழ்வையும் வியந்துபாராட்டி கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். குறிப்பாக போர்த்துக்கல் அரசன் 3ஆம் ஜோவோவா மன்னார் மறைசாட்சிய நிகழ்வைக் கேள்வியுற்று மகிழ்ச்சியும் பெருமிதமும் கொண்டவராக, இந்தியாவில் மறைபரப்பாற்ற மேலும் பல குருக்களை அனுப்பிவைக்குமாறு பியெர் லபே[f]வ்ர் (Pierre Le Fevre) என்ற இயேசுசபையின் உலகளாவிய முதல்வருக்கு கடிதம் ஒன்றை வரைந்தார். இவ்வாறு இயேசுக் கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கையினால் தமது உயிரை மாத்திரமல்லாமல், தமது பிள்ளைகளின் உயிரையும் தியாகம் செய்தவர்கள் வாழ்ந்த 'விசுவாசத்தின் விளைநிலமான' அம்மண்ணிலே இறை பணியாற்ற பல ஐரோப்பிய துறவிகள் ஆர்வம்கொள்ளத் தொடங்கினர் (S. Gnana Prakasar, 1924, 45).

மன்னாரில் இடம்பெற்ற சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த மறைசாட்சிய நிகழ்வினைத் தொடர்ந்து, யாழ்ப்பாண இராட்சியமானது 1622இல் போர்த்துக்கேயரின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டதோடு, தமிழர்களின் தாயகமான இலங்கையின் வடபகுதியின் ஒவ்வொரு கிராமங்கள்தோறும் மறைபரப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு ஏராளமானவர்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டனர். இவ்வாறு மன்னார் மறைசாட்சிய நிகழ்வு நடைபெற்று 100 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர், யாழ்ப்பாண இராட்சியம் முழுவதிலும் பல கத்தோலிக்க கிராமங்களை உள்ளடக்கியதான 50 பங்குகள் நிர்வகிக்கப்பட்டு, குருக்கள் நிரந்தரமாக தங்கியிருந்து மறைபணியாற்றவும், ஆலயங்களை அமைத்து திருப்பலிகளையும், திருவிழாக்களையும் கொண்டாடும் அளவிற்கு கிறிஸ்தவம் வளர்ச்சிபெறலாயிற்று (S.V.B. மங்களராஜா, 2015,27-28). இப்பங்குகளில் ஏறத்தாள 110,000 இற்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் வாழ்ந்துவந்தனர்~ அவர்களில் சிறுவர்களுக்கென்று பாடசாலைகள் அமைக்கப்பட்டதுடன், மறைக்கல்வி பாடமும் கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது. இவற்றைவிட பெண்களுக்கென்றும் பெரியவர்களுக்கென்றும் பிரத்தியேக மறைக்கல்வி வகுப்புக்கள் காலையிலும் மாலையிலும் இடம்பெற்றுவந்தன. இவ்வாறு மன்னார் மண்ணில் 'கிறிஸ்தவ விசுவாசம்' ஆழமாக வேரூன்றித் தழைத்ததோடு, அப்பகுதி மக்கள் கொண்டிருந்த கிறிஸ்தவ நம்பிக்கையின் வெளிப்பாடானது அவர்களின் அன்றாட வாழ்க்கையில் மாத்திரமல்லாது, அவர்களின் கலாசாரத்திலும் பண்பாட்டிலும் கலந்ததொன்றாகமாறி கத்தோலிக்க இலக்கியங்களான நாடகங்கள், வாசாப்புக்கள், அம்மானை, ஒப்பாரி, பசாம் போன்ற கலைப்படைப்புக்கள் உருவாகின. இவ்வாறு மன்னார் மக்களின் எடுத்துக்காட்டான கிறிஸ்தவ வாழ்வும், அவர்கள் கொண்டிருந்த மறைகல்வி அறிவும், ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளும் விதமும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களிலும் பார்க்க மிகச் சிறந்ததாகவும் உயர்ந்த நிலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டதாகவும் 1576இல் கோமெஸ் வாஸ் அடிகள் எழுதிய இயேசுசபையினரின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (V. Perniola, 1991, vol. II, 86).

மன்னார்த் தீவின் முதல் பங்குத் தந்தையாக பணிபுரிந்த கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் 1566, மார்கழி 13ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டிலிலுள்ள தனது இயேசுசபை நண்பர்களுக்கு எழுதிய கடிதத்திலே மன்னார்க் கிறிஸ்தவர்களை ப்பற்றி கூறும்போது~ இவர்கள் பல வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொண்டவர்கள் போலவும், ஏராளமான மறைபணியாளர்களைக் கொண்டு ஆன்மீக நலன்களால் வழிநடத்தப்படுகின்ற கோவா நகரத்து கிறிஸ்தவர்களைப்போலவும் மறை அறிவில் சிறந்து விளங்குவதுடன், மன்னார்க் கிறிஸ்தவர்களைப்போல் வேறு எங்கிலும் பெரும் எண்ணிக்கையில் பாவசங் கீர்த்தனத்தை அடிக்கடிப்பெறுவதைக் காணமுடியாதுள்ளது என்று குறிப்பிடுகின்றார் (V. Perniola, 1991, vol. II, 12). மன்னார்க் கிறிஸ்தவர்கள் ஒப்புரவு அருட்சாதனத்தை அணுகும் விதமும், அதனை அடிக்கடி பெறுவதற்கு அவர்கள் காட்டிய ஆர்வமும் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கும் நன்னெறிக்கும் எந்தளவு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு மன்னார் மக்கள் ஆலய தரிசிப்புக்குச் சென்றுவருவதையும், பக்திச் சபைகளில் இணைந்து தமது ஆன்மீகத்தை வளர்த்துக்கொள்வதையும், குருக்கள் மட்டில் அவர்கள் காட்டிய பணிவையும் மரியாதையை யும் நோக்கும்போது அவர்களின் கிறிஸ்தவ வாழ்வானது பலரும் போற்றும்விதமாக, மறைசாட்சிகளின் பரிந்துபேசுதலாலும் ஆசீர்வாதத்தினாலும் அவர்கள் வாழ்வானது பலன்கொடுக்கத் தொடங்கியது என்பதை அறியமுடிகின்றது.

மன்னார்க் கிறிஸ்தவ மக்கள் ஆன்மீகத்தில் மாத்திரமல்லாது சமூகத் தொண்டிலும் சிறப்பாக ஈடுபட்டுவந்தனர். "துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள்~ இறைவேண்டலில் நிலைத்திருங்கள். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிட முள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்~ விருந்தோம்பலில் கருத்தாய் இருங்கள்" (உரோ 12: 12-13) என்று புனித பவுல் கூறுவதைப்போல, இவர்களின் வாழ்வானது சமூகத்தொண்டிலும் பகிர்தலிலும் சிறந்து விளங்கியதை இயேசுசபைக் குருவான டி சவரெல் (Do Soveral) லிஸ்பனில் உள்ள தமது இயேசுசபைக் குருநண்பர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார். 1569ஆம் ஆண்டு மன்னார் மக்களின் பெரும் துயரமாக, அப்பிரதேசத்தில் பரவிவந்த தொற்றுநோயாகக் கருதப்பட்ட அம்மை நோயானது பலநூறு கிறிஸ்தவர்களின் உயிரைப்பறிக்கத் தொடங்கியது. உயிர் பிழைத்தவர்களும் மிகவும் பலவீனமடைந்து கடின வேலைகளைச் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறான நிலையில் நோய்வாய்ப்பட்ட மக்களைப் பராமரிக்கவும், நாதியற்றவர்களை கவனித்துக்கொள்ளவும் என்று வைத்தியசாலை ஒன்றையும், தர்ம இல்லம் (misericordia) ஒன்றையும் அமைக்க இயேசுசபைக் குருக்கள் முயற்சித்தபோது மன்னார்க் கிறிஸ்தவர்கள் தமது வறுமையிலும் தமது முழு ஒத்துழைப்பையும் பண உதவிகளையும், தமது பரம்பரைச் சொத்துக்களையும் வழங்கி அவ்வைத்திய சாலையைக் கட்டிமுடிக்கவும், அதனைப் பராமரிக்கவும் உதவி செய்தனர் (V. Perniola, 1991, vol. II, 46). ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஒன்றரை நூற்றாண்டுகள் கத்தோலிக்க சமயத்திற்கு எதிராக இடம்பெற்ற ஒடுக்குமுறைக்கு மன்னார்க் கத்தோலிக்கர் துணிவுடன் முகம்கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியின்போது நம்பிக்கைப் பரப்புதல் சபையினருக்கும் போர்த்துக்கல் அரசனுக்கு மிடையிலான உள்ளக பிரிவினையின்போது ஏற்பட்ட முரண்பாடுகளால் குருக்களின் உதவியின்றி தனித்துவிடப்பட்ட கத்தோலிக்கர், பிரிவினைச் சபையினரின் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் தமது கத்தோலிக்க விசுவாசத்தை பாதுகாத்துக் கொண்டமைக்கு மன்னார் மறைசாட்சிகளின் செப உதவியும், மறைசாட்சிகளின் அர்ப்பண வாழ்வு கற்றுத்தந்த பாடமும் அம்மக்களுக்கு துணையாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு மன்னார் மறைசாட்சிய நிகழ்வு இடம்பெற்று 475 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் மன்னார்த் திருஅவையானது பல்வேறு சவால்களையும் தாண்டி இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நம்பிக்கைப் பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றது.

### 3.மன்னார் மறைசாட்சியமும் கலை ஆக்கங்களும்

இலங்கையின் வடமேற்கே அமையப் பெற்ற மன்னார் மாவட்டமானது மன்னார்த் தீவையும் பெருநிலப்பரப்பான மாதோட்டப் பகுதியையும் உள்ளடக்கி 162,000 இற்கு சற்று அதிகமான மக்கள் தொகையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த மாவட்டமானது பாடல் பெற்ற திருத்தலங் களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலையும், பல்லின மக்கள் ஒன்றுகூடி வழிபடும் மருதமடுத் திருத் தலத்தையும், முஸ்லிம் சகோதரர்கள் தொழுகின்ற மூர்வீதி ஜும்மா பள்ளி வாசலையும் ஒருங்கே கொண்டமையப்பெற்று சமய ஒற்றுமையின் சின்னமாக விளங்கு கின்றது. அத்துடன் பக்திக்கும் கலைப் பண்பாட்டிற்கும் அடையாளமாக ஆடப்பட்டு வரும் கத்தோலிக்கக் கூத்துக்களுக்கு மன்னார் மாதோட்டம் பெயர்பெற்ற இடமாகத் திகழ்கின்றது. ஈழத்திருநாட்டின் கலையுலக வரலாற்றில் நாட்டுக்கூத்து என்ற இலக்கிய வடிவமானது போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னரே தமிழர்களின் கலைப் பாரம்பரியத்துடன் தொடர்பைக் கொண்டிருந்த துடன், நாட்டுக்கூத்து என்ற கலையானது ஐரோப்பிய மறைபணியாளர்களின் வருகையுடன் புதுப்பொலிவு பெற்று வளர்ந்துவரும் கலையாகத் திகழ்கின்றது (ம. பெஞ்சமின் செல்வம், 1978, 12).

இலங்கையின் வடபகுதிகளில் மக்களின் கலைவடிவங்களாக விளங்கிய அம்மானைகளும், கீர்த்தனைகளும், கூத்துக்களும் கத்தோலிக்க மறைபணிக்கு மிகவும் பயன்படக்கூடிய கலைவடிவமாக இருந்தபடியினால், அக்காலத்தில் பணிபுரிந்த ஐரோப்பியக் குருக்கள் ஈழத்துக் கலைகளுள் கத்தோலிக்க கருத்தாக்கங்களை உட்புகுத்தி தமது மறைபணியை மக்கள் மயப்படுத்தினர். அக்காலத்தில் கொழும்பில் பணியாற்றிவந்த பிரான்சிஸ்கன்சபைக் குருக்களின் முதல்வராக இருந்த யோன் தே விலாதே கொண்டே (Joan de Villa de Conte) தமிழில் புலமைபெற்றிருந்த புதுக்கிறிஸ்தவர் ஒருவரின் உதவியுடன் ஞான உபதேச நூல் ஒன்றை கீர்த்தனை வடிவில் இயற்றி அதன்வழியாக மாணவர்கள் அடிப்படையான மறைக்கல்வியைப் பெறுவதற்கு வழிசமைத்தார். இவற்றோடு இறைவன் பெயரிலும் அன்னை மரியாள் பெயரிலும் இயற்றப்பட்ட சில கீர்த்தனைகளும் சேர்க்கப்பட்டன. இப்பாடல்கள் யாவும் மன்னாரில் 1561-1564ஆம் ஆண்டுவரை மறைபணியாற்றிவந்த தமிழ் புலமைபெற்ற இயேசுசபைக் குருவான கென்றிக் கென்றிக்கஸ் அடிகளாருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவரின் உதவியுடன் பிழைகள் திருத்தப்பட்டன. மேலும் போர்த்துக்கேய காலத்துக்குரிய முதல் தமிழ் கத்தோலிக்க இலக்கிய நூலாக 1647இல் பேதுருப் புலவர் என்பவரால் யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இயற்றப்பட்ட சந்தியோகுமையர் அம்மானை என்ற நூல் விளங்குகின்றது (வ. தியோகுப்பிள்ளை, 1994, 1-3).

புனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை எடுத்துச்சொல்லும் 'அடியார் வரலாறு' என்று அறியப்படுகின்ற 'புளசாந்தோரும்' (Flos Sanctorum) என்ற போர்த்துக்கேய நூலானது தமிழர்களின் கலைவடிவங்களான நாடகங்கள், அம்மானைகள், வாசாப்புக்கள் போன்றவற்றை தமிழில் இயற்றுவதற்கு உதவியாக அமைந்தன. இதுவே பிற்காலத்தில் யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டப்பாங்கு நாட்டுக்கூத்துக்களில் 'புலசாந்தோர்' வருகை என அறியப்படுகின்றது. 1963-1965ஆம் ஆண்டுவரை உரோமையில் இடம்பெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னரே கிறிஸ்தவர்கள் தமது தாய் மொழிகளில் வழிபாடுகளை நடத்துவதற்கும் திருப்பலிகளை ஒப்புக்கொடுப்பதற்கும் திருஅவையினால் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கு முன்னர் எல்லா வழிபாடுகளும், திருப்பலிக் கொண்டாட்டங்களும், நற்செய்தி வாசிப்புக் களும் இலத்தின் மொழியிலேயே இடம் பெற்றன. இந்நிலையில் தாய் மொழியூடாக மறைக்கல்வியை பாமர மக்களுக்கும் வழங்குவதற்கு இந்த நாட்டுக்கூத்துக்கள் பெரும் உதவியாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மாதோட்டக் கலைக்கலாசார பண்பாடுகளை அறிந்துகொள்வதற்கு புலவர் ம. பெஞ்சமின் செல்வம் எழுதிய 'மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்ற நூலானது சிறந்ததொரு ஆதரவாகவும் பொக்கிசமாகவும் விளங்குகின்றது. மன்னார்ப் பிரதேசத்தின் கலைப் பாரம்பரியத்திலே பாடிஆடப்படும் 'நாட்டுக் கூத்துக்கள்' ஏனையகலைகளை விடப் பிரசித்திபெற்று விளங்குகின்றது. மன்னார் மாவட்டமானது அதிக எண்ணிக்கையான கத்தோலிக்க மக்களையும் கத்தோலிக்கக் கிராமங்களையும் கொண்டிருக்கின்ற படியினால் அங்கே ஆடப்படும் கூத்து மரபில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கானது அதிகளவான இடத்தைப் பெறுகின்றது. இவ்வாறு கத்தோலிக்க கிராமங்களில் மேடையேற்றப்படும் நாட்டுக்கூத்துக்களின் கருப்பொருளாக புனிதர்களின் வாழ்க்கை வரலாறும், திருவிவிலியத்தின் படிப்பினைகளும் இடம்பெறுகின்றன. கத்தோலிக்க நம்பிக்கையில் வளர்ந்த பல கிறிஸ்தவ புலவர்கள் தமது கவித்துவ ஆற்றலினால் இசையோடு ஆடிப்பாடி இக்கூத்துக்களை இயற்றலாயினர்.

கத்தோலிக்க பாரம்பரியத்தில் வாழ்ந்து மறைசாட்சிகளாக மரித்த புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், திருவிவிலியத்தில் கூறப்படுகின்ற உயர் விழுமியங்களையும் பிரதிபலிக்கின்ற நாடகங்களையும் (இரண்டு இரவுக் கூத்து), வாசாப்புக்களையும் (ஒரு இரவுக் கூத்து) மேடையேற்றும்போது விவசாயத்தையும் மீன்பிடித் தொழிலையும் தமது வாழ்வாதார மாகக் கொண்டிருந்த மன்னார் மக்கள் இக்கலையை மிகவும் இரசனையோடு தமக்கென்றொரு கலைப்பண்பாட்டு அடையாள மாகக் கருதியதுடன், கிறிஸ்தவர்களாகிய அம்மக்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க பொதுநிலை யினராகிய தமக்கு கிடைத்த வரப் பிரசாதமாகவும் எண்ணினர். ஆகவே கத்தோலிக்கக் கூத்துக்கள் அம்மக்களின் கலையாக மாத்திரம் அல்லாமல் அவர்களின் உணர்வோடு இரண்டறக்கலந்து இறை நம்பிக்கையின் வெளிப்பாடாக வளரலாயிற்று. கத்தோலிக்கக் கிராமங்களிலே 2 அல்லது 3 வருடங்களுக்கு ஒருமுறை மேடையேற்றப் படுகின்ற இக்கூத்துக்களின் பாடுபொருள் விவிலியக் கதைகளையும், புனிதர்களின் வரலாற்றையும் கொண்டு கத்தோலிக்கரின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து அவர்களுக்கு ஆன்ம திருப்தியையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுத்தரும் ஞான தீட்சையாக அமைந்திருந்தன (Anton Matthias, 1992,166).

மன்னார் மறைமாவட்டமானது மறைசாட்சிகளின் குருதியினாலும் அவர்களின் சாட்சிய வாழ்வினாலும் முத்திரையிடப்பட்ட இடமாகும். இப்பகுதிகளில் பல்வேறு நோக்கங்களுக்காக நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப்பட்டு வந்தாலும் மன்னார் கத்தோலிக்க பாரம்பரியத்தில் வாசாப்புக்கள், நாடகங்கள் மக்களுக்கு குறிப்பாக சிறுவர்கள், இளைஞர்கள், வளர்ந்தோர் என்ற பல் பிரிவினருக்கும் மறைக்கல்வி அளிக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தது. மன்னாரின் கரையோரப்பிரதேசங்களிலே வாழ்ந்துவந்த தமிழர்களிடையே பேணப்பட்டுவந்த கூத்து மரபு கத்தோலிக்க மறைபோதகர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. மக்கள் இரவிரவாக ஆவலுடன் கண்டுகளிக்கும் இக்கலையூடாக நற்செய்தியைப் பரப்பமுடியும் என்ற நிலையில் இக்கூத்துக் கலையை கிறிஸ்தவ மறை அறிவை மக்களுக்கு கொடுக்கவும் அதன் மூலமாக இன்னும் பல மக்களை கிறிஸ்தவ மறையில் இணைத்துக் கொள்ளவும் இக்கலையை மேன்மேலும் ஊக்கப்படுத்தினர். எனவே இம்மண்ணில் பணியாற்றிய மேலைத்தேய மறைபணி யாளர்கள் நாட்டுக்கூத்து என்ற கலைவடிவத்தை கத்தோலிக்க சமயத்தின் மறைபரப்பு ஊடகமாகவும் கத்தோலிக்க மக்களை இறைநம்பிக்கையிலும் ஒழுக்க வாழ்விலும் வளர்த்தெடுக்கும் வழி முறையாகவும் இதனைப் பயன்படுத்தி வந்தனர். இவ்வாறு மன்னார் மறை மாவட்டமானது மறைசாட்சியத்திற்கு மாத்திரமல்ல கலை இலக்கியத்திற்கும் பெயர்பெற்ற இடமாக விளங்குகின்றது.

### 3.2முடிவுரை

மறைசாட்சியம் என்ற கருத்தியலா னது பாரம்பரியக் கிறிஸ்தவக் கண்ணோ ட்டத்திலிருந்து நவீன இறையியல் சிந்த னையிலே வளர்ச்சிபெற்று இன்று பன்முகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை கொண்டதாக மாறிவருகின்றது. தொடக்ககாலத்தில் இயேசு கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கைக்காகவும் கிறிஸ் தவத்தின் படிப்பினைகளுக்காகவும் உயிரைத்தியாகம் செய்கின்ற நிலையை மறைசாட்சியம் என்று கருதிவந்தபோதும், சமகாலத்தில் சமய நம்பிக்கைகளைக் கடந்து மானுடத்தை முதன்மையாகக் கொண்டு மனித நேயத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும் நிகழும் உயிர்த் தியாகங்கள் நவீன மறைசாட்சியமாகக் கருதப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் திருஅவை கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தி மரிக்கின்றவர்களுக்கு மாத்திரமே புனிதர்கள் என்ற உயர்பட்டத்தை வழங்கிவந்தது. ஆயினும் இன்று இயேசு கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கையினாலும் அன்பினாலும் உந்தப்பட்டு பல்வேறு சமூக பணிகளிலும், மனிதநேயச் செயற்பாடு களிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, அர்த்தமுள்ள வாழ்வைப் பின்பற்றி தம்வாழ்வைப் பிறருக்காகத் தியாகம் செய்த தமியான், வின்சென்ட் தே பவுல், அன்னை திரேசா, ஜோவானி பட்டிஸ்ரா, கார்லோஸ் அக்குட்டிஸ் போன்றோரும் புனித நிலைக்கு திரு அவையால் உயர்த்தப்பட்டு வருகின்றனர்.

திருஅவையானது மக்கள் மத்தியில் மறுவாழ்வை அடிப்படையாகக்கொண்ட ஆன்மீகத்தை மாத்திரம் வளர்ப்பதோடு அல்லாமல், அவர்களின் வாழ்வியலோடு கலந்த அறிவாற்றல், ஒழுக்கம், உரிமைவாழ்வு, மனிதநேயம் போன்ற பண்புகளை வளர்ப்பதிலும் அக்கறை கொள்ள வேண்டும். அவ்வகையில் மன்னார் மண்ணிலே இடம்பெற்ற மறைசாட்சிய வரலாற்று நிகழ்வும் அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற கிறிஸ்தவத்தின் வளர்ச்சியும் அம்மக்களின் நம்பிக்கை வாழ்வின் வெளிப்பாடாகத் திகழ்வதோடு, துன்பப் படுவோருக்கும், அகதிகளாக்கப்பட்டோருக் கும் ஆதரவு வழங்குவதும், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து எல்லோரையும் சமமாக மதிப்பதும் இம்மக்கள் மத்தியல் காணப்படு கின்ற மனிதநேயப் பண்புகளாக இன்றும் அறியப்படுகின்றது. மேலும் தமிழர் தாயகத்தில் இடம்பெறும் அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகத் தொடர்ந்து போராடிவருவதோடு, மனித நேயத்திற்காகவும் மனித உரிமைகளுக்கா கவும் தங்களது உயிரைத் தியாகம் செய்த அருட்தந்தை மேரி பஸ்ரியன், அருட்தந்தை பாக்கிய ரஞ்சித், ஆயர் இராயப்பு யோசேப்பு போன்ற பல மாமனிதர்கள் இம்மண்ணிலே இன்றுவரை வித்தாகியுள் ளனர் என்பதும் தமிழ் மக்களினதும் மன்னார் மண்ணினதும் சாட்சியவாழ்வுக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகின்றது. "வேதசாட்சிகளின் இரத்தம் நம்பிக்கையின் வித்து" என்ற தெர்த்தூலியனின் வார்த்தையானது கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கான உந்துசக்தியாக மாத்திரம் கொள்ளாது, மனிதநேயத்தையும் மனிதமாண்பையும் வளப்படுத்துகின்ற மானுடத்திற்கான மறைசாட்சியம் என்ற கருத்தியலை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கான ஓர் அழைப்பாகவும் அமைகின்றது.

ஆகவே சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கக்கூடிய மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட மறைசாட்சியம் என்ற வாழ்வியல் வழிமுறையை பின்பற்று வதன் மூலமாக இலங்கையில் பல்சமய சமூகப் பண்பாட்டுச் சூழமைவில் ஒரு பொதுமைப் பண்பையும் ஒன்றிப்பையும் தோற்றுவிக்கமுடியும்.

## உசாத்துணை நூல்கள்

*திருவிவிலியம்,* (1995), பொது மொழிபெயர்ப்பு, திண்டிவனம்: தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி வழிபாட்டு நிலையம்.

மங்களராஜா,S. V. B., (2015), *மன்னார் மறைசாட்சிகள்: உண்மைகளும் தாக்கங்களும் -ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை,* யாழ்ப்பாணம்: யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம்.

செல்வம், பெஞ்சமின், ம., (1978),*மன்னார் மாதோட்டத் தமிழ் புலவர் சரித்திரம் (1769-1976),* யாழ்ப்பாணம்: புனித பிலோமினா அச்சகம்.

தியோகுப்பிள்ளை, வ., (1994),*ஈழத்துக் கத்தோலிக்க இலக்கியங்கள்: போர்த்துக்கீசர் காலத்தில் எழுந்த*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கத்தோலிக்க தமிழ் இலக்கிய நூல்கள்,* யாழ்ப்பாணம்: இலக்கிய அவை - திருமறைக் கலாமன்றம்.

Antoninus, A.J.B., (1944), *The Martyrs of Mannar(from Authentic Documents),* Colombo: General Publishers Ltd.

Bakker, Henk A., (2015), "Beyond the Measure of Man: About the Mystery of Socratic Martyrdom," *Church History and Religious Culture,* vol. XCV, no 4., 391-394.

*Catechism of the Catholic Church,*(2009), New Delhi: Theological Publication in India.

Ferroli, D., (1939), *The Jesuits in Malabar,* vol. I, Bangalore: Bangalore Press.

Gnana Prakasar, S., (1924), *A History of The Catholic Church in Ceylon:1. Period of Beginnings (1505-1602),* Colombo: Literature Committee of the Catholic Union of Ceylon.

Hugh, Samuel Moffett, (2005), *A History of Christianity in Asia (1500-1900),* vol. II, New York: Orbis Books.

Matthias, Anton, (1992), *The Catholic Church in Jaffna (1875-1925): With Special Reference to The Ministry of Fr. S. Gnana Prakasar, OMI.,* Jaffna: Good Shepherd Centre.

Perniola, V., (1983), *The Catholic Church in Sri Lanka: The Dutch Period (1658-1711),* vol. I, Sri Lanka: Tisara Press.

(1983a), *The Catholic Church in Sri Lanka: The Dutch Period (1712-1746),* vol. II, Sri Lanka: Tisara Press.

---

## "உப்பு நீர் குளித்தாலும்.."

நிலம் விட்டு அலை முட்டி
படகொன்று ஏறும்.
களம் தட்டி நுனி எட்டி
கரை நின்று சீறும்.
நெஞ்சத்தின் மஞ்சத்தில்
கனவுகள் கூடும்,
கடல் மீது வலை வீசி
வெறும் கையே ஆகும்.

மீனில்லை.... விலையில்லை...
கடலிலே வலை இல்லை.
ஊணில்லை... ஓய்வில்லை
வாழ்விலும் உயர்வில்லை.

முதிர் கன்னி மனை விட்டு
கரையென்று சேரும்,
முதல் கொண்டு சீர் செய்ய
நிலையென்று மாறும்.
கூரையின் நீர்த்துளி
பாத்திரம் மேவும்,
ஓலையின் இடைவெளி
வானமே தோனும்.

மானமே போகுது...
வருமானமே வேகுது...
படைத்தவா படியளா...
எழுச்சியாய் விதியெழு...

கடன் வட்டி, பணம் பற்றில்
இடர்பட நேரும்.
சனி தொற்றி பிணி முற்றி
தொடர்கதையாகும்.
தொடுவானம் தினம் எந்தன்
முதுகினில் சாயும்,
உப்பு குளித்தவன்
வாழ்வது நோகும்.

அலைத்தாயே வழி விடு...
கலைத்தாயே கரம் கொடு...
வித்தியே வித்தை செய்...
சித்தியில் என் வாழ்வை...

**-ஆனந்தன் லியோன்-**
(கலாவிபூசணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணம் புனித கார்மேல் அன்னை ஆலய மக்களால் அரங்கேற்றப்பட்ட

# "ஞானசௌந்தரி நாட்டுக்கூத்து"



**திருமதி ஸ்ரலின் நிறோஷன் தேன்மொழி**
மன்/அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்

நானாட்டானில் ஆவணம் எனும் கிராம மக்களால் 2025 ஆடி மாதம் 28, 29ம் திகதிகளில் ஞானசௌந்தரி எனும் நாட்டுக்கூத்தானது வெகுசிறப்பாக அரங்கேற்றப்பட்டமை மன்னார் மக்கள் அனைவரும் அறிந்த விடயமாகும். இன்று பலராலும் புகழ்ந்து பேசப்படுமளவுக்கு சிறப்பாக ஆவணம் புனித கார்மேல் அன்னை ஆலய இறை மக்களால் இது அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஆவணம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் விசுவாசம் சந்தியோகு (முத்தையா) புலவரால் எழுதப்பட்ட இந்த ஞான சௌந்தரி நாட்டுக்கூத்தானது நாற்பத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது தடவையாக எமது கிராமத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளது. இதற்கு அண்ணாவியார்களாக கலைமாமணி திரு. செபஸ்ரியாம்பிள்ளை மாசில்லாமணி மற்றும் செழுங்கலை வித்தகர் திரு. சவிரிமுத்து யோசப் குணசீலன் ஆகியோர் சிறப்பாக நெறியாள்கை செய்துள்ளனர்.

புனித மரியாளின் புதுமையைக் கூறும் கத்தோலிக்க மரபுவழி நாட்டுக்கூத்தாக வட பாங்கில் அமைந்த நாட்டுக்கூத்தானது பார்வையாளர்களை கவரும் வண்ணம் சிறப்பான பின்னூட்டல்கள் இன்றும் கிடைக்கத்தக்கதாக வெகுசிறப்பாக ஊர் மக்களினாலும், வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளினதும் ஒத்துழைப்பில் நடந்தேறி இருக்கின்றது.

இந்த நாட்டுக்கூத்தானது 1978ம் ஆண்டில் முதன்முறையாக அரங்கேற்றப்பட்டது. இதன்போது இந்த நாட்டுக்கூத்தினை எழுதிய அமரர். திரு. விசுவாசம் சந்தியோகு புலவராகவும், அமரர் பேதுரு யக்கோபு அண்ணாவியாராகவும் இருந்து, சொற்ப குடும்பங்களின் ஆதரவுடன், பங்கேற்புடனும் வெகு சிறப்பாக இதனை அரங்கேற்றியுள்ளார்கள். இதன் போது நடிகர்களாக இருந்த எம் மூத்த தலைமுறையினரால் இவ்வருடம் அரங்கேற்றப்பட்ட நாட்டுக் கூத்தினை பல வழிகளிலும் அண்ணாவியார்களுடன் இணைந்து நெறிப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த நாட்டுக்கூத்தானது 1978ம் ஆண்டிற்கு பின்பு இவ்வருடமே இரண்டாவது தடவையாக மேடை மேற்றப்பட்டிருக்கிறது. இந்த நாற்பத்தேழு ஆண்டுகள் இடைவெளி என்பது மிக நீண்டதாக காணப்பட்டாலும் இவ் ஆண்டு இதனை சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றிய பெருமை எம் ஊர் பெரியவர்கள், இளம் தலைமுறை யினரையே சாரும். இருப்பினும் இவ்வாறான பெரிய இடைவெளிக்குரிய காரணங்களை ஆராயும் போது புலவரின் மறைவுக்குப் பின் அவரது கையெழுத்திலேயே காணப்பட்ட இந்த மூலப்பிரதியானது சற்று ஒழுங்குப் படுத்தலுக்கு உட்படுத்த வேண்டி யிருந்ததாலும், நாட்டுப்பிரச்சினைகள், இடப்பெயர்வுகள், பொருளாதார பின்னடை வுகளாலும், இன்னுமாக எமது கார்மேல் அன்னை ஆலய மக்கள் முருங்கன் புனித யாகப்பர் ஆலயத்தில் அங்கத்துவம் வகித்து அங்கும் இரண்டு கிராமங்களும் இணைந்தே நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றி வருவதாலும் (கடந்த வருடம் 2024 புனித யாகப்பர் வாசகப்பா) இந்த இடைவெளி உருவாகியது என கூறலாம்.

எனவே அந்த இடைவெளியை இன்னும் நீளாமல் இவ்வருடமே எவ்வாறாவது அரங்கேற்ற வேண்டும் என்ற எண்ணம் எம் ஊரின் பெரியவர்களில் உருவாகி அது இளம் தலைமுறையினரூடாக இன்று செயல்வடிவம் பெற்றுள்ளது. கிட்டத்தட்ட 40 குடும்பங்களுக்குட்பட்ட எமது கிராமத்தில் அறுபதுக்கு மேற்பட்ட நடிகர்களைக் கொண்டு பிரமாண்டமான மேடை, ஒலி, ஒளி அமைப்புக்களுடன் சிறப்பான ஒழுங்குபடுத்தலுடனும் விருந்தினர் வரவேற்பு நிகழ்வுகள் என்பன மிக சிறப்புடனும் நடந்தேறியிருக்கின்றமை மகிழ்வான விடயமாக இருக்கின்றது. இன்றும் இவ்வருடம் அரங்கேற்றப்பட்ட ஞானசவுந்தரி நாடகமானது பல்வேறு சிறப்புக்களை கொண்டமைந்தாக, சில வேறுபட்ட நடைமுறையினை உள்ளீர்த்த தாக, பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்ததாக காணப்பட்டது குறிப்பிடத்தக்க தாகும். அந்தவகையில் வழமையான எம் முன்னோர் காலத்திலிருந்து இந்த கலைவடிவங்களில் பெண்களின் பங்களிப்பு என்பது மேடை நாடகங்கள், குறுநாடகங் கள், வில்லுப்பாட்டுக்கள் போன்றவற்றில் காணப்பட்டாலும் இந்த பெரிய நாட்டுக் கூத்து என்று கிராமங்களில் அரங்கேற்றப் படும் நிகழ்வில் தவிர்க்கப்பட்ட ஓர் விடயமாகவே இதனை கைக்கொண்டிருந் தனர். இதற்காக இந்த ஞானசௌந்தரி எனும் ஓர் பெண்ணின் கதையைக் கூறும் இந்த நாட்டுக்கூத்தில், பெண் தெய்வமான அன்னை மரியாளின் கிருபையையும், புதுமையைக் கூறும் இந்த கதையில் (எம் பெரியோரின், இளையோரின் ஒருமித்த, ஏக மனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, விருப்பாக அமைந்த விடயமாக காணப்பட்ட) பெண்களையும் இந்த நாட்டுக்கூத்தில் உள்ளீர்க்க வேண்டும் என்ற ஓர் மாற்றத்திற் கான சிந்தனையானது செயல் வடிவமாக்கப்பட்டு இன்று எம் நாட்டிலும் கடல் தாண்டியும் அனைத்து தமிழர்களை யும் கவர்ந்ததாகவும் எமக்கு பெருமையை யும் மகிழ்வையும் தரும் விடயமாகவும் அமைந்திருக்கிறது.

எமது இந்த நாட்டுக்கூத்தினை பொறுத்த வரையில் பெண்களின் வகிபங்கானது கதையின் முக்கிய பாத்திரங்களின் நடிகைகளை பின்னணி பாடல்களை சிறப்பாக்கியவர்களாக, பக்க வாத்தியங் களை இசைத்தவர்களாக, மேடை அமைப்புகளுக்கு உதவியாளர்களாக, நிகழ்வினை சிறப்பாக்கியவர்களாக பல கோணங்களிலும் காணப்படுகின்றமை எமக்கு இந்த நாட்டுக்கூத்திற்கும் சிறப்பினையும், பெருமையினையும் மேலும் சேர்க்கும் ஓர் விடயமாக காணப்பட்டது.

இதற்கான முக்கியகாரணங்களாக எம் ஊர் பெரியவர்களும், இளையோரும், எம் உறவுகளான அருட்தந்தையர்களுமே இருக்கிறார்கள். இந்த மாற்றமானது இன்று எமது கிராமத்தில் தோற்றி வரலாற்றிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் மாற்றத்தை உருவாக்கி சமத்துவத் தினை, பறைசாற்றிய ஓர் மாபெரும் நிகழ்வாக இருப்பது எமது கிராமத்திற்கு ஓர் பெருமையான பாக்கியமான விடயமாகும்.

இன்னுமாக 1978ம் ஆண்டு அரங்கேற்றப் பட்ட நாடகத்தில் நடிகர்களின் தொகையானது குறைவாகவே அமைந் திருந்தது. ஒவ்வொரு பாத்திரங்களும் ஒருவர் நடிக்கும் விதமாகவே அமைந் திருந்தது (ஊர்மக்கள் தொகையும் குறைவாகவே காணப்பட்டது) இந்த நாட்டுக்கூத்தில் கிராம மக்கள் அனை வரையும் உள்வாங்கும் விதத்தில் பாத்திரங் கள் பிரிக்கப்பட்டு ஒரு பாத்திரத்தையே மூன்றுக்கு மேற்பட்டோர் நடிக்கும் விதமாக பகிர்ந்தளிக்கப்பட்டு அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டதும் இன்னுமோர் சிறப்பாக கூறமுடியும்.

இவ்வாறான பல சிறப்பம்சங்களைக் கொண்டமைந்த எமது ஞானசௌந்தரி நாட்டுக் கூத்தானது நேரடியாக அதிக மக்கள் பார்வையாளர்களை கொண்டதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பல ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து இறுதி மட்டும் இதனை கண்டுகளித்து சென்றது எங்களால் காணமுடிந்தது. மேலும் முகநூல் நேரலை வழியாக அதிக பார்வை யாளர்களைக் கொண்ட நிகழ்வாகவும் இது அமைந்திருந்தது. எனவே இவ்வாறான ஒரு நல்ல சிறப்பான நிகழ்வையும் தந்து நடாத்தி முடிக்க சிறப்பான கால நிலையை யும் தந்து எங்களை காத்து வழிநடத்திய புனித கார்மேல் அன்னைக்கே எங்கள் நன்றிகளும், புகழும் உரித்தாகுக.



**கலைமன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி - 2025**

**நானாட்டான் பிரதேச கலைபண்பாட்டுப் பெருவிழா - 2025**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடத்தல்தீவு

## பன்னாட்டு மாநாடு - 2025

### - ஒரு நிகழ்வுப் பதிவு -

**திரு. எ.டெலிஸ்ரன் நிசாந்**
கலைஞர், கிராம அலுவலர்.

**சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையை ஆட்கொண்ட உள்நாட்டு போர்சூழலால் நமது கிராமங்களினதும், ஊர்களினதும் பாரம்பரியங்கள் மருகி, உறவுகள் பரம்பரைகள் உலகின் பல்வேறு திக்கிலும் வாழ நிர்பந்திக்கப் பட்டது வரலாறு. இதன்மூலம் தம் மூதாதையர் பல்லாண்டு காலமாக கட்டிக்காத்த ஊரின் பெருமைகள் இன்று பேசாப் பொருளாக இருந்துவரும் நிலையில் இந்நிலைக்கு ஒரு முற்றுப் புள்ளியாக, எதிர்கால சந்ததிக்கு ஒரு முன்னுதாரணமாக, ஒரு எடுத்துக் காட்டாக நடைபெற்ற ஒரு நிகழ்வுபற்றி விபரிக்கின்றது இக்கட்டுரை.**

இலங்கை வரலாற்றில் வேறு எங்கிலும் இல்லாத வகையில் முதன் முறையாக விடத்தல்தீவு பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடாக கிராம மட்டத்தில் கடந்த ஆடிமாதம் 11, 12 ஆகிய இரண்டு நாட்களிலும் மன்னார் நகர மண்டபத்தில் நடத்தப்பட்டது.

விடத்தல் தீவின் மக்கள் அனைத்து துறைகளிலும் சாதித்தவைகளையும் ஆராய்ந்து ஆவணப்படுத்தும் ஒரு வரலாற்று நிகழ்வாக முன்னெடுக்கப்பட்ட இம்மாநாட்டில் அச்சிடப்பட்ட புத்தகங்கள், மின் புத்தகங்கள் மற்றும் வலைத்தள பதிவேற்றங்களை வெளியீடு செய்வதுடன், ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தி அவற்றை உலகிற்கு அறிமுகப்படுத்துதலே இம் மாநாட்டின் நோக்கமாகும்.

இம்மாநாட்டில்அதற்கான விளக்கக் காட்சியுடன் ஆவணப்படுத்தல் மூலம் உலகத்திற்கு இதனை அறிமுகப்படுத்து வதுமாக இந்த மாநாடு நடத்தப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் மாநாட்டுச் சிறப்பு இதழ், ஆராய்ச்சி புத்தகத்தொகுதிகளுடன் இன்னும் இரண்டு புத்தகத் தொகுதிகள் வெளியீடு செய்யப்பட்டன.

வடக்கு கிழக்கு தமிழ் மாவட்டங்களில் ஏற்பட்ட இழப்புகளை மீண்டும் நினைவுறுத்தும் விதமாக அவற்றை ஒரு வரலாறாக பதிவு செய்ய முடியும் என்று எல்லா கிராமங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இந்த புத்தக வெளியீடு நடைபெற்றது.

விடத்தல்தீவைச் சேர்ந்த புத்தி ஜீவிகளும் செயற்பாட்டாளர்களும் இம் மாநாட்டை வெகு சிறப்பாக வடிவமைத்திருந்தமை பெருமைக் குரியதாகும். இரண்டு நாட்களிலும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் அரங்கேறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தல் தீவைச் சேர்ந்த கலைஞர்களி னால் பலவித கலை நுட்பங்களுடன் கூடிய நிகழ்ச்சிகள் ஆற்றுகை செய்யப்பட்டன.

ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் விடத்தில் தீவு மண்ணின் பண்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மண்ணைச் சேர்ந்த ஆர்வலர்கள், பேராசிரியர், பதவிநிலை உத்தியோகத்தர், பாராளுமன்ற உறுப்பினர், அரச உத்தியோகத்தர், குருக்கள், அருட்சகோதரிகள், தொழில் அதிபர்கள் என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருப்பவர்கள் எல்லோரும் இம் மாநாட்டில் வந்து கலந்து கொண்டமை மிகச்சிறப்பானதொன்றாகும். அவர்கள் எல்லோரும் ஒரு குறித்த காலத்திலே ஒற்றுமையாக விடயங்களை எல்லாம் தமக்கென்ன தனி பொறுப்புகளை ஏற்று நடத்தி முடித்திருந்ததை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவர்களுடைய இந்த விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு என்பது மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கை தீவில் இருக்கும் யுத்தத்தினால் சேதாரப்பட்ட எல்லா மாவட்டங்களும் கிராமங்களும் மனதில் கொண்டு அவரவர் தங்களுடைய வாழ்க்கையில் இழந்தவைகளை மீண்டும் ஒன்று சேர கட்டி எழுப்ப வேண்டும். அத்தோடு புதிதான உலகத்திற்கு வகை சொல்லக் கூடிய அளவிற்கு தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை ஒற்றுமையாக வெளிப்படுத்தப் பட்டது. இந்த மாநாட்டிலே கலந்து கொண்ட ஆர்வலர்களும், கலைஞர்களும், மூத்தோர்களும், பெரியோர்களும் அதனைச் சுட்டியே நின்றனர். இது ஒரு ஊரின், அதன் சமுகத்தின் கௌரவத்துக்குரிய விழா. இந்த விழாவிலே மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமம் இந்தளவு ஆளுமை யாளர்களை தன்னகத்தே கொண்டிருக் கிறது என்பதை வெளிப்படுத்தக்கூடிய ஒரு விழாவாக இது அமைந்திருந்தது.

இது மன்னார் மாவட்டத்தின் ஒரு முன் மாதிரியான மாநாடு என்பதனால் இதனை சில நிழற்படங்களை இங்கே தருகிறேன்.



விடத்தல் தீவு பன்னாட்டு மாநாடு - 2025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

RAJEETH
PHONE SHOP (PVT) LTD



No.BS 34 New Bus Stand, Mannar.
023 222 3302 / 076 0888259
077 2148881 / 077 0888666
077 0888777 / 076 0888259
rajeethphoneshop@gmail.com

NEW IFFATH
PHARMACY
&
GROCERY

Medicine Dealer & Distributor

0713602682
0232251810
Grand Bazzar, Mannar

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

மக்களின் இதயத்துடிப்பு

PEOPLE'S
BANK

மன்னார் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

Hotel
AAHASH

Rooms
Wedding Hall
Dining

*We also undertake special orders*

#110/81, Thalvupadu Road,
Mannar.
0237858878
076565 3233
077991 3233

JOTHY BOOK CENTRE

0776 94 6645
023 2222 052
Grand Bazzar, Mannar

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!





0774330062

அனைத்துவிதமான
கட்டிடப்பொருட்கள்,
மாபிள் வகைகள்,
மின்னியல் உபகரணங்கள்
அனைத்துக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

AMAL CERAMIC

Hospital Junction,
Thalvupadu Road,
Mannar.

Mannar Road,
Paddanisoor,
Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

# SI IRON STORES

**Dealers in Hardware, Paints, Timber / motor spares, Electrical Goods & Government Contract.**

Grand Bazaar
Mannar

T.P : 023 - 2222309 / 076 - 7884758 / 077 - 5493178

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

# KFC KHAZANA FAMILY CENTER

**Fancy Items, Home Items, Electric Items, Furnitures, Baby Items and Etc.**

No.68,70 Esplanade (D.S office) Road, Mannar. Tel : 023-2222032, 071-6757057, 074-0005767

# KHAZANA GOLD HOUSE

**Grand Bazaar, Mannar**

**Tel - 0232121215/ 0713578338/ 0770688011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!





**40 வருட மனிதநேயப் பணிகள்**

**1985 - 2025**

**Mannar Association for Relief & Rehabilitation**

**மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச்சங்கம்**

**MARR**

இல. 95, வயல்வீதி,
சின்னக்கடை, மன்னார்
தொ.பே. - 0232222113
marrmannar@gmail.com
Regd. 11/4/22/2159/89
Ma/NGO/1999/002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

# Reegans Hardware

Dealers in Hardware, Building Materials, Paints, PVC, Timber, Tyres, Battery and Government Contract Etc.

St. Sebastian's Street, Mannar, Sri Lanka.
+94 23 222 3751, +94 765 900 216,
reeganshw.23@gmail.com
(+94) 77 888 2094

- Laser Cutting
- Sand Blasting
- Granite Engraving
- CNC Solutions
- Quality Printing
- Personalized Gift
- Custom Awards

# CYBER CITY

St. Sebastian's Road,
Mannar.
cybercityprint@gmail.com
0715797597

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

## JN Engineering & Service

0776688145, 0232050388
Chilawathurai Rd., Murunkan.

*work with passion*



Now Vehicle Recovery Service Available

Agent For

Hayleys Agriculture, DIMO, SINGER, Mobil 1, CALTEX, CEAT, dsl, YADEA

- Importers and Distributers of Harvesters, Tractors and Spare Parts
- We do all kind of Welding Works, Vehicle Services, Alignment and Hose Repair.
- We have all kind of Vehicle Tyres, Batteries,Oil and Filters.
- Agent for YADEA Electric Bike



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

# Srilanka's Leading Company in Jersey Printing




AA SPORTS

AA sports

A PLACE FOR EVERYONE

AA SPORTS

MANNAR

AA Sports Shop 0766898680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!




# FAITH TRANSPORT

COLOMBO - MANNAR - COLOMBO

155/3, Dam Street,
Colombo - 12
0114367698
0112324914

28, Eluthoor,
Mannar.
023 2222784
023 4920004

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!



## LOSINGTAN SERVICE PLACE

ThalvupaduRoad, Eluthoor, Mannar.

Our Services :

- Engine Oil Change – high-quality oils for longer engine life
- Filter Replacement (oil, air, fuel, cabin)
- Brake System Check – pads, discs, and fluid top-up
- Battery Testing & Charging
- Tyre Rotation & Pressure Check
- Suspension & Steering Check
- Cooling System Inspection – radiator, coolant levels, hoses
- Full Computer Scanning & Diagnostics
- General Safety Check (lights, wipers, seat belts, etc.)
- Authorized Distributor For:
- Tyres
- Batteries
- Spare Parts
- Oil & Lubricants



BOOK NOW 0777663038 ,0232223199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னெழில் மலர் சிறக்க வாழ்த்துகிறோம்!

அனைத்து விதமான 'ஜேசி' ஆடைகளுக்கும்
மன்னாரில் தரமான நம்பகமான
ஒரே தெரிவு

Infinity
apparel

**Infinity Apparel (Pvt) Ltd**

St Sebastian's Road,
(Near to Hospital Junction)
Mannar
Phone : 07 10 143 143
023 222 22 44




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஊடகமும் நானும்



வாஸ் கூஞ்ஞ
சிரேஸ்ட ஊடகவியலாளர்

**ஒரு பிரதேசத்தின் கலை, இலக்கிய வளர்ச்சியில் ஊடகத்துறையின் வகிபாகம் அளப்பரியது. மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளில் இருந்து அவர்களின் தேவைகள்வரை பட்டியல்படுத்துவதிலும், அவற்றிற்கு இயன்ற வரையில் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பது வரையிலும் ஊடகத்துறை ஆற்றும் பங்களிப்பு மகத்தானது. விசேடமாக, மன்னார் மாவட்டத்தின் கலை, பண்பாட்டு நிகழ்வுகளை வெளி உலகிற்கு எடுத்துச் சொல்வதிலும் கடந்த காலங்களில் ஊடகவியலாளர் அளப்பரிய பங்களிப்பையும் வழங்கியுள்ளனர். இந்த வகையில், மன்னார் மாவட்டத்தின் ஊடகத்துறை வரலாற்றில் பேசாலையூர் சிரேஸ்ட ஊடகவியலாளர் கலாவிபூசணம் திரு எல். கொன்சால் வாஸ் கூஞ்ஞ அவர்கள் "மன்னெழில் -3" மலருக்கு வழங்கிய செவ்வியில் அவரின் அனுபவப் பகிர்வு இக்கட்டுரையின் மூலம் பகிரப்படுகின்றது.**

திரு.லோரன்ஸ் கொன்சால் வாஸ் கூஞ்ஞ ஆகிய நான் 12.12.1953 இல் தலைமன்னாரில் பிறந்து மன்னார் பேசாலையை வசிப்பிடமாகக் கொண்டுள்ளேன்.

சிறு வயதிலே நான் வாசிப்பதில் ஆர்வம் கொண்டமையால் மன்னார் மாவட்டத்தில் ஒரு ஊடகவியலாளராக உட்புகுந்ததுடன் பல சவால்களுக்கு முகம் கொடுத்தவனாக பல விருதுகளையும் பெற்றவனாக உலக ரீதியில் எமது மாவட்டத்தையும் எனது நற்பெயரையும் பொறித்து வைத்திருப்பதில் எனக்கு ஆன்ம திருப்தி உண்டு.

நான் எனது ஆரம்பக் கல்வியை தலைமன்னார் மேற்கு புனித லோறன்ஸ் வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கல்முனை புனித பற்றிமா கல்லூரியிலும் கற்ற நான், 1967 ஆம் ஆண்டு தொடக்கம் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு வருகின்றேன். நான் மாணவனாக இருந்த காலத்தில் 1967 தொடக்கம் வடமாகாணத்தில் யாழ் மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் "சத்தியவேத பாதுகாவலன்" பத்திரிகைக்கு எங்கள் பகுதி கத்தோலிக்க செய்தியாளராக தடம் பதித்தேன்.

மட்டக்களப்பு பகுதியில் கல்வி கற்ற காலத்தில் 1975 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் கத்தோலிக்கப் பத்திரிகையான "தொண்டன்" பத்திரிகைக்கு எனது ஆக்கங்களை எழுதி வந்தேன். பின்னர் நான் 1976 ஆம் ஆண்டு முதல் கொழும்பிலிருந்து பிரசுரிக்கப்பட்டு வரும் சர்வதேச பத்திரிகை ஸ்தாபனமான 'எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் சிலோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிமிற்றட்' பத்திரிகை நிறுவனத்திலிருந்து வெளிவரும் செய்தித்தாளான "வீரகேசரி" மற்றும் இவ் நிறுவனத்தின் ஏனைய பத்திரிகைகளுக்கும் இன்றுவரை மன்னார் மாவட்டத்தின் பிராந்திய செய்தியாளராக தலைமன்னார் நிருபர் அல்லது வாஸ் கூஞ்ஞ என்ற பெயரிலும் இதனைவிட சக்தி எவ்.எம் .நியூஸ் போஸ்ற் ஆகியவற்றுக்கு 2003 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மன்னார் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி வருவதுடன் தொடர்ந்து தற்பொழுது "உதயன்", "தினகரன்"- "சுபீட்சம்" – "தமிழ் கத்தோலிக்க மீடியா" போன்ற வெளிநாட்டு செய்தி ஊடகங்களுக்கும் எனது செய்திப் பணிகள் தொடர்கின்றன.

எனது ஊடகப்பணியானது தற்பொழுது ஐம்பது வருடங்களை எட்டியிருக்கின்ற போதும் இக்காலக்கட்டத்தில் நான் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வந்தவன். ஆரம்பக்காலத்தில் சுமார் 20 வருடங்களாக நான் ஒரு செய்தியாளன் என்பதை இனம் காட்டாது இலைமறை காயாகவே எனது பணியை முன்னெடுத்து வந்தேன்.

**நான் எதிர்கொண்ட சவால்கள்**

மன்னாரில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் "எழுத்தாளர்கள் யார் இங்கு இருக்கின்றார்கள்" என எங்கள் பகுதியில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டன. அச்சமயம், நானும் எனது மூத்த சகோதரனும் படையினரால் கைது செய்யப்பட்டு தள்ளாடி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். எனது சகோதரன் கைது செய்யப்பட்டமைக்கு காரணம் நான் செய்தியில் செய்தியாளர் 'கூஞ்ஞ' என்று எழுதுவேன். அதனால்தான் கூஞ்ஞ என்பவர் யார் என்று கண் வைக்கப்பட்டதில் என்னுடன் எனது சகோதரனும் அகப்பட்டார். பினனர். இதைத் தொடர்ந்து நான் மூன்று முறை படையினரால் விசாரணைக்கு என தள்ளாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். இவ்வாறு ஒரு முறை நாலாம் மாடிக்கும் அழைக்கப்பட்டேன்.

அந்தக் காலத்தில் எனது ஊடகத் தொழிலில் என்னிடம் இருந்த அமைதி, உண்மைத் தன்மை, நேர்மை ஆகியவை இருந்தமையால் அந்நேரம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய அமரர் கே.கணேஷ் அவர்கள் மற்றும் அந்நேரம் தலைமன்னாரில் பொலிஸ் அதிகாரியாக இருந்த அமரர் கே.அரசரெட்ணம் அவர்கள் மற்றும் எங்கள் வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றிய செய்தி ஆசிரியரும் சட்டத்தரணியுமான அமரர் கே.சுபாஸ் சந்திரபோஸ் அவர்களும் எனது விடுதலைக்கு பெரும் பங்களிப்பு செய்ததை நான் என் வாழ்நாளில் மறக்க முடியாது.

அக்காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பலர் காணாமல்போன வேளையில் நான் தப்பித்துக் கொண்டேன் என்றால் என்னிடமும் எங்கள் குடும்பத்தில் இருந்தவர்களிடமும் காணப்பட்ட தெய்வப் பக்தியே. இறைவன் இவர்கள் மூலமாக எனது விடுதலைகளுக்கு உதவினார் என்பதுதான் இன்றும் எனது நம்பிக்கை. இதன் தொடர்ச்சியாக, தலைமன்னார் இராணுவப் பொறுப்பதிகாரி என்னை அணுகி "உமக்கு எதிராக என்ன முறைப்பாடு கிடைத்தாலும் நீர் கைது செய்யப்படமாட்டீர்" என்று எனது முதுகில் தட்டி நம்பிக்கையூட்டிச் சென்றமை இன்றும் என் கண்முன்னே நிற்கின்றது.

1985 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மன்னாரில் யுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்தபொழுது தலைமன்னார் பகுதியில் வசித்த அனைத்து தமிழ் மக்களும் இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்று விட்டனர். அப்பொழுது தமிழன் என்று நான் ஒருவன் மட்டுமே தலைமன்னார் பியர் முஸ்லீம் மக்களுடன் வாழ்ந்து கொண்டு எனது செய்திச் சேவையை முன்னெடுத்து வந்தேன்.

இப்பகுதி மக்கள் இரண்டு முறை அகதிகளாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்த போதும் நான் இடம்பெயராது ஊடகத் துறையில் எனக்கு இருந்த ஆர்வத்தால் இடம்பெயராது தலைமன்னார் பேசாலையிலேயே தங்கியிருந்தேன். இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுக் குள்ளும், போராளிகளின் கட்டுப்பாட்டுக் குள்ளும் இருந்தபோதும் இருவர் பக்கங்களும் சார்ந்திராது நான் நடுநிலைமையை கடைப்பிடித்தமையால் இருவரிடமும் தப்பித்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெல்லாம் செய்தியை சேகரித்து விட்டால் அவற்றை அனுப்புவதென்றால் மிக மிக கடினம். அன்று பொது மக்களிடம் தொலைபேசி கிடையாது திணைக் களத்திலும் ஒருசில முக்கியஸ்தர்களிடமும் தான் தொலைபேசிகள் காணப்பட்டன. நான் ஒரு அவசர செய்தியை எனது நிறுவனத்திற்கு அனுப்புவதென்றால் தபாலகம் சென்று தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும். குறைந்தது மூன்று மணித்தியாலம் தபாலகத்தில் காவல் நின்று அதன் பின்பே எனக்கு தொடர்பை ஏற்படுத்தி தருவார்கள். நான் செய்தியை வாசிக்க அலுவலகத்தில் உள்ளவர் அவசரம் அவசரமாக எழுவார் அவசரமற்ற செய்திகள் தபாலிலே அனுப்புவது வழமையாக இருந்தது. ஆனால் இன்று இந்த நிலை மாறிவிட்டது.

அன்று செய்தி சேகரிக்க செல்வதென்றால் போக்குவரத்து பெரும் பிரச்சனையாக இருந்தது. இலங்கை போக்குவரத்து சபை சேவையை தவிர வேறு போக்குவரத்து சேவைகள் கிடையாது. ஆனால் அன்று அரசியல்வாதிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகளின் நிகழ்வுகள் தூர இடங்களில் நடந்தால் செய்தியாளர்களால் மட்டுமே அதை வெளிக்கொணர முடியும் என்ற நிலை இருந்தது. அன்று இந் நிலை இருந்தமையால் அந்தநேரம் ஊடகத் துறையினருக்கு பெரும் கிராக்கி காணப்பட்டது. அவர்கள் என்னையும் அவர்களுடன் அழைத்துச் செல்வர்.

நெருக்கடி நிறைந்திருந்த காலத்தில் இராணுவம் மற்றும் இயக்கக் கட்டுப்பாட்டுக்குள் மன்னார் தீவு இருந்தபொழுது வீதிகள் எல்லாம் படும் மோசமாக இருந்தன. போக்குவரத்துக்கு பெரும் பாதிப்புக்கள். இராணுவம் பாதைகளை புனரமைக்க அனுமதி கொடுக்க மறுத்து விட்டனர். முன்னாள் மன்னார் அரசாங்க அதிபர் அமரர் கே.கணேஸ் ஐயா அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் அவரின் வாசஸ்தலத்தில் திணைக்கள உயர் அதிகாரிகளான அவரின் நண்பர்களுடன் நட்பு ரீதியான ஒன்றுகூடல் ஒன்றை நடாத்துவார். மன்னார் தீவு மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடுவார். அந்நேரம் என்னையும் இவர்களுடன் இணைத்துக் கொள்வார். அப்பொழுது தான் தந்ததாகக் காட்டிக் கொள்ளாது மக்கள் குறைகளை பத்திரிகையில் வெளியிடுமாறு பல தகவல்களை தந்து உதவுவார். இதில் ஒன்று மன்னார் தலைமன்னார் பிரதான வீதியின் அவல நிலையைப்பற்றி ஒரு கட்டுரை எழுதும் என தடைகளையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்பொழுது நான் வீரகேசரிக்கு ஒரு கட்டுரை எழுதினேன் அதாவது **'மன்னார் தலைமன்னார் வீதியில் ஆமைகள் நீந்தி விளையாடுகின்றன'** என்ற தலைப்பில் எழுதினேன். இந்த வீதியை திருத்தும்போது இயக்கம் கண்ணிவெடிகளை புதைத்து விடுவார்கள் என்று தடை செய்த படையினர் இக்கட்டுரை வெளி வந்ததும் என்னை விசாரணைக்கு உட்படுத்தினர். இருந்தும் இந்த வீதியை அடுத்த நாளே திருத்த நடவடிக்கை எடுக்கவும் என அரச அதிபருக்கு கட்டளை வந்தது. காரணம் பத்திரிகையைப் பார்த்து உயர்மட்ட அழுத்தம் என தெரியவந்தது. இவ்வாறு பல சம்பவங்கள். செய்தியாளர் என்ற ரீதியில் நான் முகம் கொடுத்த சம்பவங்களும் உண்டு.

இருபதாம் நூற்றாண்டில் மன்னார் மாவட்டதிற்கு எனக்கு முன்பு இரண்டு செய்தியாளர்கள் மட்டுமே நான் அறிய இருந்தார்கள். ஒருவர் அமரர் ஜனாப் மஸ்தான் செய்யது மற்றயைவர் அமரர் ஜனாப் நூ முகமது முகமது அப்துல் சமீது ஆகியோர் மட்டுமே தமிழ் ஆங்கில செய்தியாளர்களாக காணப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று பத்திரிகைத் துறையானது ஒருவரிடம் கையடக்க தொலைபேசி இருந்தால் போதும் என்பதால் ஜனநாயகதத்தின் நான்கு தூண்களில் ஒன்று பத்திரிகைத் துறை. என்ற மதிப்புடன் இருந்த பத்திரிகைத் துறை இன்று எந்த நிலைக்கு போயிற்று என்று இங்கு சுட்டிக்காட்டுவதைவிட நீங்களே விளங்கிக் கொள்வீர்கள். இன்று சமூக வலைத் தளங்கள் உருவாகியமையால் படிப்பும் தேவையில்லை, பயிற்சியும் தேவை யில்லை. இன்று யாரும் பத்திரிகைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலை செய்யலாம் என்ற நிலை உருவாகி விட்டது.

இது வரவேற்கப்பட்டாலும், ஆபத்தான தொன்றாகும் என யாவராலும் உணரப்படுகின்றது. பொய்யான செய்திகள் பரப்பப்படுகின்றது செய்திகள் திரிக்கப்படுகின்றது ஒருவரின் நல்ல பெயர் கெடுக்கப்படுகின்றது

செய்தியாளர் என்ற கடின உழைப்பில் எனக்கு பல விருதுகள் வழங்கப்பட்டன

- 2000 ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட ஆயள்வேத வைத்தியர் சங்கம் கௌரவித்தது.
- 2005 இல் மன்னார் பிரதேச செயலகம் ஊடகவியலாளர் கௌரவத்தையும்
- 2015 இல் அகில இலங்கை ஊடகச் சங்கம் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் கௌரவத்தையும்,
- 2016 இல் மன்னார் கம்பன் விழாவில் 'ஊடகமணி' விருதையும்,
- 2016 இல் நியூஸ் பஸ்ற் சக்தி எவ்.எம். ஊடகத்துறையில் 'நீண்டகால சேவையாளர்' விருதையும்,
- 2017 இல் அரசின் தமிழ் தேசிய விழாவில் 'தலைசிறந்த ஊடகவியலாளர்' விருதையும்,
- 2018 இல் தலைமன்னார் பியர் வாலிபர் விளையாட்டு கழகம் 'வாழ்நாள் சமூக சேவையாளர்' விருதையும்,
- 2018 ஆம் ஆண்டு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 'முதலமைச்சர் விருதையும்,'
- 2018 ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட சொக்கோ மாஸ்ரர் விளையாட்டு கழகம் இவர் வீரகேசரி பத்திரிகை துறையில் 45 வருடகால தன்னலமற்ற சேவையாளர் என்ற கௌரவிப்பு விருது வழங்கியும்
- 2019 இல் 'மெசிடோ' நிறுவனம் மனித உரிமை செயற்பாட்டுக்களுக்கான விருதையும்,
- 2019 ஆம் ஆண்டு தமிழமுது நண்பர்கள் வட்டம் ஊடகத்துறையில் 50 வருடங்களாக அரும்பணியாற்றி வருவதை முன்னிட்டு 'புகழேந்தி' எனும் விருதையும்
- 2021 ஆம் ஆண்டு'சாமசிறீ தேசமானிய ஊடக அபிமானி' என்ற விருதையும்.
- 2022 ம் ஆண்டு மன்னார் மாவட்டத்தின் கலை . பண்பாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு ஊடகத்துறை மூலமாக தமது பங்களிப்பை செலுத்தியமைக் காக 'செய்திச் செம்மல்' என்ற விருதையும்
- 2023 ஆம் ஆண்டு'கலாவிபூஷணம்' விருதும்
- 2023 ஆம் ஆண்டு இவர் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவில் 2018 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் கௌரவ ஆளுநர் சபை உறுப்பினராக சிறப்புற சேவையாற்றியமைக்கு பாராட்டுப் பெற்ற விருதும்
- 2023 ஆம் ஆண்டு விழிகள் கலா முற்றத்தினால் 'ஊடகத்துறை சேவைக்கான' விருதையும் பெற்றுள்ள இவர் ஊடக சம்பந்தமான சான்றிதழ்கள்

'Aspects Reporting Fields in Media Law Defense Crime Courts' 2000

நிமலராஜன் ஊடக ஒத்துழைப்பு - 2001

'Reporting on Children'– 2008

Training Worksshop on Journalism and Trauma – 2010

Training Worksshop on Reporting Post Conflict Related Issues – 2011

'Asi Disi Vinsa'– 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை அறிக்கை தொடர்பான கல்விக் கருத்தரங்கு -2013

Safety Training Worksshop for Journalists – 2014

போன்ற பயிற்சிகள் பல பெற்று சான்றிதழ்களும் பெற்றுளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய பத்திரிகையாளர்களுக்கு நான் சொல்ல வேண்டியது இதுதான் இந்தியாவின் இதழியல் துறையின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த தமிழ் இதழாளர்களின் தந்தை என அழைக்கப்படும் இந்தியாவின் தினத்தந்தி சி.பா. ஆதித்தனார் - பத்திரிகையாளன் ஆவதற்கு பத்திரிகை இயல் பயிற்சி தேவை இல்லை. மனதில் நினைத்ததை- நேரில் பார்த்ததை- பிறர் சொல்லக் கேட்டதை- இலகு மொழியில் எழுதத் தெரிந்திருந்தால் போதும். சொல்ல விரும்பும் விடயத்தை தெளிவாக இலகுநடையில் சொல்லும் விதத்தில்தான் பத்திரிகையாளனின் திறமை மிளிர்கிறது என்கிறார்.

இன்று பத்திரிகைத்துறை பரந்து வளர்ந்து வளமும், வனப்பும் கொண்ட ஒரு துறையாகிவிட்டது. ஊடகவியலின் அனைத்து அம்சங்களையும் தன்பால் இணைத்துள்ள ஒரு துறையாகிவிட்டது.

செய்தியை சேகரித்தல், எழுத்துருவில் வெளிக்கொணர்தல்- திருத்தம் செய்தல்- வடிவமைத்தல்- பிழைநீக்கி அச்சிடல் ஆகிய அனைத்துப் பணிகளும் ஆய்வு ரீதியிலும் அணுகுமுறையிலும் பத்திரிகை இயலை ஓர் அறிவியல்சார் விஞ்ஞான மாகவே ஆக்கியுள்ளன. சுருக்கமாகச் சொல்வதானால் பத்திரிகைத்துறை இன்று தக்க பயிற்சி இன்றி மேற்கொள்ளப்பட முடியாத ஒரு துறையாகவும் கலையா கவும் மாறிவிட்டது.

எனது பத்திரிகை துறைக்கு அத்திவாரமிட்ட கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகையும் வருடந்தோறும் பத்திரிகையாளராக வர விரும்புவோருக்கான பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றது. 2001ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பயிற்சிநெறியில் 75இற்கு அகதிகமான மாணவர்கள் பயிற்சி பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் 19 மாசி 1876ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 2001ஆம் ஆண்டு பாதுகாவலன் 125ஆவது ஆண்டாகும்.

இவ்வாறு எனது பெயரை உலக ரீதியாக பரப்பிய வீரகேசரி இன்று 95 வருடங்களை நிறைவு செய்துள்ளது. இந்த பத்திரிகை நிறுவனம் இன்றும் என்னை ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளராக மதிப்பை அளித்துக் கொண்டிருப்பது செய்தித்துறையில் எனது பதிவுகளும் நேர்மை உண்மைத் தனத்திற்கும் ஒரு சான்றாக அமைந்துள்ளது.

அத்துடன் அன்று நான் ஒரு சிறந்த செய்தியாளனாக இருக்க எங்களுக்கு போதிய பயிற்சிகளும் வழிகாட்டல்களும் அற்ற நிலை காணப்பட்டபோதும் பத்திரிகைத் துறையில் பல பாண்டித்தியம் பெற்ற அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் 2021ம் ஆண்டு வெளியிட்ட 'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' என்ற நூல் அன்றும் இன்றும் எனக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது பெருமையாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கின்றது.

ஆகவே வளரும் செய்தியாளர்களே நன்றாக வாசியுங்கள் செய்தி சேகரிப்பில் நுணிப்புல் மேயாதீர்கள், நேர்மையாக இருங்கள், உண்மையாக இருங்கள், ஒரு செய்தியாளர் கழுத்தில் கத்தி இருக்கின் றது, கயிற்றில் நடக்கின்றோம் என்ற உணர்களுடன் கவனமாக இருங்கள் அப்பொழுது நீங்கள் ஆன்ம திருப்தியுடன் இருப்பீர்கள் அப்பொழுது இறைவனால் உயர்த்தப்படுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புற இலக்கியங்களில் ஒப்பாரி



திருமதி அனுசன் கெனடி கிஷோ றொனிக்கா
யோசவாஸ்நகர்

எமது நாட்டின் கிறிஸ்தவ சமயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடுகள், படிப்பினைகள், போதனைகள், புனிதர்களின் வரலாறுகள் பழைய புதிய ஏற்பாட்டின் சம்பவங்கள் இன்னுங்குறிப்பாக கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்புச் செய்திகளை கூறும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறு தோன்றிய இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்கள் எனலாம்.

இந்நாட்டார் இலக்கியமானது எம் முன்னோர்களின் தொழில் அனுபவங் களாலும், பண்புகளாலும், மனித நேயத்தாலுமே மேம்பட்டிருந்தது. “வாழ்க்கை மூலம் பெறப்படும் அனுபவமே கல்வி” என்ற கல்விச்சிந்தனையாளரின் கருத்திற்கொப்ப எம் முன்னோர்கள் தம் வாழ்வின் அனுபவங்களை அவ்வப்போது பாடல்களாகவும், கருத்துத் தொடர்களாக வும் வெளிப்படுத்திச் சென்றுள்ளனர். தங்களது மண்வள சொற்களையும் ஆழமான பொருள் நயத்தையும் கொண்டு படிப்பவர்கள் சுவைத்து இன்புறக்கூடிய நவரச உணர்ச்சிகளின் பால் இவை எம்மவரை ஈர்த்துள்ளன. ஓசைநயமும், ஒத்த ஒலியும், பொருட்செறிவும் கொண்டு சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற்போல் அவ்வப்போது பாடப்படுகிறது.

இவ் நாட்டார் இலக்கியம் எடுகின்ற பொருளை தாக்கமாக விளக்குவதற்கு ஏற்ப தெரிவாகின்றன. அவ்வகையில் கூறுகின்ற விடயம் இன்பம், துன்பம், பக்தி, காதல் மற்றும் வீரம் என அதன் தன்மைக்கு மாறுபடும். அதற்கமைய இந்நாட்டார் இலக்கியங்கள் அம்மானை, பள்ளு, நாட்டுக்கூத்து, ஒப்பாரி என சிலவற்றை குறிப்பிடலாம்.

ஒப்பாரிப்பாடல் என்பது இறந்தவர்களின் நினைவாகவும் அவர்களின் இழப்பிற்கா கவும் உறவினர்கள் மற்றும் நண்பர்களால் பாடப்படும் பாடலாகும். இது ஒரு துக்கபாடலாகவும், புலம்பல் பாடலாகவும் கருதப்படுகிறது. இவ்வொப்பாரி பாடலானது கிராமத்து மக்களுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. தங்களது தாய், தந்தை, கணவன், பிள்ளை, உற்றார், உறவினர் எவரேனும் இறந்துவிட்டால் ஒருவரினுடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரிப்பாடல் பாடப்படுகின்றது. இறந்தவரின் வரலாறு பற்றி தெரியாதவர்கள் அப்பாடல் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வரலாற்றை அறிய முடியும். ஒப்பாரிப்பாடல்களின் இசை விளம்பலும் மத்யமும் கலந்து ஒரு லய அமைப்பில் "முகாரி, ஆகிரி" முதலான இராகச் சாயலுடன் விளங்குகின்றது.

ஒப்பாரி எனும் சொல்லினுடைய பதம் என்னவென்றால் ஒப்பு + ஆரி என பொருள்படுகின்றது. அதாவது ஒப்புச் சொல்லி ஆர்ப்பரித்து அழுவது என்பது ஒப்பாரியின் விளக்கமாகும். ஒப்பாரிப்பாடல்களின் வடிவங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மற்றும் தமிழர்கள் வாழும் இலங்கை மலேசியா முதலான நாடுகளிலும் பதிவு செயயப்பட்டுள்ளன. ஒப்பாரி பாடல்களைப் பாடப்படும் சூழல் அடிப்படையில் இறந்தவுடன் பாடும் பாடல், இறுதிச் சடங்குகிளல் பாடப்படும் பாடல், இறந்த எட்டாம் நாள், ஆண்டுக்கு ஒருமுறை இறந்த நாள் வரும்போதும், இறந்து பல ஆண்டுகள் ஆகியும், பலருடைய இறப்பில் பங்கேற்கும் போதும் பாடப்படும் பாடல்கள் என பலவகையாக பிரித்துக்காட்டலாம். இவ்வொப்பாரிப்பாடலை "கையறு நிலைப்பாடல், புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு எனப்பல்வேறு பெயர்களில் குறிப்பிடுவர். (பிலாக்கணம், பிணக்காணம், இழப்பாட்டு அழுகைப்பாட்டு) ஆங்கலத்தில் ஒப்பாரியை Elegy, dirge, death lament, mouring song என்ற பெயர்கள் சுட்டுகின்றன. இவை அனைத்தும் காசுக்காக பாடுவது என்ற பொருள் தந்தாலும் சில நுணுக்கமான வெறுபாடுகள் உண்டு.

ஒப்பாரிப்பாடல்கள் பல்வேறுபட்ட அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது துக்க வெளிப்பாடு, உறவுமுறை வெளிப்பாடு, நனைவுகூர்தல், சடங்கு என்பனவாகும். இதில் துக்க வெளிப்பாடு எனப்படுவது இறந்தவரின்பால் கொண்ட பாசத்தின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றது. நினைவுகூர்த்தல் என்பது இறந்தவரினுடைய நற்குணங்கள், செயல்கள், மற்றும் அவர்களின் வாழ்க்கையை நினைந்து பாடப்படுகின்றது. இறுதியாக சடங்கு எனப்படுவது ஒப்பாரிப்பாடல்கள் இறப்பின் சடங்கின் ஒரு பகுதியாக காணப் படுகின்றது. இவ்வாறாக ஒப்பாரிப் பாடல்களின் முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன.

மேலும் ஒப்பாரியின் போது பறை மற்றும் உறுமி ஆகிய இசைக்கருவிகளை தமிழர்கள் இசைத்து வந்துள்ளதை ஒப்பாரிப்பாடல்களில் வரும் வரிகள் மூலமாக அறியமுடிகிறது. உதாரணமாக "பறையொலிக்க போனதென்ன" என்றும் "உறுமிச் சத்தம் கேட்கும் நாள் வருமோ" என்றும் பாடப்படும் வரிகள் இறப்பிற்கே தனி இசையும் இசைக்கருவிகளும் இன்றைய நாட்களிலும் இறுதி ஊர்வலத்தின் பறை (தப்பு) இசைக்கப்படுவது ஒப்பாரியின் மரபுவழி தொடர்ச்சியை உணர்த்துகிறது. ஒப்பாரிப்பாடலானது ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் அமையப் பாடப்படுகின்றது. அதாவது தமிழகத்தில் நெஞ்சல் அடித்துப்பாடும் வழக்கமாக ஒப்பாரியை பாடுவதற்கு என்றே கூலி கொடுத்து ஆட்களை வரவழைக்கும் வழக்கம் இருந்துள்ளது. அதை வைத்தே கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் என்ற சொற்றொடர் உருவாகியுள்ளது.

ஒப்பாரியானது சொல்லி அழும் போது அழுபவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உள்ள உறவைப்பொறுத்து அவர்களின் விழிப்புக்கள் வேறுபடுகின்றன. அதாவது இறந்த

கணவனை - அவன் மனைவி

-"அதிகாரி சீமை அதிகாரி"

இறந்ததாயை - அவள் மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "என்னை பெத்த அம்மா என்னைப் பெத்தாள்"
இறந்த அத்தைக்கு - அவள் மாமியார் -"என்னை தேடிய அம்மா"
சகோதரிக்கு - "எம் பொறவி அம்மா, எம் பொறவி ராசாத்தி:
சகோதரனுக்கு - எம் பொறவிராசா, எம் பொறவி, சீமை அதிகாரி என்றும்"
கணவனின் மூத்த சகோதரனுக்கு
- "மாமனாருக்கு சொன்னது என்றும்"
கணவனின் இளைய சகோதரிக்கு
- "தோழியர் அம்மா"
கணவனின் இளைய சகோதரனுக்கு
- "தங்கதுரைஜயா" "சின்னத்துரை ஐயா" என்றும்
ஒப்பாரிபாடுவதில் அந்தந்த வட்டார சொற்கள் இடம்பெறுவதை காணமுடிகிறது.

இறந்தவரிகளின் ஆன்மாக்கள் ஒப்பாரி பாடுவதினால் சாந்தியடைவதாகவும், ஒப்பாரி பாடாவிட்டால் ஆன்மாக்கள் துன்புறுவதாகவும் இவ்வுலகம் விட்டு மறுவுலகம் செல்ல ஒப்பாரிகளே இறக்கைகளாக பயன்படுவதாகவும் இவற்றால் ஆன்மாக்கள் மூலம் தீங்குவராமல் காக்க முடிகிறது என்றும் மக்கள் நம்புகின்றனர். இதை நோக்குமிடத்து ஒப்பாரி நம்பிக்கை சார்ந்தும் பாடப்பட்டும் வருகிறது என்பதனை அறிய முடிகின்றது.

இலங்கையில் கத்தோலிக்க மதத்தின் வருகைக்குப்பல ஆண்டுகளுக்கு முன்பே நாட்டார் இலக்கியங்கள் வழக்கில் இருந்திருக்கின்றன. மறைபரப்பு நோக்கோடு இங்கு வருகைதந்த மறைபோதகர்கள் மக்களால் பெரிதும் விரும்பிப்பாடப்படும் நாட்டார் இலக்கியங்களின் வடிவங்களைத் தழுவிய கிறிஸ்தவ நாட்டார் இலங்கியங்களை ஆக்கினர். அதாவது ஏற்கனவே பாவனையிலுள்ள நாட்டார் இலங்கியங்களை ஆக்கும் ஆற்றல்களை கொண்டு விளங்கிய புதிய கிறிஸ்தவர் களின் துணையோடு ஆக்கப்பெற்றவை. இவ்வாறு ஆக்கப்பெற்ற இலக்கியங்கள் ஒருவகையிற் கிறிஸ்தவ நாட்டார் இலக்கியத்தின் தோற்றத்திற்கு வழிவகுத் ததோடு மறுபுலத்தில் கிறிஸ்தவர்களது இலக்கியப்படைப்பு ஆற்றலையும் திறமையையும் வெளிக்கொணர ஏற்ற சந்தர்ப்பங்களாகவும் விளங்கின.

இவ்வாறாக ஆக்கப்பட்ட இலக்கியங்களில் ஒன்றே ஒப்பாரி இலக்கியமாகும். ஒப்பாரி இலக்கியத்தின் பண்புகளை உள்ளடக்கிய தாக கிறிஸ்தவர்களின் சிந்தாகுலத்திரட்டு, பேரின்பக்காதல், வியாகுல ஒப்பாரி இலக்கியங்கள் ஆக்கப்பட்டுள்ளது. சிந்தாகுலத் திரட்டு இலக்கியத்தின் பயன்பாட்டை நோக்கும் பொழுது இது கிறிஸ்தவர்களின் அடக்கச்சடங்கு, அடக்கப்பவனி, கிறிஸ்துவின் பாடுகளின் வாரம், பெரிய வெள்ளி, ஆசந்திபோன்ற கிறிஸ்தவ சமூக வழிபாட்டு சடங்குகளில் பாடப்பட்டிருக்கின்றன. இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

"பேரின்பக் காதல்" என்னும் இந்த ஒப்பாரி உலகைப் படைத்துக்காப்பாற்றும் நித்தியரும், சத்தியரும் தேவதூதரும் போற்றும் தெவ்வீகருமாகிய யேசுநாதர் சுவாமியை பேசுபொருளாக கொண்டது. இயேசுவின் பாடுகளைப்பற்றி தியானிக்கும் தவக்காலத்தில், வியாகுல ஒப்பாரி, நடுத்தீர்வை உலா ஆகிய நூல்களில் உள்ள பாடல்களைப் பாடும் வழக்கம் நமது நாட்டுப்புறங்களில் இன்னமும் இருப்பதைக் காணலாம்.

இவ்வொப்பாரி வடிவமானது ஆரம்ப காலத்தில் எம் விடத்தல் மண்ணில் தொழிலை அடிப்படையாக கொண்டு நவாலி, நாவாந்துறை ஆகிய இடங்களில் இருந்து வருகை தந்தவர்கள் விடத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவில் அதனை பயன்படுத்தி எம் மூதாதையருக்கும் அதனை பயிற்று வித்தனர். அவ்வகையில் 1915ம் ஆண்டு வாழ்த்தவர்கள் இவ்வொப்பாரியை பல்வேறு கிறிஸ்தவ பாரம்பரிய நிகழ்வின் போது பயன்படுத்தியமை குறிப்பிடத் தக்கது. பிற்பாடு 1930 ஆண்டு இது பரிமாணமடைந்து புதிய சொற்றொடர் பிரயோகங்களுடன் அதிகமாக சரணங் களால் பாடப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. மூதாதையர் தாம் பெற்ற செல்வத்தை அங்கு வாழ்ந்த இளையோருக்கு அளித்து அவர்களும் அதை பயன்படுத்த அருளி இருக்கின்றனர். 1999ம் ஆண்டு போர்க்கால சூழ்நிலையால் புலம்பெயர்ந்த மக்கள் ஜோசவாஸ்நகர் மண்ணில் 2001ம் ஆண்டு குடியேறிய திலிருந்து இற்றைவரை அதே விசுவாசத்தோடும் இவ்வொப்பாரி வடிவத்தை பயன்படுத்துகின்றனர்.

இது மூதாதையரின் விசுவாச அனுபவ வெளிப்பாடாக படைத்து பாரம்பரியமாக கையளிக்கப்பட்டு வரும் இவ்விலக்கிய செல்வங்களை அழியவிடாது காப்பதும் எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதும் இன்றைய சமூகத்தின் பெரும் கடமையாகும்.

தகவல் பெறப்பட்டது:
மூத்த கலைஞர்
1. மாசிலாமணி பிரான்சிஸ்
2. அண்ணாவியார் கிளமன்ற்



**மன்னார் மாவட்ட செயலக ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் - 2025**

**மாந்தைமேற்கு, மன்னார் பிரதேச கலைபண்பாட்டுப் பெருவிழா - 2025**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்ட (மாதோட்ட) கூத்துக்களில் தென்மோடி வடமோடி நாட்டுக்கூத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகள் பற்றிய ஓர் தொகுப்பு



**கலைமாமணி செ. மாசிலாமணி**
அண்ணாவியார்
ஆவணம், நானாட்டான்

மன்னார் நாட்டுக்கூத்துக்கள் தென்மோடி, வடமோடி என்று பல நூற்றாண்டுகளாக பாடி ஆடப்பட்டு வருகின்றன. ஓரிரவுக் கதை கூத்துக்களை வாசகப்பா (வாசாப்பு) எனவும் உ-ம் சந்தோமையார் வாசாப்பு , இரண்டிரவு அல்லது மூன்றிரவு கதைக் கூத்துக்களே கூத்து நாடகங்கள் உ-ம் என்றிக்கு எம்பரத்தோர் நாடகம், சந்திரகாசன் நாடகம் (மூன்றிரவு) எனவும் பொதுவாக அழைப்பார்கள். மன்னார் மாவட்டத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தென்மோடி (தென்பாங்கு) சந்தோமையார் வாசாப்பு ஒரு கலப்பற்ற தனித்துவம் வாய்ந்த முற்றுமுழுதாக தென்பாங்கு பாடல்களை, மெட்டுக்களை, வண்ணங்களை கொண்டதாக உள்ளது இதைப் புலவர் மரிசால் மிரால் (குப்பையாபுலவரால்) 1853 ஆண்டு காலப்பகுதியில் அதாவது 168 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதாக அருட்திரு.தமிழ் நேசன் அடிகள் சந்தோமையார் வாசாப்பு இரண்டாம் பதிப்பு கருத்துரையில் 8ம் பக்கத்தில் 2021ம் ஆண்டில் பதிவு செய்துள்ளார்.

அடுத்து மன்னார் மாதோட்ட புலவர்களின் வரலாற்றில் அறிப்படும் முதற் புலவராகிய லோறஞ்சுப்பிள்ளை அவர்களுடைய மகளின் புதல்வனே என்றிக்கு எம்பரத்தோர் நாடகத்தை எழுதிய கீத்தாம்பிள்ளை புலவர் ஆவார். 1978 ஆண்டு காலப்பகுதியில் இது எழுதப்பட்டது. இது இரண்டு இரவு கதை கூத்து நாடகம் எனவும் வடமோடி (வடபாங்கு) என மக்களால் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. சந்தோம்மையார் வாசாப்புப் பார்க்க, எம்பரத்தோர் நாடகம் பார்க்கப் போகின்றோம் என்று சொல்வார்களே யொழிய சந்தோமையார் நாடகம் பார்க்க எம்பரத்தோர் வாசாப்புப் பார்க்க போகின்றோம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்

ஈழத்தமிழர்களின் தேசிய கலை வடிவம் கூத்து ஆகும். கூத்துக் கலையை நாட்டார் கலைகளுக்குள் மட்டும் அடக்கி விடமுடியாது என்பதற்கு மன்னார் மாதோட்ட வாசாப்புக்களும் நாடகங்களும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன. குறிப்பாக, பாடல் மெட்டுக்களே மன்னார் மாதோட்டக் கூத்துக்களை ஏனைய மாவட்டத்தின் கூத்து அளிக்கைகளில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன என்று மன்னார் மாதோட்ட சந்தோமையார் வாசாப்பு என்றிக்கு எம்பரத்தோர் நாடக மெட்டுகளுக்கு இசைக் குறிப்புக்களையும், மெட்டுவகையினையும், தாளங்களையும் இளைய சந்ததியினருக்கு மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்தரக்கூடிய விதத்தில் மிகவும் துல்லியமாக ஆய்ந்து அறிந்து ஒலிப் பேழையை நெறியாக்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. தவநாதன் றொபேட் அவர்கள் மன்னார் மாதோட்ட வாசகப்பா நாடக மெட்டுக்கள் பாகம் 1 ல் குறிப் பிட்டுள்ளார்.

கர்நாடக சங்கீதத்தில் கீதம், இலட்சண கீதம், ஸ்வர ஜதி, ஜதீஸ்வரம், கீர்த்தனை சௌக கால, மத்தம கால வர்ணம் கீர்த்தனை வர்ணம், பத வர்ணம்,தான வர்ணம் போன்ற பல வகையான உருப்படிகள் உள்ளன. அதேபோன்று மன்னார் நாட்டுக்கூத்துக்களிலும் பல உருப்படிகள் உள்ளன. தென்மோடி சந்தோமையார் வாசாப்பில் வெண்பா, தார்க்கவி, கட்டியன் சபையடக்கச்சிந்து. வண்ணம் (தரு), பாயிரம், மங்களத்தரு கூறல், இராயன்சிந்து, களிநெடில், நாட்டு வளமைச் சிந்து, இன்னிசை, திருவாசகம், கல்வெட்டு நடை, அட்டகம், காதல் தாழிசை, அகவல் போன்ற 19க்கு மேற்ப்பட்ட கூத்து உருப்படிகள் குப்பைய புலவர் அவர்களால் பாடப்பட்டுள்ளன.

இரண்டு இரவுக் கதையான என்றிக்கு எம்பரதோர் நாடகத்தில் காப்பு விருத்தம், தோடயம், ஆடல்தரு,சபைகவி அகவல், முடிசூட்டு வெண்பா, கொச்சகம், கொச்சகத்தரு, திருவாசகம், பரணி, உலா தாழிசை, தேவாரம் போன்ற 18க்கு மேற்பட்ட கூத்து உருப்படிகள் கீத்தாம்பிள்ளை புலவர் அவர்களால் இயற்றப்பட்டுள்ளன.

கூத்துக்களின் பாத்திரங்களில் தென் மோடியிலும் வடமோடியிலும் புலசந்தோர் 2, அரசன், கட்டியன்,சாம்புவன் (பறையன்) கப்பித்தான், (சேனாபதி) படைத்தளபதி மந்திரி, தம்பி (அரசனின் தம்பி) சம்மனசு, கப்பல்துரை (கப்பலோட்டி) தூதுவன் ஆகியோர் ஒத்த பாத்திரங்களாக பாடி ஆடுகின்றார்கள். கதைகளுக்கு ஏற்றவாறு சந்தோமையார் வாசாப்பில் பிச்சைக்காரன், குடியானவர்கள் 2, சாடைக்காரன், சந்தோமையர், சந்தோமையாரின் சீடன் போன்றோர் பங்கு கொள்கின்றனர். என்றிக்கு எம்பரத்தோர் வடமோடி நாடகத்தில் எம்பரத்தோர் அரசனின் மனைவி (கன்னி), கன்னியின் தோழி, பேய்கள் 2, தச்சரி 2, காப்பிலிகள் 2, வேடர் 2, பரிகாரிமார் 2 குருவானவர் என பல பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர்.

தென்மோடி கூத்தாகிய சந்தோமையார் வாசாப்பில் ஆடற்தரு என்ற உருப்படி இல்லை. சந்தோமையார் வாசாப்பு ஏட்டோடு, அல்லது தற்போது (2021ல்) வெளிவந்த 2ம் பதிப்பேட்டுடன் ஒப்பிடுகையில் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. கட்டியன் வரவுகவி தொடர்ந்து ஆடற்தரு இல்லை கட்டியன் சபையடக்கச் சிந்து (சந்தோமையார் வாசாப்பு. புத்.ப.இல 4,5)
2. புலசந்தோர் வரவுகவி தொடர்ந்து ஆடற்தரு இல்லை புலசந்தோர் - (வண்ணம் சந்தோமையார் வாசாப்பு புத்தக பக் இல 6,7)
3. சாம்புவன் வரவுகவி தொடர்ந்து ஆடற்தரு இல்லை. (சாம்புவன் தரு சந்.வாசா. புத்தக பக்.இல.14, 15)
4. சந்தோமையார் வரவுகவி தொடர்ந்து ஆடற்தரு இல்லை சந்தோமையார் (வண்ணம் சந்.வாசாப்பு புத்தக பக் இல.36, 37)
5. அபானிசு வரவுகவி தொடர்ந்து ஆடற்தரு இல்லை (அபானிசுசிந்து சந்தொமையார் வாசா புத்தக இல பக் 39)
6. 4ஆம் இராயவன் (கந்தப்புர்) வரவு கவி தொடர்ந்து ஆடற்தரு இல்லை (இராயன்தரு (வண்ணம்)சந்தொம் வாசாப்பு புத் பக் இல. 101)

இப்படியே எல்லாப் பாத்திரங்களுக்கும் ஆடற்தரு இல்லாமலே குப்பையப் புலவர் சந்தோமையார் வாசாப்பை பாடியுள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் முன்னைய அண்ணாவிமார்களினால் இவ்வாசாப்புக்கு ஆடற்தருக்கள் கிராமிய வழக்கில் (நட தாளம் சொல்லி) பாடி வருகின்றார்கள். வடமோடியில் ஆடற்தருக்கள் இருப்பது போலவே தென்பாங்கு (மென்மோடியிலும்) புலசந்தோருக்கும், கட்டியக்காரனுக்கும், முரசறைவோனுக்கும், அரசன், கப்பித்தான், சாடைக்காரன் போன்ற அனைவருககும் நட தாளம் அன்றிலிருந்து இன்று வரை சொல்லப்படுகின்றது.

ஆடற்தரு அல்லது பேச்சு வழக்கில் நடதாளம் என்று குறிப்பிடுகின்ற உருப்படி அண்ணாவியரால் பாடி இசைக்கப்படுகின்ற ஒரு உருப்படி. அரசனுக்குரிய ஆடற்தரு என்றால் அரசனின் குணவியல்புகள் நாட்டின் வளங்களோடு அரசனின் திறமைகளை சுருங்ககூறி; சபைக்கு அவர் பாடலைத் தொடங்க வைப்பதுதான் அண்ணாவியாரின் பணி. இதை விடுத்து பல அண்ணாவிமார்கள் இந்நோக்கத்தி லிருந்து தவறி நேரத்தை கூட்டி நாடகத்தை நீட்டி காலை 8.00 மணிக்குக் கூட மங்களம் பாட வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளனர். இது மிகவும் வருந்தக் கூடியது என நான் கவலையுடன் தெரிவிக்கின்றேன். எனவே மன்னார் கூத்துக்களில் தென்மோடியிலும், வடமோடியிலும் பொதுவாக அன்று தொட்டு இன்று வரை ஆடற்தருக்கள் பாடி ஆடப்பட்டு வருகின்றன. எனது தகப்பனார் அமரர் செபஸ்தியான் ஒரு அண்ணாவியார். தொடர்ந்து அமரர் செபஸ்தியான் செபமாலை (குழந்தை) அவரும் ஒரு கூத்திசைக் கவிஞரும் ஆவார். தொடர்ந்து அருட்திரு. அன்புராசா அமதி அடிகளார் தனது முதுமாணி பட்டத்திற்காக மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் ஓர் ஆய்வு என்ற நூலை வெளியிட்டுள்ளார். இது மன்னார் கூத்து சம்பந்தமான பற்பல நிதர்சனமான செய்திகளை மக்களுக்கும் மாணவர்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் எடுத்து இயம்பிக் கொண்டே இருக்கும்.

இனி இரு படைப்புகளுக்குமான ஒற்றுமை வேற்றுமைகளை சில பாத்திரங்கள் மற்றும் கவிவரி உதாரணங்களுடன் பார்க்கலாம்.

**பாத்திரங்களின் ஒற்றுமை**

| சந்தோமையார் வாசாப்பு (தென்மோடி) | என்றிக்குளம்பரத்தோர் நாடகம் (வடமோடி) |
|---|---|
| புலசந்தோர் 2 | புலசந்தோர் 2 |
| கந்தப்பூர் மன்னன் | என்றிக்குளம்பரதோர் மன்னன் |
| கட்டியன் | கட்டியன் |
| படைத்தளபதி | சேனாதிபதி |
| மந்திரி | மந்திரி |
| தம்பி (அரசனின்) | தம்பி (அரசனின்) |
| சம்மனசு | சம்மனசு |
| கப்பலோட்டி | கப்பல்துரை |
| சாம்புவன் | பறையன் (சாம்பவன்) |
| தூதுவன் | தூதுவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கு ஏற்ப வேற்றுமையான பாத்திரங்கள்

| | |
|---|---|
| பிச்சைகாரன் | எம்பரத்தோர் மனைவி (கன்னி) |
| குடியானோர் 2 பேர் | தோழி |
| சாடைக்காரன் | பேய் |
| சந்மோமையார் | தச்சர்2 |
| சந்தோமையார் சீடன் | காப்பிகள் 2 |
| | வேடன் 2 |
| | கலாசு |
| | பரிகாரி 2 |
| | குருவானவர்1 |
| மொத்தம் 17 பேர் | மொத்தம் 24 பேர் |

ஒரே வகையான உருப்படிகள் தென்மோடியிலும் வடமோடியிலும் உண்டு.

**தென்மோடியில் சந்தொமையார் வாசாப்பில் தார்க்கவி**

இராகம் - சங்கராபரணம்
தாளம் - ஆதி (மிஸ்ட நடை) எட்டுவரிகளைக் கொண்டது

*காப்பிலங்கிய கன்னிமரிதரும்*
*கத்தன் யேசுவை நித்தமும் போற்றியே*
*பாப்பிலங்கிய தொம்மையப் போஸ்தலின்*
*புழமை தண்டமிழ் பாவிசை பாடவே*
*ஊர்க்கிலங்கிய இந்நகரானதில்*
*உற்ற கோயில் உயராலயத்திரு*
*தார்க்கிலங்கியதொம்மையப் போஸ்தலுன்*
*அருட் செய் வாயுன் அலர்ப்பாதம் தஞ்சமே.*

**வடமோடி என்றிக்கு எம்பரதோர் நாடகத்தில்**

காப்பு - விருத்தம் எட்டு வரிகளைக் கொண்டது
இராகம் - கீரவாணியை அடிப்படையாகக் கொண்டது.

*ஏர்மேவு பொற்றிகிரி கரத்திலேந்தும்*
*ஏண்டிறீக்கு எம்பரத்தோர்க் கினிய காந்தை*
*சீர்மேவு கற்புராக்கினிதன் காதை*
*சிறப்புயர் நாடகப்பாவாய்ந் தேர்ந்து கூற*
*பார்மேவு பெத்தலையம்பதியில் வெல்லைப்*
*பருப்பதத்தில் மனுச் சுருபம் படைத்து வந்த*
*நேர்மேவு யேசுநசரேனு பாதம்*
*நித்தியமும் காப்பென முன்நிறுத்தினேனே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னெழில் - III**

**தென்மோடியில்**

**கட்டியன் வரவு கவி** (நான்கு வரிகளைக் கொண்டது)

இராகம் - சங்கராபரணம்

*அனு திகழ் செபமாலையாள் அனுதினம் எமைத்தற் கார்க்கப்*
*பனு திகளெமது நாட்டில் பலபிணி வினைகளோட*
*மணி திகழ் சதங்கை குஞ்சரம் வானர வெடிகள் மோதக்*
*கணி திகழ் கட்டியகாரன் களரியில் வருகின்றானே.*

**வடமோடியில்**

**கட்டியன் வரவு கவி** (நான்கு வரிகளைக் கொண்டது)

இராகம் - கீரவாணியை அடிப்படையாகக் கொண்டது.

*மணி திகழ் மவுலி சூடும் மன்னன் எண்டிறீக்கு இராயன்*
*அணிதிகழ் கொலுவில்லாத அலங்கிரிதம் எடுத்துக்கூற*
*பணிதிகழ் வரத்திமின்னப் பல வர்ணக் கொடி நின்றாட*
*கணிதிகழ் கட்டயக் காரன் களரியில் வருகின்றானே*

**தென்மோடியில்**

பாவகை - புலசந்தோர் பாயிரம்

இராகம் - சங்கராபரணம்

தாளம் - மிஸ்ட சாபு (5வரிகளைக்கொண்டது)

**1ம் பேர் -**

*இத்தொளிர் புவியும் வானும் இலங்குயிர்ப் பொருள்கள் யாவும்*
*அந்தமே ஆறு நாளில்அமைத்த அற்புதனைப் போற்றி*
*கந்தமோ மலரின் றோசை கமழ் மரியாயிபாதம்*
*சிந்தையிற் பதித்து இவ்வூர் சேதிமன் தன்னிக் வாழும்*
*சந்தொம்மை பதும பாதம் தனை நிதம் துதி செய்வாமால்*

**2ம்பேர் -**

*நந்துலாவுவரி சூழும் நகரிவ்வூர் தன்னில் நீளும்*
*அந்தநற் கோவில் நாளும் அருள் நிறைந்திலங்கி வாழும்*
*சந்த அந்தோனிபாதம் தன்னை நாம் சென்னி சூடி*
*விந்தை சேர் தொம்மை காதை விரித்துறச் சவையிற் சொல்வாம்*

**வடமோடியில்**

பாவகை -: புலசந்தோர்தரு

இராகம்-:சங்கராபரணம்

தாளம் -: மிஸ்ட சாபு (நாலுவரிகளைக்கொண்டது)

**1ம் பேர் -**

*சருவ பொருளும் படைத்த தேவனே போற்றி போற்றி*
*தந்தை சுதன் இஸ்பிரித்து சாந்துவே போற்றி போற்றி*
*மறுவில்லா மெய்ஞான ரூபனே போற்றி போற்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் பேர் -

*ஆதி ஆதஞ் செய் பாவம் தொலைத்தவர் போற்றி போற்றி*
*ஆறிலட்சணம் மேவு தேவனே போற்றி போற்றி*
*நீதியிடையர் குடி லிற் பிறந்தவர் போற்றி போற்றி*
*நீ நிலத் தெம்மை மீள மரித்தவர் போற்றி போற்றி*

**தென்மோடியில் சந்தொம்மையார் வாசாப்பில்**

**கந்தப்பூர் இராயன் வரவு சிந்து**

இராகம் - சங்கராபரணத்தை அடிப்படையாகக் கொண்டது
தாளம்- - ஏகம்

*பொற்றொளிர் மற்றொளிர் ரெட்ண சிங்கனை செல்வேன்- அகம் புகழ்ச்சி நீட*
*பொற்றொளிர் மற்றொளிர் ரெட்ணசிங்கனை செல்வேன்*
*பொற்றொளிர் மற்றொளிர் ரெட்ணசிங்கனையிற்*
*பொருந்து மந்திரர் சிறந்திலங்கிட*
*எத்திசையும் புகழ் பெற்றரசனிடம்*
*எவர்களும் முறையிட நல்நீதி சொல் (பொற்றொளிர்)*
*அச்சுதானந்த கோவிந்த குருபரனை அகம் மயற்றிடாதர*
*கச்சிதமாய் நரர் மெச்சிட நீதிசெய்வேன் எந்தன் அரசுக்கடங்கா*
*குச்சலம் வாதுசெய் கயவர் தன்சிரம்*
*கோற்றியரிந்திடல் வெற்றி புரிந்திட*
*மற்புயவாகர்கள் அணியணியென்முன்*
*வரச் சொன்னால் அரைச்சணத்தில் எய்துவார்*
*தத்தரிகுத் தகுடி குதத்தரிகண செஞ் செனுகுடுகித்தாம்*
*தத்தித்தாம் தொம் மெனவே*
*தித்திமிதத் திமிதிமிதத் திகு திகு தத்தரிகணத்தாம்*
*தித்தித்தா மெண்டொலிக்க*
*கத்துதிரை குற்ற தொனிக் குற்றிட முற்றுச் சமர் செய்*
*கொற்றுவரின் பற்றலரை வெற்றி புரிவேனே (பொற்றொளிர்)*

**வடமோடியில் எண்டிரீக்கு எம்பரதோர் நாடகத்தில்**

**எம்பரத்தோரும் தேவியும் வரவு தரு**

இராகம் - சிந்து பைரவி
தாளம் - சதுஸ்ர ஏகம் (மிஸ்ட நடை)

*ஏம்பரத்தோர் இராயன்தரு*
*செந்திரு வண்ணச் செழுங்கருமை விழி மானே – நானும்*
*சிந்தையிலே ஓர் உகந்த நினைவு கொண்டேனே*

**தேவி (கன்னி) தரு**
*சந்தன மார்பதயா குணன் ஆன என் வல்லவா- நீரும்*
*சாற்றுகில் என் மனம் தேற்றமாக ஏதும் சொல்லுவாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராயன் தரு
*பால்நதி சூழ் செரு சேல் நகரானதில் ஏகியே — தேவன்*
*பாடுபடும்நலம் பார்த்து வரக் கருத்தாகினேன்*
*கன்னி தரு*
*மாலெழுபாணியில் வேல் தொடு மாமுடி வேந்தே- நீர்*
*வழுத்துரைகேட்டேன் உளத்தில் மிகக்களி கூர்ந்தே.*

இப்படியாக தென்மோடியிலும் வடமோடியிலும் உருப்படிகள் பெயரளவில் ஒன்றாயிருந்தாலும் மெட்டுகளிலும், (பாவகை) இராகங்களிலும் தாளங்களிலும் வேறுபட்டு இருப்பதை மேற்கூறிய புலசந்தோர், கட்டியன், இராயன் போன்ற பாத்திரங்களின் பாடல்கள் வழியாக அறியலாம்.

பாவகையில் வண்ணம், தரு, சிந்து யாவும் ஓரே உருப்படிகளாக காணப்படுகின்றன. மேலும் மன்னார் கூத்துக்களில் தென்மோடி வட மோடி நாடகங்களில்; அரசன் பாத்திரம் ஏற்று நடிப்பவர்களின் ராஜ நடைக் கூத்துக்கள் ஒன்றாகவே இருக்கின்றன. தாளத்தோடு ஒட்டிய நடையைக் காணக்கூடியதாக இருக்கும். இருமோடிகளிலும் வரும் கப்பித்தான்மார்களும் தாளத்தோடு ஒட்டிய குலுக்கல் நடையை நடந்து கூத்துக்களை சிறப்பிப்பார்கள்.

ஆனால் தென்மோடி வாசாப்பு அல்லது தென்மோடி நாடகங்களில் வரும் கட்டியன், மந்திரி, ஆகிய பாத்திரங்கள் ஒரு விசேடமா துள்ளித் துள்ளியும், தாளத்தோடு ஒட்டியும், தாவின் முடிவொன்றிலும் சுழன்று ஆடியும் தங்கள் கூத்து நடைகளை ஆடற்தருக்களில் கண்டு ரசிக்க வைக்கின்றனர். இந்த கட்டியன் நடைக்கு வரும் ஒரு சிந்து

| | | |
|---|---|---|
| பாவகை | - | சபையடக்க கட்டியன் சிந்து |
| இராகம் | - | சங்கராபரணம் |
| தாளம் | - | மிஸ்ரசாபு |

*கத்ததத்துவம் சிறந்திந்திரை கருதுமென்கோ னெனும் தற்பர*
*சுத்திறில் பிரித்தெனும் சாந்திவர் துணையிது பொன்னம்புயப்பாதமே*
*துதிக்கல்வி கதிக்க கதை செழிக்க செனாமதிக்க*
*பொருள் கதிக்க தெளிவாக*
*துரித கெருவித மதுர தமிழிசை அறிஞர் புகழன்னை*
*மரிய செபமாலை இராக்கினி*
*பங்கய பூம்பாதம் நிதம் பணிவதாம்*

இந்த சிந்து கட்டியன் பாடி ஆடும்போது விசேடமான துள்ளநடைக்கூத்தை நாம் காணலாம். இக்கூத்தை தென்மோடி நாடகங்களிலேயே அதிகமாக இன்றும் ஆடிக்கொண்டு வருகின்றனர். இது பாரம்பரியமானது.

மன்னார் கூத்துக்களில் தென்மோடியிலும் வடமோடியிலும் பாத்திரங்களின் ஆடற் தருக்களின் பின்பு பாத்திரங்களின் தருவை அல்லது வண்ணத்தை அல்லது சிந்தை பிற்பாட்டுக்காரர் பாடிக் கொடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் பார்வளன் தென்மோடி நாடகத்தில் புல்சந்தோர்தரு இதை முத்திரைக் கட்டு என்று கூறுவர்.

இராகம் : சங்கராபரணம்
தாளம் : மிஸ்ரசாபு

**முத்திரைக்கட்டு**

*தந்தனம் தானத்தானா தானினம் தானத்தானா*
*தந்தனம் தானத்தானா தானினம் தானத்தானா*
*சீர்மணி பருதியான திரு நிலமுலகு திங்கள்* (பார்வளன் நாட.புத்.பக்.இல.49)
*கார்மலை படைத்த தேவன் கழலினைதொழுவோம் போற்றி*
*போற்றுமம் பரனார் வெல்லை புறமுழையிடையார்நேசன்*
*சூற்றினர் பரமபாலன் சரணினை துதிப்போமாமேன்*

**சந்தோமையார் வாசாப்பில் இராயன் வண்ணம்**
இராகம் : கீரவாணி
தாளம் : ஆதி
**முத்திரைக்கட்டு**
*தன்னனா தானினானா தன்னனானினானா*
*தானின தானினானா தானினதந்தே*
*தன்னனா தானினன்னனா*
**தரு**
*வளமுற்றெழுந்த செம்பொன் மணிமண்டபம் போய்ப் பார்க்க*
*வாரும் மதிவல்லோர்களே மகிழ்ச்சியாக*
*வாரும் மதிவல்லோர்களே*

*வளமுற்றெழுந்த ஆதி பரனைத்து புரிந்து*
*வரையின் நகரிருந்தென் மகிமைப் பொருள் மிகுந்து*
*வடிவதுற்றவயிரக் கெருட முடியான்*
*மகிமை பெற்ற தன வசீகர முடையோன்*
*படியிலிக்கிரம படையணி கெடியான்*
*பகைஞரஞ் சவித ரணபல நெடியான்*
*பகரசீலன் நகர கோலன்*
*தகர நகர சதுரங்க ஒய்யாரன்* (வளமுற்)

தென்மோடி, வடமோடி கூத்துக்களின் ஒற்றுமை, வேற்றுமைகளை பாத்திரங்கள், உருப்படிகள், நடைமுறைச் செயற்பாடுகள், பற்றி நான் அறிந்தவற்றை சுருக்கமாகத் தொகுத்துள்ளேன். இருப்பினும் பாடலோடு பாடி ஆடும்போது மட்டுமே இலகுவாக வேற்றுமைகளை நாம் கண்டு உணரலாம். மன்னார் மாதோட்ட வாசகப்பா, நாடக மெட்டுக்கள் பாகம் 1, சந்தோம்மையார் வாசாப்பு, என்டிறீக்கு எம்பரத்தோர் நாடகம், பார்வளன் தென்பாங்கு நாடகம் ஆகிய புத்தகங்களில் இருந்து ஓரளவு சுருக்கமாக பாடல்களை தொகுக்கப்பட்டுள்ளது. இக்கூத்துக்கள் எதிர்காலத்தில் இராக தாள, சந்தத்தோடு கூத்து முறைமைகளுக்கு அமைவாக எதிர்கால இளம் தலைமுறையினா் முன்னெடுப்பார்கள் என்ற ஆசையோடு மன்னாரின் அனைத்து புலவர்கள் அண்ணாவிமார்கள் கூத்துக் கலைஞர்களையும் மதித்து வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியவெளி..

## குறுந்தகவல்களுக்காக காத்திருக்கிறதா..?



"சாஹித்தியா" எஸ். ஏ. உதயன்
தேசியக்கலைஞர்

இலக்கியம் என்பது மனித குலத்தின் மனசாட்சி என்று ஒரு பொன்மொழி கூறுகிறது. இலக்கியமானது சுதந்திரமான, ஆழமான சிந்தனைகளின் நிரந்தரமான ஒரு பொக்கிஷம்.. இக்கால தமிழ் இலக்கியத் தளத்தில் பல்வேறு பரிணாமங்கள் தொடர் தேர்ச்சியாக நடைபெற்று வருவதை நாம் அவதானிக்கிறோம். இலக்கிய பாரம்பரியங்கள் என்று இருந்த பழைய நியமங்களையெல்லாம் உடைத்து எறிந்து புதிய வடிவங்களாக அவை பீறிட்டு கிளர்ந்து கொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம்.

இதற்கு இக்கால ஊடகங்களும், பொதுசன எழுத்துக்கு வகுக்கப்பட்ட நியமங்களும் கூட புதிய இலக்கியங்களுக்கான வருகையைத் தினமும் கட்டியம் கூறி நிற்கின்றன. நாம் நூலகம் செல்லாமலே.. புத்தகங்கள் வாசிக்காமலே இலக்கியப் பாதையில் பயணம் செய்வதற்கு டிஜிட்டல் உலகின் தகவல் தளங்களே இக்காலத்தில் கை கொடுக்கின்றன எனலாம்.

அந்த வகையில் குறுந்தகவல் நம்மோடு அதிகம் உறவாடுகின்றன. சாதாரணமாக கைத்தொலைபேசி ஒன்றினுள் உலகம் உருண்டுகொண்டிருப்பதுதான நிதர்சனம். குறுந்தகவல்களும், குறுஞ் செய்திகளும் பற்பல விடயங்களை நம்மோடு பகிரும்போது அச்செய்தியின் தரமறிந்து நாமாகவே அதனுள் ஈர்க்கப்படுகிறோமல்லவா..?

இலக்கிய உலகின் மாற்றங்களோடு படைப்புலகினை ஸ்பரிசித்துக் கொண்டிருக்கும் குறும்தகவல் படைப்புகள் உண்மையில் இலக்கிய தரம் கொண்டவைதானா என்ற ஆய்வு இப்போது தேவைப்படுகிறது.

மனித எண்ண ஓட்டங்களை மிக இலகுவாக சுருக்கி பொது வெளிக்கு கடத்துகிற ஊடகமாக குறுந்தகவல் பரிணாமம் பெற்று வருகிறது. நொடிக்கு நொடி நிமிஷத்துக்கு நிமிஷம் கோடி கோடியாக உலகம் முழுவதும் பரிமாறப்படும் தகவல்கள் தொலைபேசியிலும், மின்னஞ்சலிலும், தொலைநகல்களிலும் வலம் வருகின்றன. அவை பல பெரும் காவியங்களை உருவாக்க ஏதுவான அடிச்சட்டங்களாகவும் காணப்படுவதாகவும் சில சுவைஞர்கள் சொல்லுகிறார்கள். இக்கால நூற்றாண்டில் மனித குலத்துக்கு கிடைத்த பேறுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக கூட இது மாறக்கூடும் எனவும் கணிக்கிறார்கள். சாதாரணமாக ஒரு நல விசாரிப்பிலிருந்து பல நூறு கோடி வணிகம் வரையிலும் பயன்படுத்தப்படும் இக்குறுந் தகவல்கள் தனி ஒரு இலக்கியமாக எதிர்காலத்தில் ஆகக் கூடுமா? பொதுவாக நமது இளசுகளிடையே குறுந்தகவல்கள் புழக்கத்தில் இருக் கின்றன. அவர்களின் சுட்டு விரல் நுனி தேய்ந்துவிடுமளவிற்கு எப்போது பார்த்தாலும் அவர்கள் குறுந்தகவல் அனுப்பும் இயந்திரங்கள் போல் ஆகிவிட்டார்கள். கைத்தொலை பேசியில் இணைய சேவை வசதி வந்து விட்ட பிறகு இந்த நிலைமை இன்னும் மோசமாகித் தான் விட்டன என அங்கலாய்ப்போரும் நம்மிடையே உள்ளார்கள்.

ஆயினும் அவர்கள் குறுந்தகவலாய் பிரசவிப்பது எல்லாமே குப்பையென ஒதுக்கிவிட முடியாது.. அவைகள் மாணிக்கம் போல பெறுமதி மிக்கவை யாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். இவைகள் காற்றில் கரைந்து விடும் கற்பூரங்களென நினைப்பது சரிதானா.. பல எண்ணற்ற மனிதர்களின் சிந்தைக்குள் நுழைந்துவிடக்கூடிய இக்குறுஞ்செய்திகள் கனமானவையே..

இவைகளை எடுத்து தொகுத்து ஒரே பார்வையில் வாசிப்போமானால் இது நல்லதொரு இலக்கியப்படைப்பு எனச் சொல்லுவதற்கு ஏதுவானதாயிருக்கும்.. இளம் குறுந்தகவலாளர்கள் தமது இளமைக்குத் தக்க வகையில் பகிடி, பரிகாசம், நையாண்டியென்று எழுதுகிற போது சில ஆத்திரமூட்டும் கருத்துகளும் வந்து விழுந்து விடுகின்றன. அவை எப்படி இருப்பினும் குறுந்தகவல்கள் என அவற்றை உற்று நோக்கும் போது அங்கே கவித்துவமும் கலையும் கூட மேலோங்கி நிற்பதை நம்மால் அவதானிக்க முடியும்.

ஆகவே தான் இப்போது குறுந்தகவல் படைப்புகளை இலக்கிய வகையறாக்களில் ஒன்றாக கணிப்பிட முடியுமா என்ற நோக்கு எமக்கு எழுகிறது. அவ்வாறு பார்க்கிறபோது..

இப்போதெல்லாம் உருது மொழியில் குறுந் தகவல்கள் உயர் இலக்கிய அந்தஸ்து பெற்று விட்டதாக அறிகிறோம். அந்நிலைக்கு நம் தமிழ் மொழியும்தான் ஏறு முகம் கொண்டு நடக்கிறது. ஆங்கில மொழியை பயன்படுத்திக் கூட சிலர் கவிதைகளை வடிப்பதை பார்க்கிறோம்.. இதில் இன்னும் ஒரு இலாபம் என்ன தெரியுமா.. இந்த கைத்தொலைபேசி பாவிக்கிறவர்கள் எல்லாரும் ஆங்கில மொழியில் பரிமாறப்படும் தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை இப்போ தெல்லாம் இலகுவாக புரிந்து கொள்ளுகிற நிலைக்கு வந்து விட்டார்கள். இலக்கியம் என்பது எந்த மொழியில் பகிரப்பட்டாலும் அது மனிதர்களுக்கான ஒரு சொத்து என்பதை மறந்து விடக்கூடாது. அதாவது ஒரு இலக்கியம் ரசனை குன்றாமல் செவ்வையும், சீரோடும் எந்த மொழியிலாவது வெளிப்படுமானால் அது சிறப்பான ஒன்றுதான்.

இவ்வாறு நாம் கூறும் ரசனையும் செவ்வையும், சீரும் சுருங்க ஒலிக்கும் ஒரு குறுஞ்செய்தியில் காணப்படுமாயின் ஏன் அதை நாம் ஒரு இலக்கியமாக கொள்ள முடியாது..?

சங்க இலக்கியங்களைப் போலவே அகத்தையும் புறத்தையும் இந்த குறுந் தகவல்கள் கொண்டிருப்பதை நாம் ஆய்வுக்குட்படுத்த வேண்டும். காதலும், நட்பும் கரை புரண்டோடும் வார்த்தைகளை மட்டும் குறுந்தகவல் பேசவில்லை.. அத்தோடு தமிழிலே பல நுட்பமான வார்த்தைகளையும்தான் அவை புழக்கத் திற்கு கொண்டு வருகின்றன.. குறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களில் ரசம் மேலிட நிற்கும் இந்த மொழிகளை பாருங்கள்..

“ஒருவேளை நான் இறந்து விட்டால் நீ கவலை கொள்ளாதே.. நீ வானம் பார்த்து ஐ மிஸ் யு என்று சொல்லு.. நான் மழை நீராய் வருவேன் உன் கண்ணீரைத் துடைக்க..” “கண்ணுக்குள் இருக்கும் நீ மூழ்கி விடக்கூடாது.. அதனால் நான் கண்ணீர் விட மாட்டேன்..” “அவள் இதயத்தின் உஷ்ணத்தால் தெறிப்பது கண்ணீர்.. அது அவளின் அழகான கண்களை விட்டு பிரிவதனால் வந்த ஏக்கம்” “என் நினைவு மறந்தது எப்போது.. அவளை பார்த்தது முதல்.. அந்த நாளும் நினைவில் இல்லை” “சூரியனே நான் உன்னை சுற்றி வருகிறேன்.. நீ பூமி என என்னை எரிக்கும் வரை..” “அழகு அதிகமென்பதால் ஆசை அதிகமானது.. உன் பாசம் அதிகம் என்பதால் என் மனசு நிலையானது.. ஆனால்.. உன் உயிர் நான் மட்டும்தான்..” “நான் நேசிப்பதால் தான் அவள் அழகி”

இவ்வாறான குறுங் கவிதைகள் இப்போது நாம் காணும் இடமெல்லாம் பொறிக்கப் பட்டிருப்பதை நாம் காணலாம்.

இந்த கவிதைகளை எழுதுபவர்கள் எல்லோரும் இலக்கிய ரசனை உள்ளவர்களாவோ, அல்லது தீவிர வாசிப்பில் ஆர்வம் கொண்டவர்களாகவோ இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. அப்படி இருக்க வேண்டும் என்பதும் இல்லை.. ஆனால் மிக சிறப்பான கவிதைகளை அவர்கள் படைக்கிறார்கள். ஆட்டோ வண்டியில் எழுதப்படும் இரு வரிக்கவிதைகளைப் பாருங்கள்.. ஆழமான அர்த்தங்களை வெளிப்படுத்தும்.. இதையெல்லாம் எழுதுபவர்கள் கவிப்பேரரசு வைரமுத்தாகவோ, பா. விஜயாகவோ, ந. முத்துக்குமாராகவோ இருப்பார்கள் என்று பார்த்தால் அது அப்படியில்லை. சாப்பாட்டுக்கடைகளில் வேலைசெய்யும் சிப்பந்திகள், அலுவலகங்களில் கடைநிலை ஊழியர்கள் என்று அவர்கள் யாராகவும் இருக்கலாம்.

ஆழ்ந்த அவர்களின் ரசனைதான்.. அபாரமானதாக அமைந்துவிடுகிறது. இதிலிருந்து என்ன புரிகிறது எல்லா மனிதர்களுக்குள்ளும் ரசனை உணர்வு தேங்கி நிற்கிறது என்பதுதான். ஒரு நல்ல கவிதையானது பொதுவெளியில் அது வெளிப்பட ஒரு நல்ல கவிஞனை தேடுவது போலவே ஒரு நயமிக்க கருத்து மொழி அளவில் வெளிப்பட ஒரு குறுந் தகவலாளியைத் தேடுவதாக இருக்கலாம். நிறையநிறைய வார்த்தைகளை அடுக்கடுக்காக அடுக்கி வரி வரியாக எழுதுவது தான் கவிதை என்று நாம் ஒருபோதும் நினைத்து விடக்கூடாது மாறாக நல்ல ரசனையோடு எழுதப்படுகின்ற ஒரே ஒரு வாக்கியத்தில் கூட நல்ல கவிதை சம்மணமிட்டு உட்காந்திருக்கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

பல தடவைகளிலே பார்த்திருக்கிறேன். சிலர் “சும்மா” எதையாவது கிறுக்குவார்கள் அந்த கிறுக்கல்களிலே ஒரு நல்ல கவிதை இருப்பதை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் சிலர் நான் கவிதை எழுதுகிறேன் என்று சொல்லிக்கொண்டு நான் தான் பெரிய கவிஞனாக்கும் என்று நிமிர்த்திக் கொண்டு எதையாவது எழுதுவார்கள்.. அதில் கவிதை வாசனையே இல்லாமல் இருக்கும். அப்படி பார்க்கும் போது யாரோ ஒரு குறுந் தகவலாளி அந்த துயரத்தை மிக இலகுவாக தனது மின்சாரம் போன்ற கவிதை வரியால் கடந்து செல்வதை பார்த்திருக்கிறோம்..

“என் வலிகளை புரிந்து கொள்ள வேண்டாம் எனக்கும் வலிக்கும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டால் போதும்" "நீ படித்து விட்டு தூக்கி எறிய என் வாழ்க்கை ஒன்றும் செய்தித்தாள் அல்ல" "உன்னை மறக்க நான் நூறு முறைகள் முயற்சித்தேன்... ஆனால் ஒவ்வொரு முறையும் நீ என் நினைவுகளை விழுங்கி விட்டாய்." "என் அருகில் நீ இல்லாவிட்டாலும் எனக்குள் இருப்பது நீ மட்டுமே." "தன் மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னை ஒரு சிற்பமாக்கும் என்று கல்லுக்குத் தெரியாது.." "மற்றவர்களை காயப்படுத்தும் புன்னகையை விட யாரையும் கஷ்டப் படுத்தாத மவுனம் சிறந்தது'' "மகிழ்ச்சிக்குரிய பரிசு பலமான போராட்டத்தின் பின்னரே கிடைக்கிறது.." "இரவிலே சூரியன் உதிக்கவில்லை என்று கவலைப்படுவாயானால் நட்சத்திரங்களை நீ இழப்பாய்'' "விடியட்டும் என்று வானத்தை நம்பும் நீ முடியும் என்று உன்னையும் நம்பு.."

இதுபோன்று குறும் கவிதைகளை குறும் தகவலாக நீங்கள் வாசிக்க நேரிட்டால் இதனையோ இது போன்ற ஒன்றையோ எங்கேயோ வாசித்ததாக உங்கள் ஞாபகம் சொல்லும். அந்த ஞாபகத்தை இன்னும் ஒரு தடவை தட்டி பார்க்கவும் உங்கள் மனம் நினைக்கும். ஒருவேளை நீங்கள் நினைப்பது உண்மையாகக் கூட இருக்கலாம். ஏன்.. அது நமக்காக எழுதப்பட்டது போலவும், நமக்கு நேர்ந்ததைச் சொல்லுவது போலவும் இருக்கும்.

இலக்கியத்தில் திருட்டு என்பது புதிதல்ல ஒருவரின் கதையை களவாடி கதாபாத்திரங்களின் பெயர்களை மாற்றி உலவ விடுவது, இன்னொருவரின் கவிதைகளை சுட்டு தன்னுடைய கவிதை போல பிரசுரிப்பது, கட்டுரையின் கருவைத் திருடி வேறு விதமாக எழுதுவது, நாம் எழுதிய பாடலை வேறு யாரோ வேறு இடத்தில் தான் எழுதியதாகச் சொல்லி இசைப்பதை கேட்க நேர்வது என்பதெல்லாம் சாதாரணமாக நடப்பது தான். இப்படி பெரிய இலக்கிய திருட்டுகள் நடக்கிறபோது குறுந்தகவல் திருட்டு ஒன்றும் புதியது அல்ல,தவறானதும் அல்ல.. ஏன் இதில் குறிப்பிடும் கவிதைகள் இணையத்தில் சுட்டதாகவும்,நீங்கள் ஏற்கனவே படித்து சுவைத்த பிறிதொரு கட்டுரையின் மீள் வடிவமாகவும்கூட இருக்கலாம்.

பெரிய இலக்கிய திருட்டுக்களை செய்வோர் வேறு ஒருவரின் பிள்ளையைக் காட்டி இதற்கு தகப்பன் நான் தான் என்பது போல அதற்குப் புதிய நாமம் சூட்டி புதிய தோற்றப்பொலிவோடு சந்தைக்கு கொண்டு வருகிறார்கள். ஆனால் குறுந்தகவலை தருகிறவர்கள் யாரும் நான்தான் "பெரிய குறுந்தகவல் கும்முடிப் பாண்டியன்'' என்றோ நான்தான் "எஸ்எம்எஸ் தாசன்" என்றோ அந்த குறுந்தகவல்களுக்கு உரிமை கோருவதில்லை. அதுபோல "குலுங்க வைக்கும் குறுந்தகவல் களஞ்சியம்" என்று புத்தகம் போடுவதும் இல்லை அப்படி ஒரு புத்தகத்தை வெளியிட்டு விட்டு நாட்டின் மூத்த எழுத்தாளர் நான் என்று பீத்தித்திரிவது மில்லை. இப்படியெல்லாம் பெருங்கள வாடல் நடந்து கொண்டிருக்கும் போது குறுந்தகவல் திருட்டை ஒரு பொருட்டாக எண்ணத் தேவையுமில்லை..
உண்மையிலேயே குறுந்தகவல் நாயகர்களின் நோக்கம் பெயர் எடுப்பது அல்ல.. நாலு பேர் சிரித்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதுதான்.

இதை விடுத்து நாட்டின் உயர் இலக்கியத்திற்காக அவர்கள் எழுதுவதுமில்லை.. பிரயத்தனப்படுவது மில்லை. இந்த குறுந் தகவல்களின் வடிவங்கள் பலவாறாக உலா வருகின்றன.. "ஹைக்கூ" கவிதை வடிவில்,பன்ச் டயலொக்வடிவில், துணுக்கு வடிவில் ஏன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் வடிவத்திலும் கூட குறுந் தகவல்கள் வெளிவருகின்றன. அவை சுவையாகவும் நகையாகவும் இருப்பதோடு சிந்திக்கவும் வைக்கின்றன..

"பீடியால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே லேடியால் சுட்ட மனம்."

"மொக்கையாவது யாதெனில் கண்டு சக்கையாகுமாம் பெண்மனம்"

இதுபோல தத்துவ வகை குறும் தகவல்கள் வருவதுண்டு இலகு தமிழில் ஆழமான கருத்துக்களை அவை பகருவதாக இருக்கின்றன.

"மழையின் போது பேசத் துவங்குகிறது மண் - மண் வாசனை"

"மயானங்களை உயிர்ப்பிக்கின்றன மரணங்கள்"

உண்மையைக் கொண்டு காயப்படுத்து.. பொய்யை கொண்டு சந்தோஷப்படுத்தாதே. கடலில் விழுந்தவன் முத்து எடுப்பான்.. காதலில் விழுந்தவன் பிச்சை எடுப்பான்..

"உண்மையைச் சொல்லி மாட்டிக் கொண்டாலும் பரவாயில்லை.. பொய் சொல்லி தப்பிக்காதே.. ஏனென்றால் பொய் வாழ விடாது உண்மை சாக விடாது.."

"சூரியனைச் சுற்றினால் வெந்து போவீரகள்.. சுடிதாரைச் சுற்றினால் நொந்து போவீரகள்"

நண்பர்கள் வட்டத்தில் பரிமாறப்படும் குறுந்தகவல்கள் வெகு சுவாரஸ்ய மானதாக இருக்கும் அவை நக்கல், பகிடியை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும் சில "செண்டிமென்ட்" ஆக மனதை கிள்ளுவது போல அமைந் திருக்கும்.

"அம்மா கணித பாடத்தில் கொஞ்சம் பலவீனமானவள், நான் இரண்டு தோசை கேட்டால் அவள் மூன்று தருகிறாள்"

"கண்ணே என் மரண ஊர்வலத்திலும் நீ அழுது விடாதே என்னையும் அறியாமல் நீண்டு விடும் என் கைகள்.. உன் கண்ணீரைத் துடைப்பதற்கு."

"சரிந்த மேம்பாலங்களின் இடையே சிக்கிக்கொண்டது ஊழல்"

"என் வெயில் கால பனிநீ
என் முக்கால உயிர் நீ
என் உணர்வு நீ
என் உள்ளம் நீ
என் காதல் நீ
என் ஆசை நீ
எல்லாம் நீயாகி போக
நான் உன் காதலனாய்மாறி போனேனே.."

"மழை துளிகள் விழும் போதுதான்
நான் உணர்ந்தேன்...
இயற்கையும் காதலிக்கத் தெரியும்
என்பதை."

"மலர்களின் வாசனைக்குள்
நீ இல்லாத பக்கங்கள்...
மௌனமா கதைகள் பேசின."

"வானத்தில் நிலா தங்கிய பொழுது
நீ சிரித்த நொடிகள்
என் நினைவில் மெழுகின"

இப்படி உணர்வுகளோடு பேசும் கவிதைகளும்.. தேற்றும் வார்த்தைகளும் ஒருவரின் முயற்சி ஊக்கப்படுத்தும் டொனிக் போல.. இருப்பதைப் பாருங்கள்.

24 வயதில் பஸ் கண்டக்டராக இருந்தவர் சூப்பர் ஸ்டார் ஹோட்டல் சிப்பந்தியாக இருந்தவர் ஒப்ரோய் சின்ன வயதில் செருப்பு தைத்தவர் ஆபிரகாம் லிங்கன் பெட்ரோல் செட்டில் வேலை செய்தவர் ரிலையன்ஸ் அம்பானி பத்தாம் வகுப்பில் சித்தியடைய தவறியவர் சச்சின் டெண்டுல்கர் கீபோர்ட் வாங்க பணம் இல்லாமல் அலைந்தவர் ஏ ஆர் ரகுமான்.

என்பதாக இந்த குறும்பதிவு சொல்கிறது. இது யார் வாழ்விலும் எப்போது திருப்பம் வரும் என்று யாருக்கும் தெரியாது.. எனவே நம்பிக்கையோடு நடைபோடு என்று ஊக்கப்படுத்துவதாய் இருக்கிறது. இணைய தளங்களில் சென்று பாருங்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுந்தகவல்களை அது வகை வகையாக பிரித்து நமக்குப் பரிமாறும்.

நீங்கள் எந்த தலைப்பில் தேடுகிறீர்களோ அந்த தலைப்பில் ஆயிரம் தகவல்களை நமக்குத் தரும். அவ்வாறு அது காணப் படுவதால் தான் இக்கால இளைஞர்கள் நேரம் போவது தெரியாமல் இணையத்துக் குள் மூழ்கிக் கிடக்கிறார்கள்.. குறுந் தகவலின் படைப்பு, அதன் வாசிப்பு மிக அழகிய தருணமாக அமைந்து விடுவதனால்தான் இளைஞர்கள் அதை யொட்டி சிரிப்பதும் கதைப்பதுமாக மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். இதனால் தினமும் குறும் தகவல்கள் இணையத்தில் ஊற்றெடுப்பதை நாம் பார்க்கிறோம். இதில் வயதில் மூத்தவர்கள் ஆர்வம் காட்டா திருக்கலாம்.

அதற்கு தலைமுறைய இடைவெளி தான் காரணம். மூத்தவர்களுக்கு இந்த காலம் வாய்க்காது இருப்பதால் இளைஞர்களின் மகிழ்ச்சியான பொழுதுபோக்கினை மூத்த வர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக் கலாம். ஆனால் அந்தக் குறுந்தகவலாளர் களான இளைஞர்களின் உலகை முற்றிலும் நாம் ஒதுக்கி விட முடியாது. ஏனென்றால் அதற்குள்ளே கலையும், கல்வியும், அறிவும், ஆற்றலும் கடல் போல் விரிந்து இருக்கிறது.

அழகியல் இல்லாத கவிதையும் ரசனையற்ற வார்த்தைகளுமாக வெளிவரும் சமாச்சாரங்களிலும் பார்க்க இந்தக் குறுந்தகவல்கள் ஏந்தி வரும், கலை நயத்தோடு ஒப்பிடும்போது மலைக்கும் மடுக்குமான வித்தியாசம் இருப்பதை நாம் கவனிக்கிறோம். இந்த உண்மையை முதியோர் வேண்டுமானால்.. இது இளைஞர்களின் மந்தி வேட்டை, குரங்கு சேட்டை என்று விமர்சித்து விசனிக்கலாம். ஆனால் புதிய உலகின் ரசனைக்கு அவர்கள் பொருந்தி வரவில்லை என்பது தான் உண்மை. காலப்போக்கில் புதிய தலைமுறைகள் விரும்புகிற ஒரு இலக்கியமாக இந்த குறுந்தகவல் இலக்கியம் மாறிவிடும் என்பது திண்ணம்.

மக்களின் ரசனை நீண்ட பெரும் காப்பியங்களில் இருந்தும் விசாலித்த கதை பரப்புகளில் இருந்தும் நழுவிக் கால ஓட்டத்தில் சின்னஞ் சிறியதாக இருக்கும் இந்தக் குறுந்தகவல்களின் மீது பரவி விடுவதற்கு சாத்தியங்கள் உண்டு. இப்போதெல்லாம் வாசிப்பு என்பது பயணங்களின் போதும், காத்திருப்புகளின் போதும், பொழுதுபோக்குகளின் போதும்தான் சாத்தியப்படுகிறது.

முன்பிருந்தோர் தேடிப்படிக்கும் வாசிப்பு போல இப்போதுள்ள புதிய தலை முறையினர் அதற்கு இணக்கம் தெரிவிப்பதில்லை.. அவர்கள் பரபரப்பான இயந்திர வாழ்க்கைக்குள் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதை தவிர்க்க முடியாதிருக்கும். உழைப்பாலான பொருளாதார சந்தைக்கு இனி முகம் கொடுக்க வேண்டிய சந்ததிக்கு இலக்கியமும் அதற்கமைவாக தகவமைத்துக் கொள்ளவேண்டுமெனவே எதிர்பார்ப்பார்கள்.. எனவே குறுந்தகவல்கள் புதிய இலக்கியத்திற்கு ஏற்புடையதாக மாறும் என்பதில் ஐயமில்லை.

தேசிய ரீதியில் அறியப்பட்ட
பிரபல நாவலாசிரியரான
இக்கட்டுரையாளரின் கட்டுரையில்
அவரது நாவல்களில்
பயன்படுத்தப்படும்
அவருக்கேயுரித்தான பேச்சுவழக்கு
பயன்படுத்தப்பட்டுள்ளதுடன். அதன்
சுவை கருதி அவை அப்படியே
பிரசுரிக்கப்படுகிறது என்பதை
வாசகர்கள் கவனத்தில் கொள்ள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025ம் ஆண்டு

# மன்னார் மாவட்ட

# கலைபண்பாட்டுப்

# பெருவிழாவில்

# 'மன்இளங்கலைச்சுடர்'

# 'மன்கலைத்தென்றல்'

# 'மன்கலைச்சுரபி'

# கௌரவம் பெறும்

# கலைஞர் விபரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் இளம் கலைச்சுடர் விருது

## திருமதி. றூபன் கனிஷ்ட் கயல்விழி

மன்னார் உப்புக்குளம் எனும் கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 22.10.1986 ஆம் ஆண்டு பிறந்தார். தனது ஐந்து வயதில் திருமதி. வசந்தி ஸ்ரீஸ்கந்தா ஆசிரியரிடம் வித்தியாரம்பத்தினை தொடங்கினார். தனது உயர்தரத்தில் நடனத்தை ஒரு பாடமாகக் கற்று 2011ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைகழகத்தில் நுண்கலைமாணி பட்டத்தினையும் பெற்றார்.

2005 இல் மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியிலும் 2011 தொடக்கம் 2013 வரை மன்/ நானாட்டான் டிலாசால் மகா வித்தியாலயத்திலும் நடனபாட தொண்டராசிரியராகவும் பணி புரிந்தார். இவரது மாணவிகள் பிரதேச, மாகாண, தேசிய மட்டத்திலும் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

சாஸ்மிதாஞ்சலி நர்த்தனாலயா என்ற நாட்டியப் பள்ளி ஊடாக பிரதேச மாவட்ட கலாசார விழாக்களில் இவர் தொடர்ச்சியாக நடன நிகழ்வுகளை வழங்கி வருகின்றார். இவரது மாணவிகளில் ஒருவர் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பினை முடித்து வருகை விரிவுரையாளராக கடமையாற்றியவர். இவரின் மூன்று மாணவிகள் கல்வியியற் கல்லூரியில் நடன பாடத்தை கற்று நடன ஆசிரியர்களாக கடமையாற்று கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவரின் கலைச்சேவையைப் பாராட்டி மன்னார் தமிழ்ச் சங்கம் 2016ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட திருவள்ளுவர் விழாவின் போது இவருக்கு கௌரவம் வழங்கியது. 2023ம் ஆண்டில் இருந்து இற்றை வரை லண்டன் கிறீன்பீன் கல்லூரியால் நடாத்தப்படும் நடன பாட தரம் பரீட்சைக்காக பல மாணவர்களை பரீட்சையில் தோற்றவைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மன்னார் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **“மன்இளம்கலைச்சுடர்”** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் இளம் கலைச்சுடர் விருது

## திரு. தேவராசா கேதீஸ்வரன்

1994.12.07 மன்னார் சாவற்கட்டு கிராமத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வி மற்றும் உயர்கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கற்றார். கல்வி கற்ற காலத்தில் அதிபராக இருந்த அருட்பணி. ஸ்ரனிஸ்லஸ் அவர்களின் வழிகாட்டலில் நடனப் பாடத்தினை ஆசிரியை J. சர்மிலா மற்றும் S. நர்மதா ஆகியோரிடம் தரம் 6-11 வரை கற்றவர். பின்பு சாதாரணத்தரத்தில் சித்தி பெற்ற உயர்தரத்தில் கலைப்பிரிவில் பரதநாட்டிய பாடத்தினையும் தெரிவுசெய்து ஆசிரியை திருமதி. ராஜ்குமார் யூட்சாந்தினி அவர்களிடம் கற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் நடத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். அத்தோடு பாடசாலைக் காலங்களில் அவரது வெளி ஆற்றுகைகளை, மன்னார் கலார்ப்பண நாட்டிய மன்றத்தின் ஆசிரியையான திருமதி. ரஞ்சனா அவர்களினால் நெறிப்படுத்தப்பட்டார். அதே மன்னார் மாவட்டத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் இவரது ஆற்றுகைகள் சிறப்பாக இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 2019ம் ஆண்டு நுண்கலைமாணிப்பட்டத்தையும் பெற்றார். பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் தனது பரதநாட்டியத்தில் மேலும் தேர்ச்சியை பெற்றுக்கொள்வதற்காக இலங்கையில் புகழ்பூத்த பல்வேறு கலைஞர்களை உருவாக்கிய யாழ்ப்பாணம் கொக்குவில் கலாபனத்தின் மாணவராகவும் மூத்தக் கலைஞருமாகிய புகழ்பூத்த கலாகீர்த்தி திருமதி. சாந்தினி சிவநேசன் அம்மையார் மற்றும அவரது மகளாகிய சிரேஷ்ட விரிவுரையாளர் நடத்துறை திருமதி. தேவந்தி திருநந்தன் அவர்களிடமும் சிறப்பாகப் பயின்றார். அதுமட்டுமன்றி பல்வேறு கலை ஆற்றுகைகளையும் வழங்கினார். மற்றும் யாழ்ப்பாண வட இலங்கை சங்கீத சபையில் ஆசிரியர் தரத்திலும் சித்தியினையம் பெற்றுள்ளார். யாழ்பபாண பல்கலைகழகத்தில் பயின்ற காலத்தில் நடன, நாட்டிய நிகழ்வுகளில் பங்கேற்று சிறந்த கலைஞராக தன்னை வெளிப்படுத்தினார். மேலும் தேசிய கலைஞர் சேவைகள் மன்றம், தமழ்திறன் போட்டிகள், மகாண கலாமன்றங்களுக்கான பரதநாட்டிய போட்டிகளில் பங்கேற்று மாவட்ட, மாகாண மட்டங்களில் சிறந்த இடத்தினையும் பெற்று மாவட்டத்திற்கு பெருமையினை ஏற்படுத்தியுள்ளார். மன்னார் கலார்ப்பணா நாட்டியபள்ளியின் நடன ஆசிரியராகவும், ஆற்றுகையாளராகவும் திகழ்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்தோடு Goethe Institute இன் அனுசரனையுடன் ஆடல் இழைமங்கள் எனும் கண்காட்சியில் இவரது நடன ஆற்றுகையும், நடன புகைப்படங்களுடன் காண்பிக்கப்பட்டு சிறந்த வரவேற்பையும் பெற்றுக்கொண்டார். மேலும் பிலிம்ஸ் நிறுவனத்தினால 2023 “உலக தமிழர் விருது சிறந்த நடனக் கலைஞர்” என்ற பட்டமும் அதே ஆண்டு அகில இலங்கை கிராமிய கலைகள் சங்கம் “கலாரத்ன விபூஷன்” பட்டமும் வழங்கப்பட்டது. 2024ம் ஆண்டு மன்னார் நகரபிரதேச செயலகத்தினால் “கலைச்செம்மல்” விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்தோடு இவர் தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நடனத்துறை போதனாசிரியர் திரு. இரா. தனராஜ் அவர்களின் கலை நிறுவனமாகிய சித்தாகாஸ் உடன் இணைந்து அதில் பொருளாளராகவும் நடன ஆற்றுகையாளராகவும் பல்வேறு இடங்களில் இற்றைவரைக்கும் தனது பரதநாட்டிய ஆற்றுகையினை நிகழ்த்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மன்னார் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **“மன் இளம்கலைச்சுடர்”** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் இளம் கலைச்சுடர் விருது

## திரு. யாசீன் நிஹ்றி

யாசீன் நிஹ்றி அவர்கள் மாந்தை மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட பெரியமடு கிராமத்தில் யாசீன் நெஹிரா பேகம் ஆகியோருக்கு இரண்டாவது மகனாக 1989.01.22 ஆண்டு பிறந்தார். நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம் தில்லையடிக் கிராமத்தில் குடியேறி தன் முழுமையான பாடசாலைக் கல்வியையும் தில்லையடி முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கற்றார். உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவு செய்து கலைமாணிப் பட்டத்தை 2017 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்து ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தமிழ்ப்பாட ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

வாசிப்பின் மீதான நாட்டமே எழுத்துத்துறை நோக்கி இவர் பயணப்படக் காரணமாக இருந்தது. உயர்தரம் கற்றுக்கொண்டே கவிதை பாடல் புனைவதில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடத் தொடங்கிய இவர் முகநூல் குழுமங்கள் வாயிலாக எழுத்தாக்கங்களை வெளிப்படுத்திக் கெண்டு எம் நாட்டிலும் தமிழ் நாட்டிலும் கவிச்சுடர், கவி நிலா, கவித்தேனீ, இளம் பாரதி, இளங்கலைஞர், கவியருவி பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போன்ற பல விருதுகளையும், 2024 ஆம் ஆண்டு கலைத்துறைக்கு வழங்கப்படும் அரச விருதுகளான லங்கா புத்ர, தேசபந்து, பல்கலைத் தென்றல் ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.

தினகரன், தினக்குரல், மெட்ரோ ஆகிய பத்திரிகைகள் இவரது கவிதைகளை சுமந்து வருகின்றன. தமிழ் புலமையும் மொழிப்புலமையும் ஒருங்கே கொண்டு இலக்கியத் துறையில் தனக்கென அடையாளம் பதித்திருக்கும் இவர் கவிஞராக மட்டுமல்லாமல் பாடலாசிரியராக, நடிகராக தனது ஆளுமைப் பரப்பை விரித்துச் செல்கின்றார். நடிகராக seeds திரைப்படத்தில் தன் திறமையை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர விளம்பர படங்களிலும் நடித்து வருகின்றார். 7.7.2024 வெய்த்துயிர்த்தல் என்னும் கவிதை தொகுப்பினை வெளியிட்டு தன் எழுத்தாற்றலை வெளிப்படுத்தியுள்ளார். 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாந்தை மேற்கு பிரதேச பண்பாட்டு விழாவில் இலக்கியத்துறைக்கான "இளங்கலைமதி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மாந்தை மேற்கு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் இளம்கலைச்சுடர்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் இளம் கலைச்சுடர் விருது

## திருமதி ரொனி கலிஸ்ரஸ் றுபீனா

நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் மாதிரிக்கிராமத்தில் 1986 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை மன்/ நானாட்டான் மற்றும் உயர்தரத்தினை டிலாசால் கல்லூரியில் கற்ற இவர் தனது நுண்கலைமாணி பட்டப்படிப்பினை சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தில் மேற்கொண்டதுடன் சிறுவயது முதலே இசைத்துறையில் சிறந்து விளங்கியுள்ளார்.

இவர் தமது கிராம மட்டத்தில் நடைபெறுகின்ற அனைத்து கலை நிகழ்வுகளிலும் இசைத்துறையில் மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களை பிரதேச மற்றும் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறச் செய்வதில் இவரின் பங்களிப்பு காத்திரமானது. மேலும் ஆவணம் புனித கார்மேல் அன்னை கலை மன்றத்தின் உறுப்பினரான இவர் அக்கலைமன்றத்தினால் ஆற்றுகை செய்யப்படும் அனைத்து கலை நிகழ்வுகளிலும் ஹார்மோனிய இசையினை வழங்குவதுடன் பல நாடக மற்றும் நாட்டுக்கூத்துகளிலும் பாத்திரமேற்று நடித்துள்ளார்.

மேலும் விவிலியப்போட்டிகள், கரோல் போட்டிகள், தமிழ்த்தின போட்டிகள், அரச நடன விழாக்கள், அரச சிறுவர் நாடக விழாக்கள், நாட்டுக்கூத்துக்கள், நாடகங்கள் என பலவற்றில் இவரது பங்களிப்புகள் காத்திரமானவை. இவர் அண்மையில் இடம்பெற்ற ஆவணம் இரண்டு நாள் ஞானசவுந்தரி நாடகத்திலும் ஞானசவுந்தரி பாத்திரமேற்று நடித்து தனது சிறப்பான நடிப்புத்திறமையினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவினால் 2025இல் இடம்பெற்ற இடம் பெற்ற கலாசாரவிழாவில் இவருக்கு "செழுங்கலை வித்தகர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி நானாட்டான் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு "மன் இளம்கலைச்சுடர்" விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் இளம் கலைச்சுடர் விருது

## பத்தஹீல்லா முஹமட் அப்ரான்

முசலி பிரதேச செயலகப்பிரிவின் கொண்டச்சி கிராமத்தில் 1996 இல் பிறந்த இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில் கல்விகற்று வருகிறார். சிறுவயதில் இருந்தே கலைத்துறையில் குறிப்பாக ஓவியத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட கலைஞராக விளங்கிவரும் இவர்

1. Outstanding Performance in Drawing and Painting (College of Media and fine arts - 2020 )
2. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன் இணைந்து UNDP மற்றும் CGEE நிறுவனமும் இணைந்து 2022இல் நடாத்திய ஓவியப் போட்டியில் கலந்து வெற்றிபெற்றுள்ளார்.
3. Outstanding qualigraph artist (மாகாண மட்ட பாடசாலைகளிற்கிடையிலான ஓவியப்போட்டி)
4. Best drawing artist (Helam City College)
5. Inspiring Youth artist of Year CP Awards' 25 (Creative Pool institute, postel head quarters Colombo)

மேலும் முசலியில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் சுவர் ஓவியங்களை வரைந்து பலரதும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார் அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு Drawning And Painting Book ஒன்றும் இவரால் தயாரிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி முசலி பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் இளம்கலைச்சுடர்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் இளம் கலைச்சுடர் விருது

## திருமதி. காண்டீபன் பவித்திரா

இவர் 1995ம் ஆண்டு தட்சனாமருதமடு என்ற கிராமத்தில் பிறந்தார். சிறுவயதிலிருந்து கலை சம்பந்தமான சகல போட்டிகளிலும் பங்குபற்றி சான்றிதழ்கள் பெற்றுள்ளார். சிறுவயதிலிருந்து காத்தவராஜன் கூத்தில் பார்வதியாக நடித்து வருகின்றார். கிராமங்களில் நடைபெறும் பொது நிகழ்வுகளிலும் ஊக்கத்துடன் பெறும் பொது நிகழ்வுகளிலும் ஊக்கத்துடன் செயல்படுபவர். கோயில்களில் தேவாரங்கள் பண்ணிசைகள் பாடி வருகின்றார்.

2014 ஆண்டு சிலப்பதிகாரம் கண்ணகி பாத்திரத்தில் நடித்து சிறந்த நடிகை என்ற விருதைப் பெற்றவர். இவர் ஓர் ஆசிரியர் என்பதால் தமது பாடசாலை மாணவர்களை நாடகம், நாட்டார் பாடல், கதம்பம் போன்ற நிகழ்வுகளை பழக்கி பயிற்றுவித்தும் வருகின்றார். கவிதை, பேச்சு போன்ற போட்டிகளில் பங்குபற்றி பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். தற்போதும் கலைஞர்களுடன் இணைந்து கலை வளர்ப்பதில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மடு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் இளம்கலைச்சுடர்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன் கலைத்தென்றல்

## திரு. செபஸ்ரியான் ஞானம்ஸ் றொனிற்றன் பச்சேக்

திரு. செபஸ்ரியான் ஞானம்ஸ் றொனிற்றன் பச்சேக்-1978ம் ஆண்டு பங்குனி மாதம் நான்காம் திகதி பேசாலை கிராமத்தில் பிறந்த இவர் தனது ஆரம்ப மற்றும் உயர்கல்வியினை பேசாலை மன்./ புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றிருக்கின்றார். இவர் சிறுவயதுமுதல் பாடுவதிலும் நடித்தலிலும் ஆர்வம் கொண்டவராக இருந்ததினால் பாடசாலை ரீதியான தமிழ்த்தின மற்றும் ஆங்கிலதின போட்டி நிகழ்வுகளில் பாடுதல் நடித்தல் பேன்றவற்றில் பங்களிப்புச் செய்துவந்துள்ளார். பாடசாலை ரீதியான கலை கலாசார போட்டி நிகழ்வுகளில் மாவட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் பரிசுகள் பெற்ற இவர் 1999ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக இடம்பெற்ற இளைஞர்களுக்கான நாடகப் போட்டியில் சிறந்த இசைக்கான தேசிய விருதினையும் பெற்றுள்ளார். இவர் தனது இசைத்துறை பிரவேசத்தினை 13வது வயதினில் பாடசாலையில் காணப்பட்ட (Band) பாண்ட் வாத்திய இசைக் குழுவில் இணைந்ததன் மூலம் ஆரம்பித்துள்ளார். அக்குழுவில் எக்கோர்டியன் இசைக்கருவியை மீட்டுவதில் தேர்ந்த இவர் அதுமுதல் தனது பாடசாலைக் காலத்திலும் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னரும் அதாவது 1994ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டுவரை பேசாலையில் காணப்படும் இரண்டு பாடசாலைகளுக்குமான கலை கலாசாரப் போட்டிகள் மற்றும் கலைநிகழ்வுகளில் பயிற்சியும் இசையும் வழங்குனராக செயலாற்றியுள்ளார். அத்துடன் மன். சென். மேரிஸ் பாடசாலையின் பாடசாலை கீதமானது இவரால் இசையமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவற்றில் பாத்திரமேற்று நடிப்பவராகத் திகழ்ந்த இவர் பேசாலை ஊர்சார்ந்த நாடகம் நாட்டுக்கூத்துக்களில் பாத்திரமேற்று நடிப்பவராகவும் அவற்றிற்கான இசை வழங்குனராகவும் செயலாற்றியுள்ளார். பேசாலை கிராமத்திற்கே உரித்தான பாரம்பரிய கலைவடிவமான உடக்குப் பாஸ் மற்றும் மூவிராசாக்கள் வாசகப்பா என்பவற்றின் இசைப்பகுதிக்குப் பொறுப்பாகவிருந்து பாடல் மற்றும் பசாம் போன்றவற்றிற்கு பயிற்சி வழங்கியும் இசையமைத்தும் பணியாற்றியுள்ளார். இவரது தலைமையில் 2013ம் ஆண்டு ஞானம் என்ற கிறீஸ்தவப் பாடல்களடங்கிய இறுவட்டும் 2018ம் ஆண்டு அருளொன்றே போதும் என்ற கிறீஸ்தவப் பாடல்களடங்கிய இறுவட்டும் வெளியீடு செயயப்பட்டுள்ளது. அத்துடன் அவ்விறுவட்டுக்களில் காணப்படும் பெரும்பாலான பாடல்களுக்கு இவரே இசையமைத்தும் வரிகள் எழுதியும் வெளியிட்டுள்ளார். 2015ம் ஆண்டு திருத்தந்தை பிரானசிஸ் அவர்களின் மடுத்திருத்தல விஜயத்திறகாக இளைஞர் எழுச்சி கீதமொன்றினையும் மாந்தை மாதா திருத்தலத்திற்கான பாடலொன்றினையும் இசையமைத்து ஒலிப்பதிவுசெய்து வழங்கியுள்ளார். கடந்த 2002ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தின் பாடகர் குழுவிற்குப் பொறுப்பாகச் செயற்படும் இவர் பாடற்பயிற்சி வழங்குதல் ஆன்மீக மற்றும் ஆலய நிகழ்வுகளுக்கு இசைவழங்குதல் போன்ற பணிகளையாற்றிவருகின்றார். அத்துடன் மன்னார் மறைமாவட்ட ரீதியாக வருடாந்தம் இடம்பெறும் கரோல் பாடல் போட்டிகளில் பல தடவைகள் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதினையும் சிறந்த பாடல் வரி எழுதுனருக்கான விருதினையும் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 1) சிறந்த இசையமைப்பாளருக்கான விருது - 2015 2) சிறந்த பாடல் வரிகளுக்கான விருது 2015. 3) சிறந்த இசையமைப்பாளருக்கான விருது 2023. 4) சிறந்த பாடல் வரிகளுக்கான விருது 2023. 5) சிறந்த இசையமைப்பாளருக்கான விருது - 2024.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மன்னார் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைத்தென்றல்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைத்தென்றல் விருது

## திரு. சவிரி வஸ்தியான்

திரு. சவிரி வஸ்தியான் அவர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆட்காட்டிவெளி கிராம அலுவலர் பிரிவில் 1969.08.29 அன்று பிறந்தார். மன்/ ஆண்டாங்குளம் பாடசாலையில் தரம் எட்டு வரை கல்வியைத் தொடர்ந்த இவர் குடும்ப வறுமை காரணமாக தொடர்ந்து கல்வியை தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பாடசாலை நாட்களில் பாடசாலை மட்ட நிகழ்வுகளில் பாடல் பாடி பழக்கப்பட்ட இவர் நல்லதொரு பாடகராக வரவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 இல் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்றபோது இவரது பாடகனாக வேண்டும் என்னும் ஆசைக்கு வாய்ப்புக் கிடைத்தது. அந்த வகையில் மீனாட்சி மகளிர் கல்லூரியால் நடாத்தப்பட்ட பாடல் போட்டி ஒன்றில் பங்குபற்றி இரண்டாம் இடத்தினையும் பலகுரல் நிகழ்ச்சியில் முதலாம் இடத்தினையும் பெற்று சான்றிதழும் பாராட்டுக்களும் பெற்றார். இதனைத் தொடர்ந்து வெள்ளை ரோஜா, மெஜஸ்ரிக் ஆகிய இசைக்குழுக்களில் பாடும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இதன் மூலம் இவரின் கலைப்பயணத்தை தொடர முடிந்தது. 1995 மீண்டும் இலங்கைக்கு வந்த இவருக்கு இங்கு பல பாடல்களை பாடும் வாய்ப்பை காலஞ்சென்ற அமரர். சந்தான் ஞானசீலன் ஐயா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார். அவரால் எழுதப்பட்ட பாடல்கள் பலவற்றை மேடைகளில் பாடியதுடன் வில்லைசை பாடல் நிகழ்ச்சிகள் பலவற்றிலும் கலந்து கொண்டார்.

தற்போது தபால் திணைக்களத்தில் பணியாற்றி வரும் இவர் வருடந்தோறும் தபால் திணைக்களத்தால் நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சிகளில் மாவட்டம் சார்பில் பல போட்டிகளில் கலந்து கொள்வதுடன் 2010., 2012 ஆண்டுகளில் மாகாண மட்டத்தில் முலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச பண்பாட்டு விழாக்களில் தொடர்ச்சியாக நாட்டார் பாடல்களை வழங்கி வருவதுடன் 2025ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரதேச கலைமன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகளில் நாட்டார் பாடல் இசைத்தல் போட்டியில் முதலிடம் பெற்றார்.

இவரின் கலைச்சேவையை பாராட்டி மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தால் "கலைமதி" என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மாந்தை மேற்கு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு "**மன் கலைத்தென்றல்**" விருது வழங்கிக் கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைத்தென்றல் விருது

## திரு. சேசு பெலிஸ்ரன் சோசை

நானாட்டான் பிரதேச செயலகப்பரிவின் கீழ் வங்காலை கிராமத்தில் 1979 பிறந்த இவர் சிறுவயது முதலே இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்டு காணப்பட்டார். இவர் கவிதை, சிறுகதை, நாடகங்கள், வில்லுப்பாட்டு, கவிபாடல், நாட்டுக்கூத்து என பல்வேறு துறைகளிலும் தனது திறமையினை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது படைப்புக்களாக

1. **சிறுகதைகள்**
   குழாய்க்குள் குடித்தனம்.
   மயில் கொத்திய மனசு.

2. **நாட்டுக்கூத்துக்கள்**
   பாண்டியன் வதை (நடிகர்)
   விரோதி. (நடிகர்)

3. **கவிதை நூல்கள் வெளியீடு**
   சுவடுகளைத் தேடி - 2021
   அலுமினிய மழை - 2019
   சிறகுகளைப் பியத்தெறியும் சேராபீன்கள் - 2025
   மீன்காரியின் ஒரு கூடைக்கடல் - 2025

இவ்வாறான இவரது கலைத்திறமையினை பாராட்டி நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவினால் 2024இல் நடைபெற்ற பிரதேச கலாசார விழாவில் "செழுங்கலை வித்தகர்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி நானாட்டான் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைத்தென்றல்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைத்தென்றல் விருது

## ஜனாப் முகம்மது இஸ்வர்தீன்

முசலி பிரதேச செயலகப்பிரிவின் கீழ் அகத்திமுறிப்பு கிராமத்தில் 1980இல் மதார் சாஹிபு முஹம்மது சுபைதா உம்மா என்ற தம்பதியினருக்கு மகனாக பிறந்த இவர் பாடசாலை காலம் முதல் பல்வேறு கவிதை, வில்லுப்பாட்டு, குறு நாடகங்களில் பங்குபற்றி மாகாண, தேசிய மட்டங்களில் வெற்றி சான்றிதழ்களையும் கேடயங்களையும் பெற்றுள்ளார்.

2012இல் தென்றல் வானொலியினால் நடாத்திய கவிதை போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினையும் 2023இல் வசந்தம் FMஇனால் நடைபெற்ற கவிதை போட்டியில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.

இவரால் வெளியிடப்பட்ட "அணையாத அனல்கள்" எனும் கவிதை தொகுப்பானது பலரதும் பாராட்டினை பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது கலை சேவையினை பாராட்டி 2023இல் முசலி பிரதேச செயலக கலாசார விழாவில் இவருக்கு "கலைமுத்து" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி முசலி பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைத்தென்றல்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைத்தென்றல் விருது

## திரு. கிறுசாந்து அமலதாஸ்

இவர் மடு பெரிய குஞ்சுக்குளம் கிராமத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை பெரிய குஞ்சுக்குளம் பாடசாலையில் கற்றார். சிறுவயதிலிருந்தே கலை செயற்பாடுகளில் ஆர்வம் கொண்டு விளங்கினார். பாடசாலைகளில் மிகுந்த ஆர்வத்துடன் கிராமப்புற நிகழ்வுகளில் நாடகங்களில் பங்கேற்று நடித்து வந்துள்ளார்.

தமது மூதாதையர்கள் காலத்திலிருந்து குஞ்சுக்குள கிராமத்தின் பாரம்பரிய கூத்தாகிய சந்தொம்மையார் வாசாப்பில் நடித்து வருகின்றார். காலகாலமாக பெரிய குஞ்சுக்குள கிராமத்தில் நடைபெற்று வரும் என்றிக் என்பதோர் நாடகத்திலும் பல பாத்திரங்களை ஏற்று நடித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. கிராமத்தின் அயல்கிராமங்களின் கலை வளர்ச்சிக்கும் உழைத்துள்ளார். பழைய கலை வடிவங்கள் அழிந்துபோகா வண்ணம் இருக்க தம் இளம் தலைமுறையினருக்கும் கற்றுக் கொடுத்து வருகின்றார். இப்போதும் சிறிய நாடகங்கள், பாடல்கள் போன்றவற்றை இயற்றி பயிற்றுவித்து வருகின்றமையானது அவருடைய கலைச் சேவையை சுட்டிக்கட்டி நிற்கின்றது.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மடு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைத்தென்றல்"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைச்சுரபி விருது

## திரு. சீ. எம். சேவியர் பெர்னாண்டோ

மன்னார் பேசாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீ. எம். சேவியர் பெர்னாண்டோ சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக நாட்டுக்கூத்து, நாடகம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவராக காணப்படுகின்றார்.

பேசாலையைச் சேர்ந்த லூயிஸ் கிறிஸ்தோப்பர் லெம்பேட், லூ. வின்சன் லெம்பேட் ஆகியோர் இணைந்து வளர்கலை மன்றம் ஊடாக கூத்துப் பயிற்சிகளை நடாத்தியபோது இவர் அவர்களுடன் இணைந்து செயற்பட்டார். பேசாலையில் ஜீசி பத்தாம் வகுப்பில் கல்விகற்ற காலப்பகுதியில் சகமாணவர்களை இணைத்து "பாஞ்சாலிசபதம்" என்ற நவீன நாட்டுக்கூத்தை இயற்றி மேடையேற்றினார். அத்துடன், இந்நாடகத்தில் துரியோதனன் பாத்திரத்தையும் இவர் ஏற்று நடித்தார்.

அத்துடன் பேசாலையில் மேடையேற்றப்பட்ட இராம இராவணன், புரட்சித்துறவி, வீரவீமன் ஆகிய கூத்துக்களை நெறியாள்கை செய்து மேடையேற்றினார். இந்தக் கூத்துக்கள் மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகி பரிசில்களையும் பெற்றிருந்தது. இதேவேளை, பேசாலை மக்களால் ஊர் நாடகம் என்று விசேடமாக அழைக்கப்படும் மூவிராசாக்கள் வாசகப்பா, புனித அருளானந்தர் நாடகம், புனித அருளப்பர் நாடகம், ஆகியவற்றிலும் இவர் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். இதனால் இவரை, பேசாலை மக்கள் கூத்துக் கலையின் முடிசூடா மன்னன் என்று அழைத்தனர். சுமார் பத்து வருடங்களாக நாடகங்கள் கூத்துக்கள் ஆகியவற்றில் பிரதான பாத்தரமேற்று நடித்ததுடன் நெறியாள்கை செய்தும் வருகின்றார்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மன்னார் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைச்சுரபி"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைச்சுரபி விருது

## திரு. அடைக்கலம் அந்திரேஸ்

மாந்தை மேற்கிலுள்ள விடத்தல்தீவு கிராமத்தில் அடைக்கலம் திரேசம்மா தம்பதியினருக்கு மகனாக 16.01.1954 அன்று பிறந்தார். தந்தையார் ஓர் சிற்ப ஆசிரியராகவும் பிரபல்யமான நாட்டுக்கூத்து அண்ணாவியராகவும் இருந்தமையால் சிறுவயத்திலேயே கலைத்துறையில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டுவந்தார்.

சிறுவயதிலேயே தந்தையின் சிற்ப வேலைகளில் பங்கெடுப்பதுடன் நாட்டுக்கூத்து, நாடகம் போன்றவற்றிற்கான காட்சியமைப்புக்கள் மற்றும் மிருகங்களின் உருவங்களிலான முகமூடிகளை தயாரித்தல் போன்ற செயற்பாடுகளின் வழி சிற்பகலையை ஆரம்பித்தார்.

1988 ஆம் ஆண்டு பாலம்பிட்டி அம்மன் ஆலயத்திற்கு துர்கையம்மனின் உருவம் கொண்ட பெரிய திரையொன்று வரைந்து கொடுத்துள்ளார். நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளினால் தனது துறைசார் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கியபோதிலும் தொடர்ந்து 1994 ஆம் ஆண்டு தட்சனாமருதமடுவில் சூரன் சிலையை மரத்தினால் செதுக்கி கொடுத்துள்ளார். பின்னர் பெரியமடு ஈச்சளவக்கையில் அம்மன் சிலையொன்று சீமெந்தினால் வடிவமைத்து கொடுத்துள்ளார். இச்சிலை தற்போதும் கோயில் முன் வைக்கப்பட்டுள்ளது.

பின்னர் மரியன்னை சிற்பமொன்று சீமெந்தினால் வடிவமைத்து அருட்தந்தை ஒருவர்க்கு வழங்கியுள்ளார். சிலுவையில் தொங்கிய யேசுநாதரின் சிலையொன்றும் சீமெந்தினால் வடிவமைத்து விடத்தல்தீவு குருசுக்கோயில் என்னும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் முருங்கன் இசைமாலைத்தாழ்வு ஆத்திக்குளி போன்ற இடங்களில் உடைந்த நிலையிலுள்ள சிலைகளை மீண்டும் வடிவமைத்துக் கொடுத்துள்ளார். மேலும் மரம் சீமெந்து கற்தூண் முதலியவற்றால் சிற்பங்களை வடிக்கும் ஆளுமை பெற்ற இவரின் கலைச்சேவையைப் பாராட்டி மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தால் கலைமதி என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மாந்தை மேற்கு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைச்சுரபி"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைச்சுரபி விருது

## திரு. ச. யோசேப் குணசீலன்

நானாட்டான் பிரதேச செயலகப்பரிவின் கீழ் ஆவணம் கிராமத்தில் 1959 இல் பிறந்த இவர் சிறு வயதிலிருந்தே பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் நாட்டுக்கூத்துக்கள் நாடகங்களில் நடித்துள்ளார். குறிப்பாக எல்லாளன் நாடகத்தில் எல்லாளன் பாத்திரமேற்று நடித்து பாராட்டுக்களை பெற்றுள்ளார். கத்தோலிக்க மறைசார்ந்த நாடகங்களில் சம்மனசாக, கட்டியனாக, மந்திரியாக, புலவராக, அரசனாக பல வேடங்களில் நடித்துள்ளார்.

பின்பு முருங்கன் முத்தமிழ் கலாமன்ற உறுப்பினராக இருந்து காலஞ்சென்ற கலைத்தவசி (குழந்தை) அவர்களின் நெறியாள்கையில் 'கல்சுமந்த காவலர்கள்', 'வீரனை வென்றதீரன்', 'யோசப்வாஸ்' இசைநாடகங்களிலும் 'வீரத்தாய்' நாடகத்திலும் நடித்துள்ளார்.

மேலும் ஆவணம் கார்மேல் அன்னை கலாமன்ற ஆரம்பகால உறுப்பினரான இவர் அம் மன்றத்தினால் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட 'கல்சுமந்த காவலர்கள்', 'வீரத்தாய்', 'வீரனை வென்ற தீசன்', 'ஞானசவுந்தரி', 'பாஞ்சாலி சபதம்', 'நல்ல தங்காள்', 'டொன்பொஸ்கோ', 'மூவிராசாக்கள்', வில்லுபாட்டுக்கள், வரவேற்பு பாடல்கள் என தனது நடிப்புத்திறமை, நெறியாள்கை மற்றும் பின்னணிப் பாடகர் என பல மட்டங்களிலும் தனது திறமையினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக 2018ம் ஆண்டில் இடம்பெற்ற வடக்குமாகாண கலைமன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் 1ம் இடத்தினை பெற்ற "பாஞ்சாலி சபதம்" என்ற நாட்டுக்கூத்து நிகழ்வு முக்கியமானது. இந்த நாட்டுக்கூத்தில் தந்திரமிக்க சகுனியாக நடித்து பெரும் வரவேற்பை பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவரது கலை சேவையினை பாராட்டி நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவினால் 2019 இல் நடைபெற்ற கலாசார விழாவில் "செழுங்கலை வித்தகர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் அண்மையில் ஆவணத்தில் இடம்பெற்ற இருநாள் ஞானசவுந்தரி நாடகத்தின் முக்கிய நெறியாளராக செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி நானாட்டான் பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைச்சுரபி"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைச்சுரபி விருது

## திரு. அந்தோனி பிலிப்பு மரியதாஸ் பீரிஸ்

முசலி பிரதேச செயலகப்பிரிவில் உள்ள முத்தரிப்புத்துறை கிராமத்தில் 1951இல் பிறந்த அந்தோனி பிலிப்பு மரியதாஸ் பீரிஸ் சிறுவயது முதலே கலைத்துறையின் மீது ஈடுபாடு கொண்டு காணப்பட்டார். இவர் தனது கிராமத்தில் நடக்கும் பல்வேறு விருந்தினர் வரவேற்பு நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகளில் இனிமையான குரலினால் தொடர்ச்சியாக பாடி பல பாடல்களை பலரதும் வரவேற்பினை பெற்றுள்ளார்.

மேலும் இவர் மன்னாரின் முத்துக்கள், நொண்டி நாடகம், திருப்பாடுகளின் காட்சி, தொம்மையார் வாசப்பு மற்றும் பல சமூக நாடகங்களில் நடிகராக பின்னணி பாடகராக செயற்பட்டு வருகின்றார்.

மேலும் தொம்மையார் வாசாப்பு நிகழ்வில் ஏடுபார்க்கும் கலைஞராக தனது கிராமத்திலும் அயல் கிராமங்களிலும் திறமையை வெளிப்படுத்தி வருகின்ற இவர் முத்தரிப்புத்துறை புனித யோசப்வாஸ் கலைமன்ற உறுப்பினராகவும் முசலி பிரதேச கலாசார பேரவை உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். இவரது கலைச் சேவையினைப் பாராட்டி 2019இல் நடைபெற்ற முசலி பிரதேச செயலக கலாசார விழாவில் "கலைமுத்து" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடதக்கதாகும்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி முசலி பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைச்சுரபி"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன் கலைச்சுரபி விருது

## திரு. வாரித்தம்பி நவரெத்தினம்

இவர் 1954ம் ஆண்டு பாலம்பிட்டி என்னும் கிராமத்தில் பிறந்தார். பின்பு தட்சனாமருதமடு என்ற இடத்தில் குடியேறி 15 வயதில் இருந்து கலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். சிறு வயதிலிருந்தே சத்தியவான் சாவித்திரி எனும் நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்து வந்துள்ளார்.

அதன்பிறகு கோயில்களில் தேவாரங்கள், பண்ணிசை பாடல்களையம் படித்து தொண்டுகள் பல புரிந்துள்ளார். தட்சனாமருதமடு கிராமத்தில் அண்ணாவியரான திரு. செல்லத்துரை என்பவருடன் இணைந்து துணை அன்னாவியராக 'காத்தவராயன்கூத்து' மற்றும் 'மானீன்ற மைந்தன்' என்ற நாடகத்தையும் எழுதி ஏனைய கலைஞர்களுக்கு பயிற்றுவித்தும் வந்தார். 30 வருட காலமாக கோயில்களில் கோலாட்டப்பாட்டு, ஊஞ்சல் பாட்டு, கும்மிப்பாட்டு, தாலாட்டுப் பாட்டு அனைத்தையும் பாடி வருகின்றார். தற்போது முதுமையின் காரணமாக அப் பாடல்களை தம் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து தற்போது அவர்கள் ஆலயங்களில் பாடி திருப்பணி செய்து வருகின்றனர்.

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி மடு பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு **"மன் கலைச்சுரபி"** விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைவருக்கும் நன்றிகள்..!

"மன்னெழில் - III" மலர் தங்கள் கரங்களில் தவழ்கின்றது. இதன் வருகைக்காக அயராது உழைத்து நின்ற அனைவருக்கும் முதலில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மன்னார் மாவட்டத்தின் கலை, பண்பாட்டு வெளியீடாக மன்னெழில் மலர் வெளியிடப்படல் வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட 2018 - 2019 காலப்பகுதியில் இருந்து இன்று வெளியிடப்படும் மலரின் மூன்றாவது வெளியீடு வரையில் பொறுப்புமிக்க பணியொன்றை நிறைவேற்றுவதற்கு எனக்கு துணைநின்ற எல்லாம் வல்ல இறைவனுக்கு முதலில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வளர்ந்து வரும் எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி மன்னாரின் வளமும், அழகும் எவ்விதமான இடையூறுகளும் இன்றி தொடர்ந்தும் பேணிப்பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற கருத்து வலுவூன்றி நிற்கும் காலப்பகுதியில் மன்னாரின் சிறப்பை விவரிக்கும் "மன்னெழில் - III" மலர் வெளிவருகின்றது. மன்னார் மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபராகவும், பதில் அரசாங்க அதிபராகவும் கடமையில் இருந்த திரு சி.குணபாலன் அவர்களின் சிந்தனையில் உதித்த "மன்னெழில்", பின்னர் அரசாங்க அதிபராகப் பதவியேற்ற சீ.ஏ மோகன்றாஸ் அவர்களின் சேவைக்காலத்தில் அதன் முதலாவது வெளியீட்டையும், தொடர்ந்து அரசாங்க அதிபராக பணிபுரிந்த திருமதி அ. ஸ்ரான்லி டி மெல் அவர்களின் சேவைக்காலத்தில் அதன் இரண்டாவது வெளியீட்டையும் கண்டது. தற்போது அதன் மூன்றாவது இதழ் வெளிவருகின்றது.

2025 ஆண்டிற்குரிய மாவட்ட கலை, பண்பாட்டு விழாவில் மன்னெழிலின் மூன்றாவது மலரை வெளியிட வேண்டும் என்ற எனது எதிர்பார்ப்பு எமது அரசாங்க அதிபர் உயர்திரு க.கனகேஸ்வரன் அவர்களின் அனுமதி மற்றும் நெறிப்படுத்தலுடன் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையினரின் வழிகாட்டலில் அவரது நிர்வாக காலப்பகுதியில் "மன்னெழில் - III" மலராக துடிப்புடன் வெளிவருகின்றது. தேவைப்படும் நேரத்தில் பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி எமக்கு உற்சாகம் அளித்த எமது அரசாங்க அதிபர் அவர்களுக்கு முதலில் எங்கள் மனமார்ந்த நன்றிகள். இம்மலர் மிகவும் சிறப்பாக வெளிவரவேண்டும் என்ற நோக்கில் எமக்கு ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்கி எம்மை நெறிப்படுத்திய மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருவாளர் ம. பிரதீப் அவர்களுக்கும் எமது மலர்குழுவின் சார்பில் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னெழில் - III**

பிரதேசம் ஒன்றின் வரலாற்றுச் செழுமை அதற்கே உரிய தனித்துவமான பண்புகளுடன் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும் என்பதை தமது செயற்றிட்ட கருப்பொருளாகக் கொண்டு பணியாற்றி பொருத்தமான நேரத்தில் தேவையான நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கிவரும் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் உயர்திரு ம.பற்றிக் டிறஞ்சன் அவர்களுக்கும், வடக்கு மாகாணத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சியின் பொருட்டு பொருத்தமான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கி நிற்கும் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் பிரதிப்பணிப்பாளர் மதிப்புயர்திருவாட்டி லாகினி நிருபராஜ் ஆகியோருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகள்.

அதேவேளை, மன்னெழில் மலர் அர்த்தபுருட்சயம் மிக்க மலராக வெளிவரவேண்டும் என்ற எங்கள் விருப்பத்தை உள்வாங்கி அதற்கேற்ப பொருத்தமான ஆய்வுரீதியான கட்டுரைகளை வழங்கிய கட்டுரையாளர்களுக்கும், "மன்னெழில் - III" இன் அட்டைப்படம் எவ்வாறு அமைய வேண்டும் என மலர்க்குழுவினர் எண்ணினரோ அதற்கேற்ப அழகுமிகுந்த அட்டைப்படத்தை வரைந்து வழங்கிய சிற்பக்கலைஞர் ஜெரோமி மார்க் அவர்கட்கும், மன்னெழில் ஆக்கபூர்வமான மலராக வெளிவரவேண்டும் என்ற எண்ணத்தில் அழைத்த நேரத்தில் எல்லாம் தவறாது சமூகமளித்து தகுந்த ஆலோசனைகளையும் வழிகாட்டுதல் களையும் வழங்கிநின்ற மலராசிரியர் உள்ளிட்ட மலர்க்குழுவினருக்கும் மலருக்குரிய விளம்பரங்களை வழங்கி உதவிய அன்பர்களுக்கும் மலரை சிறப்புற அச்சிட்டு உதவிய மன்னார் சைபர்சிற்றி அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்**
**திரு. இ. நித்தியானந்தன் M.A - Cultural**
**சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் - மன்னார் மாவட்டம்.**
**(செயலாளர், மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை, மன்னார்.)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைபர்சிற்றி அச்சுக்கலையகம் - மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org